FORMULA HONDA
உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL 416-720-1184
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4.
TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465

# தாய் வீடு

THAIVEEDU NOVEMBER 2010 நவம்பர் HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®




படம்: கருணா

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
Gary Anandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE CANADA

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440, E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kunasegar Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

PMCI PROPERTY MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடும் வீடுசார் விடயங்களுக்குமான பத்திரிகை


"MAKING YOUR DREAM HOME COME TRUE"
HOMELIFE
HIGHER STANDARDS
மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்“
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
31 Progress Avenue Suite 210 ★ Toronto, Ontario, M1P 4S6
Phone: 416-298-3200 Fax: 416-298-3440
Vasanthy Niranjan
Direct:416-845-8272
Broker
vasanthyne@gmail.com
Kirew Kanagasabai
Office:416-298-3200
Broker of Record
Kirewk@yahoo.com
Brimley/Borough
$1330/Mth Lease
1+1 Bedrooms, 1 Washrooms
Great Location. Bright & Spacious Right next to Scarborough Centre. Pool, Sauna, Billiard, Virtual Golf, Mini Theatre & Much More.
Eglinton/Kennedy
$99,900
3 Bedrooms, 1 Washrooms
Why Rent At This Price? Great Property For Investor, Closing Is Flexible Near To School, Transit, Park and all Amenities
Eglinton/Kennedy
$108,000
2 Bedrooms, 1 Washrooms
High Demand & Convenient Loc, Short Walk To Kennedy Subway Station And Shops. Excellent Move-In Condition.
Finch/Middlefield
$199,000
2+1 Bedrooms, 1 Washroom
Excellent Location<>low Rise Well Maintained Condo In Prime Area, Insuite Laundry, Security System & Low Maintenance Fees.
Midland/Lawrence
$199,900
2 Bedrooms, 2 Washrooms
Renovated, Penthouse In Well Maintained Building. New Kitchen Cabinets,Laminate Flooring,Fridge & Stove, Walk To Scarboro Rt
9th Line & Hwy.407
$399,900
3 Bedrooms, 3 Washrooms
Enjoy This Perfect Home On a Quiet,Tree-Lined Street In a family -Centred Neighbourhood Private Bkyd With Lrg Deck & Pergola.
Markham Rd/16th Ave
$365,000
3 Bedrooms, 3 Washrooms
Absolutely Spectacular Executive Townhouse Immaculate! Grand Master Bedroom! Gleaming Hrdwd Floors! Bright Kitchen! Call Now
Kipling/Albion
Photo Not Available
$359,000
4+1 Bedrooms, 3 Washrooms,
Very Well Maintained,Bright & Gorgeous House Centrally Loc Close To Schools , Shopping & all amenities and more.
Simcoe/Conlin
$279,000
3+2 Bedrooms, 4 Washrooms
Bright Eat-In Kitchen With Ceramic Floors & W/O To Yard Walking Distance To U Of Ontario & Durham College,Transit, Park.
Birchmount/Ellesmere
$224,900
1+1 Bedrooms, 1 Washroom
Pleasant And Elegant! A Spacious Luxury Tridel Condo In The Heart Of Scarborough. Steps To School, Park And Ttc!
Fincham/16th Avenue
$424,900
3 + 1 Bedrooms, 4 Washrooms
Wow! Immediate, Great Home In Great Neighbourhood, Newly Reno Newer Kitchen, Bathroom, Hardwood Floors, Granite Counters, Stainless
Middlefield/Denison
$439,900
4 + 2 Bedrooms, 4 Washrooms
Absolutely Well Maint. Detatched House. Extended Driveway 4 Car Park. Renovated Kitchen. Hardwood Flr In Living/Dining & Family
Middlefield/Denison
$449,900
4 + 2 Bedrooms, 4 Washrooms
New Kitchen, All Newer Windows, New Roof, New Quality Laminated Fl. Thru-Out Both Floors, New Ceramic, Sep. Side Entrance 2 Br
McCowan & Elson
$449,900
4 + 2 Bedrooms, 4 Washrooms
Wow Great Location! Near TTC & Amenities. Newly Renovated, Double Car Garage, No Side Walk, Seprate Entrance To Basement,
Markham Rd / Elson / Steeles
$468,000
3+1 Bedrooms, 4 Washrooms
High Demand Markham Location. All Brick Around 1700 Sqf Home Ceramic Tile & Hardwood Floors. Oak Stairs. Finished Basement
Ninth Line/16th Ave
$474,900
4 Berooms, 3 Washrooms
New Price! Great Family Home w/ Designers Touch, Cherrywood Hardwood Flrs In Living & Dining Rms,Ceramic Floors In Kitchen
9th Line/14th Ave
$487,000
3 Bedrooms, 3 Washrooms
Bright & Spacious. Close To Park, School, Community Centre & Highway. Recently Renovated. Main Floor Laundry, Family Room
E.9th/N.14th
$489,000
3 Bedrooms , 3 Washrooms
Bright & Spacious, Fully Fenced Yard, Indoor Access To Gar, 9'Ceiling In Main, Orginal Owner, R/I 4Pc In Bsmt, Beside Park
Cornell Ctr Blvd/16th Av
$489,990
3 + 1 Bedrooms, 3 Washrooms
New Home by Forest Hill Homes. Hardwood Floors on Main Floor, Ceramic Floors In Kitchen Area. Broadloom Throughout 2nd Floor.
Hwy 48 / Bur Oak
$499,000
3 Bedrooms, 4 Washrooms
Stunning Markham Residence on Premium, Over-Sized, Lot! Granite Kitchen, Multiple Granite Baths! Hardwood Floors!
Thinking of a career change?
Or just starting out in Real Estate?
www.Homelifetoday.com
HomeLife Today Realty Ltd., Brokerage* Wants to Talk to YOU
Contact: Kirew Kanagasabai - Broker of Record Tel: 416-298-3200 E: kirewk@yahoo.com
VN Financial Service
Vasanthy Niranjan ★ Mortgage Broker ★ Lic. # M08010387 ★ Phone: 905-415-1676
Residential - First & Second Mortgages ★ First time Buyers ★ New Immigrants ★ Self Employed ★ Refinancing & Switching

தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING

## இன்னொரு யுத்தம்

இலங்கை மண்ணில் இருந்து விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதோடு இலங்கையின் இனப்பிரச்சனை உட்பட எல்லா பிரச்சனைகளும் முடிவுக்கு வந்து விட்டதாக பறைசாற்றப் பட்டது. இலங்கையில் ஜனநாயகமும் சமாதானமும் மலர்ந்துவிட்டதாக நம்பவைக்கப்பட்டது. ஆனால் இன்றைய உண்மையான இலங்கையின் நிலைமை என்ன?

அரசாங்க அதிகாரிகள், நீதிபதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மந்திரிகள், மதகுரு-மார்கள் எவருமே உண்மையைப் பேசமுடியாத ஓர் அசாதாரணமான நிலைமை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அதிர்ச்சியான இன்னொரு சம்பவம் நடந்து கொண்டிருக்கின்றது.

இலங்கை இராணுவம் மிக நுட்பமாக நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றது. பெரும் தொழில் நுட்பம் கூடிய இராணுவத் தளபாடங்கள் இலங்கைக்கு வந்துகொண்டே இருக்கின்றன. பாரிய பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு அதற்குள் நவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன. வெளிவராத செய்திகளாக இன்னமும் நிறைய ஏற்பாடுகள் நடை பெறுகின்றன.

உண்மையில் இலங்கை இன்னொரு யுத்தத்திற்காக தன்னைத் தீவிரமாகத் தயார் படுத்திக் கொண்டு வருகின்றது. இது தமிழர்களோடு மீண்டும் போர் புரிவதற்கான ஏற்பாடு அல்ல.

சீனாவின் நேரடி கண்காணிப்பிலும் பணபலத்திலும் ஆயுத உதவியுடனும் நிகழுகின்ற இந்த ஆரவாரங்களெல்லாம் இலங்கை மண்ணில் இருந்து இந்தியாவுடன் போர் புரிவதற்கான ஏற்பாடுகளே.

சீனாவின் அதி மதி நுட்பம் வாய்ந்த அரசியல் காய் நகர்த்தலுக்கு இலங்கை மக்கள் பலியாகியுள்ளனர். சீனா தனது நிரந்த பகைநாடாகக் கருதும் இந்தியாவுக்கு எதிராக இந்தியாவைச் சூழ உள்ள எல்லா நாடுகளையும் தனது வலைப்பின்னலுக்குள் கொண்டு வந்துள்ளது. அதில் இலங்கையும் ஒன்றாக உள்ளது.

தமிழ்ழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கும் இலங்கைத் தமிழர்களின் அரசியல் போராட்டத்தைத் துடைத்தழிக்கவும் சிங்கள பேரினவாதத்திற்கு முக்கிய தூணாக நின்றுதவிய இந்தியா இன்று திருடன் கையில் தேள் கொட்டிய கதையாக கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றது.

இனி வரும் காலமெல்லாமே மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கும்.

இந்தியா - சீனா - இலங்கைக்கு இடையிலான இந்த போர்ச்சூழல் இலங்கைத் தமிழர்களின் வாழ்வில் இன்னமும் என்னென்ன பாரிய சிக்கல்களை ஏற்படுத்தப் போகின்றது என்பது ஒரு பெரும் கேள்விக் குறி.

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரி, பிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

அட்டைப் படம்: கருணா

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன், கந்தசாமி கங்காதரன்.

ஓவியங்கள் : ரமணி (இலங்கை), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), மு.சு. சிவகுமாரன் (ஜேர்மனி), கருணா (கனடா).

புகைப்படங்கள்: கணா ஆறுமுகம், கருணா.

தட்டச்சு : கௌரி, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல்

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

றொறன்ரோ விநியோகம் : கிளி (சிவராஜா)
மொன்றியால் தொடர்புகள் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186
ஒட்டாவா தொடர்புகள் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253


Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## குளம் வற்றுமென்று கொக்கு காத்திருக்கிறதாம்




அ. கணபதிப்பிள்ளை

இலங்கைச் சிறுபான்மையினர் சுதந்திரமும் சமத்துவமும் உள்ள மக்களாக வாழ்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யும் தார்மீகக் கடப்பாடு பிரித்தானியா, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளுக்கும் உண்டு




### மார்பகப் புற்றுநோய்

- சிவாஜினி பாலராஜன்


சாராசரியாக ஒன்பதுக்கு ஒன்று என்ற விகிதாசாரத்தில் மார்புப் புற்றுநோய் உள்ளதாகவும் இறப்பு விகிதமானது இருபத்தியெட்டிற்கு ஒன்று என்றும் புற்றுநோய் மையத்தின் புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.




### எப்படி இருந்தவர் இப்படி ஆகிவிட்டார்!

- கந்தசாமி கங்காதரன்

கனடிய இராணுவ உயர் அதிகாரி... இரண்டு கொலைகள். பல வீடுகளில் புகுந்து பெண்களின் உள்ளாடைகளைத் திருடி, தானே அணிந்து இரசிக்கும் ஒரு மனோவியாதிக்காரன்....




### குளிர்கால பராமரிப்பு

- ஜெறாட் றட்ணராஜா

குளிர்காற்று, பனிப்பொழிவு ஆகியனவற்றிலிருந்து எம்மையும் வீட்டையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாயின், அதற்குரிய முன்னேற்பாடுகளைச் சீராகச் செய்யவேண்டும்.




### விசா இன்றிப் புலம்பெயரும் பறவைகள்

- பொன் குலேந்திரன்

வட துருவங்களில் வாழும் Artic terns பறவையினங்கள் ஒரு வருடத்தில் புலம் பெயர்ந்து தென் துருவம் சென்று திரும்பும். அவை பயணத்தின் போது சுமார் 25,000 மைல்கள் பறக்கின்றன.

கனடிய அரசியலும் தமிழரும்: தடம்பதிக்கும் புதிய தலைமுறை
கந்தசாமி கங்காதரன் 05

நீர் விநியோகமும் தொழிற்பாடும்
வேலா சுப்ரமணியம் 07

தலையிடியும் அக்குபஞ்சர் சிகிச்சையும்
கந்தையா செந்தில்நாதன் 09

தொற்றுமா மனநோய்?
புஷ்பா கனகரட்ணம் 32

சிறைத்தண்டனை வரை... வாகனமோட்டும் தவறுகள்!
சிவ பஞ்சலிங்கம் 39

எந்திரன் ஒரு கண்ணோட்டம்
ஜிப்றி உதுமாலெப்பை 43

பாலி தீவின் பண்பாடு
திரு மகேசன் 55

செவிப்புலனற்ற... குறைபாடுடைய பிள்ளைகள்
ஜீவா திசைராஜா 60

திபெத் தேசத்தின் தலைவர்
குமார் புனிதவேல் 71

மெத்தப் படித்த மிதப்பு
சி.சண்முகநாதன் 75

நான்கு பெரும் கிரேக்க நாடகாசிரியர்கள்
ஞானம் லேம்பட் 83

நினைவின் தடங்கள்
என்.கே. மகாலிங்கம் 85

மட்டுநகரும் மலைப்பிஞ்சுகளும்
கே. எஸ். பாலச்சந்திரன் 86

முத்துப்போல இலுப்பைப்பூ...
பொ. கனகசபாபதி 91

இலவசமாகக் கிடைத்த கையெழுத்து
அ. முத்துலிங்கம் 95

வருகின்றான் தலைவன் மணஞ்செய்ய!
வி. கந்தவனம் 96

மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

# குளம் வற்றுமென்று கொக்கு காத்திருக்கிறதாம்

- அ. கணபதிப்பிள்ளை -

இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் ரீதியிலான தீர்வு ஒன்று தேவை என்பது தெளிவாக்கப்பட்டிருந்த நிலையிலும் அதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளுகின்ற முதற்கட்ட நிலைமையிலேயே சுதந்திர கால இலங்கையின் பல அரசாங்கங்களும் செயற்பட்டு வந்தன. அவற்றுக்குச் சற்றேனும் வேறுபட்டு விடாதவகையில் நடைமுறையில் இருக்கும் அரசாங்கம் செயற்படுவதும் எல்லோரது கவனத்தையும் ஈர்த்துக் கொண்டிருக்கின்றது.

உலக மக்களில் பெரும்பான்மையினரால் இன்று அறியப்பட்ட விடயம் “இலங்கையில் போர் ஒன்று நடத்திமுடிக்கப்பட்டிருந்தது” என்பது தான். அதன் பின்னணியில் இருந்த நியாயத் தன்மையும் அன்று தமிழர்கள் பட்ட அவலங்களும் இன்று அரசாங்கத்துக்குச் சார்பாக மாற்றப்பட்டுக் கொண்டு வருவதுதான் தமிழர்களுக்கு உடனடியான அரசியற்தீர்வு தேவையற்றது என்ற மனப்போக்கினை ஆட்சியாளர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

போரில் அரசாங்கம் நடந்து கொண்ட விதமும் அதற்குச் சர்வதேச நாடுகள் கொடுத்த அங்கீகாரமும் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக அரச இயந்திரத்தினால் செய்யப்பட்ட அட்டூழியங்கள் எல்லாவற்றையும் போர்க் குற்றங்கள் என்று வரையறை செய்யப்படுவதனைப் பின் நோக்கித் தள்ளிக் கொண்டிருக்கின்றன.

போர்க் குற்றங்களுக்காக அரசாங்கத்தையும் அதன் ஆணையிடும் அதிகாரிகளையும் தண்டனைக்குட்படுத்துவதா அல்லது தப்பியிருக்கும் தமிழினத்துக்குப் புனர்வாழ்வு ஏற்பாடுகள் செய்து கொடுப்பதா முக்கியம் என்றதன் பின்புலத்திலேயே போருக்குப்பின்னைய செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போர்க்குற்றத்துக்கான தண்டனையினைக் கொடு என்று கேட்கும் நாடுகளைவிட பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஒரு தீர்வினைக் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்கும் நாடுகள் தான் அதிகமாக இருக்கின்றன.

போர் ஏன் ஏற்பட்டது, அதற்கான காரணத்தையும், அதற்கான தீர்வையும் போரில் வெற்றி பெற்ற இந்த அரசாங்கம் கண்டறிந்து மீண்டும் ஒரு போர் ஏற்படாதவாறு செயற்பட வேண்டும் என்ற கருத்து எல்லாப்பிரிவினரிடமும் இருந்து வெளிவருகிறது. அதற்காக அரசாங்கம் பின்பற்றும் தீர்வு “அழாப்பிக் குளாப்பி ஆரம்பத்திலிருந்து எல்லாவற்றையும் தொடங்க வேண்டும்” என்பதாகவே இருந்து வருகிறது.

இருபத்தோராம் நூற்றாண்டின் துட்டகைமுனு எனவர்ணிக்கப்பட்ட மேன்மைதங்கிய ஜனதிபதி மகிந்தராஜபக்சவினுடைய எண்ணத்திலுதித்த “தமிழ்க்கட்சிகள் தீர்வுத் திட்டத்திற்காக ஒன்று படவேண்டும்” என்ற கருத்து ஜனநாயகத்தில் புதுவிதமான அரசியல் சித்தாந்தமாக மாறியிருக்கிறது. ஊகத்தின் அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் ஒன்று படுவதும் பின்னர் சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றுபடுவதும் சிறுபான்மையினரின் ஏகோபித்த தொரு தீர்வுத் திட்டக் கோரிக்கைக்கு வழிவகுக்கும். அதே போல பெரும்பான்மைக் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்றதொரு தொக்கு நிற்கும் கருத்தானது ஒத்த விருப்புடன் தீர்வினை வழங்கும் அனுமதிக்கும் வழிவகுக்கும் என்பதும் கருத்தியலான அரசியலுக்கு அத்திவாரமாக அமையுமே தவிர நடைமுறைக்குப் பொருந்துவதாக இருக்குமா என்ற சந்தேகம் எழாமலிருக்க முடியாது.

இலங்கை அரசியலில் தீர்வு கேட்டுநின்றவர்கள் ஒற்றுமைப்பட்டிருந்தமையையும் தீர்வு வழங்கும் பொரும்பான்மையினர் ஒன்றுபட்டுச் செயற்பட்டிருந்தமையினையும் காணவே முடியவில்லை. சிறுபான்மையினரின் மொழி கலாசார விழுமியங்களைப் பேணும் முறைகளிலும் அரசியல் பொருளாதாரத்திட்டமிடும் நடவடிக்கைகளிலும் சிறுபான்மையினருள்ளும் பெரும்பான்மையினருள்ளும் போராட்டங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. அத்தகையதொரு உச்சக்கட்டப் போராட்டம் தான் இன்று இலங்கை அரசாங்கம் வெற்றிபெற்றுவிட்டதாகச் சொல்லுகின்ற விடுதலைப் புலிகளுக் கெதிரான போர். அதே போன்று எத்தனையோ போர்களுக்கு சிறுபான்மையும் பெரும்பான்மையும் முகம் கொடுத்திருந்தன என்பது தான் இலங்கை இனப்பிரச்சினையின் வரலாறு.

1983ம் ஆண்டின் இனக்கலவரத்தின் பாதிப்பு, இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்றதொரு கோரிக்கையினை உலகநாடுகளின்முன் வைத்திருந்தது. இதில் முதலில் செயற்பாட்டில் இறங்கிய நாடு இந்தியா. இந்தியாவின் (‘இந்திய முதலீட்டாளர்களின்’) பொருளாதார நலனுக்கு எதிரான இலங்கையின் செயற்பாடுகள் அதிலிருந்தமையும் இந்திய அரசியல் உறுதிப்பாட்டின் தேவை அக்காலத்தில் முக்கியம் பெற்றிருந்தமையும் இந்தியாவின் நடவடிக்கைக்கு துணைபோயின.

1957ம் ஆண்டின் இனக்கலவரம் சிங்களப் பெரும்பான்மையினருக்கு ஏற்படத்திக் கொடுத்த விளிப்புணர்வு மீண்டும் 1983ம் ஆண்டில் மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தப்பட்டிருந்தது. இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களாக இருந்தாலும் ‘இலங்கையில் தமிழருக்கென ஒரு வாழிடப் பிரதேசம் இருக்கிறது அல்லது ஒதுங்க ஓரிடமிருக்கிறது’ என்பதனைச் சிங்களப் பெரும்பான்மைக்கு எடுத்துக்காட்டியவை இந்த இனக்கலவரங்களேயாகும்.

தமிழர் பகுதிகளிலிருந்து வெளியேறிய சிங்கள மக்கள் புலம் பெயர்ந்தவர்களாக எடுத்துக் காட்டும் அரசாங்கம் அன்று அவர்கள் வெளியில் செல்வதனைத் தடுத்து நிற்கக்கூடிய இராணுவப் பாதுகாப்பு இல்லாமையினை நன்கு உணர்ந்திருந்தது. அத்தகைய இராணுவப் பாதுகாப்பு ஏற்பாடுதான் இதுவரையில் இலங்கை அரசாங்கங்கள் செய்துவந்த ‘இலங்கையின் பணமொதுக்கிய பாதுகாப்பு நடவடிக்கைகளாக’ அமைகின்றன.

இலங்கையில் சிறுபான்மையினர் வைத்திருந்த அசையும் அசையாச் சொத்துக்களின் அழிவும் அவற்றுடன் அவர்களது இடப்பெயர்வுகளும் அரசாங்கங்களின் பார்வையில் இயற்கையானவையாகவே காட்டப்பட்டிருக்க மறுபுறமாகச் சிங்கள மக்களது இடப் பெயர்வு மாத்திரம் செயற்கையாகக் காட்டப்படுவது வியப்புக்குரியது. இலங்கையில் சிறுபான்மை அரசியற் கட்சிகள் ஒன்றுபடாத (அரசாங்கத்துடன் இருக்கும்) வரையில் இத்தகைய இடப்பெயர்வுக்கு நியாயம் கற்பிக்கும் ஆட்சியாளர்கள் இருந்து கொண்டேயிருப்பார்கள் அதற்குத் துணை போக ஒரு சில சிறுபான்மைக் கட்சிகள் உருவாக்கப்பட்டுக் கொண்டேயிருப்பது இலங்கை அரசியலில் சாதாரண நிகழ்வாக இருந்து வருகிறது.

1983ன் பின்னர் இந்தியாவின் தலையீடு இலங்கையின் சிறுபான்மையினரை ஒன்றுபடுத்தும் அதன் மூலம் சிறுபான்மையினருக்கு ஒரு தீர்வுகிடைக்கும் என்ற நம்பிக்கையைத் தமிழர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இந்தியா தனது நலனுக்காகச் செயற்படுகிறது என்றதும் இந்தியா இலங்கை ஆட்சியாளர்களுக்குத் துணைபோகிறது என்பதும் தமிழ் அரசியற்கட்சிகளின் ஒன்றுமையின்மையினால் உருவாக்கம் பெற்றிருந்தன.


இதன் பின்னணியில் இலங்கைத் தமிழருக்கு வழங்கவிருந்த அரசியற் சீர்திருத்தம் போதுமான அளவாகவோ தீர்வுக்கான முதற்படியாகவோ நோக்கப்படவில்லை. 13வது திருத்தச் சட்டமூலம் தமிழர்கள் மீது திணிக்கப்படுவதாக எண்ணவைத்தது. இது ஒன்றுபட்ட இலங்கையினுள் எந்த நேரத்திலும் இலங்கை அரசாங்கத்தால் மீளப் பெறத்தக்க தற்காலிகத் தீர்வுத்திட்ட ஒழுங்கினை எழுத்துவடிவில் கொண்டிருந்தமை இந்தச் சந்தேகத்தை வலுவடையச் செய்யவைத்தது. அதே நேரத்தில் இந்தியா தமிழர்களுக்கு வெளிப்படையான இராணுவ உதவி அல்லது பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கத்தவறியிருந்தது.

இதில் இந்திய அரசாங்கம் விட்ட தவறு தமிழ்க் கட்சிகளை அல்லது இயக்கங்களை ஒன்றுபட வைக்காமையாகும். பிரிந்த சிறுபான்மையினரை இந்தியா பயன்படுத்திய அதேவேளை இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளைப் பயன்படுத்தி இந்திய அரசினை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதில் வெற்றிகண்டிருந்தது. தமிழ்க்கட்சிகளின் பிரிவு இலங்கை இனப்பிரச்சனையில் ஒரு கட்டாயத் தீர்வு அல்லது அழுத்தம் கொடுக்கக் கூடியதொரு பிரிவினரை புறத்தள்ளியிருந்தது. இது இலங்கை அரசின் இராஜதந்திர வெற்றியாகவும், விடுதலைப்புலிகளின் இராஜதந்திர வெற்றியாகவும் நோக்கப்பட்டது. உலகின் மிகப்பெரிய தொரு இராணுவத்துடன் போரிட்டு வெற்றி பெற்றதில் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் வெற்றியைப் பகிர்ந்து கொண்டாலும் இதன் பின்னணியில் தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்ற தொரு அசையாத நம்பிக்கை இளையோடியிருந்தமை தவறிப்போயிற்று என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தி இயக்கங்களை ஒன்றுபட வைத்திருக்க முடியுமாயிருந்த நிலையிலும் இலங்கை அரசு விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தியமை இந்தியாவின் இராஜதந்திரத் தோல்வி என்றே வர்ணிக்கப்பட்டது. ஆயினும் விடுதலைப் புலிகளை பிரித்துவிடுவதிலும் இலங்கை அரசிடயிருந்து தனிமைப்படுத்துவதிலும் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகள் கடைசியில் போரொன்றின் மூலம் வெற்றி பெற்றதாகவே கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகள் இனப் பிரச்சினைக்கான தீர்வினை ஆரம்ப ஐம்பதுகளை நோக்கித் தள்ளிவிட்டதாகவே எண்ணவைத்துள்ளது.

இந்த நிலையில் நடைமுறை அரசாங்கத்துக்கு இந்தியாவால் அழுத்தம் கொடுக்கமுடியுமா என்ற வினா எழாமலிருக்க முடியாது. பிரித்தானியா இந்தியா இரண்டு நாடுகளும் வரலாற்றில் இலங்கைச் சிறுபான்மையினரது சுதந்திரமும் சமத்துவமும் உள்ள வாழ்க்கையின் உத்தரவாதத்தை வழங்குவதற்குக்

11ம் பக்கம் பார்க்க...




தாய்வீட்டிற்காக கருத்தோவியம் சிவ.மாமுனி ©2010

## கனடிய அரசியலும் தமிழரும்:

# தடம்பதிக்கும் புதிய தலைமுறை

-கந்தசாமி கங்காதரன் -

பரப்புரைகளுக்கும் பொய்ப்பரப்புரைகளுக்கும் மத்தியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் நடைபெற்று முடிவுகளும் அன்றிரவே வெளியாகிவிட்டன. சிலருக்கு எதிர்பார்த்த, எதிர்பார்த்திராத முடிவுகள் வேறுசிலருக்கு அந்த முடிவுகளே எதிர்பார்த்திராத, எதிர்பார்த்திருந்தவை.

சில தமிழ் வேட்பாளர்களும் கவனத்தை ஈர்த்திருந்தனர். புதுமுகங்களாலும் மாற்றத்தை உருவாக்க முடிந்திருக்கின்றது. சிலருக்குக் கிடைத்த வாக்குக்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது 'ஏன் இவர்களுக்கு இந்தத் தேவையில்லாத வேலை?' என்ற கேள்வியும் எழுகின்றது.

ஏற்கனவே பதவியை இறுகப்பற்றிக் கொண்டிருக்கும் ஒரு மூத்த அரசியல்வாதி... இவர் தனக்கெதிராகப் போட்டியிட்ட ஒரு தமிழ் வேட்பாளருக்கெதிராகக் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. கடும் போட்டியைக் கொடுத்தவர் நீதன் சண். மார்க்கம் நகரசபையின் 7, 8ம் வட்டாரங்களின் கல்விச்சபை உறுப்பினராக இருந்த இவர் இம்முறை ரொறன்ரோ நகரசபையின் 42ம் வட்டார உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டார். பரவலாக விரும்பப் பட்ட, எதிர்பார்க்கப்பட்ட வெற்றி கிடைக்காமற் போனது. பலருக்கும் ஏமாற்றம். ஆனாலும் 42ம் வட்டாரத்தில் அளிக்கப்பட்ட வாக்குக்களில் 32% நீதனுக்குக் கிடைத்திருந்தன.

ரொறன்ரோவின் கல்விச்சபை உறுப்பினர் பதவிகளுக்குப் போட்டியிட்டோரில் சில இளையோர் கணிசமான வாக்குக்களைக் பெற்றுள்ளனர். கல்விச்சபையின் 22ம் வட்டாரத்துக்குப் போட்டியிட்ட அஷ்வின் பாலமோகன் 5538 வாக்குக்களைப் பெற்று, வெற்றிபெற்ற வேட்பாளருக்குப் பெரும் சவாலாக இருந்திருக்கின்றார் 18ம் வட்டாரத்தில் பார்த்தி கந்தவேள் 7416 வாக்குக்களைப் பெற்ற ஒரு கல்விச்சபை வேட்பாளர். 2000க்குச் சற்று அதிகமான வாக்குக்கள் வித்தியாசத்தில் இவரது வெற்றி நழுவிப்போனது. 21ம் வட்டாரத்தில் 6920 வாக்குக்களைப் பெற்ற தீபன் விக்னேஸ்வரன் பாரிய வித்தியாசத்தில் வெற்றியை நழுவவிட்டாலும், 7000 வரையிலான வாக்குக்கள் அவருக்குக் கிடைத்துள்ளமை கவனிக்கத்தக்கது. இந்த மூவருமே இந்தக் களத்தில்... தேசிய நீரோட்டத்தில் புதியவர்கள். எம் சமூகத்திலும் பல்லின சமூகத்தவர் மத்தியிலும் பல்வேறு தொண்டுகள், செயற்பாடுகள் மூலம் அறியப்பட்டவர்கள்.

இவர்கள் வெற்றிபெறாவிடினும் வெற்றியாளர்களாகத்தான் பார்க்கப்படுகின்றனர். நல்ல தொரு தொடக்கம் இந்த மூவருக்கும்.

மிசிசாகாவில் நகரமுதல்வர் பதவிக்கு ராம் செல்வராஜா போட்டியிட்டார். பல ஊடகங்களும் இவருக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன. மிகப் பலமான எதிரியோடு தைரியமாக மோதக் களமிறங்கிய இவரது முயற்சி கைகூடவில்லை. ஆயினும் மாற்றமொன்றை ஏற்படுத்தக்கூடிய வல்லமை இவருக்குண்டு.

மார்க்கம் பகுதியில் 8ம் வட்டாரத்தில் 'சஹானா' மோகன் என்றறியப்படும் ஜோசெப் மோகன் ரெமிசியார், ஏற்கனவே நகரமன்ற உறுப்பினராக இருந்த Alex Chieu வுக்குக் கடும் போட்டியாளராக விளங்கினார். 2274 வாக்குக்களைப் பெற்ற இவருக்கு இன்னும் 1200 வாக்குக்கள் வரையில் கிடைத்திருந்தால் புதியதொரு நகரமன்ற உறுப்பினர் 8ம் வட்டாரத்துக்குக் கிடைத்திருப்பார். 7 தடவைகள், 21 ஆண்டுகளுக்கும் மேலாகப் பதவியிலிருக்கும் ஒருவருக்கு எதிராகப் போட்டியிட்டு அவர் பெற்ற வாக்குக்களின் மூன்றில் இரண்டு பங்கைப் பெறுவதென்பதே வெற்றியாகத்தான் கொள்ளப்படவேண்டும்.

மார்க்கம் நகர மன்றத்தின் 7ம் வட்டார உறுப்பினர் லோகன் கணபதி இம்முறையும் வெற்றிபெற்றுள்ளார். பகுதி பகுதியாக முடிவுகள் வந்துகொண்டிருந்த போது சில வாக்குகள் முன்னிலையிலும் பின்தங்கியும் மாறிமாறி இருந்த லோகன் முடிவில் 859 வாக்குக்களால் வெற்றியைத் தக்கவைத்துக்கொண்டார். இவரது வெற்றிப்பாதை கடுமையான சவால் மிகுந்தாகவே இம்முறை இருந்திருக்கின்றது. மார்க்கம் நகர மன்றத்தின் 7, 8ம் வட்டாரங் களுக்கான கல்விச் சபை உறுப்பினராக முன்னர் பதவி வகித்தவர் நீதன் சண். அவர் இம்முறை ரொறன்ரோவுக்கு நகர, அங்கு களமிறங்கிய வனிதா நாதன் மிக அதிகப்படியான வாக்குக்களால் வெற்றிபெற்றுள்ளார். 8252 வாக்குக்களைப் பெற்ற இவரை எதிர்த்துப் போட்டியிட்ட எவருமே இவர் பெற்ற வாக்குக்களின் கால்வாசியைக்கூட நெருங்கமுடியவில்லை.

சமூகம் சார்ந்த, கல்வி சார்ந்த பல்வேறு அமைப்புக்களிலும் பல தொண்டுகளையும் செயற்றிட்டங்களையும் தொடர்கின்ற வனிதாவுக்கு இந்த வெற்றி மிகப் பொருத்தமானதே. 7, 8ம் வட்டாரத்தின் போட்டியிட்டோரில் ஒரேயொரு பெண் இவர்தான். இல்லத்தரசிகள், தாய்மார் மத்தியில் இவருக்கான ஆதரவு அதிகம் இருந்திருக்கும். பிள்ளைகளின் கல்வி-சார் பிரச்சினைகளைப் பேசித்தீர்ப்பதற்கு கல்விச்சபை உறுப்பினராக ஒரு பெண் இருப்பது சிறப்பானதாயிருக்குமெனப் பெண்கள் நினைத்திருக்கலாம் பேராதரவை அள்ளி வழங்கியிருக்கின்றனர். தமிழ்ச் சமூகத்திலிருந்து கனடிய ஆட்சி மன்றமொன்றின் பதவிக்காகத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முதற் பெண்மணி என்ற பெருமையும் வனிதா வுக்குச் சேர்கின்றது.

இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் ரொறன்ரோவில் வலதுசாரி அலையடித்த தேர்தலாகக் கருதப்படுகின்றது. மாகாண மட்டத்திற்கும் இந்த அலை பரவலாமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. பார்த்தி கந்தவேள், அஷ்வின் பாலமோகன் ஆகியோர் இந்த வலதுசாரி அலையிலும் அடிபட்டிருக்கலாம். 2003இல் 38%ஆகவும் 2006இல் 39.3%ஆகவும் இருந்த வாக்களிப்பு வீதம் 2010இல் 53.2%ஆக அதிகரித்திருக்கிறது மகிழ்ச்சியான விடயம். ஆனால் எமது சமூகமும் இந்த அதிகரிப்பில் பங்காற்ற வேண்டும். ரொரன்ரோவின் சில பகுதிகளிலும் மார்க்கத்திலும் அதிகம் தமிழர்கள் வாக்களித்துள்ளனர்.

எது எவ்வாறாயினும் 5000, 6000 என வாக்குக்களைப் பெற்ற எம் இளையோர் நன்கு கவனத்தை ஈர்ப்பர். தேசிய அரசியலில் தம்மை உறுதிப்படுத்திக் கொள்ளும் வாய்ப்புக்கள் இவர்களுக்கு நிறையவே உண்டு. பல கதவுகள் இவர்களுக்காகத் திறக்கப்படலாம். தேர்வு அவர்களுடையது. ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லலாம் மாற்றமொன்றைக் கொண்டுவர இவர்களால் முடியும். இதுவரையிலும் இங்கு நாம் யாருமே தோல்வியடைந்தவர்களாக எழுதவில்லை.

தோல்வியடைந்தோரும் இருக்கின்றார்கள்... தேர்தலுக்கு முன்பே.

அவர்களை விடுத்து, இந்தத் தேர்தலிற் போட்டியிட்ட, வெற்றியாளர்கள் எனக் கருதப்படும் அனைவருக்கும் மார்க்கத்தில் நகர மன்ற உறுப்பினராக மீண்டும் தேர்வாகியிருக்கும் லோகன் கணபதி அவர்களுக்கும் கல்விச்சபை உறுப்பினராகத் தேர்வாகியிருக்கும் வனிதா நாதன் அவர்களுக்கும் 'தாய்வீடு' வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.







gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


| | | |
|---|---|---|
| வீட்டுச் சந்தையும் புறச் சூழலும் | கருணா கோபாலபிள்ளை | 11 |
| பிள்ளைகளின் உயர்கல்விச் சேமிப்புத்திட்டம் | | 13 |
| பவழமல்லி | செல்லையா சந்திரசேகரி | 19 |
| இந்நிலை வேண்டாமே! | மஞ்சுளா ராஜலிங்கம் | 20 |
| கால்களைச் சுத்தப்படுத்துதல் | சசி நரேன் | 22 |
| உங்கள் வீட்டை விற்பது எப்படி? | எஸ்.கே. பாலேஸ் | 24 |
| மருத்துவக் கேள்வி - பதில் | இராஜசேகர் ஆத்தியப்பன் | 26 |
| மருந்துகளற்ற முறையில் மனநிலைக் குழப்பங்களை நிவர்த்தி செய்தல் | கந்தையா பரநிருபசிங்கம் | 28 |
| விளையாட்டும் வியாபாரமும் | மாறன் செல்லையா | 31 |
| உங்கள் வெற்றி உங்கள் கையில் | சொக்கலிங்கம் பிரபாகரன் | 34 |
| காப்புறுதியில் ஏற்படும் குழப்பங்கள் | சக்திவேல் | 40 |
| மனச்சோர்வின்றி வாழ்வது எப்படி? | சிவவதனி பிரபாகரன் | 46 |
| நீங்கள் முகவருக்கூடாகத் தொழில் புரிபவரா?... | என். மிலான் | 48 |
| உடலும் உள்ளமும் நலந்தானா? | போல் யோசேப் | 50 |
| IMHOவும் செயற்பாடுகளும் | மணிமைந்தன் | 58 |
| கனவுகள் மெய்ப்பட வேண்டும் | உதயணன் | 62 |
| சிங்கள இனமும் சிங்கள... | முருகேசு பாக்கியநாதன் | 66 |
| இடுக்கண் வருங்கால் | குரு அரவிந்தன் | 77 |
| ஒரு நண்பரின் கூரிய பார்வையில் | கதிர் துரைசிங்கம் | 79 |
| தேவகாந்தன் பக்கம் | தேவகாந்தன் | 80 |
| 'உங்களில் ஒருவன்' லோகேஸ் | ப. ஸ்ரீஸ்கந்தன் | 99 |
| கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் | சேகர் தம்பிராஜா | 100 |
| உங்களுக்கு உகந்த ஆயுட்காப்புறுதி | சிறிதரன் துரைராஜா | 102 |

# LONDON LIFE

## With strong ratings for claims paying ability & financial strength.

## YOUR MORTGAGE PROTECTION POLICY

**Before you sign up for the Mortgage life policy you should shop around. The banks offer convenience, but individual insurance sold by life insurance companies offer portability, flexibility and a better deal.**

Freedom 55 Financial
A division of London Life Insurance Company

QUADRUS
Quadrus Investment Services Ltd.

**Offers Insurance & Banking Solutions**

***To help our clients reach their goals and dreams.***

**Jeganathan Balasundaram (Bala) B. Eng**

FINANCIAL SECURITY AND INVESTMENT REPRESENTATIVE
NATIONAL QUALITY AWARD WINNER
SERVING CANADIANS FOR THE PAST 15 YEARS

**Tel: (416) 291-0451, ext. 227**
**Cell: (416) 518-9489**
**Fax: (416) 291-3779**
Email: bala.balasundaram@freedom55financial.com
**Toll Free: 1-877-566-5433**
2075 Kennedy Road, Suite 300, Scarborough, ON M1T 3V3

**Representing London Life, Manulife & Sun life**



Freedom 55 Financial and design are trademarks of London Life Insurance Company. Quadrus Investment Services Ltd. and design are trademarks of Quadrus Investment Services Ltd. used with permission by London Life Insurance Company.

| *Questions to Ask Yourself* | *Bank Mortgage Insurance* | *London Life Insurance* |
|---|---|---|
| 1. Who owns the policy? | 1. The bank owns the insurance policy. | 1. Client owns their own Policy. |
| 2. Who controls the policy? | 2. The bank controls all the options. | 2. Insured has control of all the options. |
| 3. Can I guarantee I will always be covered? | 3. Your policy will lapse if your mortgage goes into arrears. | 3. Policy will not lapse if you miss a Mortgage payment. |
| 4. Who is my beneficiary? | 4. Your Beneficiary is the Bank. | 4. You can **name** any Beneficiary you want. |
| 5. What kind of coverage do I have? | 5. Your coverage is decreasing term with level cost. | 5. Level term coverage with fixed premiums. |
| 6. Can I be covered if I change mortgage holders? | 6. Moving the mortgage means reapplying for insurance. | 6. Your covered regardless of which institution you choose. |
| 7. How much insurance do I have? | 7. Face amount of the policy cannot exceed the value of the outstanding mortgage. | 7. Your coverage is determined by your needs and wants. |
| 8. What options do I have if I or my spouse dies? | 8. No option but to pay off the mortgage. | 8. Survivor can invest the money and use returns to pay the mortgage and still keep the capital. |
| 9. Can I convert my insurance to a permanent plan at any time? | 9. Not extendible. | 9. Your policy is renewable and convertible. |
| 10. Am I penalized for casual deposits? | 10. Penalizes casual deposits. | 10. Rewards casual deposits. |
| 11. Who guarantees that I am covered if I die? | 11. Underwriting is done at time of death and research can date back to birth. | 11. Underwriting is done at time of application and before a second premium is paid. |
| 12. Who is more expensive? | 12. Can be very expensive. | 12. We are very competitive. |



# RBC MORTGAGE SPECIALIST



- 1st Time Home Buyers, Pre-Approvals & Refinances
- Switch your mortgage to RBC and save
- We will pay your legal & Switch fees on Switches*
- Builder rate hold up to 18 months
- Cash back options available*
- New Immigrants Programs
- Self-Employed? No income verification*
- Consolidate your debts to one low monthly payment

As you RBC Mortgage Specialist and trusted member of our community, I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. And, I can meet with you at the **time** and **place** that is **convenient** for you.

RBC

## Ram Krish

Mobile Mortgage Specialist

Tel: **416-526-4996**

Email: ram.krish@rbc.com

* Some conditions apply.



- digi Media -

# நீர் விநியோகமும் தொழிற்பாடும்

## PLUMBING SYSTEM

## வீடும் விடியலும் - 56

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -




தொடர்ந்து வரும் சில அத்தியாயங்களில் சகலருக்கும் மிக அவசியமான நீர் விநியோகம், அதன் தொழிற்பாடு, சிக்கனமான நீர்ப் பாவனை, செலவைக் கட்டுப்படுத்தக் கூடிய வழி முறைகள், அடிப்படைப் பராமரிப்பு போன்ற விடயங்கள் பற்றிக் கூற இருக்கிறேன்.


தாய் நாட்டில் இலவசமாகப் பெற்ற தண்ணீரை மிகத் தாராளமாகப் பாவித்து பழக்கப் பட்டவர்கள் நாங்கள். ஆனால் வெளிநாடுகளில் தண்ணீர் தொடக்கம் சுத்தமான காற்று வரை ஒன்றும் இலவசம் இல்லை. குறிப்பாக எங்கள் பழக்க வழக்கங்களை இடத்திற்கேற்றவாறு மாற்றாது விட்டால் அதிகளவு சிரமங்களையும் செலவுகளையும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். அதிலும் தண்ணீர்ப் பாவனையில் நாம் கவனம் செலுத்தாது விட்டால் அதிகளவு பணத்தை வீணாக விரயம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.


தண்ணீர்ப் பாவனை பற்றி அறிய முதல் எங்கள் வீடுகளில் தண்ணீர் விநியோகமும், அதன் அமைப்பும் எவ்வாறு இருக்கிறது, குழாய்கள் எவ்வாறு பொருத்தப் பட்டிருக்கின்றன என்பனவற்றை தெரிந்து கொள்ளுதல் பல விதத்திலும் நன்மை பயக்கும். அதனை கீழ்வரும் படம் விளக்குகின்றது.


வீடுகளுக்கு பொதுவாகச் சிறு செப்புக் குழாய்கள் மூலம் தண்ணீர் உட் கொண்டு வரப் படுகின்றது. அதன் ஆரம்பத்தில் ஒரு Shut Off Valve பொருத்தப்பட்டு, அதற்கு அண்மையில் தண்ணீர் அளவுமானி (Water Meter) இணைக்கப் பட்டிருக்கும். வீட்டு உரிமையாளர்கள் அனைவருக்கும் தங்கள் வீட்டில் எங்கு Main Shut Off Valve இருக்கிறது என்பதைத் தெரிந்து வைத்திருத்தல் மிக அவசியமாகும். ஏனெனில் வீட்டில் தண்ணீர் குழாய்களில் திருத்த வேலைகளை காலத்திற்குக் காலம் செய்யும் போதும், அத்துடன் ஏதாவது தண்ணீர் போக்கு ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் இந்த Main Shut Off Valveஐ தேடி அலைய வேண்டி இருக்கும்.

படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் அளவில் பெரிதாக இருக்கும் PVC குழாய்கள் மூலம் கழிவு நீரும், மலசலக் கழிவுகளும் வெளியேற்றப் படுகிறது. கறுப்பு நிறத்தில் இருக்கும் இந்தக் குழாய்களை பலரும் அவதானித்திருக்கலாம். இவற்றின் ஒரு பக்கம் வீட்டுக் கூரைக்கு மேல் திறந்த படி விடப் பட்டிருப்பதை அவதானிக்கலாம். கழிவுகள் இலகுவாக வெளியேற காற்றோட்டம் தேவை. இத்தகைய Plumbing Vent (Roof Vents) அடைபடாதவாறு பார்த்துக் கொள்ளல் மிக அவசியமான ஒன்று. Plumbing Vent அடைபட்டால் கழிவு நீர் வெளியேறும் வேகமும் குறைய வாய்ப்பிருக்கிறது. கழிவு நீர் அகற்றும் குழாய் (Sewer Main). வீட்டில் இருந்து தெருவோரமாக வெளி நோக்கிச் செல்வதைப் படத்தில் அவதானிக்கலாம்.




### கழிவு நீர் வெளியேற்றம்:

பொதுவாக கழிவு நீர் கறுப்புநிற PVC குழாய்களின் ஊடாக வெளியேறுகிறது என்று கடந்த இதழில் பார்த்தோம். சற்று விளக்கமாகக் கூறுவதானால் வீட்டில் உள்ள கழிவு நீரை அகற்றுவதற்கு எந்த வித இயந்திரங்களோ அல்லது Water Pump பாவிக்கப்படுவதில்லை. இயற்கையாக உள்ள புவியீர்ப்பு (Gravity) தத்துவத்தை அடிப்படையாக வைத்தே கழிவு நீர் வெளியேற்றம் செயற்படுத்தப் படுகிறது. ஆதலால் இக் குழாய்கள் சிறு சரிவாகப் பொருத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். வீட்டில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் வீட்டுத் தெருவோரம் உள்ள பாரிய கழிவுக் குழாய்களில் சேர்க்கப்பட்டு பின்னர் வெளியேற்றப் படுகிறது. புவியீர்ப்பை மையமாக வைத்து இயக்கப் படுவதாலேயே வீட்டுக் கூரைக்கு மேல் இருக்கும் Plumping Ventன் அவசியம் முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது இதன் ஊடாக உள்ளெடுக்கப்படும் காற்றோட்டம், சீரான கழிவு நீர் வெளியேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாதது. பொதுவாக பறவைகள் கூடுகட்டுவதனாலும், மர இலைகள் இதன் மேல் உதிர்வதனாலும் Pluming Vents அடைபட வாய்ப்பு இருக்கிறது.

அபிவிருத்தியடையாத கிராமப் பகுதிகளில் கழிவு நீர் வீட்டுக்கு வெளியே உள்ள பொதுக் குழாய்கள் மூலம் அகற்றப்படுகதில்லை. அங்குள்ளவை Septic System என்று அழைக்கப் படும். அது பற்றி பிறிதொரு அத்தியாயத்தில் ஆராயப்படும்.

கழிவு நீர் வெளியேற்றப் படும் போது U வடிவத்திலுள்ள ஒரு பொறியின் ஊடாகவே வெளியேற்றப் படுகிறது. இதற்கு “P”Trap என்றும் ஒரு பெயர் உண்டு.

மேலேயுள்ள படங்களில் இதனைக் காணலாம்.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■

Home Inspection
• Purchase & sale Inspection, • Problem solving Inspection, • New home – Warranty inspection
Optimal Home Inspection Services
Vela Subramaniam
Certified Home Inspector
416-786-0760
416-299-0700
E-Mail: homeinspectorvela@gmail.com



ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்
Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches (We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed






ஞானேந்திரன் நரசிங்கம்
416.937.8090
ஜூடி ஞானேந்திரன்
416.629.9797
Sales Representatives
HOMELIFE
HIGHER STANDARDS
AJAX
$ 509,900
Detached 4 Bedroom
3 Full Washroom
3000 SFT Home
MARKHAM
$ 499,000
Detached 4 Bedroom Home
3 Full Washroom
On Highglen, Superb Loc...
TORONTO
$ 1.248 mill
Detached Custom Built...
Over 3500sft, Hugh Lot..
Superb Location.......
S'BOROUGH
$ 415,000
Agincourt Location...
54'x231' Lot.Great Potential
Superb Location.......
MARKHAM
$ 719,900
Detached 4 Bedroom
4 Full W/R Fin. Basement
Superb Location.......
MARKHAM
$ 429,900
Semi Detached 3 Bedroom
2 Full W/R 16th Ave.
Corner Lot Superb Loc.....
MARKHAM
$ 479,000
Link 3 Bedroom Home
3 Full Washroom
Beautifully Decorated....
S'BOROUGH
$ 340,000
Semi Detached 3 Bedroom
2 Full W/R W/O Bsmt..
Superb Location.....
MARKHAM
$ 495,000
Detached 4 Bedroom
3 Full W/R Fin.Bsmt /2 Br
Superb Location.......
S'BOROUGH
$339,000
Perfect Family Home
3 Bed Room 2 Full W/R
Newer &Superb Location.
S'BOROUGH
$405,000
Detached Bungalow..
3 Bed Room Fin. Basement
Totally Updated............
S'BOROUGH
$339,000
Semi Detached Bungalow..
3 Bed Room Fin. Basement
Top To Bottom Updated..
Queen St. E
$ 399,000
Elegant Thai Restaurant
Profitable Business
49 SeatsTotally Updated .....
Tottenham
$ 2.18 mill
Fully Leased Plaza....
Anchor Tenant is RBC...
7.5% Cap Rate....
Doane Ave.
$ 795,000
3 Acre Parcel Land with
Huge Bungalow...
Rural Residential Zoning.
Woodbine Ave
$ 1.5 mill
1.5 Acre Parcel Land with
Bungalow & 30x40 W/Shop
HWY Commercial Zoning.
S'BOROUGH
$ 1.5 mill
Good Established Plaza..
Good Investment....
Totally Updated............
S'BOROUGH
$1800.00
New Plaza Located at High
Traffic area. Fully Finished
Location... Location...
முதல் பரிசு BMW 300 SERIES CAR
இரண்டாம் பரிசு 2 TICKETS TO CUBA FOR COUPLE
மூன்றாம் பரிசு 42" LCD TV
மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்
நீங்கள் அதிஷ்டசாலி வாடிக்கையாளரா?
எங்களிடம் நீங்கள் வீடு வாங்கி அல்லது விற்றிருந்தால் பெறுமதிமிக்க அதிஷ்ட பரிசுகள் உங்களுக்காக காத்திருக்கின்றன
அதிஷ்ட குலுக்கல் November 28, 2010 GTA Square at 4pm
HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3, OFFICE: 416.321.6969
*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED

# தலையிடியும் அக்குபஞ்சர் சிகிச்சையும்



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

**இதயம் மலர்கிறது - 27**

தலையிடியைப் பற்றி எழுத நினைத்த பொழுதே என் மனக்கண்முன் பலவிதமான தலைவலிகள், தலையிடிகள் பற்றி எழுத வேண்டும் போல் தோன்றியது. மாவட்ட வைத்திய சாலைகளில் வெளிநோயாளர் பகுதிக்குப் பல விதமான குணங்குறிகளுடன் வருவார்கள். அநேகமானவர்களிற்கு வெளிநோயார் பகுதிகளில் கொடுக்கப்படும் சிகிச்சை போதுமானது எனினும் கணிசமானவர்கள் நாட்பட்ட தலையிடி வேதனையால் அவஸ்த்தைப்படும் பொழுது அவர்களை உள்நோயாளர் பகுதியில் வாட்டுகளில் தங்க வைத்து கண்காணிப்பதன் மூலம் தகுந்த சிகிச்சையை அளிப்பதுடன், சில சமயங்களில் அத்தலையிடி மூளையினுள் வளரும் கட்டிகளால் ஏற்பட்டிருக்கலாம் என்று ஐயம் எழும் பொழுது அவர்களை மேலதிக சோதனைகளுக்காக அரசினர் பொது வைத்திய சாலைகளுக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்துள்ளேன். அவர்கள் மீண்டும் தொடர் சிகிச்சைக்கு அவ் வைத்திய சாலைகளில் பெற்ற வைத்திய அறிக்கைகளுடன் என்னிடம் சிகிச்சை பெறவருவார்கள். குறிப்பாக ஒற்றைப்பக்கத் தலைவலியால் பல வருடங்களாக அவஸ்தைப்பட்டவர்களை இங்கு குறிப்பிடலாம்.

அக்குபஞ்சர் மூலம் ஒற்றைப் பக்கத்தலைவலி அநேகம் குறைவடைவதை அறிந்து, அப்பாடநிரலை நானும் கற்று அதை நோயாளர்களிடம் பிரயோகித்த பொழுது மிகவும் அதிசயிக்கத் தக்க முறையில் தலையிடி மாறுவதை அவதானித்தேன். எல்லாவித தலைவலிகளும் அக்குபஞ்சரால் மாறும் என்று கூறுவதற்கும் இல்லை. சாதாரண தலையிடிகள் ரைலினோல், அஸ்பிரின், டிஸ்பிரின் போன்ற வில்லைகளால் மாறிவிடும். வயிற்றுப்புண் உள்ளவர்கள் டிஸ்பிரின், அஸ்பிரின் வில்லைகளை வைத்திய ஆலேசனைப்படி எடுப்பது நல்லது.

ரைலினோல் வில்லையை இலங்கையில் பனடோல் என்றும், இந்தியாவில் கற்றமோல், மெற்றமோல் என்று அழைப்பார்கள். இதன் இரசாயனப் பெயர் அசெற்றமெனொபென் (Acetaminophen) ஆகும். இவ்வில்லை உடலில் ஏற்படும் வேதனை, காய்ச்சல் என்பனவற்றை நீக்கும். ஆனால் வீக்கத்தைக் குறைக்காது. மாறாக அஸ்பிரின், டிஸ்பிரின் என்பனவற்றை எடுத்தால் அது வேதனை, காய்ச்சல், வீக்கம் என்பனவற்றைத் தணிப்பதுடன் குருதியைக் கட்டிபடாமல் வைத்திருக்கும் தன்மையையும் கொடுக்கும், வயிற்றெரிவு ஏற்பட்டால் எடுக்கக்கூடாது.

சிகிச்சை பெறுவதற்கு முன்பு எந்த வகையான தலையிடியினால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதைக் குடும்ப வைத்தியரை அணுகி கண்டறிவது அவசியம். தலையிடிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

## தலையிடிகளும் காரணங்களும்:

### ஒற்றைப் பக்கத்தலையிடி:

மூளைக்கு குருதி வினியோகிக்கும் குருதிக் குழாய் விரிவடைவதால் ஏற்படுவதாகக் கருதப்படுகின்றது.

### சலனத்தலையிடி:

மனம் சஞ்சலப்பட்டு நெருக்கடிகளுக்குள்ளாகும் பொழுது இது ஏற்படுகின்றது.

### கபால இடி:

முழுமண்டையோடும் வெடிப்பது போன்று இருக்கும். சில சமயங்களில் பாரிசவாதம் ஏற்படுவதற்கு முன் எச்சரிக்கையாகவும் இருக்கலாம்.

### தசையிறுக்கத் தலையிடி:

இவற்றில் பலவகைகள்...

- கழுத்துப் பகுதித்தசைகள் இறுகுவதால் ஏற்படலாம்.
- கழுத்தில் அல்லது மேல் முதுகில் ஏற்பட்ட காயங்கள் சரிவரச் சீர் செய்யப்படாத பொழுது ஏற்படலாம்.



- உட்காரும் இருக்கை நிலை வேறுபடும் பொழுது அதாவது சரிவர அமராத பொழுது.
- மிகுதியான கவலையாலும் ஏற்படலாம்.
- சில தசைகளை இறுக்கி வைத்திருப்பதாலும் ஏற்படலாம்.
- நீண்ட நேரம் வாகனம் ஓட்டுதல் அல்லது அமர்ந்து இருத்தலால் ஏற்படலாம்.
- படுக்கையில் தலையணை தகுந்த முறையில் அணைந்து கொள்ளாதபொழுது அல்லது பிழையான படுக்கை முறைகளால் ஏற்படுவது.
- விபத்தின் பின்பு ஏற்படும் தலையிடி.
- கன்னப் பகுதியில் ஏற்படும் தலையிடி.
- முன்பக்க நெற்றித் தலையிடி.
- பிடரித் தலையிடி.
- சைனஸ் தலையிடி.
- மூளையில் ஏற்படும் கட்டியால் ஏற்படும் தலையிடி
- கண்பார்வைக் குறைபாட்டால் ஏற்படுவது.
- அதிக இரத்த அழுத்தத்தால் ஏற்படுவது அல்லது மூளையில் குருதி ஒழுக்கால் ஏற்படுவது.
- மலச்சிக்கல், உணவு நஞ்சு என்பனவற்றால் ஏற்படுவது.
- காதில் ஏற்படும் பிரச்சனைகளால் ஏற்படுவது.
- தந்தத் தலையிடி - பற்குழியில் சீழ்க்கட்டு என்பனவற்றால் ஏற்படுவது.
- கிருமித் தொற்றால் ஏற்படும் தலையிடி.

மேலும் பல காரணங்கள் உண்டு வைத்தியரை அணுகும் பொழுது அதற்குரிய காரணங்களை அறிவதுடன் சிகிச்சை முறைகளையும் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது. மருந்துகளால் ஏற்படும் பக்க விளைவுகள், அவை உணவின் முன்பா அல்லது பின்பா அல்லது உணவுடனா எடுப்பது போன்ற விபரங்களை மருந்தாளர்களிடம் அறிந்து கொள்ளலாம்.

மேற்கூறிய பல காரணங்கள் உள்ளடக்கி தலைவலியை மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளார்கள்.

- சாதாரண தலையிடிகள்.
- பிறகாரணங்களால் ஏற்படும் தலையிடிகள்.
- மண்டையோட்டினுள் நரம்புகள் சம்பந்தமாக ஏற்படும் தலையிடிகள்.

சலனத் தலையிடி, ஒருபக்கத்தலையிடி என்பனவற்றை முதலாவது பிரிவிலும், தலை, கழுத்துப் பகுதிகளில் உள்ள தசை, எலும்புப் பகுதிகளில் ஏற்படும் நோயிகளால் அதாவது மூளையினுள் குருதி ஒழுக்கு, கட்டி, மூளைப் போர்வை அழற்சி, மூளைவீக்கம், கழுத்தெலும்புச் சிதைவு என்பனவற்றல் ஏற்படும் தசையிறுக்கம் போன்றவற்றை இரண்டாவது பிரிவிலும், தலை, மேற்கழுத்து என்பனவற்றில் உள்ள நரம்புகள் வீங்குவதால் ஏற்படும் தலையிடியை மூன்றாவது பிரிவிலும் அடக்கலாம். தலையிடிகளை வகைப்படுத்துவதற்குரிய எளிய வழிமுறைகளே இவையாகும்.

அநேகமான தலையிடிகள் சாதாரணமானவையே. அஸ்பிரின், அட்வில், ரைலினோல், நப்புறொக்சின் போன்ற மருந்துக்கடைகளில் கிடைக்கும் வில்லைகளால் மாறக்கூடியவை. எனினும் மீண்டும், மீண்டும் ஏற்படும் தலைவலிகள் பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மருந்துக் கடைகளில் வாங்கும் மருந்துகள் சில சமயங்களில் சாதாரணமாக வேறு நோய்களுக்கு எடுக்கும் மருந்துகளுடன் ஒன்றுடன் ஒன்று தாக்கத்திற்குள்ளாகக் கூடியவையாக இருக்கலாம். மருந்தாளர்களிடம் இவைபற்றி ஆலோசிப்பது மிகவும் நல்லது. மற்றும் வயிற்றுப்புண், ஈரல் வியாதிகள், சிறுநீரக வியாதிகள், போன்ற ஏனைய காரணங்களும் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பொதுவான சில தலையிடிகள்:

விளையாடும் பொழுது கடினமான பந்து, துடுப்பெடுத்தாடும் மட்டை என்பன தலையில் மோதுவதால். அல்லது, சுவருடன் பலமாக மோதும் பொழுது, வாகனவிபத்தின் பொழுது தலை பலமாக அடிபடும் பொழுது மூளை மண்டையோட்டினுள் அசைக்கப்படுகின்றது. அப்பொழுது மூளையினுள் அல்லது மூளைப் போர்வையினுள் குருதிப் பெருக்கு ஏற்பட்டு அதனால் தலையிடியும் மேற்கொண்டு கவனிக்காதுவிடில் மூளையினுள் அதிக குருதி ஒழுக்கு ஏற்பட்டால் இறப்புக்கூட சம்பவிக்கலாம். முதலுதவி வகுப்புகளில் இக்குருதி ஒழுக்குகளால் ஏற்படும் குணகுறிகளை எப்படிக் கண்டறிவது பற்றிய விளக்கங்களைக் கற்பிக்கின்றார்கள். ஒரு குடும்பத்தில் ஒருவராவது முதலுதவி கற்று இருப்பது பல உயிர்களை ஆபத்தில் இருந்து காப்பது மட்டுமல்லாமல், விபத்துக்களால் பின்பு ஏற்படப்போகும் பாரிய விளைவுகளாகிய அங்க இழப்பு, பாரிசவாதம் போன்றவற்றைக்கூடப் பல சந்தர்ப்பகளில் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

மூளைக்குருதிக் கலன் விபத்தின் பொழுது பாரிய தலையிடி ஏற்படும். இதன் குணங் குறிகளை அறிந்திருப்பதன் மூலம் நோயாளியைச் சாதாரண தலைவலி வில்லைகளைக் கொடுத்துக் காலம் தாழ்த்தாமல் நேர காலத்துடன் வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதன் மூலம் பல நன்மைகளைச் செய்து விடலாம். முதலுதவி வகுப்பில் மேலும் பல அறிவுரைகள் புகட்டப்படுகின்றன.

வாகன விபத்தின் பொழுது காற்றுப்பை தலையைத் தாங்காத பொழுது, தலை முன்னோக்கி நகர்ந்து கழுத்துப்பகுதியைப் பாதிப்பதால் ஏற்படும் தலையிடி இன்னொரு வகை மூளைப் பகுதியில் அல்லது முண்ணாண் பகுதியில் அல்லது இரண்டு பகுதிகளிலும் நாடி, நாளங்களால் குருதி விநியோகம் சீராக இடம் பெறாதுவிட்டாலும் தலையிடி ஏற்படும். சில சமயங்களில் இத்தகைய நாடி நாளங்கள் குழந்தைகள் பிறக்கும் பொழுது சரியான முறையில் உற்பத்தியாகாமல் விடுவதால் மூளை, முண்ணாண் பகுதிகளுக்கு குருதி விநியோகம் சீராகக் கிடைப்பதில்லை. வைத்திய பரிசோதனைகள் மூலம் இவற்றைக் கண்டறிந்து கொள்வது நல்லது.

காக்கை வலிப்பு, மூளைக்கட்டிகள், கிருமித் தொற்றுகள், மூளைப்போர்வை அழற்சிகள், குருதி அழுத்தம், உணவு ஒவ்வாமை, மாத விடாய் நேரங்களில் ஹோமோன் சமச்சீரின்மை, உடல்நீர்வற்றல், தைரொயிட்டுச் சுரப்புக் குறைபாடு, சிறுநீரக வியாதி, குருதியில் குழுக்கோசின் அளவு குறைதல் போன்ற பல காரணங்களையும் கூறலாம்.

## பரிசோதனைகள்:

உடற் பரிசோதனை குணங்குறிகள்.

**குருதிப் பரிசோதனை:** ESR, CRP, WBC/DC உடலினுள் உள்ள வீக்கம், தொற்று என்பவற்றை புலப்படுத்தும். குருதியில் உள்ள உப்புக்களின் அளவு ஈரல், சிறுநீரகம் என்பனவற்றின் தொழிற்பாட்டை புலப்படுத்தும்.

**CT-Scan:** கட்டிகள், உதிரப்பெருக்கு என்பனவற்றைப் புலப்படுத்தும்.

**MRI:** மூளையின் அமைப்பு, உள்ளேயுள்ள திசுக்கள் என்பன சரியாக உள்ளனவா என்பதை புலப்படுத்தும்.

**முதுகில் நீரிகுற்றி எடுத்தல்:** இங்கு மூளையிலும், முண்ணாணைச் சுற்றியும் ஓடித்திரியும் நீரைச் சிறிதளவு ஊசி மூலம் எடுத்துப் பரிசோதிப்பார்கள். இது மூளை முண்ணாண் பகுதிகளில் கிருமிகள் தொற்றி யுள்ளனவா என்பதைப் புலப்படுத்தும்.

தொடர்ச்சியாகத் தலைவலி உள்ளவர்கள் வைத்தியர்களை அணுகி அதன் காரணத்தை அறிந்து சிகிச்சை பெறுவது அவசியம்.

தலையிடியும் அக்குப்பஞ்சர் சிகிச்சையும் என்று தலையங்கத்தைக் கொடுத்து விட்டு வேறு பல கருத்துக்களை முன்வைத்தமை தலையிடி பற்றிய விளக்கத்தை ஏற்படுத்துவதற்காகும். பல விதமான தலையிடிகள் சாதாரணமானவை. ஆனால் தொடர்ந்து இருந்தால் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அக்குப்பஞ்சர் மூலம் சில தலையிடிகளை முற்றாக மாற்றலாம், விசேடமாக Migraine என்று கூறப்படும் ஒற்றைப்பக்கத் தலையிடி அக்குப்பஞ்சர் சிகிச்சைக்கு மிகுந்த பலனைக் கொடுப்பதை நான் அனுபவத்தில் கண்டுள்ளேன்.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

**TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL**
தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி
**Dr. Kandiah Senthilathan**

- Standard First Aid & CPR Level "C" - 2 Days Program
- Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program
- CPR Level "A" - 4 Hours Program (Adult)
- CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant)
- CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)

647-801-9252
416-502-9252

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

# வீடு வாங்க விற்க



**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**





**Morningside & Finch**
4 Bedrooms 3 Washroom




**Brimley & Denison**
3+1 Bedrooms 4 Washroom



**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**




## HomeLife Today Realty Ltd., Brokerage*

31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor

# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

Fax: 416 438 1612
1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6

RBC Financial Group

# வீட்டுச் சந்தையும் புறச் சூழலும்



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

மழைக்கு முளைக்கும் காளான்கள் போல் தேர்தல் காலத்தில் வீதியோரங்கள் மூலை முடுக்குகளெல்லாம் தேர்தல் விளம்பரங்கள் ரொரன்ரோவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சரமாரியாகவே காணப்பட்டது. அதில் எம்மவர்களும் சரிசமமாக பங்குகொண்டது, எமது சமூக வளர்ச்சியின் ஓர் வெளிப்பாடே. அதை செய்கிறோம், இதை செய்கிறோம் என்று தமக்கென பெரும் பட்டியல் தயாரித்து தேர்தலில் வெற்றிபெற்றவர்கள், பட்டியலிட்டவற்றில் எதையெதைச் செய்வார்கள் என்பதுதான் இன்றைய கேள்வி. இருப்பினும் வெற்றியாளர்கள் விரும்பினாலும் பொருளாதாரம் இடம் கொடுத்தால் தான் எதையும் சாதிக்க முடியும். புதிய வரி அமுலாக்கத்தினால் அரசியல்வாதிகள் பின் தள்ளப்படுவதும், வரி தளர்த்தலினால் முன்னேற்றப்படுவதும் இன்றைய காலங்களில் அவதானிக்க முடிகின்றது. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்காகவே வரி அறவிடப்படுகின்றது என்கின்ற கூற்று உண்மையெனில் வரி தளர்த்தப்படுவது நாட்டினை பின்னடைவுக்கு அல்லவா வழிகோலும். அவ்வாறாயின், வரி தளர்த்தலினை அறிமுகம் செய்யும் கட்சிகள் எவ்வாறு வெற்றி ஈட்டுகிறார்கள். எல்லாம் அரசியல்!

சரி, தாய்வீடு வாசகர்கள் கவனத்திற்காக கடந்த பல மாதங்களாக HST பற்றிய விளிப்புணர்ச்சியினை கட்டுரை வாயிலாக அறிந்தோம். இன்றைய இதழில் அதன் ஓர் அம்சமாக HSTக்கு முன்னும் பின்னும் வீட்டுச் சந்தை எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை புள்ளி விபரங்களுடன் அவதானிப்போம்.

முன்னைய காலகட்டங்களில் வரலாறு தனது காலங்களின் அடையாளங்களுக்காக கிறிஸ்துவின் பிறப்பினை முன்வைத்து கி.மு, கி.பி என்று கணக்கிட்டது. அதே போல கனடிய வீட்டுச் சந்தையினையும் HSTக்கு முன் HSTக்கு பின் குறிப்பிடலாம். சாதாரணமாகவே HST பிறப்பிற்கு முன் வீட்டுச் சந்தையின் பொற்காலமாக கருதப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் HSTஇன் அறிமுகம் மற்றும் பொருளாதார நெருக்கடியானது வீட்டுச் சந்தையில் சில பிளவுகளை ஏற்படுத்தி இருக்கின்றது. அந்த வகையில் 2010இன் காலாண்டு அறிக்கையினை பார்த்தோமேயானால். வீடுகளின் மீள் விற்பனையானது MLS மூலமாக பட்டியலிடப்பட்டு விற்கப்படும் முறையில் 2009இல் மிதமான நிலையில் இருந்தது. 2010இல் களைகட்டிய விற்பனை 2011இல் மேலும் சிறப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மழைபெய்தால் உழவனுக்கு மகிழச்சி, வியாபாரிக்கு கவலை என்பது போல HSTஇன் பாதிப்பானது புதிய வீடுகளின் விற்பனைக்கு பாதிப்புக்களையும் மீள்விற்பனை மற்றும் தொழில் சார்ந்த விற்பனைக்கு ஊக்கத்தினையும் அளிக்கின்றது. மொத்தமாக 2010இல் 463,800 மீள்விற்பனை எதிர்பார்க்கப்படுகின்றது. அதுவே 2011இல் 456,000 எண்ணிக்கையாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## மீள்விற்பனை விலைகள்:

MLSஇன் பிரகாரம் சராசரி விலைப்பட்டியல், 2010ற்கான மூன்றாவது கால் ஆண்டில் சிறிது இறக்கம் கொண்டே இருக்கும். இருந்தாலும், தொடர்ந்து வரும் காலங்களில் ஏற்படும் சீரான வருமான மாற்றங்கள் மற்றும் விற்பனை நிலைமைகளைப் பொறுத்து விலையின் நிர்ணயங்கள் அமையலாம். அதற்கமைவாக 2010இல் சராசரி விலை $338,900 ஆனது 2011இல் $342,200ஆக எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## பகுதிவாரியான பார்வை:

British Columbia – 2009இல் புதிய வீடுகள் கட்டுமானத்தை பொறுத்தவரை 2010இல் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. உதாரணமாக 16,077 எண்ணிக்கையில் இருந்து 23,900 ஆக மாற்றம் கண்டது அதுவே 2011 இல் 25,700ஆக காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Alberta – British Columbiaவைப் போன்றே 2009இல் 20298ஆன எண்ணிக்கை 2010இல் 28450ஆக காணப்பட்டது. அதுமட்டுமல்லாமல் Robus எண்ணெய் விலைகள் Alberta பகுதியின் முன்னேற்றத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளது.

## விரிவான பார்வை:

வீட்டுச் சந்தை நிலவரமானது 2009இல் மிக மகிழ்ச்சிகரமானதாக இருந்தாலும் 2010இன் மூன்றாவது காலாண்டு வருடாந்திர விலை நிர்ணயமானது 167,500 unitகளாக உள்ளது. மிதம்பட்ட மேற்போக்கான பொருளாதார நிலையை வைத்துப் பார்க்கையில் 2010 மற்றும் 2011 நிதானமான சந்தையிலேயே செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் 2010 தொடக்கம் 170,200இலிருந்து 198,400க்கு உள்ளாகவும் 2011இன் நடுவில் 149,900இலிருந்து 210,500ஆகவும் இருக்கும் என்று கருதப்படுகின்றது. இக்கணிப்பின் இன்னொரு பார்வையான CMHC அறிக்கையின் பிரகாரம் 2009இல் 149,081உம், 2010இல் 184,900உம், அதுவே 2011இல் சிறிது சோர்வடைந்து 176,900 Unitகளாகவும் இருக்கும் என்று அறியப்படுகின்றது.

வீடுகளுக்கான தொடக்கம் 2010இல் கனடாவில் எல்லாப் பகுதிகளிலும் (Prince Edward Island தவிர்த்து) சிறப்பாகவே இருந்தது. 2011இத் இத்தொடக்கம் ஆனது Alberta, British Columbia மற்றும் Sasketchewan மாகாணங்களில் அதிகமாகவும் Nova Scotiaவில் மிதமாகவும் இருக்கும். மற்றய பகுதிகளில் 2011இல் சற்று குறைவாகவே காணப்படும்.

HSTஇன் அமுலாக்கத்தினால் உணரப்படும் சில இழப்புக்களை சரிக்கட்டும் விதமாக கனடிய அரசினால் வீட்டுக்கடன் சார்ந்து சில நல்ல திட்டங்கள் April 19, 2010இல் அறிமுகம் செய்யப்பட்டது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இத்திட்டம் பல பலன்களைப் பெற்றுத்தரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## தனிவீடுகளின் அதிகரிப்பு:

வீடு மீள்விற்பனை சந்தையில் ஏற்பட்ட வியாபார மாற்றங்களின் காரணத்தினால் 2009இல் இரண்டாம் பாகத்தில் இருந்து தனி வீடுகளின் விற்பனை அதிகரித்தது. 2009இல் 75,650ஆக இருந்த தனிவீடு 2010இல் 93,600ஆக முன்னேற்றம் கண்டுள்ளது. அது மட்டுமல்லாமல் multi family வீடுகளின் நிலையும் பெருகத் தொடங்கியுள்ளது. 2009இன் நடுவில் இருந்து 2010இன் நடுப்பகுதிவரை 91,300 multi family வீடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. Quebec தவிர்த்த மற்றய மாகாணங்களில் பெரும்பான்மையான வகையில் multi family வீடுகள் வரவேற்பை பெற்றிருக்கின்றது. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கையில் 2010இல் 170,200 வீடுகளில் இருந்து 198,400 வீடுகள் வரையில் இருக்கும். அதுவே 2011இல் 149,900 இலிருந்து 210,500 இருக்கும். ஏற்கனவே பட்டியலிடப்பட்ட வீடுகள் 2010இல் 450,000 முதல் 485,700 ஆகவும், 2011இல் 425,000 முதல் 490,700 வீடுகளுக்கு உள்ளாகவும் இருக்கும். MLS பட்டியலின்படி சராசரி விலையானது 2010இல் $331,000 முதல் $345,500 உள்ளாகவும், 2011இல் $327,800 முதல் $357,000 உள்ளாகவும் காணப்படும்.



## வீட்டுச் சந்தையை நிர்ணயிக்கும் விடயங்கள்:

Bank of Canada ஒரே இரவில் வட்டி விகித மாற்றங்களை ஏற்படுத்தியதன் விளைவு வீட்டுக்கடன்களின் விலைகளில் ஏற்றத்தினை ஏற்படுத்தியதாக CMHC கருத்து தெரிவித்துள்ளது. 2010 மற்றும் 2011 ஆண்டுகளில் இதே நிலை நீடிக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது. 2010இல் ஒரு ஆண்டிற்கான Mortgage சதவீதம் 3.4 முதல் 4.5 ஆகவும் ஐந்து ஆண்டிற்கான Mortgage சதவீதம் 4.0 முதல் 6.5 ஆகவும் உள்ளது. இதே நிலைமை நீடிக்கும் பட்சத்தில் 2011இற்கான ஒரு ஆண்டு Mortgage சதவீதமானது 4.5 முதல் 6.0 ஆகவும் மற்றும் மூன்று அல்லது ஐந்து ஆண்டிற்கான Mortgage சதவீதம் 5.0 முதல் 7.5 ஆகவும் இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## இடமாற்றங்கள் (Migration)

2009இல் இடம் மாறுதல்கள் அதாவது வரவாளர்கள், சென்றவர்கள் நீக்கலாக 269,000 ஆக இருந்தது. அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் இடம் மாறுதல்கள் சற்று அதிகரித்து காணப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 2010இல் இவ் எண்ணிக்கையானது 275,840 ஆகவும் 2011இல் 288,450 ஆகவும் உயர வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

## வேலைவாய்ப்பு மற்றும் வருமானங்கள்:

வேலைவாய்ப்பு விடயங்களை கணக்கில் கொள்கையில் 2010இல் 1.7% அதிகரித்து காணப்படுகின்றது. இதுவே 2011இல் 2.0%ஆக வாய்ப்புக்கள் உள்ளன. வேலை அற்றவர்களின் எண்ணிக்கையானது 2010இல் 8%ஆகவும் 2011இல் 7.6%ஆக குறைந்தும் காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகவே சந்தர்பங்கள், சூழ்நிலைகள் எவ்வாறாக இருந்தாலும், இடம்மாறுதல்கள், வேலைவாய்ப்புக்கள் மற்றும் வர்த்தகப் பரிமாற்றங்கள் இருக்கின்ற வரையில் கனடிய வீட்டுச் சந்தையானது வளர்ச்சிப் பாதையிலேயே செல்லும் புதிய அரசியல் மாற்றங்கள், புதிய பொருளாதார வளர்ச்சிக்கான எதிர்பார்ப்புக்களுடன் 2010ஆம் ஆண்டின் இறுதி பகுதிகளில் காலடி எடுத்துவைத்திருக்கும் இன்றைய நிலை, வரிச்சலுகைகளை பொது மக்களுக்கு எவ்வாறு வளங்குகின்றது என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஒவ்வொரு வருட இறுதியிலும் புதிதாக வரப்போகும் மாற்றங்களை எண்ணி புதுவருட எதிர்பார்ப்புக்களுடன் நாம் கழித்துக் கொண்டிருக்கின்றோம். 2011ஆம் ஆண்டு ஓர் சீரான பொருளாதார வளர்ச்சியினை கொண்டிருக்கும் என்கின்ற ஆய்வாளர்களின் கருத்து மெய் எனின் பொறுமையுடன் எதிர்பார்ப்போம்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■

# குளம் வற்று...

4ம் பக்கத் தொடர்ச்சி...

கடமைப்பாடுள்ள நாடுகள். அவற்றின் மூலம் தான் தமக்கு ஒரு விடிவுகிட்டும் என்று சிறுபான்மையினர் எண்ணுவதில் வியப்பில்லை. இந்தியா இலங்கையின் செயற்பாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் அதற்குத் தமிழ் நாடு உதவ வேண்டும் என்ற தமிழர்களின் விருப்பத்தின் வெளிப்பாடும் நம்பிக்கையும் தொடர்ந்தும் முழுஇந்தியா இலங்கை மீதான தலையீட்டுக்கு உதவி செய்து வருகிறது.

தமிழர்கள் விடுதலைப்புலிகளின் கொள்கைகளினாலும் நடவடிக்கைகளினாலும் ஈர்க்கப் பட்டிருப்பதும் சமகால நாலு தலைமுறைகளுக்கும் விடுதலைப் புலிகளது அடிப்படை நோக்கம் தமிழர்களின் பாதுகாப்புத்தான் என்பதும் தமிழர்கள் தான் விடுதலைப்புலிகள் விடுதலைப்புலிகள் தான் தமிழர்கள் என்ற நிலையினைத் தோற்றுவித்திருந்தது. திடீரென ஏற்பட்டதொரு வெற்றிடம் தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வு என்பதற்கு ஈடுசெய்யக் கூடிய வலிய சக்தி ஒன்றின் தேவையினை உணர்த்திக் கொண்டிருக்கிறது. இதனைப் பிரித்தானியா செய்யுமா அல்லது மீண்டும் இந்தியாவின் கையில் தான் கொடுக்கப்படுமா என்பதனை அறிய விரைவில் வெளிக்கொணரும் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

இந்த இரண்டு நாடுகளின் தலையீடுகளையும் போர்க்குற்றத்தின் பாதிப்புக்களையும் விடுவித்துக் கொள்ள இலங்கை அரசாங்கம் மீண்டுமொருமுறை விடுதலைப்புலிகளைப் பயன்படுத்துமா என்ற சந்தேகம் பலரிடையே வலுவடைந்து கொண்டிருக்கிறது. இந்தியாவால் செய்யமுடியாததை மிக விரைவாகச் செயற்படுத்துவதில் இலங்கை அரசுக்குப் போதிய வாய்ப்புக்கள் இருப்பதும் பேரம் பேசுவதில் இனஉணர்விருப்பதும் அதற்குச் சாதகமாக இருக்கிறது.

மீள்கட்டுமானப்பணி, போர்குற்ற விசாரணைகள், போர்க்காலப் பாதிப்புக்களை வெளியிடும் வசதிகள் என்பன இனப்பிரச்சினைத் தீர்வினது தேவையினைத் தள்ளிப்போட்டு வருகின்றன. உள்நாட்டின் விசாரணைகள் வெளிநாடுகளின் அழுத்தங்களை மிதப்படுத்துவனவாக இருக்கின்றன.

இந்த நிலையில் இலங்கையின் தமிழ்கட்சிகள் அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்படுவன, அரசாங்கத்தின் கருத்துடன் ஒன்றிப்போகாதன என்ற இரண்டு பிரிவினுள் உள்ளடக்கப்படுகின்றன. இதனை இலங்கை அரசு விரும்பவில்லை எல்லாத் தமிழ்கட்சிகளும் இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதன் மூலம் தான் இலங்கை போர்த்தழும்புகளிலிருந்து விடுபட முடிவதுடன் நிலையான தொரு ஆட்சிக்கும் வழிவகுப்பதாக இருக்கும். இதற்காக ஒற்றுமைப்பட்ட ஆதரவை அரசங்கம் வேண்டி நிற்கிறது அதற்காக எத்தகைய தனிமனித விட்டுக் கொடுப்புக்களையும் சலுகைகளையும் செய்யவே அரசாங்கம் தயாராக இருந்து வருவது தவிர்க்க முடியாதது.

இதில் தமிழர் கட்சிகள் ஒற்றுமைப்படுவது என்பதும் அதன்மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு அவை அழுத்தம் கொடுக்கும் என்பதும் நடைமுறைச் சாத்திய மற்றதாகத் தெரியினும் அரசாங்கம் அத்தகையதொரு இணைவின் மூலம் தனது களங்கத்தைத் துடைக்க எண்ணும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. தமிழ்க் கட்சிகளும் இயக்கங்களும் இந்தச் சந்தற்பத்தை விருப்புவெறுப்பின்றிப் பயன்படுத்துவார்களா?

kanapathipillai.a@thaiveedu.co

■ ■ ■




## Full-time Real Estate Agent

# Nada G. Nadarajah B.V.Sc

## Call Me @ 416 616 8751

Sales Representative

"An award-winning realtor with 14 years experiance".




**Markham & Eglinton**
Condo. Apartment
3 Bedrooms - 2 Washrooms
Close to Schools & Major Plazas




**Kennedy & Eglinton**
Condo. Apartment
2+1 Bedrooms - 2 Washrooms
Close to all Amenities




**McClevin & Neilson**
Condo. Apartment
2 Bedroom - 2 Washroom
Approx. 1000 Sq. Ft




**Markham & Nashdene**
Commerical Condo. Unit
1440 + 900 Sq. Ft Mezzanine
Low Maintenace Fee




**Warden & Finch**
Condo. Townhouse
3 Bedrooms - 2 Washrooms
Completed Basement w/ walkout




**Kennedy & Eglinton**
Condo. Apartment
2+1 Bedrooms - 2 Washrooms
Luxury Condo. Building

## HomeLife
Landmark Realty Inc., brokerage

*5200 Finch Ave. E, Suite 106*
*Toronto, ON M1S 4Z4*
*Bus: 416 293 5093*
*nanadarajah@trebnet.com*

HOMELIFE HIGHER STANDARDS

---



**Justin William**
*Broker*
**Cell: 416.803.7344**
**www.justinwill.com**



**Ravi Raveendran**
*Broker*
**Cell: 416.817.8479**



**Sasi Chelvaratnam**
*Sales Representative*
**Cell: 416.858.4828**

## Yes ! You May WIN this

## New 2011, BMW 3 series

On Sunday November 28, 2010, at 4:00 pm
at GTA Square Mall.







- Bright & Spacious Town house
- 4+2Bedrooms
- Finished Basement W/Entrance
- Recently Updated Washrooms
- Call **SASI** For Details....




- Beautiful Semi Detached House
- Main Floor & 2nd Floor Only
- Spacious 3 Bedrooms
- Step To Ttc.
- Call **Justin or www.justinwill.com**




- Good Investment
- Excellent Location
- 3-Two Bdrm Apt On 2ndFloor
- Well Running Mexi Restaurant
- Call **RAVI** For Details....




- Luxury Condominium
- Excellent Location
- 1+1 Bedrooms
- Ttc At Door Step
- Call **Justin or www.justinwill.com**




- 3+2 Bedroom House
- Well Maintained House
- Finished Basement
- Excellent Neighbourhood
- Call **RAVI** For Details....




- Great Stater Home
- 3 Bedroom House
- Large Back Yard
- Close to Schools, Shops & Ttc
- Call **SASI** For Details...




- 3 Bedroom Town House
- Minutes To U of T
- Lots Of Upgrades
- Totally Updated
- Call **SASI** For Details....




- Beautiful House
- 4 Bedrooms
- Child Safe Cul-De-Sac
- Approx 2850 Sq F
- Call **JUSTIN** For Details....




- 4 Bedroom House
- Finished Walk-Out Basement
- 5 Washrooms
- Prestigious Aurora Area
- Call **RAVI** For Details...




- Beautiful Cozy Home
- 4 Bedrooms.
- Prestigious Main St Unionville
- Renovated Home
- **Call Justin or www.justinwill.com**

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale

*Independently owned and operated

# பிள்ளைகளின் உயர்கல்விச் சேமிப்புத்திட்டம்

உங்கள் குழந்தையின் எதிர்கால வெற்றிக்குக் கல்வி முக்கியம் என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தும், அதற்கு எப்படி பணம் செலுத்துவது என்பது தெரியவில்லையா. அதற்கான சிறந்த வழி பதிவுசெய்யப்பட்ட கல்வி சேமிப்புகள் திட்டத்தின் (RESP) மூலம் அரசின் பண உதவியைப் பெறுவதாகும்.

கனடா தேசத்து கற்றல் பத்திரத்தை (Canada Learning Bond) குடும்பங்களுக்கு அரசாங்கம் வழங்குகிறது. உங்களால் பணம் கொடுக்க முடியாவிட்டாலும் அது உங்கள் குழந்தையின் RESPஇல் சேர்ந்து விடும். உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமோ அவ்வளவு பணத்தை அரசாங்கம் வழங்கும்.

ஒரு RESPஐ துவங்குவதற்கு நீங்களும் உங்கள் குழந்தையும் ஒரு சமுதாய காப்பீட்டு எண்ணை (Social Insurance Number) வைத்திருக்க வேண்டும். சமுதாய காப்பீட்டு எண் என்பது கனடாவில் பணி செய்ய அல்லது அரசாங்கத்திடம் இருந்து நன்மைகள் பெறுவதற்கு நியமிக்கப்படும் ஒரு சிறப்பு எண்ணாகும்.

இந்த இடத்திலேதான் நீங்கள் Smart Saverஐப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும்.

Smart Saver என்பது ஒரு இலாபம் - ஈட்டாத சமுதாய நலத்திட்டமாகும். அது குடும்பங்கள் தங்கள் குழந்தைகளை மேல்நிலைப் பள்ளிக்குப் பின் படிக்க வைப்பதற்கான அரசு பணத்தை எப்படி பெறுவது என்பது பற்றியும் ஒரு RESPஐ எப்படித் தொடங்குவது என்பது பற்றியும் உதவி அளிக்கிறது. RESPகளை அல்லது முதலீடுகளை Smart Saver விற்பனை செய்வதுமில்லை, ஒரு RESPஐ தொடங்கும் போது பொருளாதார ரீதியில் பலன் பெறுவதும் இல்லை. Smart Saverக்கு தேவையான பணத்தை Smart Saver நலத்திட்ட பங்குதாரர்கள் வழங்குகிறார்கள்.

RESPயை வழங்க உரிமம் பெற்ற, அரசாங்கத்துடன் பதிவு செய்யப்பட்ட பல வணிக நிறுவனங்கள் உள்ளன, அவை ஒவ்வொன்றும் வித்தியாசமானவை.RESPகள் அனைத்துமே ஒன்றில்லை. திட்டங்களை ஒப்பிடும்படி Smart Saver அறிவுறுத்துகிறது உங்களுக்கு எந்த RESP வழங்குநர் என்பதை முடிவு செய்யும் முன் ஒப்பிடுங்கள்.

இலவச கல்விப் பணத்தின் மூலம் $2,000 வரை பெறலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் பதிவுசெய்யப்பட்ட கல்வி சேமிப்புகள் திட்டம் (RESP) ஒன்றை தொடங்க வேண்டும். கனடிய அரசாங்கத்திடம் இருந்து இந்த பணத்தைப் பெறுவதற்கு உங்கள் பணம் எதையும் செலுத்தத் தேவையில்லை. ஒரு RESPஐ தொடங்குகையில், உடனடியாக $500 பணத்தை அரசு வழங்கிவிடும், உங்கள் குழந்தைக்கு 15 வயது முடியும்போது இன்னும் அதிகமாக $1,500 வரை பணம் வழங்கப்படும். அதாவது மேல்நிலைப் பள்ளிக்குப் பின் உங்கள் குழந்தையின் கல்விக்கு $2,000 வரை வழங்கப்படும்.

நம்பமுடியவில்லையா?

கனடா கல்வி சேமிப்புகள் உதவித்தொகை (CESG) என்பது மேல்நிலைப் பள்ளிக்குப் பின் உங்கள் குழந்தையின் கல்விக்காக கனடா அரசாங்கம் பணம் வழங்குவதற்கான மற்றொரு வழியாகும். ஒரு RESPஇல் நீங்கள் பணம் செலுத்துகையில், உங்கள் குழந்தைக்கான சேமிப்புகள் வேகமாக வளர்வதற்கு உதவ அரசாங்கமும் பணம் செலுத்தும்.

சில கேள்விகளும் விடைகளும்.

### எனது குழந்தைக்கு எவ்வளவு பணம் கிடைக்கும்?

கனடாவின் கல்விச் சேமிப்புகள் உதவித் தொகையை அனைவருமே பெறலாம், ஆனால் உங்கள் குடும்பத்தின் மொத்த வருமானங்கள் வரிகள் செலுத்தியது போக எவ்வளவு உள்ளதோ அதனைப் பொறுத்து அரசாங்கமும் செலுத்தும். உங்கள் குழந்தையின் RESPக்கு பணம் செலுத்துகையில், அரசாங்கம் பின்வருமாறு வழங்குகின்றது:

- உங்கள் வருமானம் $40,970க்கு குறைவாக இருந்தால் 40% கூடுதல் பணம்.
- உங்கள் வருமானம் $40,970 - $81,941 வரை இருந்தால் 30% கூடுதல் பணம்.
- உங்கள் வருமானம் $81,941க்கு அதிகமாக இருந்தால் 20% கூடுதல் பணம்.



ஒரு குழந்தைக்கு வாழ்நாள் முழுவதற்கும் அதிகபட்சம் $7,200 வரை...

### கனடாவின் கல்விச் சேமிப்புகள் உதவித்தொகையை எப்படி நாம் பெறுவது?

அரசாங்கத்திடம் இருந்து ஒரு பொருத்தமான உதவித்தொகையைப் பெற, நீங்கள் ஒரு RESPக்கு பணம் செலுத்த வேண்டும். ஒரு கல்விச் சேமிப்புகள் திட்டத்தில் பதிவு செய்ய நீங்களும் உங்கள் குழந்தையும் இருவரும் ஒரு சமுதாயக் காப்பீட்டு எண்ணை வைத்திருக்க வேண்டும்.

### இதற்கான பிடிமானம் என்ன?

கனடா கல்விச் சேமிப்புகள் உதவித்தொகையை இடைநிலைக் கல்விக்குப் பின்னர் மட்டுமே பயன்படுத்த முடியும். உங்கள் குழந்தை அதனை பயன்படுத்த வேண்டும் அல்லது இழந்து போக வேண்டி நேரிடும்! மேல்நிலைப் பள்ளிக்குப் பின் உங்கள் குழந்தை கல்வி கற்காவிட்டால், கனடா அரசாங்கம் உதவித் தொகையாக உங்களுக்குக் கொடுத்த பணத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளும்.

■ ■ ■

### SMART SAVER

Smart SAVER, RESPகள் அல்லது முதலீட்டுகளை விற்பனை செய்வதில்லை. Smart SAVER என்பது டொரண்டோவை மையமாகக் கொண்ட இலாபம்-ஈட்டாத சமுதாய நலத்திட்டமாகும், அது குடும்பங்கள் தங்கள் குழந்தைகளின் மேல்நிலைப் பள்ளிக் கல்விக்குப் பின் அரசாங்கப் பணத்தைப் பெற்று பயனடைவதற்கும் RESPஐ தொடங்குவதற்கும் உதவுகின்றது.

### கனடாவின் கல்வி கற்றல் பத்திரம் உங்கள் குழந்தைக்கு கிடைக்குமா?

உங்கள் குழந்தை ஜனவரி 1, 2004 அல்லது அதற்கு பின் பிறந்திருந்தால் மற்றும் உங்கள் குடும்பத்தினருக்கு தேசிய குழந்தை நல உதவி (National Child Tax) வழங்கப்பட்டு வந்தால் (மொத்த வருமானம் $40,970 அல்லது அதற்கு குறைவாக இருந்தால்) உங்கள் குழந்தைக்கு கனடாவின் கல்வி கற்றல் பத்திரம் கிடைக்கும். கனடா முழுவதும் உள்ள 140,000 குழந்தைகளுக்கும் மேல் கனடாவின் கல்வி கற்றல் பத்திரத்தை ஏற்கனவே பெற்று வருகிறார்கள்.

### குழந்தையின் கற்றல் பத்திரத்தை எப்படிப் பெறுவது?

கனடா கற்றல் பத்திரத்தைப் பெறுவதற்கு அரசு பணம் செலுத்துவதற்கு வசதி பெற்ற, உரிமம் பெற்ற RESP வழங்குநரிடம் ஒரு RESP கணக்கைத் தொடங்க வேண்டும். ஒரு கல்வி சேமிப்புகள் திட்டத்தில் பதிவு செய்ய நீங்களும் உங்கள் குழந்தையும் ஒரு சமுதாய காப்பீட்டு எண்ணை (SIN Number) வைத்திருக்க வேண்டும்.

av communications
www.avcommunications.ca
SmartSAVER | பதிவு செய்யப்பட்ட கல்வி சேமிப்பின் திட்டங்களுக்கான உங்கள் வழிகாட்டி
215 Spadina Ave
Toronto, ON M5T2C7
416 866 8882

புற்றுநோய் விழிப்புணர்வு

# மார்பகப் புற்றுநோய்

சிவாஜினி
பாலராஜன்



## தொடர்ந்து செல்லவேண்டிய புற்றுநோய் விழிப்புணர்வு....

உலகம் முழுவதிலுமே ஒக்டோபர் மாதம் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இருந்த போதிலும் ஒவ்வொரு நாட்களுமே மார்பகப் புற்று நோய் விழிப்புணர்வு நாட்களாக இருக்க வேண்டிய நிலைமை உலாவுவது கண்கூடாகத் தெரிகையில் ஒவ்வொரு பெண்ணுக்குமே மனச் சஞ்சலமாகத் தான் இருக்கும். பொதுவாக பெண்களுக்குத் தான் இந்நோய் வருவதாக இருந்த போதிலும் கிட்டத்தட்ட ஒரு விழுக்காடு ஆண்களுக்கும் இந்நோய் இருக்கின்றது. மிக அண்மையில் கனடியப் புற்றுநோய் மையத்தினால் எடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின்படி கிட்டத்தட்ட ஒன்பதுக்கு ஒன்று என்ற விகிதாசாரத்தில் பெண்கள் மார்புப் புற்றுநோயினால் அவதிப்படுவதாயும் இறப்பு விகிதமானது இருபத்தியெட்டிற்கு ஒன்று என்றும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது மட்டுமல்லாது மனைவிக்கு மார்பகப் புற்று நோய் இருப்பதன் காரணமாக கணவனுக்கு மன அழுத்தம் ஏற்பட்டு பல குடும்பங்கள் இதனால் மிகவும் சிரமப்படுவதாயும் அவ் அறிக்கை தெரிவிக்கின்றது. நோயாளியினைப் பொறுத்தளவில் கதிரியக்கங்களினாலும் உள்ளெடுக்கும் மருந்து வகைகளினாலும் ஏற்படும் வேதனை, தனக்கு நோய் வந்து விட்டதே குழந்தைகள் குடும்பம் கஸ்டப்படப் போகின்றதே இப்படிப் பல வேதனைகள். இவற்றிற்கெல்லாம் மூல காரணமான இந்நோயினை நாம் வென்று விட முடியுமா?

மார்பகப் புற்றுநோயானது ஆட்கொல்லி நோயாகப் பார்க்கப்பட்ட போதிலும் ஆரம்பத்தில் அடையாளம் கண்டு கொண்டு முளையிலேயே கிள்ளியெறிந்து வைத்தியம் செய்து நீண்ட காலமாக வாழ்பவர்கள் பலர் இருக்கின்றார்கள். துரதிருஸ்ட வசமாக ஆரம்பத்தில் அடையாளம் காண முடியாது இந்நோயினால் பாதிக்கப்பட்டு மிகவும் கஸ்டத்தினை அனுபவித்து சிலர் இறந்திருக்கின்றார்கள். இந்த நோயின் தாக்கத்தையும் இதனால் ஏற்படும் பிரச்சினையினையும் ஒவ்வொரு பெண்ணும் தெட்டத் தெளிவாக விளங்கிக் கொண்டு செய்ய வேண்டிய பரிசோதனைகளைச் செய்து கொண்டால் இதிலிருந்து மீளுவதற்கு வழி கிடைக்கும்.


## மார்பகப் புற்றுநோய் வருவதற்கான காரணம் என்ன?

மார்பகப் புற்றுநோய் வருவதற்கு ஒன்று இரண்டல்ல பல காரணங்களுண்டு. இந் நோயானது பரம்பரையினால் கடத்தப்படலாம். சாப்பாட்டு வகைகளால் ஏற்படலாம். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்காத பெண்ணாக இருப்பின் அது ஒரு காரணமாக அமையலாம். மத்திய வயதினைக் கடந்த பின் முதற்குழந்தை பெற்றுக் கொள்ளும் பெண்களுக்குக் கூட ஒரு அது காரணமாக அமையலாம். மேலும் 12 வயதிற்கு முதலே பூப்பெய்திய பெண்களுக்கு நீண்ட காலமாக அவர்களது ஓமோன்கள் தொழிற்படுவது கூடக் காரணமாக இருக்கலாம். இதே போல 55 வயதிற்குப் பின்னரும் மாதவிலக்கு வரும் பெண்கள், கருத்தடை மாத்திரை (OCP—combined oral contraceptive pill) அதிகமாகப் பாவிக்கும் பெண்கள். அதிகளவு புகை பிடிப்போர், மது அருந்துவோர், உடற்பருமன் அதிகரித்தோர், அதுமட்டுமன்றி தற்போது பல பெண்கள் ஓமோன் சிகிச்சை (Hormone replacement therapy) எடுத்துக் கொள்கின்றனர் இவ்வாறு பல காரணங்கள் உண்டு. ஏன் இவை ஒன்றுமே காரணமாக இல்லாது கூட ஒருவருக்கு மார்புப் புற்றுநோய் உருவாகலாம்.

## மார்பகப் புற்று நோய் என்னும் போது அங்கு என்ன மாற்றம் இடம் பெறுகின்றது?

## மார்பகம் என்றால் என்ன?

ஒவ்வொரு மார்பகமும் லோபஸ் (lobes) எனப்படும் 6 முதல் 9 அடுக்கடுக்கான மடிப்பு சதைகளாலானது. ஒவ்வொரு சதையும் லோப்யூல்ஸ் (lobules) எனப்படும் பல சிறு இதழ்களைக் கொண்டு பாலைச் சுரக்கும் சில குமிழ்களாக முடியும். இத்தகைய மடிப்புத் தொங்கு சதைகள், சிறு இதழ்கள், முனைப் பகுதி, குமிழ்கள் அனைத்தையும் மெல்லிய இழை நாளங்கள் ஒன்றிணைக்கின்றன. இந்த இழை நாளங்கள் மார்பகத்தின் நடுவிலுள்ள




ஆரியோல் (areole) எனப்படும் கரும் வட்டத்தின் நடுவிலுள்ள முலைக்காம்பில் ஒன்றிணைகின்றன. சிறு இதழ்களுக்கும் நாளங்களுக்கும் இடையேயுள்ள இடைப்பகுதியைக் கொழுப்புப் பொருட்கள் நிறைக்கின்றன. மார்பகத்தில் சதைப்பற்று ஏதும் இருக்காது. ஆனால் மார்பகத்தின் அடிப்பகுதியில் சதைப்பற்று இருந்து விலா எலும்புகளை மறைக்கின்றன.

ஒவ்வொரு மார்பகமும் இரத்த நாளங்களையும் லிம்ப் (lymph) எனப்படும் வர்ணமற்ற நிணநீர் திரவத்தை எடுத்துச் செல்லும் நாளங்களையும் கொண்டுள்ளது. இந்த லிம்ப் நாளங்கள் அவரை விதை வடிவிலுள்ள லிம்ப் நோட்ஸ் (Nodes) எனப்படும் முடிச்சுகளில் செல்லுகின்றன. இத்தகைய லிம்ப் நோட்ஸ்கள் கூட்டங் கூட்டமாக அக்குளின் மேலேயும் தோட்பட்டை எலும்புகளின் மேலும் மார்பகங்களிலும் உள்ளன. இந்த கலங்களின் பெருக்கமே மார்புப் புற்றுநோயாக உருவாகின்றது.


மார்பகப் புற்று நோயில் மிகவும் அரிதான ஒரு வகை புற்று நோய் உண்டு. இது Inflammatory மார்பகப் புற்று நோய் என அழைக்கப்படும். இது மிகவும் சிக்கலானது. ஏனெனில், சாதாரண புற்று நோயைப் போலன்றி இது பரவுவதற்கு நீண்ட காலம் எடுக்காது மிக மிக விரைவிலேயே பரவிவிடும். ஆரம்ப காலம் என்று சொல்ல முடியாதளவிற்கு மிக விரைவில் பரவி விடும். சாதாரண புற்று நோயினைப் போல தனி ஒரு கட்டியோ வளர்ச்சியோ அன்றி அடுக்கடுக்கான மடிப்புகள் போன்று அல்லது தேன்கூட்டினைப் போன்ற வளர்ச்சி ஏற்படும். இதில் இன்னுமொரு ஆபத்து என்னவென்றால் இந்த வகைப் புற்று நோய் சாதாரண மம்மோகிராம் எனப்படும் பரிசோதனைக்கோ அல்லது ஸ்கானிங் எனப்படும் சோதனைக்கோ புலப்பட மாட்டாது. ஆனால் மார்பகத்தில் சொறிவு இருக்கலாம். மார்பகம் சூடாக இருக்கும். சாதாரண புற்று நோய்க்கு நோவு இருப்பதில்லை ஆனால் இவ்வகையான புற்றுநோய்க்கு தொடர்ந்த வலி இருக்கும். அதே சமயம் மிகக் குறுகிய காலத்தில் மார்பகத்தின் பருமன் அதிகரித்து விடும். சில சமயம் ஒரு வார காலத்தினுள்ளேயே மார்பகத்தின் பருமன் அவதானிக்கக் கூடிய வகையில் மிகவும் அதிகரித்திருக்கும். இங்கு இது தான் மிக முக்கிய அறிகுறியாகக் கொள்ளப்படும். மேலும் இவ்வகையான புற்று நோயினை அடையாளம் காணுவதில் மிகவும் சிக்கலான விடயம் என்னவெனில் அறிகுறிகள் நோயாளிக்கு நோயாளி வித்தியாசமாக இருக்கும். இதனால் பல நோயாளிகள் இறந்துள்ளதாக புள்ளிவிபரக் கணக்கெடுப்புக் கூறுகின்றது.

மார்பகப் புற்று நோய் தடுப்பு வழிகள் இரண்டு வகைப்படும். ஒன்று எங்களால் கட்டுப்படுத்தக் கூடியது. மற்றையது எங்களால் கட்டுப்படுத்த முடியாதது. எங்களால் கட்டுப்படுத்த முடிந்த வழிகள் எனக் கூறும் போது முடிந்தவரை மார்பகப் புற்று நோயினை ஊக்குவிக்கும் காரணிகளை இனம் கண்டு அவற்றினை தவிர்த்துக் கொள்ளுதலும் மேலும் தேவையான வைத்திய ஆலோசனைகளை அவ்வப்போது பெற்றுக் கொள்ளுதலும் ஆகும். அவ்வாறான காரணிகளில் சில வருமாறு.

**உடற்பருமன்:** அதிகரித்த உடல் பருமன் பல நோய்களுக்குக் காரணியாக அமைவதுடன் மார்பகப் புற்று நோயினையும் அதிகரிக்கின்றது. ஈஸ்ரஜின் ஓமோன் கொழுப்புக் கலங்களில் சேமிக்கப் படுகின்றது. மாதவிலக்கு நின்றதும் ஈஸ்ரஜினின் அளவு குறையும். இருப்பினும் உடற்பருமன் அதிகமானோருக்கு கொழுப்பு அதிகம் காணப்படுவதால் ஈஸ்ரஜினின் அளவு அதிகம் காணப்படும்.

**மது பாவனை:** ஈஸ்ரஜின் ஓமோன் ஈரலில் உடைக்கப்படுகின்றது. அதிகரித்த மதுபாவனையால் ஈரல் பாதிக்கப்படும் போது பெண்களுக்கு ஈஸ்ரஜினின் அளவு உடலில் அதிகரிக்கலாம். அதாவது ஈரலின் தொழிற்பாட்டினை மது கட்டுப்படுத்துவதன் விளைவாக குருதியிலுள்ள ஈஸ்ரஜினைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது ஈரலுக்கு கடினமாக இருக்கும்.

**உணவு:** தகரங்களில் அடைக்கப்பட்ட அல்லது பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளைப் பாவிப்பதை அரிதாக்கிக் கொள்வது மிகவும் சிறந்த ஒரு வழி. தகரங்களில் அடைக்கப்பட்ட பதனிட்ட உணவு வகைகளில் காணப்படும் இரசாயனப் பொருட்களினால் carcinogen ஏற்படும் எனக் கருதப் படுகின்றது. இந்த carcinogen எனப்படும் இரசாயனம் புற்று நோயினை உருவாக்காது. ஆனால் புற்று-




நோய்க்கு இது ஒரு தூண்டியாகத் தொழிற்படக் கூடியது. அதுமட்டுமன்றி இவ்விரசாயனம் எங்களது பரம்பரை அலகுகளில் கூட மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது. இது எவ்வாறான உணவு வகையில் இருப்பது என்பதற்கு பல உதாரணங்கள் இருந்த போதிலும் ஒரு சில உதாரணங்களைத் தருகின்றேன். தேசிப்பழம் அல்லது சாறு கலந்த குளிர்பானங்களில் பொதுவாக சோடியம் பென்சனேற் என்னும் இரசாயனப் பொருள் உண்டு. இவ் இரசாயன பொருளானது பென்சீன் என்னும் மிகவும் நச்சுத்தன்மையான பொருளைக் கொண்டிருக்கலாம். பென்சீன் ஆனது காசினோஜென் தன்மையினைக் கொண்டிருக்கும். இதனால் குருதியிலும் குருதிக்கலங்களிலும் மாற்றங்களை ஏற்பட்டுத்தலாம்.

உணவு வகைகள் நீண்ட காலத்திற்குப் பாதுகாத்து வைப்பதற்காக நொதித்தலுக்கு உட்படுத்தப் படுகின்றன. இவ்வாறு நொதித்தலுக்கு உட்படுத்தப்பட்ட உணவு வகைகளில் carcinogenக்குரிய எதைல் காபமேற் (ethyl carbamate) என்னும் இரசாயனப் பொருள் காணப்படுகின்றது. Hotdogsஇல் இருக்கும் நைத்திரேற்று நைதரசமைன் ஆக மாறிப்படலாம். இந்த நைதரசமைன் ஒரு carcinogen. ஐதரசனேற்றப்பட்ட எண்ணெய் (hydrogenated) வகைகள் Hotdogs இவை அனைத்தும் புற்று நோயினைத் தூண்டும் carcinogenஐக் கொண்டவை. ஆகவே மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

உணவில் அதிக காபோவைதரேற்றுச் சேர்த்துக் கொள்பவர்களுக்கும் மார்புப்புற்றுநோய் அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் காணப்படும். அதிகப்படியான சீனி, குருதி மூலம் உடலெங்கும் சென்று ஊட்டத்தினை வழங்குகின்றது. இதனால் புற்றுநோய்க் கலங்களுக்கும் வளர்வதற்கான மேலதிக ஊட்டச் சத்துக் கிடைக்கின்றது. பிளாஸ்டிக் பாத்திரங்கள் புற்று நோயினை ஊக்குவிக்கும் காரணிகள். இதற்குரிய விளக்கத்தினை முன்பு ஒரு கட்டுரையில் எழுதுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. அதற்குக் காரணமும் இந்த carcinogen தான். ஆகவே தயவு செய்து அனைவரும் பிளாஸ்டிக் பாவனைப் பொருட்களையிட்டு கவனமாக இருங்கள்.

**உடற்பயிற்சி:** உடற்பயிற்சி செய்வதால் உடல் நிறை குறந்து அழகாக வருவதுடன் மேலதிக கொழுப்பு உடலிலிருந்து குறைக்கப்படுவது ஈஸ்ரஜினின் அளவில் மாற்றத்தை ஏற்படுத்த உதவும். ஆகக் குறைந்தது ஐந்து நாட்களுக்காவது தினமும் கிட்டத்தட்ட 40 நிமிடங்களுக்கு உடற்பயிற்சி செய்வது மிகவும் சிறந்தது என அமெரிக்க மார்பகப் புற்றுநோய் மையம் ஊக்குவிக்கின்றது

**புகைத்தல்:** நேரடியாக புகை பிடிப்பவராயினும் சரி வேறொருவரது புகையினை நுகர்பவராயினும் சரி (secondhand smoke) மார்பகப் புற்றுநோயினைத் தூண்டும் காரணி என ஆய்வுகள் கூறுகின்றன. அதுவும் கூடுதலாக மாதவிலக்கினை இழக்கும் கால கட்டங்களில் (premenopausal) இது பெண்களின் ஆரோக்கியத்தினைப் பாதித்து மார்புப் புற்றுநோயினைத் தூண்டுவதாகக் கூறப்படுகின்றது. இதைப்பற்றி அதிகம் கூறவேண்டிய தேவை இல்லை. ஏனெனில் எங்கள் பெண்கள் பொதுவாகப் புகைப்பதில்லை. ஒரு சிலர் மட்டுமே புகைக்கின்றனர்.

**மன அழுத்தம்:** மன அழுத்தம் மார்புப் புற்று நோயினை அதிகரிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

**கருத்தடை மாத்திரைகள்:** இக் கருத்தடை மாத்திரைகள் மேலதிக ஈஸ்ரஜன் ஓமோனைக் கொண்டிருப்பதால் உடலில் அவ் ஓமோனின் அளவு அதிகரிக்கின்றது. இதே தான் ஓமோன் சிகிச்சையிலும் இடம் பெறுவது. ஓமோன் சிகிச்சை போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் அல்லது கட்டுப்படுத்திக் கொள்ளல் நல்லது.

எங்களால் கட்டுப்படுத்த முடியாத மார்பகப் புற்று நோய் காரணிகளும் உண்டு. அவையாவன பால் (பொதுவாக பெண்) பரம்பரையில் மார்பகப் புற்று நோய் இருப்பின் அது கடத்தப்படுவதனைக் கட்டுப்படுத்தும் சக்தி எங்களிடம் இல்லை. அதாவது BRCA1 and BRCA2 என்னும் பரம்பரை அலகுகள் தான் இந்நோயினைக் கடத்துவதற்கு காரணமாகும். அடர்த்தியான மார்பக இழையங்கள் (அதாவது மேலதிக சுரப்பி கலங்களும் மிகவும் குறைந்த சாதாரண இழையங்களும்) இருப்பினும் அது மார்பகப் புற்றுநோய்க்கு காரணமாக அமையும்.

மார்பகப் புற்றுநோயிற்கான பரிசோதனைகள் பற்றி அடுத்துவரும் ஆக்கங்களிற் பார்ப்போம்.

தொடரும்..

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■


உங்களுக்கு இந்த காட் கிடைத்ததா?
Did you get this card?
இல்லையெனில் கென் கிருபாவை அழையுங்கள்.
Free iPad
Refer your Friends & Family
Receive an ipad!
Do you know any of your friends or relatives who are thinking of Buying or Selling their home?
Refer them to Ken Kirupa and receive an iPad!
Ken Kirupa, Sales Representative, Re/Max Crossroads Realty Inc, Brokerage
1055 McNicoll Ave, Toronto, ON, M1W 3W6. | 416.491.4002 or 416.830.8191 | 905areaHomes.ca | 416homes.ca
Add me on facebook
Follow me on twitter


இலகுவாக மோட்கேஜ்
கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்
Mortgages
• First Time Buyers
• Refinaning
• Renewal
• Self Employed
• Pre-Aproval
• Bankruptcies
• Bad Credit
• Debt Consultant
• Non-verifiable Income
• New immigrant
We Will
• Simplify the entire process of mortgage financing
• Save you money and time
• Get you the most competitive rates
• Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
• Counsel you on credit and mortgage qualifications
• Provide maximum flexibility in financing choices
• Assist you every step of the way
Best Rates
We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.
VERICO TMP
Siva Ratnasingam
Lic: M08002133
Brokerage # 11156
SENIOR MORTGAGE CONSULTANT
2005,2006,2007,2008 Diamond Award Winner
416.520.1214

# Nanthini Singarajah, AMP

**VERICO** THE MORTGAGE PRACTICE INC.

MORTGAGE AGENT
License #: M08005294

Brokerage #: 11156

TMP THE MORTGAGE PRACTICE

*"Quick and easy answer to your lending needs"*

Tel: (905) 787-2027
Fax: (866) 903-4664

Cell: (416) 704-4006
Email: nsingarajah@vtmp.ca

30 Via Renzo Drive,
Suite 200, Richmond Hill,
ON L4S 0B8
**(Leslie/Elgin Mills)**

**HO:** 2425 Matheson Blvd E.,
8th Floor,
Mississauga,
ON L4W 5K4.

**Other Services**

- Income Tax
  - Personal
  - Business
  - Corporate
- Life Insurance
- RRSP
- RESP

**Specialize In**

- Residential Mortgage
- 1st Mortgage
- 2nd Mortgage
- Refinancing
- HELO (home equity line of credit)

Services available all over Canada

Alphaweb 416-2387222

# RAPID SECURITY

WE PROTECT YOU

"We'll Beat any Quote"

Indoor & Outdoor Guard for

- Commercial
- Residential
- Retail
- Healthcare
- Finance Institution



S101-880 Ellesmere Rd, Toronto ON M1P 2W6 **Office:** (416) 321-6777 **Tel:** (416) 841-1415

# New Midwest auto collision

**"Quality & service First"**

- Specialized in insurance claims
- FULL Service All-in-One Body Shop
- Free Estimate Available
- We repair all makes & models
- Free towing Available
- Customer Satisfaction Guaranteed

BENTLEY TOYOTA CHRYSLER DODGE BUICK mazda VOLVO HYUNDAI DAEWOO

**(416) 751-9280**
**260 Midwest Rd, Unit 8,**
**Scarborough, ON, M1P 3B4**
**newmidwestauto@gmail.com**

**Contact Person:**
**Ruban or Shan**






Alphaweb 416-238 7222




# தேவகாந்தனின்
# இரண்டு நாவல்கள்
## வெளியீடு



காலம்: சனிக்கிழமை,நவம்பர் 06,2010 மாலை 02.30 மணி
இடம்: MID SCARBOROUGH COMMUNITY CENTRE (Don Montgomery CRC)

2467 Eglinton Ave East (@Kennedy)

மேலதிக தொடர்புகளுக்கு

தேவகாந்தன்- 416 458 9426 டானியல் ஜீவா- 416 500 9016

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

**www.inayam.net**


R & S AUTO SALES
TOP QUALITY USED CAR DEALER
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
34 வருட அனுபவம்
• We Sell Bank Repossed Cars
• Accident Vehicle Repair
• Computerized Painting
• Motor Vehicle Accident
• Traffic Tickets
HONDA
TOYOTA
GM-MINI VANS
தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
5310 Finch Ave. East, Unit 23
Scarborough, ON M1S 5E8
416-412-3838
416-836-5825


வீடோ, வியாபாரமோ?
விசயம் தெரிந்தவர்களை நாடுங்கள்
Homelife/Future
Realty inc. Brokerage
Higher Standard Agents... Higher Results!
Vivek Subramaniam
Sales Representative
Direct: 416 898 4846
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

## அழகிய பூஞ்செடிகள்

# பவழமல்லி

## Night Jasmine (Nyctanthes arbor-tristis)

### அறிமுகம்:

பவழமல்லி இரவு நேரத்தில் இனிய மணமுள்ள பூக்களைத் தரும் சிறிய புதர்ச்செடியாகும். குடும்பம் ஒலியேசியேயைச் (Family Oleaceae) சேர்ந்தது. ஆசியாவின் தெற்கு, தென்கிழக்குப் பகுதிகளில் கூடுதலாகக் காணப்படும் பூர்வீக சிறியமரமாகும். தாய்லாந்து நாட்டின் காய்னபுரி மாநிலத்தின் மாநில மலராகச் சிறப்பிடம் பெற்றிருக்கின்றது. வீட்டுத்தோட்டப் பிரியர்கள், இச்செடியின் பூவிலிருந்து அதிகாலையில் வீசும் நறுமணத்தை விரும்பியே வளர்க்கின்றனர். பூக்கள், முழுஇரவு வேளையும் பூத்திருப்பதால் ‘Nyctanthes’ எனப்படுகின்றது. “The tree of Sorrow” எனப்படும் இம்மரம், இரவுநேரத்தில் பூத்து விடியற்காலையில் உதிரத்தொடங்கி நிலத்தில் விழுவதால், காலை நேரம் செடியானது பூக்கள் இன்றிக் காணப்படும். இதனாலேயே, இதன்பெயர் ‘arbor-tristis’ எனப்படுகின்றது.

செடியின் வளர்ச்சிக்கு நேரடியான அல்லது பகுதிநேர சூரிய வெளிச்சம் போதுமானது. 3-4 மீற்றர் உயரமாக விரைவாக வளரக் கூடிய மரமாகும். நீர்த்தேக்கம் கூடுதலாக இல்லாத இடங்களில் நன்கு வளரும். விதைகள் மூலம் இலேசாக விருத்திசெய்ய முடியும். இத்தகையசெடிகள் நன்கு வளருகின்றன. இதன் இலைகள், தண்டின் எதிரெதிரே, நீள் வட்டமாக கூரான முனையுள்ளதாக இருக்கும்.

### பூக்கள்:

கிளைகளின் நுனிகளிலும் இலைகளின் கணுக்களிலும் 2-7 பூக்கள் சேர்ந்த கொத்துக்களாக காணப்படுகின்றன. பூக்களின் இதழ்கள், தடிப்பாக வெள்ளை நிறமாயிருக்கும். சிறிய செம்மஞ்சள் நிறமாயிருக்கும் குழாயுருவான அமைப்பின் மையமாக நட்சத்திர வடிவில் 5-7 சோணைகளிலான அல்லிகள் காணப்படும். பிரபல்லியமானதும் கூடிய இனிய வாசனை-

## வீட்டுத் தோட்டம் - 33

யுமுள்ள பூக்களாயிருப்பதால் பூக்கள் எல்லோரதும் கவனத்தை ஈர்த்தன. பூக்கள் மார்கழி மாதத்தில் கூடுதலான பனித்துளிர் இருக்கும்போது மிதமாகக் காணப்படும். இது தொடர்டபான ஒரு புராணக்கதையையும் இங்கு பார்ப்போம். நந்தவனம் எனப்படும் இந்திரனது பூந்தோட்டத்தில் உள்ள பவழமல்லிப்பூ




நாரதரால் கிருஷ்ணருக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. கிருஷ்ணரின் மனைவியர் சத்தியபாமா, ருக்மணி ஆகிய இருவர். இருவர்களிடையே பூக்கள் தொடர்பான ஒரு பிணக்கினால், ‘பாரிஜாதம்’ எனப்படும் பவழ மல்லியை கிருஷ்ணர் தேவலோகத்திலிருந்து கொண்டுவந்து சத்தியபாமாவினது பூந்தோட்டத்தில் நட்டதாகவும் பூக்கள் ருக்மணியின் தோட்டத்தில் உதிரும்படியாகச் செய்ததும் அவர்கள் இருவரையும் திருப்திப் படுத்திய முயற்சியே என்றும் கூறப்படுகின்றது.

இன்னும் ஒரு காதல் கதையைப் பார்ப்போம். பாரிஜாதகா எனும் இளவரசி சூரியன்மேல் அதிக பிரியம் கொண்டதாயும் நீண்ட காலம் தனது காதலை வெளிப்படுத்தியும் சூரியன் அவளைக் கைவிட்டதாயும் அத்துயர்தாங்காது தனது உயிரை மாய்த்துக் கொண்டதாயும் அவள் எரிந்த சாம்பலிலிருந்து தோன்றிய மரமே பவழமல்லி எனவும் கருதப்படுகின்றது. தன்னைக் கைவிட்ட சூரியனைப் பார்க்கத் தாங்கமுடியாமலேயே இரவில் மட்டும் பூக்களைச் சொரிகின்ற மரம் என்று இதனைக் கூறுவார்கள்.

### பயன்கள்:

தளபாடங்கள் வழவழப்பாக்குவதற்கு இலைகள் பயன்டும். அத்தோடு, இதனது இளம்



செல்லையா சந்திரசேகரி

இலைகளோடு சில மூலிகைகள் சேர்த்து தயாரிக்கப்படும் ஒருவித பானம், இருமல், தொய்வு போன்ற வியாதிகளைக் குணப்படுத்தும். மரப்பட்டைகளை பாக்குச் சீவலோடு சேர்த்து மென்று விழுங்குவர். பூக்கள், வித்துக்கள், வேர்கள் ஆகியவை காய்ச்சல். வயிற்றுத் தொந்தரவுகள், மூட்டுவலிகள், தலைவலி போன்ற வியாதிகளுக்கு மருந்துகளாகப் பயன்டும். பூவிலிருந்து பெறப்படும் பவளநிறச்சாயம், ‘Tissue Silk’ எனப்படும் பட்டுத்துணிகளுக்கு நிறமேற்றப் பயன்படும். இன்றைய வாழ்க்கையில் பலர் மூட்டு வியாதிகளால் துன்புறுகின்றனர். ஆயள்வேத வைத்தியத்தைப் பற்றிய சிந்தனை அவர்களுக்கு இருப்பதில்லை. பல மூலிகைகளோடு பவழமல்லியின் பகுதிகளும் சேர்ந்து தயாரிக்கப்பட்ட ‘Ostea Relief’ எனப்படும் ஆயள் வேதக் குளிசைகள், இன்று நல்ல விளைவுகளைக் கொடுப்பதாகக் கருதப்படுகின்றது.

மூட்டுகள், நரம்புகள், என்புகள் போன்றவற்றிற்கு போசணையான ஆதரவைக் கொடுக்கின்றது.


என்புகள், மூட்டுக்கள் போன்றவற்றின் அசைவுகளை ஊக்குவிக்கிறது.

குருதியின் நிறமற்ற திரவத்திலுள்ள அழுக்குகளை அகற்றுகிறது.

இயற்கையான முதல்தர மூலிகையாக அமைகின்றது. ■ ■ ■







**Family Babaceae**

# குண்டுமணி

**(Indian Licorice)**
**(Botanical name: Abrus precatorius; Eng.Name: Crab’s eye)**

குண்டுமணி (குன்றிச்செடி, குன்றுமணி), Family Fabaceae ஐச் சேர்ந்தது. இது, மெல்லீதான வருடா வருடம் நிலைத்து வாழும் செடியாகும். இதனை வருடா வருடமும் விதைகள் மூலம் வளர்க்கவும் முடியும். விதையைக் கொதி நீரில் ஓரிரவு வைத்து தோல் வீங்கியிருக்கும்போது எடுத்து உடன் நட்டுவிடவும். இவை மரங்கள், புற்றறைச் செடிகள், வேலிகள் போன்றவற்றில் படர்ந்து காணப்படுபவை. இலைகள் சிறைப்பிரிவானவை, தண்டுகளில் மாறுபட்ட ஒழுங்கில் காணப்படும். இலை நடுநரம்பொன்றைக் கொண்டிருக்கும். இதில் 2—24 பக்க சிற்றிலைகள் காணப்படும். பூக்கள் சிறியவை. மெல்லிய ஊதா, வெள்ளை, இளஞ்சிவப்பு போன்ற நிறமுடையவை. பூக்கள் கொத்துக் களாகக் காணப்படும். பழம் அவரையமாகும். தோற்றம் சப்பையானதும் வெட்டுவெட்டாயுமிருக்கும். பழம் வெடிக்கும்போது நெற்று முறுகி வளைந்து வித்துக்களை வெளிக்காட்டும்.

செடியானது இந்தோனேசியாவின் பூர்வீகமானதும் உலகின் அதிவெப்ப, வெப்ப மண்டலங்களில் வளரக்கூடியதுமானது. இலங்கை, இந்தியா தாய்லாந், பிலிப்பைன்ஸ், தென் சைனா, உகண்டா, கென்னியா போன்ற நாடுகளில் வளர்க்கப்படுகின்றன. இச்செடி பல நூற்றாண்டுகளாகச் சித்த வைத்தியங்களில் பயன்பட்டு வருகின்றது. வித்துக்கள் நச்சுத் தன்மை வாய்ந்ததாக இருந்த போதிலும் இதனது தோல் மொத்தமாக இருப்பதால் முழுவதாக விழுங்கினாலும் எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாது. வித்துக்களை நன்கு பாலில் கொதிக்கவைத்து ஆறவைக்கும்போது நச்சுத்தன்மை நீங்குகின்றது. வித்துக்களின் துலக்கமான நிறத்தினால் ஆதிமக்களிடையே இவை அதிபெறுமதியுள்ள ஆபரணங்கள் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டு வந்தன.

கறுப்பான முளியும் எஞ்சிய கூடியபகுதியான சிவப்பும் சேரும்போது இதற்கு ‘லேடி பக்’ (lady bug) எனக் கருதக் கூடிய தோற்றம் அமைகின்றது. சீனாவில் அன்பைக் கூறும் அடையாளமாகவும் காதலின் சின்னமாகவும் நீண்டகாலமாக் கருதி வந்தனர் (mutual love bean). மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான (Trinad) ரிறினாட்டில் துலக்கமான நிற வித்துக்கள் வளையல் ஆபரணமாக கைகளில் அல்லது கணுக்காலில் அணிவார்கள். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மரபுவழி நகைத் தொழில் செய்வோர் தங்கத்தின் நிறையை அளவிடுவதற்கு குன்றுமணிகளைப் பயன்படுத்துவது உண்டு. சுமாரான நிறை விதைகளில் காணப்படுவதால் 1/10 கிறாம் நிறைக்கு நகைத்தொழிளாளர் இதனை உபயோகிப்பர். இலைகள், வேர்கள், மருத்துவத்திற்கு பயன்படுத்துவர் இலைகளிலிருந்து ஒருவித தேநீர் வடிக்கப்பட்டு காய்ச்சல், இருமல், தடிமன் போன்றவற்றிற்கு பாவிப்பர். வெள்ளை நிற வித்துக்களிலிருந்து வடிக்கும் எண்ணெய் மயிர் வளர்ச்சிக்கு பயன்படும். வேர்களிலிருந்து செய்யப்படும் பசை, வயிற்று நோய்களுக்கு சாதகமாக இருக்கும்.

# இந்நிலை வேண்டாமே!



மஞ்சுளா ராஜலிங்கம்

தெரிந்தோ, தெரியாமலோ குற்றங்களில் தொடர்புபட்டுச் சிறைச்சாலைக்குச் செல்பவர்களின் மனநிலை தாழ்ந்து, பிரயோசனம் இல்லாதவர்களாக அங்கே வாழுமுற்படுகின்றார்கள். சிலர் வாழ்க்கையில் கொலை, கொள்ளைகள் திட்டம் தீட்டப்படாமலே நடத்தப்படுகின்றன. சிலருக்கு இதுவே தொழில். இன்னும் சிலர் செய்யும் குற்றங்களை உணர்ந்து வாழ்க்கையில் திருந்தி வாழக்கூடிய சந்தர்ப்பங்களைப் பின்பற்றுகின்றனர். சிறைச்சாலைக்குச் செல்லக்கூடிய அளவுக்கு குற்றங்களைப் புரிவதற்கு முன்னால், அதன் பின்விளைவுகளையும், பின்னர் குற்றம் நிரூபிக்கப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்படுகையில், அங்கு நடக்கும், நடத்தப்படும் கொடுமைகள், தகாத செயல்கள், சட்டங்கள், விருப்பு வெறுப்புக்கப்பாற்பட்ட செயல்கள் பற்றி அறிந்தால், குற்றம் செய்யவே மனம் அஞ்சும். ஒருவர் சிறைச்சாலைக்கு அனுப்பப் படுகையில் அங்கு என்னென்ன அனுபவங்கள் இம்மாதிரியான நாடுகளில் ஏற்படுகின்றன என்பதைக் கொஞ்சம் பார்ப்போம்.

சிறைச்சாலையில் வயது பார்த்து, குற்றவாளிகளைத் தரம்பிரித்துக் கூண்டுகளில் அடைப்பதில்லை. அங்கு போனால், வயது, இனம், மதம், மொழி போன்ற பாகுபாடுகளும் இல்லை. கொலை செய்தவரும், கற்பழித்தவரும் கூட ஒரே சிறையில் அடைக்கப்படலாம்.

சிறைச்சாலைகளில், சாப்பாடே பணம் போன்று பயன்படுத்தப் படுகின்றது. அதாவது, மற்றக் குற்றவாளிகள், உங்களிடம் பணம் பறிப்பதற்குப் பதிலாக, உங்கள் உணவைத் தரச் சொல்வார்கள். கொடுக்காத பட்சத்திலும், உங்கள் கையில் அதிக உணவு இல்லாத பட்சத்திலும், அடி, உதை போன்றவை நடத்தப்படுகின்றது. இவர்கள் எதற்கும் அஞ்சாதவர்களாக இருப்பார்கள். ஆனால், இவர்களின் ஆதிக்கத்திற்கும், அதிகாரத்திற்கும் உட்பட பலர் விரும்புவதில்லையானாலும், வேறுவழியின்றி, இம்மாதிரிக் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டிய கட்டாயம்.

பல சிறைச்சாலைத் தடுப்பு அறையில் கழிவறைக்குப் போவதுகூட, மற்றவர் முன்னாலேயே செய்ய வேண்டிய கட்டாயம். அதற்குள் கழிவறை மற்றும் கைகழுவும் பேசின் ஒன்று இருக்கும். குளிப்பதற்கென இன்னொரு பெரிய இடம் பொதுவான பாவனையில் இருக்கும். ஆடை மாற்றுவதென்றாலும் இதே நிலைதான்.

பெரும்பாலான சிறையின் அறைகள், ஒரு சிறு கண்ணாடிப் பதிப்புடன் வெளியிலிருந்து காவலாளிகள் உள்ளே என்ன நடக்கின்றது என்று பார்க்கக்கூடிய அளவிற்கு இருக்கும்.

இங்கு கொடுக்கப்படும் உணவைத்தான், விருப்பமோ இல்லையோ, சாப்பிட வேண்டும். வேண்டாமென்றால், அந்நேரத்திற்கு மேல், அடுத்த சாப்பாட்டு நேரம்வரை பட்டினிதான். கடுமையான சட்டங்களைப் பின்பற்றும் சில சிறைச்சாலைகளில், அவர்கள் அறைக்கே உணவுவகைகள் ஒரு சிறிய கதவு துவாரத்தின் வழியாக வழங்கப்படும்.

சாதாரணமாக சிறைச்சாலைகளில், ஒரு பெரிய சாப்பாட்டுக் கூடத்தில் மட்டுமே உட்கார்ந்து உணவை உட்கொள்ளலாம். இங்கு பிளாஸ்டிக்கால் ஆன கரண்டி, முள்ளு கரண்டி வகைகளைத்தான் பாவிக்கக் கொடுப்பார்கள். ஆனால், அதைக்கூட ஆயுதமாகப் பாவிக்க பல குற்றவாளிகளுக்குத் தெரியுமாதலால், உணவு நேரத்தில், பலத்த காவலுடனும், கண்காணிப்புடனும் இருக்கும் அந்த இடம்.

குற்றவாளிகள் தமக்குள்ளேயே பல குழுக்களை உருவாக்கி வைத்திருப்பார்கள். கறுப்பர், வெள்ளையர், மெக்சிக்கன், ஆசியர் போன்று இவர்களின் குற்றங்கள் சார்ந்தும் பலவகையான குழுக்கள் இருக்கும். ஒரு குழுவினர் இன்னொரு குழுவினருடன் ஒட்டி உறவாடி, நட்பு பாராட்டப்படுவதைக் காண்பது கடினம். இவர்கள் உடற்பயிற்சி, மற்றும் விளையாட்டுகளில் ஈடுபடும்போதும், தத்தம் குழுக்களையே சார்ந்து இருப்பார்கள். அதுபோல் உணவுக்கூடத்திலும், ஒவ்வொரு குழுவினரும், தத்தமக்கென ஒரு இடத்தைப்பிடித்து வைத்திருப்பார்கள். அந்த இடத்தில் வேறு குழுவினர் ஒருவர் போய் உட்கார்ந்தாலே பிரச்சினைதான்.

இதனாலேயே அடிக்கடி, அறிவிப்புக்கள் இல்லாமலேயே, திடீரென காவல்துறையினர் இவர்கள் அறைக்குள் நுழைந்து தேடுதல் வேட்டை நடத்துவதுண்டு. விதவிதமான தாக்குதல் ஆயுதங்கள் இங்கே மாட்டுவதுண்டு.



சிறையில் இருக்கும் தறுவாயில், நடக்கும் பாலினக் கொடுமைகள் தான் மிகவும் உச்சகட்ட உபாதைகளாக இருக்கும். இதற்கு அதிகமாகப் பலியாகின்றவர்கள், புதிதாய் வந்தவர்களும், இளம் வயதினரும் தான்.

சிறுபிள்ளைகளைப் பாலியல் வன்முறை செய்தல் போன்ற குற்றங்களால் சிறைச்சாலைக்கு வரும் குற்றவாளிகள் மேல், அவர்களின் குற்றத்தின் கடுமை தெரிந்து, அவர்கள் மேல் பலவகையில் வெறுப்பையே பொழிவார்கள் மற்றைய குற்றவாளிகள்.

சிறைச்சாலையின் உள்ளே போதைப்பொருட் பாவனைகளுக்கும் குறைச்சலில்லை. இதெல்லாம் எப்படி இவர்களுக்குக் கிடைக்கின்றதென்றால், இவர்களைச் சிறைச்சாலையில் பார்க்க வரும் உறவினர், நண்பர்கள் மற்றும் சிறைச்சாலைக் காவலர்கள் கூட சமயத்தில் இந்த போதைப்பொருட்களை விநியோகம் செய்வதுண்டு. சில குற்றவாளிகளை மற்றக் குற்றவாளிகள் தம் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்வதற்கும் இது உதவுகின்றது.

இதனாலேயே, சிறைச்சாலைக்கு, தம் அன்புக்குரியவரைச் சந்திக்க வரும் விருந்தாளிகளையே காவலாளிகள் கடுமையாகச் சோதனை செய்வதுண்டு. ஏன், இவர்கள் சமயத்தில் சில ஆயுதங்களைக்கூட இரகசியமாகத் தம்மவருக்குக் கொண்டுவந்து கொடுக்கக் கூடியவர்கள்.

குற்றவாளிகள் சிறையில் இருக்கும்போதே, மற்றவர்களை அடித்து, கடுமையாகக் காயப் படுத்தினாலோ, அல்லது பெரிய பிரச்சினைகளில் ஈடுபட்டாலோ, அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையாக, கடுமையான காவல் போடப் பட்டிருக்கும். இருட்டு அறையில் பல வாரங்களுக்கு அடைத்துவைத்து, ஒருநாளில் அரைமணி நேரம் மட்டுமே வெளியில் நடமாட அனுமதி வழங்கப்படும்.

மூர்க்கத்தனமான கைதிகளிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் தம்மைப் பாதுகாக்கும் பொருட்டும் சில குற்றவாளிகள் வேண்டுமென்றே யாரையாவது காயப்படுத்தி, அதன் விளைவாக இதுபோன்ற தண்டனையைப் பெற்று இருட்டறையினுள் இருந்திருக்கின்றார்கள்.

பாருங்கள், இருட்டறையில் ஈருப்பதை விட சிறைச்சாலை எவ்வளவு கொடுமையென்று ஏதோவொரு குற்றத்தைத் தெரிந்தோ, தெரியாமலோ செய்து சிறைக்கு வந்துவிட்டாலும் கூட, மற்றக் கைதிகளுடன் நெருக்கமான உறவும், நட்பும் கொண்டாடுவதைத் தவிர்க்க வேண்டும். குடும்பம், பணவரவுகள், உங்கள் முகவரி, தொடர்பு எண்கள், பழைய வாழ்க்கை போன்ற எதைப்பற்றியும், மற்றைய கைதிகளுடன் பேசாதீர்கள். இதனால், பின்னாளில் உங்களுக்கு நிறையத் துன்பங்கள் இம்மாதிரிக் கைதிகளால் ஏற்படலாம்.

முடிந்தவரை சிறைக்குச் செல்லாதீர்கள். சென்றாயிற்று என்றால். சினங்கொள்ளாது மேலும் குற்றஞ்செய்யாது இருங்கள். தண்டனைக் காலம் நன்னடத்தைக்காகக் குறைக்கப் படலாம், ஆனால் புதிதாய் ஏதும் பிரச்சினைகளில் ஈடுபட்டால், தண்டனைக் காலங்கள் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே போகக்கூடிய வாய்ப்புக்கள்தான் அதிகம்.

சில தொலைக்காட்சித் சனல்களில் பல நாடுகளைச் சேர்ந்த, பலவிதமான சிறைச்சாலைகளில் தினம் நடக்கும் சம்பவங்களைக் காட்டுவார்கள். மிகவும் சுவாரசியமான நிகழ்ச்சி என்பதுடன், இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள, நிறைய படிப்பினைகள் உண்டு. நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போதே, வாழ்நாளில் சிறைக்குப் போகாத வகையில் நம் வாழ்க்கையைக் கொண்டுபோக வேண்டும் என்ற பயம் நமக்கு வரும். பெண்களுக்கான சிறைச்சாலைகளையும் காட்டுவதுண்டு. இதில் ஆண் கைதிகளைப் பற்றி எழுதியிருந்தாலும், இதே கொடுமைகள்தான் பெண்கள் குற்றவாளிகள் இருக்கும் சிறைச்சாலைகளிலும் நடக்கின்றன. பெரிய வித்தியாசங்கள் எதுவும் இல்லை.

*இதை ஒரு விழிப்புணர்ச்சிக் கட்டுரையாகக் கொள்ளுங்கள்.*

manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■



RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE
Monte Carlo Corporate Centre
7045 Edwards Blvd., Suite 201 Mississauga, ON L5S 1X2



ALAN SIVASAMBU
BROKER

OFFICE: 905-565-9200 • CELL: 647 504 2536 • FAX: 905 565 6677
alansivasambu@gmail.com • www.rightathomerealty.com
Facebook S T ALAN HOMES

For sellers,
• 1% rebate on listing commission
• Feature sheet • Staging • Open houses
For buyers,
• free home warranty available for 1 year

# MORTGAGE

- 1st & 2nd Mortgages
- New Immigrants / Self Employed
- Refinance
- Equity Line of Credit
- Renewal
- All other Financial Arrangement

**Kethes Sivasubramaniyam**

Mortgage Agent - (Lic # M08006105)


**Cell : 416.873.5780**

Via Financial Services Inc. (Lic # 10669)

5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5

Tel : 416-548-8005 Fax : 416-548-8006

Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7



# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice




**KETVAR**

**TAX & ACCOUNTING**

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)

Toronto. ON M1S 4Z5

Tel : 416-873-5780 / 416-548-8005

Email : ketvar@gmail.com

# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**

Broker

**Direct: 416-262-4176**

"The best compliment you can give me is the referral of your family and friends"

Thank you for your trust





**SHEPPARD/MORNINGSIDE AVE**

3 Bed rooms, 3 Washroom

Finished Basement w/o

எமது வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள், உறவினர்கள்
அனைவருக்கும் எமது உளம் கனிந்த
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்



**HomeLife Today Realty Ltd., Brokerage***

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor

நாம் அழகாய் இருக்க

# கால்களைச் சுத்தப்படுத்துதல்

சசி நரேன்
Cosmetologist & Aestheticia



தொடர் 11

'பெடிக்யூர்' என்றால், கால்களைச் சுத்தப்படுத்தி, அழகுடன் தோற்றமளிக்கச் செய்யும் முறையாகும். முன்னைய அக்கங்களில் கூறியதுபோல் முகத்தை அழகு படுத்திக்கொள்வது எவ்வளவு முக்கியமோ, அதே போல் கால்ளைச் சுத்தமாக வைத்துக்கொள்வதும் முக்கியமாகும். 'பெடிக்யூர்' அழகுபடுத்துவது மட்டுமே என்று சிலர் நினைக்கலாம். அது தவறான எண்ணம் ஆகும்.

கால்கள் ஒரு மிருதவான பாகம். சிறுசிறு எலும்புகளிகால் ஆனது. கால்கள் தான் உடலைக் தாங்கிக் கொள்கின்றன. இதனால் தான் கால்கள் விரைவாகப் பலவீனம் அடைகிறது. ஆகையால் கால்களில் நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். நாம் நடப்பதினால், தரைக்கும்கால்களுக்கும் தொடர்பு அதிகமாக இருப்பதால். ஆதிகம் அழுக்குகள் கால் பாதங்களில் படியக்கூடும், இதனால் கால்களில் வெடிப்புகளும், சுருக்கங்களும், சொரசொரப்புகளும், தோல் உரியல்களும் ஏற்படக்கூடும். நகங்களில் அழுக்குச் சேர்ந்து நகங்களை பாதிக்கக்கூடும். மொத்தத்தில் கால்கள் பார்க்க அருவெருப்பாகத் தோன்றக்கூடும்.

இதை நிவர்த்தி செய்ய கால்களுக்குச் சில பயிற்சிகளையும் செய்யலாம்.

இதற்கு தேவையான பொருட்கள்:

- மேனிக்யூர், பெடிக்யூர் செட்,
- பஞ்சு,
- நக்பாலிஷெ ரிமூவர்,
- நகம் வெட்டி,
- க்யூட்டிக்கல் கிரிம்,
- சிறிதளவு லிக்வுட் அம்மேரினாய,
- சிறிதளவு சோப்புத் தூள்,
- டெட்ரோல்,
- ஹைட்ரஜன் பராக்ஸைடு,
- எலுமிச்சம் பழம்,
- நகத்திற்கு போடும் எனாமல் பாலிஷ்,

முதலில் நகங்களை நகப் பாலிஷ் ரிமூவரினால் சுத்தம் செய்ய வேண்டும். பின் நகங்களை முறையாக வெட்ட வேண்டும். பின்பு அரத்தினால் தேய்க்க வேண்டும். மிதமான சூட்டில், வெந்நீரை பேசினில் ஊற்றி அதில் டெட்டால் 4 முளிகள், ஹைட்ரஜன் பராக்ஸைடு 1 மேசைக் கரண்டி, அமோனியம் ஐந்து துளிகள், சோப்புத் தூள் ½ தேக்கரண்டி போராக்ஸ் பவுடர் ½ தேக்கரண்டி, ½ பகுதி எலுமிச்சை ரசம் எல்லாவற்றையும் விட்டுக் கலக்க வேண்டும்.



சிறிதளவு கியூடிக்கல் கிறீமை எடுத்துக் கால்களிலும் நகங்களிலும் தடவிக்கொண்டு வெந்நீருக்குள் கணுக்கால் வரைக்கும் வைக்க வேண்டும். ப்யூமிக் கல்லின் உதயவியால், கால்களின் ஓரங்களை நன்கு தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும். பிறகு, க்யூடிக்கல் புஷ்ஷரை நகத்தின் அடிப்பாகத்தில் வைத்து எதிர்புறமாகத் தள்ள வேண்டும்.

ஹுூக் பிளேடின் உதயவியால், நகங்களின் ஓரத்தில் உள்ள அழுக்கை எடுத்து ஒரேஞ்சு ஸ்டிக்கின் உதயவியால் நகத்தின் நுனியின் அடிப்பாத்தில் உள்ள அழுக்கையும் அகற்ற வேண்டும். பிறகு, சிறதளவு க்யூடிக்கல் கிரீமைத் தடவிப் பயிற்சிகள் செய்ய வேண்டும்.

- பாதங்கள் தரையில் படாமல், விரல்கள் மட்டும் தரையில் படும்படி ஊன்றி நடக்க வேண்டும்.
- படுத்துக்கொண்டு, கால்களைச் சற்றுத் தூக்கி கால் பாதங்களை நன்கு சுழற்ற வேண்டும்.
- விரல்களை நீட்டி மடக்க வேண்டும்.
- தரையில் படுத்துக்கொண்டு, கால்களை ஸ்ரூலின் மேல் தூக்கி 5 நிமிடங்களுக்கு வைத்துக்கொள்ள வேண்டும்.

வாரம் ஒருமுறை இப்பயிற்சிகளைச் சுமார் 15 நிமிடங்களாவது செய்ய வேண்டும்.

இப்பயிற்சியை செய்தபின், கால்களை ஈரமில்லாமலும், எண்ணெய் பசை இல்லாமலும் துடைத்துவிட்டு, நகப்பாலிஷ் போட வேண்டும். நகப்பாலிஷ் போடும்போது, விரலிடுக்குகளில் பஞ்சைச் சிறு உருண்டையாக உருட்டி வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி செய்வதால் ஒரு விரலில் உள்ள நகப்பாலிஷ் மற்றொரு விரலில் முட்டாமல் இருக்கும். முன்பு கூறியபடி வீட்டில் உள்ள பொருள்களையே உபயோகித்தும் செய்து கொள்ளலாம்.

இம்முறை முக்கியமாக வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும், ஆண்களுக்குமே ஏற்றதாகும். ஆண்களுக்கு நகப்பாலிஷ் தவிர மற்ற முறைகளைக் கடைபிடித்து மேனிகியூர், பெடிகியூர் செய்து கொள்ளலாம்.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■



*Independently Owned and Operated

This is not intended to Solicit Properties Currently on Sale

# ONE STOP SOLUTION


Your

Real Estate and Mortgage Needs

IN ONE PLACE!

MORTGAGE ALLIANCE

CALL US TO EASE THE PROCESS



Lokan Sundaram
Real Estate/Mortgage Broker
Lic #: M08000182
416-450-3984
lsundaram@trebnet.com



Kathir Kandiah
Real Estate/Mortgage Broker
Lic #: M08009958
416-230-6462
kkathir@trebnet.com

HomeLife Future Realty

7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8

Office: 905-201-9977
Fax: 905-201-9229

# FINCH TAX & INSURANCE SERVICES

**Universal Life Insurance**

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி.
10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்

**RESP**

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம் 20 - 40 வீதமான அரச மானியத்துடன் 15 வீத போனஸ்

**Mortgage Insurance**

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.

**Critical Illness Insurance**

25 விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

**வயோதிபர்களுக்கான காப்புறுதி**

- மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை.
- உடனடியாக காப்புறுதித்திட்டம் அமுலாகும்.
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆயுட்காலம்வரை மாதாந்த கட்டணத்தில் மாற்றமில்லை.

*Our guarantees are written in your policy*

# INCOME TAX

PERSONAL TAX | SELF EMPLOYEE | SMALL BUSINESS TAX

**Keele & Finch**
1315 Finch Ave. West,
Unit 407

**Jameson & Queen**
1474 Queen Street, West.
(Bala Supper Market Inside)

**647-885-3012 | 647-379-2820**

# உங்கள் வீட்டை விற்பது எப்படி?

**'How to sell your Home' என்னும் 'OREA'வினால் வெளியிடப்பட்ட நூலினை மூலமாகக்கெண்டு வாசகர்களின் நன்மை கருதித் தொகுக்கப்பட்ட தொடர் இது.**

## அலகு - 11

S.K. பாலேஸ்

- வீடு விற்பனை முகவர் -



உங்கள் வீடு விற்கப்பட்டு விட்டது என்பது நல்ல செய்தி. நீங்களும் வீட்டை வாங்குபவரும் ஒரு நியாயமான விலையை நிர்ணயித்து நீங்கள் இருவரும் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தில் உள்ள சகல விடயங்களையும் ஒத்துக் கொண்டுள்ளீர்கள். ஆனால் உங்கள் வீடு விற்கப்படவில்லை. இன்னும் சில விடயங்கள் கவனிப்பட வேண்டியுள்ளன. "Closing" என்ற இறுதிக் கட்டத்தை அடைவதற்கு முன் செய்ய வேண்டிய சில விடயங்கள் மிகுதியாக உள்ளன. உங்கள் பெயரில் உள்ள வீட்டுப் பத்திரம் வீடு வாங்குபவருக்கு மாற்றப்பட வேண்டும். வீடு வாங்கியவர் உங்களுடைய வங்கிக் கணக்கில் வீட்டின் பெறுமதியான பணத்தை இடவேண்டும்.

உங்களிற்கும் வீடு வாங்கியவருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் சகல விடயங்களையும் பூர்த்தி செய்வதையே "Closing" என்பார்.

அன்று, உங்களுடைய சொத்து வீடு வாங்குபவரின் பெயரிற்கு மாற்றப்படும். உங்கள் வழக்கறிஞரும், முகவரும் வீடு விற்பதற்கான சகல வேலைகளையும் சிறப்பாகச் செய்வார்கள். எனவே அதன் பெறுபேறு என்னவென்று உங்களிற்கு முன் கூட்டியே தெரியும்.

### உங்கள் முகவரின் கடமை:

- முகவர்கள் வீட்டை விற்பவருக்கும், வாங்குபவர்களுக்கும் சகல விபரங்களையும் கொடுக்க வேண்டும்.
- உங்கள் முகவர் ஒப்பந்தத்தின் பிரதிகளை எடுத்து, விற்பனையுடன் தொடர்புள்ள சகலருக்கும் கொடுக்க வேண்டும்.
- ஒப்பம் இடப்பட்ட ஒப்பந்தத்தின் (வாங்குதல், விற்றல்) பிரதிகளை இரு பகுதியினரின் வழக்கறிஞருக்கும் அனுப்பிவைக்கவேண்டும்.

ஒப்பமிடப்பட்ட ஒப்பந்தம் ஏதாவது நிபந்தனைகள் விதித்திருந்தால் அவற்றை தீர்த்து வைக்கும் பொறுப்பை இரு பகுதியினரிடமும் பேசி, ஒரு இணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு உங்கள் முகவரையே சார்ந்ததாகும்.

ஒவ்வொரு நிபந்தனையும் நிறைவேற்றப்படும் போது, வீட்டை வாங்குபவரின் முகவர் நிபந்தனை நிறைவேற்றப்பட்டதை உறுதிப்படுத்த வேண்டும். இதை 'Waiver' அல்லது நிபந்தனைகள் நிறைவேற்றியதற்கான படிவம் நிரப்பிக் கொடுக்கப்பட வேண்டும். இது உங்களிற்கு பணத்தை சேமிக்க உதவுவதுடன் (ஏதாவது ஒரு நிபந்தனை ஏற்றுக்கொள்ளப்பட முடியா விட்டால்). மேலும் உங்களுடைய முகவர் நீங்கள் கேட்கும் கேள்விகளிற்கெல்லாம் பதில் சொல்லி, உங்கள் கவலைகளைப் போக்கி, விற்பனையை உங்களுக்கு திருப்தி தரும்படி செய்வார்.

### விற்பனையை நல்லபடி முடித்து வைப்படி எப்படி? (Close)

- உங்கள் வழக்கறிஞரிடம் தொடர்பு கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- ஒப்பந்தத்திலுள்ள எந்த ஒரு நிபந்தனையையும் அவை நிறைவேற்றப்பட வேண்டிய திகதிக்கு முன் நிறைவேற்ற வேண்டும். இல்லாவிடின் கால விரயம் ஏற்படலாம். அல்லது ஒப்பந்தமே செல்லுபடியாகாமல் போகலாம்.
- உங்களுடைய தொலைபேசி, தொலைக் காட்சி, 'Internet' ஆகிய இணைப்புகளை துண்டிக்கவோ, அல்லது உங்கள் புதிய குடியிருப்பிற்கு மாற்றவோ ஏற்பாடு செய்யலாம்.
- உங்களுடைய வீட்டு காப்புறுதியை புதிய வீட்டு உரிமையாளருக்கு மாற்றவோ, அல்லது ரத்துச் செய்யவோ முயற்சிக்கலம்.
- உங்கள் வீட்டை வாங்கியவர் வீட்டைப்பெறுப்பு எடுக்க முன்னர் வீட்டிலுள்ள உங்களுடைய தனபாடங்களையும் மற்றும் பொருட்களையும் அப்புறப்படுத்தி விடலாம்.
- உங்கள் வாகன ஒட்டுனர் பத்திரத்திலும் விலாசத்தை மாற்ற ஏற்பாடு செய்வதுடன், உங்களிற்கு வரும் அஞ்சல்களை புது விலாசத்திற்கு மாற்றும் படி அஞ்சல் அலுவலகத்திற்கு அறிவிக்கலாம்.
- ஏதாவது திடீர் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனே உங்களுடைய முகவருக்கு அறிவிக்கவும்.
- உங்கள் வீட்டை அழகாகவும், சுத்தமாகவும் கையளியுங்கள்.

### உங்கள் வழக்கறிஞர் செய்ய வேண்டியவை:

- உங்கள் வழக்கறிஞர் உங்கள் வாங்குதல், விற்றல் ஒப்பந்தத்தில் (Purchase and sale Agreement) ஏதாவது நிபந்தனையை நீங்கள் பூர்த்தி செய்யாவிடில் அவர் அதைப்பற்றி உங்களிற்கு அறிவித்து ஆவன செய்யவேண்டும்.
- ஒப்பந்தத்திலுள்ள எல்லா நிபந்தனையும் பூர்த்தி செய்யப்பட்ட பின் புதிய வீட்டு உரிமையளருக்கு வீட்டை மாற்றும் நடவடிக்கையில் அவர் ஈடுபடுவார்.
- வீட்டை வாங்குபவருடைய வழக்கறிஞரிடம் தொடர்பு கொண்டு Closingயை உறுதிபடுத்துவார்.
- உங்கள் வீட்டு ஈட்டுக்கடனை செலுத்தியதற்கான பத்திரங்கள் வீட்டை வாங்கிய வழக்கறிஞரிடம் கொடுக்கப்படவேண்டும்.
- Closing திகததிக்கு ஒரு சில தினங்களிற்கு உங்களுடைய கையொப்பந்திற்காக இந்த பத்திரங்கள் யாவும் தயாராகிவிடும்.
- வீட்டு ஈட்டுத்தொகை (Mortgage) மற்றும் விற்பனைச் செலவுகள் எல்லாம் கழித்ததின் பிறகு, மிகுதியாக வரும் பணம் உங்களிற்கு உரியது.
- உங்களுடைய வழக்கறிஞர் இந்தப் பணத்தை உங்களிடம் காசோலையாகக் கொடுப்பார்.
- இறுதியாக உங்களுடைய வழக்கறிஞர் உங்களிற்கு விற்பனை பற்றிய அறிக்கையைச் சமர்பிப்பார். அதில் அவருடைய சேவை விளக்கப்பட்டிருக்கும்.

### பாராட்டுக்கள்:

- நீங்கள் உங்கள் வீட்டை வெற்றிகரமாக விற்றதற்கான எங்கள் பாராட்டுக்கள் உங்களிற்கு உரித்தாகுக.

அநேக கனடியர்கள் செய்வது போல் இந்த விற்பனையால் வந்த பணத்தை இன்னொரு சொத்தில் முதலீடு செய்வீர்கள் என நம்புகிறோம். வீட்டுச் சொந்தக்காரராக இருப்பது, உங்கள் நீண்ட கால முதலீடுகளில் மிகச் சிறந்தது ஒன்றாகும். இப்புத்தகம் உங்களுடைய வீட்டு விற்பனையை இலகுவாக்கி இருக்குமென நாம் நம்புகிறோம்.

(இவ்வாக்கத் தொடர் இத்துடன் நிறைவடைகின்றது).

skbales@thaiveedu.com

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***

**Sale Of Business**

I PICTURE FRAMINING & HOME DECOR .OIL PAINTINGS, MIRRORS, FLOWERS,VASES & GIFT ITEMS.

**Brampton**

**$35,000 For Sale**




**Condo for Sale**

**1950 Kennedy Rd**

**Kennedy & Ellesmere**

2 Bedrooms Condo Apartment




**Canadian Home Appraisals Inc.**

Residential & Commercial Appraisals

CHAI CANADIAN HOME APPRAISALS INC.

**S.K.Bales**

CRA, CAR, MVA, FRI, CRES

Managing Director

Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

**MY PROFESSIONAL DESIGNATIONS:**

- **CRA** *(Canadian Residential Appraiser)*
  Designation with **Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada**
- **Car: ( Certified Appraisal Reviewer)**
  Designation with **Canadian National Association of Real Estate Appraisers.**
- **MVA( Market Value Appraiser-Residential**
  Designation with **The Canadian Real Estate Association**
- **FRI (Fellow of the Real Estate Institute)**
  Designation with Real Estate Institute of Canada
- **CRES ( Certified Real Estate Specialist)**
  Designation with Real Estate Institute of Canada
- **RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER**
  Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21.

Affiliate Realty Inc.



**S.K.Bales**

CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial

TEL: 416-290-1200
CELL: 416-801-3219

Commercial Member

# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Mccowan/Ellesmere**



**$189,900**
Condo Apt., Bed rooms 1 Washrooms 1, Excellent Location, Everything Is At Your Foot Steps. Scarborough Town Centre, Ttc/Rt Line, Go Bus, Ymca

**Salem/Rossland**



**$369,900**
Detached 2 Storey, Bed rooms 4, . Washrooms 3, 2 Full Size Garages, Family Rm. With Fireplace And Bsmt. With R/I 3-Pc Washroom.

**Brimley/Eglinton E.**



**$249,900**
Detached Bungalow Bed rooms 3, Washroom 1, Large Principle Rooms. Whole House Clad In Angel Stone. Bathroom Updated.

**Hoover Park/Ninth Line**




**$308,000**
Town house 3 storey , Bed rooms 2 Washrooms 2, Beautifully Lndspd Front Entrance Close To All Amenities,Parks,Schools,Shopping,

**Highway 7 / Main**



**$318,900**
Town house 3 storey Bedrooms 3+1, Washrooms 3, Wellover 1,800 Sq Ft Of Envious Living!!! Walk Out Basement! Ttc/Yrt Finch Subway

**Kennedy/Steeles**



**$349,900**
Link 2 Story, Bedrooms 3+1, Wasroom 3, New Windows & Door To Backyard ,Newer Central Air Conditioning And New Hi Efficiency Furnace

**16th& Cornell Centre/Bur Oak**



**$384,900**
Semi Detached 3 Story, Bed rooms 3 Washromss 3,Excellent Floor Plan 2080 Sq Ft Of Luxury !! Upgraded, Clean, Well Kept, Modern, Decorated

**9th Line/Reeves Way**




**$399,000**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3,3 Years New**Approx 1900 Sq Ft**Upgraded Kitchen Cabinets**Hardwood Floors

**9th Line/14th Ave**



**$399,900**
Semi Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3, Approx. 1700Sf. Bright & Spacious Layout. Boasts 9' Ceiling On Main Flr.

**Mccowan/Denison**



**$418,800**
Link 2 story, Bed rooms 4 Washrooms 4, Spacious 2000 Sq Ft Model With Main Floor Laundry And Family Room Walking Distance To Schools

**Markham/Steeles**



**$429,900**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, Fully Detached, Brick, Home In A Safe And Quiet Area. Close To All Amenities

**East Of 10th Line (Bessor Rd)**



**$434, 888**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3, Hardwood Flooring. Gas Fireplace, Double Car Garage With Direct Access To House

**Hwy 48/Bur Oak/16th Ave**



**$449,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Upgraded Detached All Brick 4Br Home Close To Schls,Swan Lake,Park,Hospital

**Ninth Line & Highway 407**



**$449,900**
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3, Double Door Entrance. Hardwood & Ceramic Flrs Thruout Main Lvl. Upgraded Kitchen

**Markham/Highglen**



**$475,000**
Detached 2 Story, Bedrooms 3+1, Washroom 4, Less Than 10Yrs New Link Detached With Finished Basement, Close To Schools, Shopping,

**Cornell Centre Blvd/16th Ave.**



**$489,990**
Detached 2 Story, Bedrooms 3+1, Washroom 3, Brand New Home, Hardwood Floors On Main Floor, Ceramic Floors In Kitchen

**Highglen/E Of Middlefield**



**$499,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3 Lots Of Upgrades,Hardwood Floors Through Out,Fully Fenced,Enclosed Front Porch

**Mingay/Major Mackenzie**



**$569,900**
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3, 2200 Sq Ft Home 6 Years Old, 4'Hrdwd Fl On Liv, Din & Hallway, Fenced Yd W/2 Gates

**16th Ave./9th Line**



**$575,000**
Detached 2 Story Bed rooms 3+1, Washrooms 3, Over 2500 Sq.Ft., Thousands Spent On Upgrades,Granite Kit.Counter Tops

**14th Ave/ 9th Line**



**$599,000**
Detached 2 Story Bed rooms 5, Washrooms 4, Hardwood Floor, Upgrade Cabinet, Close To Public

**10th Line/ Mantle Ave**



**$628,800**
Detached 2 storey,. Bed rooms 4, Washrooms 3, Walk Out To Open Balcony, Upgd W/Hrdwd/Ceramic Fl On M/F*Kit.W/Tall

**Warden/19th Ave**



**$1,029,000**
Detached 2 storey,. Bed rooms 3+2, Washrooms 4, All Work Done '04/'05.Orig.Home 1334Sqft-2120Sqft.Addition-3454 Sqft

**Sales of Business**



**$1.15million**
Restaurant with a banquet hall property in Toronto for sale
(Business with property

**RE/MAX**
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# மருத்துவக் கேள்வி - பதில்



இராஜசேகர் ஆத்தியப்பன்

**வாய்வுத் தொல்லை, தண்ணீர் தாகம், மூலவியாதி ஆகியவற்றினால் அவதிப்படும் எனது மனைவிக்கு எதைக் கொடுத்துக் குணப்படுத்தலாம் என்று தெரியவில்லை. இப்பொழுது இந்தியா சென்று சிகிச்சை பெற நினைத்துள்ளோம். உங்கள் ஆலோசனையை எதிர் பார்க்கின்றோம்.**

*- நல்ல பெருமாள்*

கொள்ளுக்காய் வேளை என்று ஒரு மூலிகை செடி உள்ளது (Tephrusia Purpurea) சிவ சக்தி மூலிகை (Wild Indigo) என்றும் அழைப்பார்கள். இந்த மூலிகை பற்றி 'பதார்த்த குணசிந்தாமணி' என்ற பழந்தமிழ் நூல் கீழ் வருமாறு கூறுகின்றது.

*வாதமிக்க தென்பார்க்கும், வாய்வறட்சி*
*- என்பார்க்கும்*
*மீதந்த மூலநோய் என்பார்க்கும் - ஓதமுற்ற*
*கொள்ளுக்காதார கபந்தோன்றிய*
*- தென்பார்க்குமொரு*
*கொள்ளுக்காய் வேளைதனைக் கூறு!*

கொள்ளுக்காய் வேளையினால் வாத தக்கமும் நாவறட்சியும், தந்த மூலநோயும், கொள்ளு வடியச் செய்கின்ற கபமும் போகும் என்று "பதார்த்த குணசிந்தாமணி" நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தெரிந்த வைத்தியர்களிடம் இதனை எப்படி எடுப்பது என்று விசாரித்து சிகிச்சை பெற வேண்டுகின்றேன்.

**புரோஸ்டேட் புற்றுநோய் என்பது ஆண்களை அதிக அளவில் தாக்கும் ஒரு நோய் என்ற பயம் உள்ளதே?**

*- நடா*

குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு இவ்வகை புற்றுநோய் வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. புரோஸ்டேட் புற்றுநோய் ஆண் உறுப்புக்கு இணையான சுரப்பி திரவங்களால் ஆன பெருஞ்சுரப்பியை தாக்குகிறது. இதனால் சிறுநீரக மண்டலம் பாதிக்கப்படுகிறது. விளைவு... அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் போல தோன்றுவது, சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் இருப்பது, சிறுநீருடன் ரத்தம் கலந்து போவது போன்ற அறிகுறிகள் தென்படலாம். இந்நிலையில் புரோஸ்டேட் புற்றுநோயை குணப்படுத்தும் ஆற்றல் தக்காளிக்கு இருப்பதாக டாக்டர் மைக்கேல் டபிள்யு. ஸ்மித் தெரிவித்துள்ளார். தக்காளியில், அதுவும் சமைத்த தக்காளிக்கு புரோஸ்டேட் புற்றுநோயை குணப்படுத்தும் ஆற்றல் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

**வெண்புள்ளிகளுக்கு நீங்கள் கொடுக்கும் மருந்து நன்றாக வேலை செய்கின்றது. எந்தவிதமான உணவு முறை ஏற்றது?**

*- நம்பிராஜா*

வெண்புள்ளிகள் உள்ளவர்கள் கடல் உணவுடன் தயிர் சேர்த்து சாப்பிடக் கூடாது. பாலுடன் வெங்காயம் சேர்த்து சமைத்து உண்ணக் கூடாது. அத்திப்பழம் தினந்தோறும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அத்திப்பழம் உணவை விரைவில் ஜீரணிக்கச் செய்து சுறுசுறுப்பைத்தந்து, கரும்பித்தத்தை வியர்வை மூலம் வெளியாக்கி, ஈரல் நுரையீரலிலுள்ள தடுப்புகளையும் நீக்குகிறது. அத்திப் பழத்தைத் தின்பதால் வெட்டையின் ஆணிவேர் அற்றுப்போகிறது.

கால் விரல்களில் உண்டாகும் ஒருவித நோயையும் வராமல் தடுக்கிறது. அத்திப் பழம் தின்பதால் வாய்நாற்றம் நீங்குவதுடன் தலைமுடியும் நீளமாக வளர்கிறது.

தினசரி 2 பழங்களை சாப்பிட்டால் உடலில் இரத்த உற்பத்தி அதிகரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமனடையும்.

மலச்சிக்கலை நீக்க உணவிற்குப் பிறகு சிறிதளவு அத்தி விதைகளைச் சாப்பிடலாம்.

நாள்பட்ட மலச்சிக்கலை குணமாக்க 5 பழங்களை இரவில் சாப்பிட வேண்டும்.

கல்லீரல் வீக்கத்தைக் குணமாக்க அத்திப் பழங்களை சாடியில் (வினிகர்) ஒருவாரம் வரை ஊறவைக்க வேண்டும். அதன்பின் தினசரி இரண்டு பழங்களை ஒருவேளை சாப்பிடலாம்.

தினசரி இரண்டு அத்திப்பழங்களை சாப்பிட்டு வந்தால் உடல் கவர்ச்சிகரமாக வளரும். இதில் முழு அளவு ஊட்டச்சத்து இருக்கின்றது.

அத்தி பழத்தில் புரோட்டின், சர்க்கரை சத்து, கால்ஷியம், பாஸ்பரஸ் மற்றும் இரும்புச் சத்து அதிக அளவில் இருப்பதாகவும், மற்ற பழங்களைவிட அத்திப்பழத்தில் இந்த சத்துக்கள் நாலுமடங்கு அளவில் அதிகமாக இருப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. இதைத் தவிர வைட்டமின் ஏ, வைட்டமின் சி அதிக அளவிலும் இருகின்றது. பழத்தைப் பொதுவாக உடல் பலவீனத்திற்கும், ஊரங்களிற்கும் பரவலாகப் பயன்படுத்துகிறார்கள். பதப்படுத்தப்பட்ட அத்திப்பழங்கள் யுனானி, நாட்டு மருந்துக் கடைகளில் விற்கப்படுகின்றன. இதை சீமை அத்திப்பழம் என்று கூறுவார்கள். சீமை அத்திப்பழம் வெண்குஷ்டத்தை குணமாக்குகிறது.

**டாக்டர், மருந்துண்ணும் போது, புளிப்பு கூடாது என்று சொல்கின்றார்கள். நீரிழிவுக்கு இனிப்பும் கூடாது என்றால் எதுதான் நல்லது?**

*- ராம் பாபு*

உப்பு இரத்த அழுத்தத்திற்கு கூடாது. ஞாபக சக்தியை கூட்டும். அதிகமானால் உடம்பில் வீக்கத்தை ஏற்படுத்தும். துவர்ப்பு தோல் நோய்களுக்குக் கூடாது. இரத்தம் வெளியே ராது தடுக்க வல்லது. இரத்தம் உறைவதை கூட்டும் தன்மையுள்ளது.

காரம் நெஞ்செரிவுக்குக் கூடாது. ஆனால் உடலுக்கு உஷ்ணத்தைக் கூட்டுவதுடன் உணர்சிகளை கூட்டவும், குறைக்கவும் செய்யும். கசப்பு கிட்னி குறை பாட்டிற்குக் கூடாது ஆனால் உடம்பிலுள்ள உதவாத கிருமிகளை அழித்து உடம்பிற்கு சக்திகூட்டும். சளியைக் கட்டுப்படுத்தும். இனிப்பு – சர்க்கரை நோய்க்குக் கூடாது. ஆனால் உடம்பு தசையை வளர்க்கும் தன்மை வாய்ந்தது. வாதத்தைக் கூட்டும், புளிப்பு - இரத்தக் குழாயின் அழுக்கை நீக்கவல்லது. வாதத்தைக் கூட்டும்.

**சர்க்கரை வியாதிக்கு கைப்பக்குவம் ஒன்று சொல்லுங்களேன்.**

*- மஞ்சுளா*

சர்க்கரை வியாதி உள்ளவர்கள் இரண்டு வெற்றிலையுடன் வேப்பிலை ஒரு கைப்பிடியளவும் அருகம்புல் ஒரு கைப்பிடியளவும் ஒரு சட்டியில் போட்டு 500 மி.லீ தண்ணீர் விட்டு நன்றாக கொதிக்கவிடவும். தண்ணீரின் அளவு 150 மி.லீ ஆகக் குறையும் வரை கொதிக்க விட்டு, பின்பு வடிகட்டி ஆறவைத்து வேளைக்கு 50 மி.லீ வீதம் மூன்று வேளை உணவுக்கு முன்பு சாப்பிடவும். தினமும் கொய்யா சாப்பிடுங்கள். சயவன்ப்ராஷ் என்ற ஆயுர்வேத லேகியம் கடைகளில் கிடைக்கின்றது, தினமும் ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வந்தால். சர்க்கரை மற்றும் இரத்த அழுத்தம் குறைந்து விடும்.

**குடல் புண் ஆற என்ன செய்ய வேண்டும்?**

*- சரோஜா*

மஞ்சளை தணலில் இட்டு சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். மஞ்சள் கரி சாம்பலை தேன் கலந்து சாப்பிட குடல் புண் ஆறும்.

**மூக்கடைப்பு தீர என்ன செய்ய வேண்டும்?**

*- ஈஸ்வரி*

ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லிட்டர் நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி, சர்க்கரை சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வர மூக்கடைப்பு விரைவில் நீங்கும்.

**ஆரோக்கியத்தை, மேம்படுத்துவதில் காய்கறியா, தானியங்களா அல்லது மூலிகைகளா – எது முக்கிய பங்கு வகிக்கின்றது?**

*- சிவகுமார்*

பாசிப்பயறு பற்றி தெரிந்தால், கண்ணை மூடிக்கொண்டு பயறுதான் சிறந்தது என்று சொல்லிவிடலாம். புன்செய் நிலங்களில் விளையக்கூடிய தானியங்களில் சிறந்த உணவுச் சத்துள்ளது பயிறு. சிறந்த புஷ்டியும், பலமும் தரும். இது சீக்கிரம் ஜீரணமாவதும், வயிற்றில் வாயுவை அதிகமாக உண்டாக்காமல் இருப்பதும்தான் காரணம். பயறு அறுவடையாகி ஆறுமாதங்கள் வரை தானிய சுபாவத்தை ஒட்டிப் புது தானியத்தின் குணத்தைக் காட்டும். கபத்தைச் சற்று அதிகமாக உண்டாக்கக் கூடும். ஆறு மாதங்களுக்கு மேற்பட்டு, அது மிகவும் சிறந்த உணவாகிறது. ஓராண்டிற்குப் பின் அதன் விரியம் குறைய ஆரம்பிக்கும் தோல் நீக்கி லேசாக வறுத்து, உபயோகிக்க மிக எளிதில் ஜீரணமாகக் கூடியது.

பயறு பல வகைப்படும். பாசிப் பயறு, நரிப் பயறு, காராமணி, தட்டைப் பயறு, பயற்றங்காய், மொச்சைப் பயறு என்று. இவற்றில் நரிப் பயறு மருந்தாகப் பயன்படக்கூடியது. தட்டைப் பயறும், காராமணியும் பயறு என்ற பெயரில் குறிப்பிடப்படுவையாயினும், வேற்றினத்தைச் சேர்ந்தவை. தட்டைப் பயிறு இனத்தைச் சார்ந்த பயற்றங்காய் நல்ல ருசியான காய். பச்சைப் பயறு இரண்டுவிதமாகப் பயிரிடப்படுகின்றன. புஞ்சை தானியமாகப் புஞ்சைக் காடுகளில் விளைவது ஒரு வகை. நஞ்சை நிலங்களில் நெல் விளைந்த பின் ஓய்வு நாட்களில் விளைச்சல் பெறுவது ஒருவகை, புஞ்சை தானியமாக விளைவது நல்ல பசுமையுடனிருக்கும் மற்றது கறுத்தும், வெளுத்த பசுமை நிறத்திலும், சாம்பல் நிறத்துடனும் காணப்படும். இரண்டும் ஏறக்குறைய ஒரே குணமுள்ளவைதான்.

பயறு துவர்ப்புடன் கூடிய இனிப்புச் சுவையும், சீதவீரிய முள்ளதுமாகும். நல்ல ருசி உடையது. பசியைத் தூண்டி எளிதில் ஜீரணமாகக் கூடியது ரத்தத்தில் தெளிவை ஏற்படுத்திக் கொதிப்பைக் குறைக்கும். ரத்தத்தில் மலம் அதிகமாகத் தங்காமல் வெளியேறிவிடும். ஆகவே ரத்தம் கெட்டு நோய்கள் ஏற்படுவதை இது குணப்படுத்தும். சிறுநீர் தேவையான அளவில் பெருகவும் வெளியேறவும் இது உதவும்.

பயற்றம் பருப்பை வேக வைத்த தண்ணீரை உப்பும், காரமும் சேர்த்து நோயுற்ற பின் மெலிந்து பலக்குறைவுள்ளவர்கள் சாப்பிடக் களைப்பு நீங்கிப் பலம் உண்டாகும். உபவாசமிருப்பவர்கள் ஏதேனும் ஒருவேளை இலகுவாக உணவேற்பதாயின், பயற்றங் கஞ்சித் தெளிவுடன் பாலும், சர்க்கரையும் சேர்த்து உண்பர். சீக்கிரம் ஜீரணமாவதுடன் உபவாச நிலையில் அதிகரித்துள்ள பித்தத்தின் சீர் கேட்டைத் தணிக்க இது பெரிதும் உதவும் பச்சைப் பயிரை வேக வைத்து. கடுகு, சின்ன வெங்காயம், தாளித்து உப்பு சேர்த்து, சப்பாத்திக்குத் தொட்டுக் கொள்ள கூட்டாகவும் உபயோகிக்கலாம். தலையில் உள்ள எண்ணெய்ப் பசையை நீக்க இதன் தூள் மிகச் சிறந்தது. தலைக்கும், கண்ணுக்கும் குளிர்ச்சி தரும். இதன் மாவை வெந்நீர் விட்டுக் களியாகக் கிளறி, தாய்ப்பால் தரும் மாதரின் மார்பில் பற்றிட பால்கட்டு குறைந்து, வீக்கம் குறையும். மார்பின் நெறிக் கட்டிகளும் குறையும். இதைப் போலவே நவ தானியங்களும் சிறப்பு வாயந்தவைதான்.

**பி.கு: மேற்கூறிய குறிப்புக்களை வைத்தியரின் ஆலோசனையுடன் பின்பற்றுவதே சிறந்தது.**

rajasekar.a@thaiveedu.com

■ ■ ■

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)

உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

# கேரளா ஆயுர்வேதா
# KERALA AYURVETHA

**www.ayurvetha.com**

- முடி வளர
- முடி உதிர்வதைத் தடுக்க
- வெண்புள்ளி
- சொரியாசிஸ்
- தேமல்
- சிறுநீரகக் கோளாறு
- கர்ப்பப்பை கோளாறு
- வாத நோய்கள்
- மூலம்
- உடல் எரிவு
- உள்ளங்கால் எரிவு
- செக்ஸ் பிரச்சினைகள்
- மூளை வளர்ச்சி
- ஞாபக சக்தி
- இரத்த அழுத்தம்
- இதய நோய்
- குடியை நிறுத்த (மது)
- புற்று நோய் வராமல் தடுக்
- சக்தி - ஆற்றல் பெற

எம்மை அணுகுங்கள்.



முழுமையான பரிசோதனை மற்றும் ஆலோசனைக் கட்டணம் $40 மட்டுமே.


வாரத்தில் ஏழு நாட்களும் மருத்துவரை சந்திக்கலாம்.
முன்பதிவு அவசியம்.

Dr. இராஜசேகர் ஆத்தியப்பன், M.D., F.H.M.S.S.,

1269 Warden Ave (One Block North Of Lawrence)

416 995 0416 / ayurvetha@gmail.com

# மருந்துகளற்ற முறையில் மனநிலைக் குழப்பங்களை நிவர்த்தி செய்தல்


கந்தையா பரநிருபசிங்கம்

இன்று உலகில் எல்லா வயதினரிடையேயும் மனநிலைக் குழப்பங்கள் (Mood disorders) பரந்துபட்டபரவல் நிலையை எட்டியுள்ளது. எமது உள்ளார்ந்த (inherent) சமநிலையை எமது தற்கால வாழ்க்கைமுறை தொழில்நுட்ப முன்னேற்றத்தினூடாக மாற்றிவருகின்றது. நாம் இப்பொழுது கதிரவன் மறையும் போது ஓய்வெடுப்பதையோ அல்லது பூரணமானதும், எம்மைப் பாதிக்கும் இரசாயனப்பொருட்கள் இல்லாத உணவு வகைகளையும் உண்ணுவதையோ செய்வதில்லை. எங்கு பார்த்தாலும் மக்கள் இன்று உயர்கதியில் ஓடிக்கொண்டே தங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்கின்றனர். இவர்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகும் வரை தங்கள் உள்ளக (internal)ச் சூழலைப்பற்றி சிந்திப்பதாகத் தெரியவில்லை. அநேகமானவர்கள் ஏதோ தங்கள் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுவேண்டி தங்கள் குடும்ப வைத்தியர்களை நாடி அல்லது தேடி ஓடுகின்றர்கள். இங்கு ஒன்று மட்டும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். வைத்தியர்கள் தருகின்ற மருந்துகள் எங்கள் பிரச்சினைகளுக்கு சர்வ ரோக நிவாரணிகள் அல்ல! ஏனெனில் நோயாளிகளில் மூன்றில்லொரு பகுதியினர் எதிர் மனவழுத்தி (Antidepressants)களால் குணம் பெறுவதில்லை. அத்துடன் இந்த மருந்துகளால் பலன்பெறுபவர்கள் காலப்போக்கில் இவற்றால் பயன்பெறமுடியாமலும், பக்கவிளைவுகளையும் பெற்றுக் கொள்கின்றனர். உட்புற, வெளிப்புற செயற்பாடுகளின் ஓட்டு மொத்தத்திரட்சி மனவழுத்த நிலைக்கு இட்டுச் செல்கின்றது. இவ்வாறன விவரணநிலையில் மனநிலைக் குழப்பங்களிலிருந்து எம்மைப்பாதுகாக்க இயற்கையானதும், மருந்துகளற்றதுமான வழிகளை நாடிச்சென்று மனவழுத்தத்துடன் தொடர்புடைய செறற்றேனின் (Seratonin) மற்றும் அவ்வாறன நரம்புக்கடத்திகளின் (Neurotransmitters) சமநிலைக்குழப்பத்தைச் சரிசெய்ய வேண்டும்.

இப்பொழுது நரம்புக்கடத்திகளின் சமநிலையைப்பேணி மனநிலைக்குழப்பங்களைத் தவிர்த்துக்கொள்ள இயற்கையானதும், மருந்துகளற்றதுமான சில முறைகளை பின்வரும் பந்திகளில் பார்ப்போம்.

தற்கொலை உணர்வை ஏற்படுத்துதல்வரை மனவழுத்தத்தின் குணம்குறிகள் செறற்ரோனின் நொர்எப்பிநெவ்றின் (Norepinephrin), டோப்பமீன் (dopamine) போன்ற நரம்புக்கடத்திகளின் அளவின் குறைவினாலேயே ஏற்படுகின்றது. செறற்ரோனின் மனவழுத்தத்தைக் குறைப்பதில் முக்கிய காரணியாக அமையும். நரம்புக்கடத்திகளின் தொழிற்பாட்டில் ஏற்படும் தடங்கல்கள் மூளையினால் ஏற்படும் உள்ளக செய்திப் பரம்பலை குறுக்குப்பாதைப்படுத்தலாம். நரம்புக்கடத்திகள் கோபம், சந்தோசம், நித்திரை, பசி, ஞாபகம், அசைவு போன்ற உடலின் பல தொழிற்பாடுகளை சீர்செய்யும் (regulate).

குறை தைறொயிட்டுநிலை (low thyroid) குருதிச்சோகை, நீரழிவு போன்றவையும் மனவழுத்தக் காரணிகளாக இருக்கலாம். தைறொட்டுச்சுரப்பி ஒரு உணர்ச்சிசார் சுரப்பி. இது அதிரீனல் சுரப்பி, சதையி ஆகியவற்றுடன் சேர்ந்து மும்மூர்த்திகளாகத் தொழிற்பட்டு எமது மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்து கின்றது.

மனவழுத்தத்திற்கான குணம்குறிகள் ஒருவரின் தைறொட்டுச்சுரப்பியின் குறை தொழிற்பாட்டின் காரணமாக இருக்கலாம். தைறொயிட்டுக் குறையும் போது நம்பிக்கையின்மை (despair) அதீததுக்கம் போன்ற உணர்வுகளுக்கு இட்டுச் செல்லலாம். ரைறோசீன் (tyrosine) என்ற அமினோவமிலம் உடலினால் உபயோகிக்கப்பட்டு நோர்அட்றீனலின் என்ற நரம்புக் கடத்தியை உருவாக்கும். மனவழுத்தம் உள்ளவர்களில் நோர்அட்றீனலினின் அளவு குறைவாகக் காணப்படுகின்றது.

போலிக் அமிலகத்தின் (folic acid) குறைந்த அளவைக் கொண்டுள்ள நோயாளிகள் எதிர் மனவழுத்தப் பதார்த்தங்களுக்கு குறைந்த அளவின் பிரதிபலிப்பைக் (response) காட்டுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

குருதிச்சோகை (anemia) மூளையில் டோப்பமீன் (dopamine)னைச் சீர்செய்யும் கலங்களில் இரும்பு உறிஞ்சலை தடங்கலுக்கு உட்படுத்தி மனவழுத்த உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கலாம்.

நீரழிவுநோய் உள்ளவர்கள் இந்நோய் இல்லாதவர்களைவிட மனவழுத்தத்தைப் பெறுவதற்கு அதிக சந்தர்ப்பம் உள்ளவர்கள் ஆகின்றார்கள்.

மனவழுத்தத்திற்கும் உணவுக் கூறுகளின் சமநிலைக்கும் தொடர்பு உண்டு. எமது மூதாதையரின் உணவில் பச்சைக்காய்கறிகள், சிறு விலங்குகளின் மாமிசம் ஆகியவை இருந்தன. சிறிய விலங்குகளின் மாமிசத்தில் குறைந்த கொழுப்பு இருந்தாலும் அதிக கொலெஸ்ரெறேனால் காணப்பட்டது. குறைந்த கொலெஸ்ரோல் அளவு செறற்ரோனினைச் சீர்செய்வதற்குக் குறுக்கே அமைந்துவிடுகின்றது. கொலெஸ்ரோலின் அதிக அளவு வேறு பிரச்சினைகளைக் கொண்டுவருவதால் இரண்டினது அளவுகளையும் கண்காணித்து வரவேண்டும்.

மாப்பொருட்சத்து செறற்ரோனின் அளவைக் தற்காலிகமாகக் கூட்டும். ஆனால், காலப் போக்கில் சுறுசுறுப்பற்ற, மந்தமான உணர்வினை ஏற்படுத்தும். இதற்கு பகுதியான காரணம் இன்சுலினின் அளவு கூடல். உயர் இன்சுலின் அளவு மனவழுத்தத்துடன் தொடர்புடைய புரோஸ்ராசிளான்டின்களின் (Prostagladins) அளவை உயர்த்திவிடும்.

உடல் நலன்களுக்கு உகந்த இன்சுலின், கொலெஸ்ரெரோலின் அளவுகளைப் பேணுவதற்கு சில விடையங்களில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். பழங்கள், மரக்கறிகள், முழுத்தானியப் பண்டங்களை உண்டும், இனிப்புவகை, பதனிடப்பட்ட உணவுவகைகள், போசணைச்சத்துக்குன்றிய உணவுகள் (junk foods) ஆகியவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வேளை உணவிலும் புரதம், கொழுப்பு, மாச்சத்து ஆகியவற்றை முப்பது வீதம், முப்பதுவீதம், நாற்பதுவீதம் என முறையே பேணத் தெண்டிக்கவேண்டும். மேலும், ஐநூறு கலோரிகள் அல்லது அதற்குக் குறைவான, அடிக்கடி எடுக்கப்படும் சிற்றுண்டிகள் இன்சுலினின் அளவைக்குறைத்து நிற்கும். மனவழுத்தத்தைக் குறைக்க ஓமேகா

30ம் பக்கம் பார்க்க...



விவாகரத்து வழக்கினால் குழம்பிப்போனது நான் மட்டுமல்ல எனது கிறடிட்டும் தான் எப்படி இதனை மீள கட்டியெழுப்புவது ?

உறவுகளுக்கிடையில் வீட்டினை பெயர்மாற்றி புதிய மோட்கேச்சுக்கு செல்வதனால் நன்மையுண்டா ?

வீட்டு விலை ஏற்றத்தினை பயன்படுத்தி அதிகளவு வட்டி செலுத்தும் அனைத்து கடன்களையும் ஒன்றாக்கலாமா?

நீங்கள் சுயதொழில் புரிபவராக இருந்தாலென்ன கைக்காசுக்கு உழைப்பவராக இருந்தாலென்ன, வருமான முறைக்கேற்ப மோட்கேச் ஒழுங்கு செய்து தரப்படும்

ஏற்கனவே உள்ள மோட்கேச்சினை பெனால்ட்டி கட்டி பிரேக்பண்ணினால் நன்மையுண்டா ?

நீங்கள் வங்குரோத்தில் இருந்து விடுபட்டிருந்தாலோ அல்லது கொன்சியுமர் புறப்போசலில் இருந்தாலோ எம்மால் கிறடிட் காட் ஒன்றினை பெற்று தந்து கிறடிட்டினை சீராக்கி, கிறடிட் ஸ்கோரினை அதிகரிக்க முடியும்

# செக்கண்ட் மோட்கேச் தேவையா ?

| 5 YR பிக்ஸ்ட் மோட்கேச் **3.29%** | வேரியபில் மோட்கேச் **2.10%** |
|---|---|

# CENTUM **Rapid Mortgages Inc.**

FSCO Brokerage Lic # 10156
211-80 Nashdene Rd, Toronto, ON, M1V 5E4
www.centumrapid.com

Call: **தயா PK கந்தையா** BAS, ABR®, AMP
Principal Mortgage Broker
FSCO Broker Lic. # M08001083

Cell : **416-716-8707** Bus: **416-644-3555**

Interest rates are subject to change without notice. Rates based on individual credit worthiness and income. Some other conditions may apply. Call for details.




# மருந்துகளற்ற...

28ம் பக்கத் தொடர்ச்சி...

கொழுப்பமிலங்களைக் கொண்ட உணவு வகைகளான சாமன்மீன், வால்நட் (walnut) சோயாஅவரை, இனிப்புப்பண்டங்கள் போன்ற வற்றை எடுக்கலாம். இவை செற்றறேனின் அளவைக்கூட்ட உதவும். ரிப்ரோபனைக் (tryptophan) கொண்ட வாழைப்பழம், கச்சான், வான்கோழி இறைச்சி போன்றவை மனதிற்கு இதமான விளைவைக் கொடுக்கும்.

ஆய்வு ஒன்றின்படி குறைந்தது எட்டு நிமிடங்கள் கொண்டதான உடற்பயிற்சிகள் (workouts) துக்கம், மனவழுத்தம், களைப்பு, கோபம், மனக்குழப்பம் ஆகியவற்றை குறைத்து மன நிலையைச் செழுமைப்படுத்தப் போதுமானது என்று அறிந்துள்ளார்கள்.

## மருந்துகள் இல்லாமல் பரிகாரம்:

இதுவரை இயற்கையான முறையில் எவ்வாறு மனநிலைக் குழப்பங்களை நிவிர்த்தி செய்யலாம் என்று பார்த்தோம். இப்பொழுது மருந்துகள் இல்லாமல் எவ்வாறு மனவழுத்தத்திற்குப் பரிகாரம் செய்யலாம் என்று பார்ப்போம்.

உணவுக்குறை நிரப்பியாக (dietary supplement) ரிப்ரோபன் (tryptophan) என்ற அமினோவமிலத்தை எடுத்தல். இவ்வமினோவமிலம் செற்றறேனினாக உடலால் மாற்றப்படும். அடினோசின்-ட-மெத்தியோனைன் என்ற இயற்கையாகக் காணப்படும் மூலக்கூறு செற்றறேனின், டோப்பமீன் ஆகியவற்றின் ஆக்கல் அழித்தல் செயல்முறைகளில் பங்குபெற்றுகின்றது.

குளுட்டாமீன் (glutamine), பீனைல்அலனீன் (phenylalanine) ஆகிய அமினோவமிலங்கள் உடலினால் குளுட்டாமேற்று, நோர்எப்பிநெவ்றின் ஆகிய நரம்புக்கடத்திகளாக முறையே மாற்றப்படும்.

இனொசிற்றோல் (inositol) என்ற குளுச்கோசுடன் தொடர்புபட்ட சீனிவகை மனவழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் தண்டுவடநீரில் (spinalfluid) குறைவாகக் காணப்படுகின்றது. எனவே மனநிலைக் குழப்பங்களை நிவிர்த்தி செய்ய இதன் அளவைக் கூட்ட வேண்டும். இவ்வாறக இச்சீனி மனவழுத்தத்திற்குப் பரிகாரமாக அமையும்.

பரியோவான் பருத்தவேர் என்ற மூலிகை எல்லாவிதமான நரம்பு மற்றும், உணர்ச்சி வயப்பட்ட குழப்பங்களுக்கும் காலம்காலமாகப் பரிகாரமாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. மூலிகைகள் எப்பொழுதும் எதிர்மனவழுத்திகளை விடச்சிறந்தவை ஏனெனில் இவற்றால் பக்கவிளைவுகள் வருவதில்லை.

ரைறோசீன் (tyrosine) என்ற அமினோவமிலம் நோர்அட்றீனலினின் உருவாக்கத்திற்கு உடலினால் பாவிக்கப்படுகின்றது. மனநிலைக் குழப்பங்கள் உள்ளவர்களின் மூளையில் இது குறைந்த அளவில் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் மனவழுத்தத்துகுரிய பூர்த்திசெய் (Complementary) பரிகாரங்கள் வகைப்பட்டதும், பரந்துபட்டதுமாகும். இந்தவகையில் சில ஆலோசனைகளை மனநல வல்லுனர்கள் வைக்கின்றார்கள் இவற்றுள் சில இதோ.

ஒளிப்பரிகாரம் (light therapy), மறைவளி அயனாக்கம் (negative air ionisation) சங்கீதம், யோகாசனம், தியானம், வைற்றமீன்களும் தாதுப்பொருட்களும் (vitamins & minerals) மெலரோனின், மற்றும் ஹோமியோபதி மூலிகைப் பரிகாரணங்கள்.

மனநலனின் முதல்தரப் பாதுகாவலனாக, மனவழுத்தத்துடன் சம்பந்தம்பட்டுள்ள நலச் சவால்களையும், தவிர்க்க முடியாத உணர்ச்சிப் பிரவாகங்களையும் குறைக்க நாங்கள் எமது வாழ்க்கை முறைக்காரணிகளுடன், உணவு மற்றும் குறைநிரப்புப் புலங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

paranirubasingam.k@thaiveedu.com

■ ■ ■



## இந்தியா:

# விளையாட்டும் வியாபாரமும்




மாறன் செல்லையா

- நிதி திட்டமிடல் ஆலோசகர் -


முடை நாற்றமடிக்கும் கழிப்பிடம், தேங்கி நிற்கும் சாக்கடையில் ரீங்காரமிடும் டெங்கு காச்சலைப்பரப்பும் நுளம்புகள், இடிந்து விழும் பாலங்கள், இவற்றின் மத்தியில் ஒரு பயங்கரவாதப் பீதி என்பனவற்றுடன் ஆரம்பமாகி நடந்து முடிந்து இருப்பதுதான் இந்தியாவின் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டி.

இந்தியாவின் இந்தப் போட்டிக்கான தயார்நிலை பற்றி ஆரம்ப முதலே பல கேள்விகள் எழுந்த போதும் காசைச் சுருட்டுவதில் இருந்த போட்டியால் இந்தக் கேள்விகளுக்கு சரியான பதில் தர எவருக்கும் ஆர்வம் இருக்கவில்லை. ஆனால் உலகளாவியரீதியில், விழா ஆரம்பமாவதற்கு முதலிலேயே, இந்தியா எப்போதும் இல்லாத அளவிற்குப் பிரபல்யம் அடைந்துவிட்டது. சீனா ஒரு குறையின்றி நடத்திய 2008 ஒலிம்பிக் விளையாட்டுடன் ஒப்பிடும் போது இந்தியாவின் விளையாட்டு ஒரு குழப்பம் நிறைந்தது. இது உலகிற்கு ஒரு தவறான செய்தியைச் சொல்வதாகும்.

பெரிய விளையாட்டுப் போட்டிகள் அதை நடத்தும் நாட்டின் செல்வாக்கு செழிப்பு பற்றி உலகிற்கு ஒரு செய்தியைத் தரும் என சிலர் ஒரு கணிப்பு வைத்திருக்கிறார்கள். பாரிய விளையாட்டு அரங்குகள், வசதி நிறைந்த விளையாட்டு வீரர்களுக்கான விடுதிகள், அவர்களை அந்த விடுதிகளில் இருந்து அரங்குகளுக்கு ஏற்றிச் செல்ல சொகுசு ஊர்திகளென இவற்றையெல்லாம் செய்ய முடியாவிடின் இந்தியா ஒரு இரண்டாம் தர நாடு என்ற எண்ணம் மனதில் ஊறிவிடும்.

இந்தக் கருத்து உண்மையானதா? இந்தத் தலையங்கங்களைவிட இந்தியா நன்கு வளர்ச்சியடைவதாகவே தோன்றுகிறது. இந்த ஆண்டு பொருளாதாரம் 8.5 வீதம் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்தியாவை விட நாலு மடங்கு பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட சீனாவைப் போல் வர இன்னும் பல ஆண்டுகள் இருந்தாலும் 2013ல் வளரச்சி வீதம் சீனாவை முந்தும் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர். அதிலிந்து இன்னும் 25 வருடங்களுக்கு இந்தியா பொருளாதார வளர்ச்சியில் முன் நிற்கும் என அவர்கள் மேலும் கூறியுள்ளார்கள். இவர்கள் கூறுவது உண்மையாயின் இந்த வளர்ச்சி அண்டைநாடான இலங்கையின் மீது பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தப் போவது தெளிவு.

இந்தியா சீனாவை முந்தும் என்பதற்கு இரு காரணங்கள் உண்டு. முதலாவது சனத்தொகையின் ஆரோக்கியம். சில ஆண்டுகளில் சீனாவின் சனத்தொகை சராசரி வயது அதிகரிக்கும். பின்பு சனத்தொகை சுருங்கத் தொடங்கும். இதற்குக் காரணம் சீனாவின் ஒரு பிள்ளைக் கொள்கை. பாரிய அடக்கு முறையான ஒரு கொள்கை. இப்படிப்பட்ட ஒரு கொள்கையை எந்தவொரு இந்திய அரசும் அமுல் படுத்திவிட்டு தப்ப முடியாது. இதேபோல ஒன்றை எழுபதுகளில் செய்ய முயற்சித்த இந்திராகாந்தி ஜனநாயகத்திற்கு அடிபணிந்ததை மறந்துவிட முடியாது. அவருடைய அந்தத் தோல்வியால் இந்தியாவிற்கு ஆரோக்கியமான இளைய உழைக்கும் கரங்கள் கிடைத்திருக்கிறது. உலக நாடுகளிலேயே சிறந்த முதியோருக்கும் இளையோருக்குமான விகிதாசாரத்தை இந்தியா அடைய இருக்கிறது. இந்த சனத்தொகை விகிதாசாரம் பல வல்லரசுகளை எழுப்பியிருக்கிறது. அந்த விகிதாசாரம் முடிவுக்கு வந்தவுடன் வல்லரசுகள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்திருக்கின்றன.

அடுத்த நம்பிக்கை தரும் விடயம் என்னவென்றால் இந்தியாவின் ஜனநாயகம். இந்த ஜனநாயகம் வளர்ச்சிப்பாதையில் இடைஞ்சல் எனவும் கருத்து நிலவுகிறது. பல முக்கிய முடிவுகளை எடுக்க முடியாமல் இழுபறி நடப்பதற்கு இந்த ஜனநாயகம் காரணமாகும். பல்வேறு குழுக்களும் தங்களுக்கு வேண்டிய திசையில் தங்களுக்கு வசதியாக எல்லாம் இருக்க வேண்டும் என நினைப்பதால் இந்த இழுபறிகள் முடிவில்லாமல் இழுபட்டுக்கொண்டே போகின்றது.

சீனாவில் இந்தப் பிரச்சினை இல்லை. நிபுணர்களும் அரசும் ஒரு பெரும் தெருவையோ அல்லது ஆற்றுக்கு குறுக்கே ஒரு அணையையோ கட்ட நினைத்தால் கிராமம் மறைந்து விடும். இடம் பெயர்ந்த கிராமத்தவர்களுக்கு கொடுப்பனவுகள் ஏதாவது இருக்கலாம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் அபிவிருத்தியின் குறுக்கே வர அனுமதிக்கப்பட மாட்டார்கள். சீனத் தலைவர்கள் எல்லா மக்களினதும் நன்மையை மனதில் கொண்டு நீண்ட கால லாபத்திற்காக திட்டங்களைத் தீட்டுவார்கள். சீனத்தலைவர்கள் ஜனநாயகத்தை அனுமதிக்காததற்கு கூறும் காரணம் இதுவாகும்.

உறுதியான மத்திய அரசு பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை திறம்பட நடாத்த உதவியிருக்கலாம். ஆனால் ஒரு நாட்டைப் பொறுத்தமட்டில் 100 மீற்றர் ஓட்டத்தைவிட முக்கியமான பல விடயங்கள் உண்டு. இந்திய அரசாங்கம் பலவீனமானதாக இருக்கலாம் ஆனால் தனியார் நிறுவனங்கள் மிக வலிமையடைந்து வருகின்றன. இந்திய முதலாளித்துவம் ஆயிரக்கணக்கான தொழிலதிபர்களால் செலுத்தப்படுகிறது. ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பியதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். 1990களில் இருந்து இந்திய நாட்டை வெளிநாட்டு வர்தகத்திற்கு திறந்து, இந்திய தொழில்துறைகள் அபரிமித வளர்ச்சியைக் கண்டன.

தற்போது இந்தியாவில் சிறிய வர்த்தகர்கள் பெரிய பட்டாளமாக இருக்கிறார்கள். ஆங்கிலம் அறிந்த பெரிய தொழில் அதிபர்கள் தொடர்பு வலையை உலகளாவியரீதியில் வளர்த்து சீனாவைப் போல அரச உதவியின்றி வியாபித்து வருகிறார்கள். 2000 டொலருக்கு கார். மிகவும் மலிவான இருதய அறுவைச் சிகிச்சை. அத்துடன், வாடிக்கையாளரை முக்கியம் என்று நினைக்கும் கரிசனை இத்துடன் சீனாவின் இரகசிய கலாச்சாரம். இதனால் இங்கு அறிவு ஆராச்சியுடன் கூடிய தொழில்கள் வளரும் சந்தர்பம் சீனாவில் குறைவு.

இந்திய தனியாரின் கையில் வளரும் முதலாளித்துவம் சீன அரச நிர்வாகத்தில் இருக்கும் முதலாளித்துவத்தை விட ஆரோக்கியமானது. நல்ல ஆட்சியின் கீழ் சீன தொழில் துறை சிறக்கும். ஆனால் இன்னொரு மாவோ ஆட்சிக்கு வந்தால் கடந்த முப்பது வருட முன்னேற்றமும் பின்னடிக்கப்படலாம். அவரை நீக்குவதற்கோ சீனாவில் வழிமுறைகள் இல்லை. இது எதிர்காலப் பிரச்சினை.


ஆனால் இந்தியா தற்போது முகம் கொடுக்கும் போக்குவரத்து மின்சாரம் போன்றவற்றில் முதலிட வேண்டும். இல்லாவிட்டால் இளைய கரங்களுக்கு வேலை கொடுக்க முடியாமல் போய்விடும்.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■







முழுநேர வீடுவிற்பனை முகவர், Emerald Award Winner

சத்தி மருதப்பா

Sales Representative

416.816.1500

Not intended to solicit properties currently listed for sale.

Century 21

Affiliate Realty Inc., Brokerage

208-80 Corporate Drive,Toronto, ON M1H 3G5

Bus: 416-290-1200, Fax: 416-290-1900

# தொற்றுமா மனநோய்?

புஷ்பா
கனகரட்ணம்
- உளவியல் நிபுணர் -



பொதுவாகவே உடல் சார்ந்த நோய்கள் (நீரிழிவோ, இருதய நோயோ...) என நாம் அடையாளம் காணும் நோய்நிலைகள் பற்றி பேச அதிக கூச்சமோ தடையோ இருப்பதில்லை. ஆனால் உளநோய்களின் நிலையே வேறு. சமூகமட்டத்தில், ஏன் குடும்ப மட்டத்தில் கூட பேசப்பட முடியாத, பேசப்படக்கூடாத விடயமாக இது இருக்கிறது. உளநோய்கள் சார்ந்த அச்சமும் தவறான அபிப்பிராயங்களும் ஏராளம். ஒரு குடும்பத்தில் உளநோய்கள் இருக்கிறது என தெரிந்தால், அந்தக் குடும்பத்தில் சம்பந்தம், அதாவது திருமணம் செய்ய பயப்படுவோம். அதே போலத்தான், பெற்றோர்களுக்கோ குடும்பத்தில் யாராவது அங்கத்தினருக்கோ உளநோய் இருந்தால், எங்கே பிள்ளைகளுக்கும் அது தொற்றிக் கொண்டுவிடுமோ என்று பெற்றோர் அஞ்சுவார்கள். இந்த அச்சம் வளர்ச்சியடைந்த நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகளிலே கூட இருக்கிறது. மனநல மருத்துவமனையை கடந்து பேருந்தில் செல்லும் Toronto நகர மக்கள் சிலர், மருத்துவமனையை பேருந்தில் கடக்கும் வரை மூச்சைப் பிடித்துக் கொண்டு செல்வார்களாம். மூச்சுக் காற்றோடு உளநோய்கள் தொற்றிவிடும் என்ற அச்சத்தால்...

உளநோய்கள் தொற்றுமா? பரம்பரை பரம்பரையாக கடத்தப்படுமா? இந்தக் கேள்விகளுக்கு விடை தெரிய சற்று விளக்கங்கள் தேவைப்படுகின்றன. எப்படி இருப்பினும், எம் முன் இருப்பது மிகைப்படுத்தப்பட்ட அச்சம் தான்.

சாதாரணமாக, Schizophrenia எனும் யதார்த்த நிலை பிறழ்வு நோய்க்கு 80% பரம்பரை காரணமாக இருப்பதாகவும், தீவிர மன அழுத்தத்திற்கு (Major depression) 40%பரம்பரை காரணமாக இருப்பதாகவும் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இப்படியான முடிவுகளுக்கு இரட்டையர் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் மூலகாரணமாக இருந்திருக்கின்றன. ஒரு கருவில் பிறந்த இருவருக்கு (Identical twins), Schizophrenia ஒருவருக்கு இருப்பின் மற்றவருக்கு வரும் சந்தர்ப்பம் 50%மாகவும், அதுவே இரு கரு இரட்டையர்களுக்கு (Fraternal twins) இந்த விகிதாசாரம் 15%மாக மட்டுமே இருப்பதாகவும் இந்த ஆய்வுகள் சொல்கின்றன. எப்படியோ, தற்பொழுது இப்படியான ஆய்வுகளின் அடிப்படையைப் பற்றி பலர் கேள்வி எழுப்புகிறார்கள். ஏனெனில் பரம்பரை என நாம் கருதும் காரணிகளில் கூட சூழ்நிலையின் தாக்கம் அதிகமாக இருக்கிறது என்பதனால்; பரம்பரை என நாம் பிரித்துப் பார்க்க முடியாது.

உள நோய்களில் பரம்பரை காரணிகளின் தாக்கம் ஆய்வுகளால் தவறாக மிகைப்படுத்தப்படுவதாக தற்போது கருத்துகள் எழுந்துள்ளன. மரபணுக்களின் (genes) தாக்கம் முழுவிளக்கம் அல்ல. எம் சூழல், மரபணுக்களின் வெளிப்பாட்டை நிறுத்தவோ, தூண்டி விடவோ விடக்கூடிய தன்மையை கொண்டிருக்கிறது. Epigenetics எனப்படும் இத்துறையில் தற்பொழுது பல ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக குழந்தைப் பருவத்தில் வன்முறைக்கு ஆளாகி (child abuse) அதன்பின் தற்கொலை மேற்கொண்டவர்களுக்கும், குழந்தைப் பருவ வன்முறை இன்றி வளர்ந்து அதன் பின் தற்கொலை மேற்கொண்டவர்களுக்கும் மூளை மரபணுக்களின் கட்டமைப்பில் வித்தியாசமான தன்மைகள் இருப்பதை ஒப்பீட்டு ஆய்வுகள் கண்டுபிடித்திருக்கின்றன. இதே மாதிரியான கண்டுபிடிப்புகள் Schizophrenia சார்ந்தும் வெளிவந்திருக்கின்றன. மனித மூளை என்பது எங்கள் அனுபவங்களின் விளைவால் மாறுபட்டுக் கொண்டிருப்பது. செதுக்கி வைத்த சிலைபோன்றதல்ல. Neuroplasticity என்பது, ஒருவரின் அனுபவங்களுக்கு ஏற்றாற்போல் நடைபெறும் மூளையின் மாற்றங்களையும், மூளையின் மாறுபடும் தன்மையையும் குறிக்கும். முன்பு விஞ்ஞானிகள் கருத்துப்படி, குழந்தைப் பருவத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் மூளையில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை என்று கருதப்பட்டது. இப்பொழுதோ, பிறப்பில் இருந்து இறப்பு வரை மூளை வெளிக் காரணிகளால் மாறும் தன்மையை கொண்டுள்ளது என அறியப்படுகிறது. ஆகவே 'முதல் கோணல் முற்றும் கோணல்' அல்ல. எம் மூளையின் 'விதியை' மதியால் மாற்றலாம். தியானத்தால், உடற்பயிற்சியால், உளநல சிகிச்சையால் (Psychotherapy), மூளையில் மாற்றங்களை கொண்டு வரமுடியும் என்பது ஆதார பூர்வமாக கண்டறியப்பட்டிருக்கிறது. உடலுக்கும் மனதுக்கும் உள்ள இடைவெளி அவ்வளவு தூரம் இல்லை தான்.

Schizophreniaவோ, மன அழுத்தமோ, அதற்கென்று தனிப்பட்ட மரபணுக்கட்டமைப்புகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. உயிரியல் ரீதியாக சில உளநோய்களுக்குரிய ஏதுநிலை (vulnerability) எங்களுக்கு இருந்தாலும், எவ்வளவு தூரத்திற்கு அது பரம்பரைத் தாக்கத்தால் வருகிறது என்பது கேள்விக்குறி தான். வெளிக் காரணிகளால் இந்த நோய்நிலைகள் குடும்ப அங்கத்தவர்களை தாக்கலாம். உதாரணமாக, மன அழுத்தத்திற்கு உள்ளான ஒரு தாய் அல்லது தந்தை, உணர்வு ரீதியாக தன் குழந்தையை வளர்க்க, தேவையான அன்பை, அரவணைப்பை வெளிப்படுத்த, உணர்வுகளை ஆரோக்கியமான முறையில் கையாள, கற்பிக்க, முடியாமல் போகலாம். இதனாலேயே அந்த குழந்தை வளர்ந்து மனஅழுத்த நோய்க்கு ஆளாகும் சந்தர்ப்பம் அதிகரிக்கலாம். யதார்த்த பிறழ்வால் தாக்கப்பட்ட ஒரு தாயோ தந்தையோ குழந்தையை புறக்கணித்தால், தங்களுக்கு தெரியாமலே குழந்தையை துன்பப்படுத்தினால், அந்தக் குழந்தையின் தொடர்பாடலும் யதார்த்தத்தைப் பற்றிய பார்வையும் மாறுபட்டுத்தான் இருக்கப்போகிறது. அதுவே அந்தக் குழந்தையும் பெற்றோரின் நோய் நிலையை பெறக்கூடிய சந்தர்ப்பத்தை அதிகரிக்கும்.

> "மனித மூளை என்பது
> எங்கள் அனுபவங்களின் விளைவால்
> மாறுபட்டுக் கொண்டிருப்பது.
> செதுக்கி வைத்த சிலைபோன்றதல்ல."



மரபணுக்கள் சார்ந்த கல்வி (Genetics) தற்பொழுது மரபணுக்களுக்கும் எம் சூழலுக்கும் இடையே உள்ள தொடர்பாடல் பற்றியும் Schizophrenia போன்ற நோய்நிலைகளில் அதன் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துச் சொல்கிறது. Genotype என்பது மரபணுக்களின் கட்டமைப்பு. Phenotype என்பது அந்த மரபணுக்களின் வெளிப்பாடு. மரபணுக்களின் கட்டமைப்புடன் சூழல் தாக்கம் இணையும் பொழுது - விளைவு மரபணு வெளிப்பாடு. Schizophrenia போன்ற நோய்நிலைகளில் சூழலின் தாக்கம், நாட்டுக்கு நாடு, மக்களுக்கு மக்கள், இந்த நோய்நிலையின் விகிதாசார வேறுபாடுகள் மூலம் கண்டறியப்பட்டு இருக்கிறது. ஒரு நாட்டு மக்களை எடுத்துச் கொண்டாலே, இந்த நோய்நிலை, நகரங்களில் வாழ்பவர்களில் அதிகமாக இருப்பதையும், சிறுபான்மை மக்களில் அதிகமாக இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. மரபணுக்களால் தனியவே இந்த வேறுபாடுகளுக்கு விளக்கம் கொடுக்க முடியாது. ஏனென்றால் சிறுபான்மை இன மக்கள், நாடு கடந்து சென்று பெரும்பான்மை இனமக்களாக மாறும் பொழுது, Schizophrenia வின் விகிதாசாரம் மீண்டும் குறைந்து விடுவதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், நகரங்களில் வாழ்பவர்கள், கிராமிய சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தவர்களாக இருப்பின், இந்த நோயின் விகிதாசாரம் அவர்களில் குறைவாக இருக்கிறது. அப்படி ஆயின், Schizophrenia விற்குரிய ஒரு genotype அல்லது மரபணு கட்டமைப்பு ஒருவருக்கு இருந்தாலும், அது உண்மையான நோய்நிலையாக, மரபணுவின் வெளிப்பாடாக (Phenotype) வருவது மனஉளைச்சல் (stress) போன்ற புறக்காரணிகளின் பாதிப்பால் என கருத முடியும். அதாவது எங்கள் உறவுகள், குடும்பம், சூழல், எங்கள் வாழ்வில் நடைபெறும் சில கொடும் சம்பவங்கள், சார்ந்து எங்கள் மரபணு கட்டமைப்புகளில் ஏற்கனவே ஒரு ஏதுநிலை இருப்பின், அதன் வெளிப்பாடாக நோய்நிலையை கொண்டு வரும் சந்தர்ப்பம், சாத்தியக்கூறு அதிகமாக இருக்கிறது.

மரபணு மற்றும் உயிரியல் சார்ந்த விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள், மரபணுக் கட்டமைப்பு எதுவுமே இன்றி இப்படியான நோய்நிலைகள் மனிதர்களில் தோன்றாது என்ற வாதத்தை முன்வைக்கிறார்கள். எப்படியோ, Schizophrenia போன்ற நோய்நிலைகள், அதன் காரணிகள், என்று எளிதாக பிரித்துப் பார்க்க முடியாமல் மனிதன் சார்ந்த எந்த நோய்நிலையுமே பல காரணிகள் சார்ந்த ஒரு சிக்கலான பகுப்பாய்வுக்குரியனவாக இருக்கின்றன என்பதே உண்மை. அதுவே எங்களுக்கு ஒரு நல்ல செய்திதான். இந்த ஐயங்களிலும் ஒரு நன்மை இருக்கிறது. உளநோய்கள் ஒரு குடும்பத்திற்கோ, பரம்பரைக்கோ சாபக்கேடு அல்ல. உளநோய் தொட்டால் ஒட்டிவிடும் நோயும் அல்ல. எங்கள் மூளையும் கல்லில் எழுதிய எழுத்துப் போல மாற்ற முடியாதது அல்ல. வளைந்து கொடுக்கக் கூடியது. எங்கள் அனுபவங்களால், மனவலிமையால், அன்பால், அரவணைப்பால், உடலின் இரசாயனத்தையே, எங்கள் மரபணுக்களின் கட்டமைப்பையே, மாற்றி விடலாம். Epigenetics, Neuroplasticity என்று நாம் பார்த்த விடயங்கள் நம்பிக்கை அளிக்கின்றன. தலை எழுத்தை மாற்ற முடியாதோ என்னவோ. ஆனால் மூளையின் அமைப்பை எம்மால் மாற்றமுடியும்.

pushpa.kanagaratnam@thaiveedu.com

■ ■ ■

நிதானம், நம்பகத்தன்மை, அனுபவத்துடன் கூடிய சேவை



Das Narayanasamy
Mortgage Broker
416-543-6614
Fax: 1-888-511-8960, E-mail: dasn@rmabroker.ca
Lic# M08007147

R M A
REAL MORTGAGE ASSOCIATES
Real Mortgage Associates
Licence No: 10464

# BUYING/SELLING HOUSES

## PUNCH SOCKALINGAM

Broker

Century 21

Affiliate Realty Inc. Brokerage*

ADVERTISING
24 HRS. A DAY
7 DAYS A WEEK
UNTIL SOLD



**416-786-2463**

Call Your TOP PRODUCER

Why some properties are sold over asking price?
Why some properties are sold sooner than others?
Who is buying home in your area?

**DO YOU KNOW WHO BROUGHT BUYERS TO THE PROPERTIES WHICH BEING SOLD IN YOUR NEIGHBOURHOOD?**



## பொருத்தமான வீட்டைத் தேர்வுசெய்ய சரியானதொரு முகவரைத் தேர்வுசெய்யுங்கள்

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
வீடு, வியாபார நிலையங்கள் வாங்குதல், விற்றல் தொடர்பான
அனைத்து சேவைகளுக்கும் ஆலோசனைகளுக்கும்

- digi Media-



## Rajee Iyadurai

Sales Representative

Direct: 416-918-7346

RE/MAX West Realty Inc., Brokerage

6074 Kingston Road, Scarborough, ON M1C 1K4
Tel: 416-281-0027 Fax: 416-281-0034
E-mail: riyadurai@trebnet.com

RE/MAX Above the Crowd!

RE/MAX

# உங்கள் வெற்றி உங்கள் கையில்

கடந்த மாதங்களில் எதிர்காலத்துக்கான சேமிப்பு வழிமுறைகள் பற்றிப் பார்த்தோம். இந்த மாதம், சேமித்த பணத்தினைக் கொண்டு என்ன செய்வது எனப்பார்ப்போம்.

எங்கள் திட்டத்தின் முக்கிய விதிமுறையான “சேமித்த பணத்தை எக்காரணத்திற்காகவும் தொடக்கூடாது” என்ற உறுதியை எதற்காகவும் கைவிடக்கூடாது. இவ்விதிமுறையைக் கைக்கொள்வது சற்றுச் சவாலாகத் தான் இருக்கும். ஆரம்பத்தில் கடினமாகவும் இருக்கும். தேவைகள் துரத்துகையில் “விதிமுறையாவது மண்ணாங்கட்டியாவது” என சேமித்த பணத்தை எடுக்க விளைவீர்கள். மனதை இறுக்கமாகக் கட்டிபோடுங்கள். அந்தப் பணம் உங்களது பணம் என்ற சிந்தனையை மறந்து விடுங்கள்.

எம்மில் பலர் சீட்டுப் பிடித்தோ சேமிப்புத் திட்டங்களில் போட்டோ பணத்தை ஒருவாறாக திறமையாகச் சேர்ப்பர். ஆனால் தொகையான செலவுகளுக்கு தேவை வருகையிலே வழித்துத்துடைத்து அதனை எடுத்துச் செலவு செய்து விடுவர். உங்கள் சேமிப்புக் கணக்கில் நீங்கள் சேர்க்கும் பணமானது கூடிக்குறையும் வகையில் பணத்தை போட்டு எடுக்கும் வழக்கிலுள்ள கணக்காக ஒருபோதும் இருக்கக் கூடாது. சேமிப்பு மட்டுமே செய்வதற்கான எதற்காகவும் “தொடக் கூடாத” கணக்காக மட்டுமே இருக்க வேண்டும்.

இது ஒரு வகைப் பயிற்சியே. முயற்சியுடன் கூடிய பயிற்சியால் கட்டுப்பாட்டோடு சேமிக்க முடியும். உங்கள் எதிர்கால இலட்சியத்தை மட்டுமே மனதில் நிறுத்த வேண்டும். இன்றைய தேவைகளுக்கும் இந்த சேமிப்புக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என எண்ண வேண்டும்.

## தொடர் - 6

அவ்வாறில்லாமல் திரும்ப செலுத்தலாம் தானே என இருப்பதும் போடுவதுமாக இருந்தால் உங்கள் இலட்சியத்தில் பின்னடைவீர்கள்.

உங்கள் வருமானத்தில் 10%இனை இச்சேமிப்புத் திட்டத்தில் சேமிக்க வேண்டும் என்பதை முன்பே கூறியிருந்தேன். இனி இச்சேமிப்புத் தொகையை எவ்வாறு நிர்வகிக்கப் போகின்றீர்கள் என்ற விடயங்களைப் பார்ப்போம்.

“வட்டிக்கு வட்டி” என கேள்விப்பட்டிருப்பீர்கள் உங்கள் சேமிப்புத் தொகை சிறியதானாலும் கூட்டுவட்டி மூலம் உங்கள் சேமிப்பு பெருகி வளரும் திட்டங்களில் முதலிட்டுச் சேமிப்பது உங்கள் சேமிப்பை துரிதப்படுத்தும். உங்கள் உழைப்பில் சேமித்த பணமானது உங்களுக்காக உழைக்கும் வகையில் முதலிட வேண்டும். இன்னமும் அது சேமிப்புக் காலத்திலேயே உள்ளதனால் பெரிய வட்டி பற்றி இப்பொழுது சிந்திக்கத் தேவையில்லை. சிறிதளவேனும் வட்டியீட்டித்தரும் சேமிப்பு முதலீட்டுத் திட்டங்களில் உங்கள் பணத்தைச் சேமியுங்கள்.

பலர் நினைப்பர் ‘பெரும் பணக்காரர் ஆவதற்கு நிறைய சேமிப்பதால்த்தான் முடியும் என்று’. உண்மையில் செல்வந்தராவதற்கு பெருமளவு பணம் தேவையில்லை. உங்கள் பொருளாதார சுதந்திரத்திற்கு வேண்டியனவாக நேரம், மாறாத முயற்சி, மற்றும் சில ‘தந்திர யுக்திகள்’ என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

பலரதும் ஆதங்கம் “போதிய பணம் கையில் ஒரு போதுமே இல்லை” என்பதாகும். ஒரு தொகை பணத்தைக் கையாளும் போது அல்லது ஒரு தொகைப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் விடயங்கள் பற்றிய தெளிவு அவசியம்.

- வட்டி பற்றிய அடிப்படை அறிவு,
- காலம்,
- மாறாத செயல்த் திட்டங்கள்.

### வட்டி:

வட்டி என்ற சொல் எமக்கு புதியதல்ல. சிறு வயதிலேயே வட்டிக்கணக்குப் பற்றி படித்திருப்பீர்கள்.

உதாரணமாக நீங்கள் 5%வட்டிக்கு ஒரு சேமிப்புத் திட்டத்தில் முதலீடுவதன் மூலம் ‘x’ என்ற தொகை வட்டியாக பெறப்படுகின்றது எனக்கொள்வோம்.

இது இருமடங்காக வேண்டுமானால் வட்டி வீதம் அல்லது முதலீடு இரு மடங்காக இருக்க வேண்டும். அதாவது, 10%ஆக



சொக்கலிங்கம் பிரபாகரன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

வட்டி, இலாபமீட்டும் முதலீடுகளில் சேமிப்பதன் மூலம் உங்களையறியாமலே உங்கள் சேமிப்பு தொகை அதிகரிக்கும். இது சேமிப்பினை விரைவுபடுத்தும் ஒரு வழிமுறையாகும். இவ்வாறான சேமிப்புகளில் ஈட்டும் இலாபம் மென்மேலும் எம்மை சேமிக்க தூண்டுகின்றது. கூட்டுவட்டி தரும் பயன்களை நிர்ணயிக்கும் காரணிகளாக நேரம் மற்றும் முதலீடு என்பனவற்றைக் குறிப்பிடலாம். உதரணமாக மாதம் $20உம் $100உம் சேமித்து வருபவரின் சேமிப்புத் தொகையின் வளர்ச்சியை தனித் தனியே பார்ப்போம். இவ்விரு சேமிப்புக்களுக்கும் கூட்டு வட்டி வீதமான 12%இனை அடிப்படையாகக் கொண்டு நீண்டகால சேமிப்பில் எவ்வாறு பலன் தருகின்றது என்பதை மேலேஉள்ள அட்டவணை மூலம் ஒப்பிட்டுப் பாருங்கள்.

**மாதம் $20 சேமிப்பவர்க்கு**

| வளர்ச்சி அதிகரிப்பு | காலம் | 10 வருடம் | 20 வருடம் | 30 வருடம் | 40 வருடம் | 50 வருடம் |
|---|---|---|---|---|---|---|
| | சேமிப்பு | $4,480.72 | $18,397.50 | $61,619.46 | $195,861.42 | $612,796.50 |

**மாதம் $100 சேமிப்பவர்க்கு**

| வளர்ச்சி அதிகரிப்பு | காலம் | 10 வருடம் | 20 வருடம் | 30 வருடம் | 40 வருடம் | 50 வருடம் |
|---|---|---|---|---|---|---|
| | சேமிப்பு | $22,403.59 | $91,985.74 | $308,097.32 | $979,307.10 | $3,063,982.80 |

வட்டி வீதம் இருக்க வேண்டும் அல்லது முதலிடும் தொகை, 2 மடங்காக்கப்பட வேண்டும்.

இந்தக் கணக்கு சரியா? தவறா? பொதுவாக உங்களில் பலர் இதனைச் சரியெனக் கூறக்கூடும். ஆனால் கூட்டு வட்டி பற்றி தெரிந்தவர்களுக்கு புரியும் இது தவறு என. இது குறித்து விளங்குவதற்கு. மேலும் சில எடுத்துக்காட்டுகள் தருகின்றேன்.

*எ.கா:* கீழே உள்ள அட்டவணையை பாருங்கள். நீங்கள் $1,000 டொலர்களை சேமித்து ஒரு தடவை மட்டும் முதலிட்டு விட்டீர்கள் எனக் கொள்வோம்.


| வட்டி வீதம் | 20 வருட | 30 வருட | 40 வருட | 50 வருட |
|---|---|---|---|---|
| 5% | $2,653 | $4,321 | $7,039 | $11,467 |
| 10% | $6,727 | $17,449 | $45,259 | $117,390 |

பார்த்தீர்களா கூட்டு வட்டியின் மகிமையை? ஒரே முதலீட்டிற்கு இரட்டித்த வட்டிவீதத்தால் ஏறத்தாள 10 மடங்கு அதிகப் பணம் சுமார் 50 வருடகாலத்தில் வருகின்றது. இதுதான் கூட்டுவட்டியின் சிறப்பு. இது போன்ற யுக்திகளை அறிந்திருப்பதன் மூலம் விரைவில் பொருளாதர வளர்ச்சியைக் காணமுடியும். மிக அடிப்படையான எளிமையான ஒரு விடயத்தை தெரிந்து கொள்வதன் மூலம் சரியான முதலீட்டை சிறிய தொகை மூலம் கூட பயன்படுத்த முடியும். இவ்வாறான கூட்டு

“The rule of 72” என ஆங்கிலத்தில் கூறுவார்கள். இது கூட்டுவட்டியின் மற்றுமொரு சிறப்பம்சம் ஆகும். அதாவது காலத்தையும் சேமிக்கும் தொகையையும் பொறுத்தே உங்கள் சேமிப்பு நிதியின் வளர்ச்சி தங்கியுள்ளது. என்பதனை குறிக்குமுகமாக ஒரு எளிய கணிப்பு ஒன்று உள்ளது. (The Rule of 72)

அதாவது உங்கள் பணம் இரட்டிக்கின்ற காலத்தை அளவிட 72இனை வட்டிவீதத்தால் பிரிப்பதன் மூலம் கணக்கிடலாம்.

உதாரணமாக பின்வரும் அட்டவணையைப் பாருங்கள். இது உங்கள் பணம் எவ்வளவு காலத்தில் இரட்டிக்கின்றது என்பதனை இந்த ‘Rule of 72’ மூலம் கணக்கிடுவதாகும்.




எனவே இந்த ‘Rule of 72’ மூலம் வட்டி வீதம் அதிகரிக்கையில் எமது சேமிப்பு தொகை இரட்டிக்கும் காலம் பன்மடங்காகக் குறைவதைக் காணலாம்.

(தொடரும்..)

prabaharan.s@thaiveedu.com

■ ■ ■




Cousin Dinnerக்கு வரச்சொன்னவ... நான் fork and spoonஆல தான் சாப்பிடுவன் எண்டு சொல்லிப்போட்டன். அவ இடியப்பமும், முருங்கைக்காய் கறியும் தான் சாப்பாடாம். இந்த இடியப்பம் ஓ.கே. முருங்கைக்காய் தான் கொஞ்சம் time எடுக்குது....

இணையத்தளத்திலும்
‘தாய்வீடு’
www.thaiveedu.com


TREVISO
CONDOMINIUMS
ALWAYS
FIRST CHOICE,
FIRST OPPORTUNITY
AND NO LINE-UPS
PRICE starting from$179,900
FREE PARKING
FREE ASSIGNMENT
FREE upgrade certificates value of $4000
LOCKER price reduced to $2500 from $5000
Additional 1% DISCOUNT from the purchase price
REGISTER NOW to get 2% OFF
SUJAN SHAN
Real Estate Broker
Dir: 416 402 1040
Bus: 416 321 2228
E mail: sujan.shan@gmail.com
RE/MAX
Vision Realty Inc.
2210 Markham Road, Unit 1
Toronto, Ontario M1B 5V6
www.NewReleaseCondo.com

# இயற்கை மூலிகையின் ஆரோக்கியமான தெரிவுகள்!!




நீரிழிவு நோயை
கட்டுப்படுத்துவதற்கு




ஊழைச் சதையை
நீக்குவதற்கு




ஊழைச் சதையை நீக்கி
புதுத்தென்பைப் பெற




சரும ஆரோக்கியத்திற்கு
உடற் சவற்காரம்




நீடிப்பான பாயனையைத் தரும்
முடிக்கான சாயங்கள்




முடியுதிர்வை கட்டுப்படுத்தவும்
மீளவும் முடி வளரவும்...

Amazon
Health Care
www.amazonhealthcare.com

SABONA & Gift

Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

# BUYING or SELLING A PROPERTY...

### Gore Road/Castlemore - Brampton




3378 Sq. feet Greenpark Built Home, 4 bedrooms, Master bedroom with four pc ensuite with two sinks, Second bedroom with three pc ensuite, Third and Fourth with shared three pc ensuite with two sinks, 12' height ceiling family room, Very large Living Room Combined with Dining Room, Library, Oak Staircase, Dinette, Three car garage with Tandem garage and Main floor Laundry, Main floor high quality laminate and tiles through out

### Gore Road/Castlemore - Brampton




Built by Well known Home Builder Green Park, Large 45' X 90' lot, Two storey Detached, Four large bedrooms, Family roomwith fire place, Upgraded Kitchen with breakfast area, High quality laminate and tiles on main floor, Two car garage, Living room, Laundry room, Oak Staircases, Upgraded grainite counter top 2.5 washroom, Apromex 2400 square feet

### Gore Road/Castlemore - Brampton




Built by Well known Home Builder Green Park, Large 45' X 90' lot, Two storey Detached, Four large bedrooms, Family roomwith fire place, Upgraded Kitchen with breakfast area, High quality laminate and tiles on main floor, Two car garage, Living room, Laundry room, Oak Staircases, Upgraded grainite counter top 2.5 washroom, Apromex 2400 square feet

### Finch / Driftwood




Condo Apt, 1 bedroom, 1 Washroom, Recently Renovated Kitchen, New Appliances, Absolute Move In Condition. Steps To Ttc, Schools, Schopping Malls, Hospital, Daycare Center And Parks. Easy Access To Highway 400 And 401. Close To York University. Convenient Location!

### Keel / Finch




Condo Townhouse 3-Storey, 4 bedrooms, 2 Washrooms, Spacious Town House With Great Layout, Walking Distance To York University, New Subway Extension Comming Soon, Close To Ttc, Schools, Park, Library, Recreation Centre, Shopping Malls And Hwy 400 And 401.

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: **416-298-3200**, Fax: 416-298-3440,
**www.kunahomes.ca**
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.

HOMELIFE HIGHER STANDARDS

**Kunasegar Nagalingam**
Sales Representative
**Sujatha Kunasegar**
Sales Representative

Cell: **416-402-4545**
Cell: **647-401-9644**





# சுவை–தரம்–புத்துணர்வு




# Hattan Tips Tea

**416-548-8020**

*Quality & taste....*

**அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்**

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI

## CREDIT SOLUTION CENTRE


Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# சிறைத்தண்டனை வரை இழுத்து செல்லும் வாகனமோட்டும் தவறுகள்!



சிவ பஞ்சலிங்கம்

- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

கடந்த செப்ரெம்பர் 14, 2010

வாகனமோட்டும் தவறில் கனடாவில் பெண் ஒருவருக்கு சிறைதண்டனை வழங்கப்பட்ட செய்தி கனடிய ஊடகங்களில் பிரபல்யமாகியிருந்தது.

செல்வி. றீபீக்கா றோவர் (Miss. Rebecca Drover) என்னும் 20 வயது இளம் பெண், தனது இரு சினேகிதிகளுடன் நியூபவுண்லாந்து மாகாண கிழக்கு பகுதியில் உள்ள அதிவேக நெடுஞ்சாலையில் 80 k.m/h வேகத்தில் செல்ல வேண்டிய இடத்தில் 140 k.m/h வேகத்தில் வாகனமோட்டிச் சென்ற போது, எதிரே வந்த ரக் ஒன்றுடன் மோதியதில் சேர்ந்து போன ஒரு சினேகிதி பலி! மற்றவர் படு காயம். எதிரே வந்த வாகன சாரதிக்கும் மோசமான உடல்க்காயம்.

2008 டிசம்பர் மாதத்தில் நடந்த இவ்விபத்தில் 'ஆபத்தான வாகனமோட்டத்தில் உடல் பலி' (Dangerous Driving Causing Death) 'ஆபத்தான வாகனமோட்டத்தில் உடல் காயம்' (Dangerous Driving Causing bodily harm) ஆகிய இரு குற்றசாட்டுகளின் தீர்ப்புகள் கடந்த செப்டெம்பர் 14, 2010இல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது. அந்த தீர்ப்பு கனடாவில் வாகனமோட்டுவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

- இருபத்தியிரண்டு மாத சிறை தண்டனை.
- சிறை வாழ்வின் பின்பு இரு வருடங்கள் நன்னடத்தைப் பிணை.
- சிறை வாழ்வின் பின்பு ஐந்து வருடங்கள் சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல்.

என ஒரு பாரிய தண்டனை வழங்கப்பட்டது.

அந்த இளம் பெண் நீதிமன்ற தீர்ப்பின் பின்பு கைவிலங்குடன் கண்ணீர்மல்க சிறைச்சாலை பொலிசாரால் வெளியே அழைத்து வந்த காட்சியினை தொலைகாட்சியில் பார்த்த நேயர்களுக்கு மனதை உருகவைத்தது.

ஏனெனில் ஒரு தமாஷ் விளையாட்டுக்கேனும் வீதியில் வேகமாக வாகனத்தில் ஓட்டம் காட்டிய நம் இளைஞர்கள் கனடாவில் எத்தனை பேர்? இந்த இளம் பெண்ணும் சினேகிதிகளுடன் ஒரு தமாஷாகவே வாகனம் ஓட்டியிருந்தார் முடிவு இருபத்தியிரண்டு மாத சிறை! இப்படி வாகனமோட்டும் தவறுகளினால் சிறைத்தண்டனை எதிர்கொண்டவர்களின் கதைகள் என ஏராளம் சொல்லிக்கொண்டே போகலாம்.

சரி! இங்கு விடயத்திற்கு வருவோம்!

சிறைதண்டனை வரை இழுத்து செல்லும் கனடாவின் வாகனமோட்டும் தவறுகள் எவை? (Jail Sentences for Driving offences in Canada) அதுவே இங்கு அறிந்து கொள்ள வேண்டிய விடயங்களில் ஒன்றாகும்.

வாகனமோட்டும் தவறுகளில் வீதிகளில் பொலிசார் கையில் பிடிபட்டு சட்டத்தின் பிடியில் சிக்கும் போது பொதுவாக வீதி ஒழுங்கு சட்டத்தின் பிரகாரம் தண்டனை என்பது.

**தகவல் தொடர் - 46**

- பண தண்டனை (Fine),
- புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் (Demerit Points),
- லைசென்ஸ் பறிமுதல், சில சந்தர்ப்பங்களில் வாகனங்களும் பறிமுதல் (Immediate License Suspension & Vehicle Seizure),
- தொடர்ந்து வாகனம் செலுத்தும் போது காப்புறுதி கட்டணத்தின் அதிகரிப்பு! (Increase Auto Insurance Price).

இப்படியான பிரச்சினைகளை மட்டுமே பொதுவாக இக்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் சகலரும் எதிர்கொள்வது வழமையாகும். இதனை கனடாவில் வாகனம் செலுத்தும் பலகால வாழ்வில் பலரும் நிட்சயம் எதிர்கொண்டிருப்பார்கள். இது மட்டுமல்ல இத்தகைய தண்டனைகளுக்கு மேலால் வாகனமோட்டும் தவறுகள், அதனை தொடர்ந்து எதிர்கொள்ளும் குற்றச்சாட்டுகள் குற்றவியல் சட்டப்பிரிவின் கீழ் (கிரிமினல் குற்றம்) பதியப்பட்டால் தண்டனை என்பது எப்படி இருக்கும்?

வாகனமோட்டுவதின் தவறு என்பது கிரிமினல் குற்றசாட்டின் கீழ் பதியப்பட்டு அது நிரூபிக்கப்பட்டு குற்றவாளி என முடிவு செய்யப்பட்டால்… அந்த குற்றம் என்பது 'சிறை தண்டனை' வரை இழுத்து செல்லும் என்பது மட்டுமல்ல அந்த கிரிமினல் குற்றம் என்பது ஒரு மனிதனின் வாழ்வில் பதிவில் வரும்போது அந்த நிலைமை என்பது கனடா வாழ்வில் ஒரு மனிதனை ஒவ்வொரு வளர்ச்சியிலும் நின்று நின்று அறுக்கும்! முன்னேற்றத்தினை அமுக்கி தடை பண்ணும்.

சரி! இத்தகைய கிரிமினல் குற்றத்துக்குள்ளாக்கப்படும் வாகனமோட்டும் தவறுகள் யாவை?

குறிப்பாக மூன்று வகையான வாகனமோட்டும் குற்றசாட்டுகளை இங்கு குறிப்பிடலாம்.

### கவனமில்லாத வாகனமோட்டம் (Careless Driving)

'கவனமில்லாத வாகனமோட்டம்' (Careless Driving) என்பது வீதி ஒழுங்கு சட்டப்பிரிவு (130)வின் படி வரையறை செய்யப்படுகின்றது. 'Careless Driving' as driving on highway without due care & attention or without reasonable Consideration for other persons using the high way' ( இங்கு 'Highway' எனப்படுவது பிரதான வீதிகள் யாவற்றினையும் குறிப்பிடுகின்றது) அதாவது எதுவித அக்கறையோ, கவனமோ இல்லாது அல்லது வீதியில் வாகனமோட்டும் ஏனையோருக்கு தம்மால் ஏற்படப்போகும் எதுவித ஆபத்துகள் பற்றி அக்கறை இல்லாது வாகனம் செலுத்துதல்' என தமிழில் மொழிபெயர்க்கலாம். இத்தகைய குற்றசாட்டு நிருபிக்கப்படும் போது தண்டனை என்பது...

- பண தண்டனை $400 - $2000 வரை தீர்க்கப்படும்.
- அத்துடன் சேர்ந்து இருவருடங்கள் வரை லைசென்ஸ் பறிமுதல் ஆகலாம்.



- மேலதிகமாக ஆறு புள்ளி மதிப்பிட்டு இழப்புகளை எதிர்கொள்வதுடன், இதன் காரணமாக தொடர்ந்து இவை பதிவில் இருக்கும் போது வாகன காப்புறுதியின் விலை என்பதும் ஏறிகொண்டிருக்கும்.
- இத்துடன் ஆகக்கூடுதலாக ஆறு மாதம் வரை சிறைத் தண்டனையும் தீர்ப்பாக வழங்கலாம் என்பது சட்டபிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது குற்றவியல் பதிவில் சேரும். அது ஒரு மனிதனின் வாழ்வினை நின்று நின்று அறுக்கும், தப்பித்துக் கொள்ளமுடியாது.

'கவனமில்லாத வாகனமோட்டம்' (Careless Driving Charges) என்ற தவறில் இரு வகையில் குற்றம் சாட்டப்படலாம்.

### கவனமில்லாத வாகனமோட்டத்தில் பொலிசார் அந்த இடத்தில் வழங்கும் பண தண்டனை (Careless Driving with a Fine):

உடனடியாகவே வீதியில் வைத்து பொலிசார் பணத்தண்டனை என ஒரு தொகையினை குறிப்பிட்டு வழங்குவார்கள். அதனை ஏற்றுக் கொண்டு தண்டனைப் பணத்தினை செலுத்தினால், குற்றம் பதிவில் போகும் போது புள்ளி மதிப்பிட்டு இழப்புகள், வாகனகாப்புறுதி விலை உயர்வு என மட்டும் எதிர்கொள்ள வேண்டிவரும். இதனை தாங்கஎளாகவே நீதிமன்றத்தின் விசாரணைக்கு எடுத்து செல்லும் போது பணத்தண்டனையினை குறைத்து கொள்ளவோ (Reduce the Fine) அல்லது சில நேரங்களில் தப்பவோ சந்தர்ப்பம் உருவாகலாம்.

### கவனமில்லாத வாகனமோட்ட குற்றசாட்டில் நீதிமன்ற வழக்கு அழைப்பு ஆணை (Careless Driving without fine attached – Court Summons)

பணத்தண்டனை என எதுவும் உடனடியாக பொலிசார் வழங்காது நீதிமன்றத்திற்கு குறிப்பிட்ட ஒரு திகதிக்கு விசாரணைக்கு வாருங்கள் என்ற அழைப்பு ஆணை இது ஆகும் அதாவது இங்கு குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்கு வாகனமோட்டும் தவறில் தொடரப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு அவர் குற்றவாளியாக நிருபிக்கப்படும் போது மேலே குறிப்பிடப்பட்ட பணதண்டனை மற்றும் புள்ளி மதிப்பீட்டு இழப்பு ஆகியவற்றுடன் சிறைத் தண்டனை, லைசென்ஸ் பறிமுதல் என்ற தீர்ப்புகளையும் எதிர்கொள்ள வேண்டிவரும்.

### அதிவேகமான திறில் வாகன மோட்டம் (Stunt Driving & Street Racing):

வாகனமோட்டும் போது அதிவேகமான திறில் ஓட்டங்கள் ஓட்டுபவர்களுக்கு கிரிமினல் குற்றசாட்டுக்கு உள்ளாவது மட்டுமல்லாது, கடந்த அக்டோபர் 1, 2007யிலிருந்து இந்த குற்றசாட்டுக் குரிய தண்டனை என்பது மேலும் இறுக்கமாக கொண்டுவரப்பட்டுள்ளது.

இங்கு வீதியில் வைத்து இந்த மாதிரியான குற்றசெயல்களை செய்பவர்களை பிடிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக பயன்படுத்துவதற்கெனச் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

- வாகனம், அந்த இடத்தில் வைத்து பறிமுதல் செய்தல். மீண்டும் ஏழு நாட்களிற் குப்பின் வாகனத்தினை திரும்ப பெறும் போது அதற்குரிய செலவுகளை வழங்கியே பெற்றுகொள்ளுதல் வேண்டும்.
- உடனடியாக ஏழு நாட்களுக்கு சாரதி அனுமிதிப்பத்திரத்தைச் செயலிழக்கச் செய்தல். ஏழு நாட்களுக்கு பின்பு திரும்ப பெற ஒரு பணசெலவு ஏற்படும் (License Re-Statement Fees).

தொடர்ந்து நீதிமன்ற விசாரணைகளுக்கு சென்று அங்கும் குற்றசாட்டு நிருபிக்கப்படும் போது.

- பணத்தண்டனை $2000 முதல் $10,000 டொலர் வரை ஏற்படலாம்.
- மேலதிகமாக ஆறு புள்ளி மதிப்பிட்டு இழப்புகளை எதிர்கொள்ளவேண்டி வரலாம்.
- அத்துடன் சேர்ந்து இரு வருடங்கள் லைசென்ஸ் பறிமுதல் ஆகும் மீண்டும் இரண்டாம் முறையும் இதே குற்றசாட்டில் அகப்பட்டால் பத்து வருடங்களுக்கு லைசென்ஸ் பறிமுதல் ஆகும்.
- ஆறுமாதம் வரை சிறை தண்டனையும் வழங்கலாம். (இதனையே கடந்த செப்ரெம்பர் 14/ 2010இல் அந்தப் பெண்ணும் எதிர்கொண்டுள்ளார்)

இந்த குற்றசாட்டுகள் என்பது தொடர்ந்து வாகனம் செலுத்தும் காப்புறுதி கட்டணத்தினை உச்ச விலைக்கு இழுத்து செல்லும்.

இது கிரிமினல் குற்றமாக பதியப்படுவதால் கனடாவில் முன்னேற வேண்டும் என நினைப்பவர்கள் வாழ்வினை நின்று நின்று அறுக்கும்.

'அதிவேகமான திறில் வாகனமோட்டம்' (Stunt Driving & Street Racing) என்பது எப்படியான வாகன ஓட்டங்களை குறிப்பிடுகின்றது என்பதனை வீதி ஒழுங்கு சட்டப்பிரிவின் 172ம் பிரிவு பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது. அதாவது இந்த குற்றசாட்டுக்குள் அகப்படுபவர்கள் யார்?

வீதியில் ஆக கூடுதலாக வரையறுக்கப்பட்ட வேகம் (Maximum Speed Limit) என ஒரு குறிப்பிட்ட வேகம் வரை செலுத்தலாம் என்று இருக்கும் போது, அங்கு அதனை விட 50 k/h வேகம் அதிகமாக செலுத்தினால் உதாரணமாக ஸ்காபரோவில் கென்னடி வீதியில் ஆக கூடுதலான வேகம் 60 k.m/h. இங்கு 111 k.m/hஇல் அல்லது அதற்கு மேலே வாக-

47ம் பக்கம் பார்க்க...

உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும் விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)
Office: 1 888 651 1955
Home: 416-321-0999, Cell: 416-990-4908
400, Bradwick Drive., Suite 102, Concord, ON



# காப்புறுதியில் ஏற்படும் குழப்பங்கள்

## கேள்வி - பதில்



**சக்திவேல்**

- ஆயுட் காப்புறுதி முகவர் -

**எனது மகனுக்கு வயது 38. இவருக்கு 8 வயதிலிருந்து சலரோகத்தால் பாதிக்கப்பட்டு தற்சமயம் அதற்காக ஊசியும் போடுகிறார். அத்துடன் மன விரக்தியும் (Depression) இருக்கிறது. இடைக்கிடை புகைத்தலும் செய்கிறார். இவருக்கு ஏதாவது காப்புறுதி திட்டம் கொடுக்கலாமா?**

உண்டு. இவருக்கு ஒருவகை திட்டம் நிறுவனம் A மூலம் இரண்டு வருட முடிவில் அமுலுக்கு வரும் படியாக கொடுக்கலாம். இதன்படி முதல் இரண்டு வருடத்திற்குள் மரணம் ஏற்படின் கட்டிய பணத்தை மட்டும் 3 வீத வட்டியுடன் மீளப்பெறலாம். 2 வருடம் முடிந்த பின் இவரது காப்புறுதி இழப்பீட்டு தொகை $50,000 ஆகும். இதன்படி சாதாரண மரணமாயின் $50,000 ஆகவும், அகால மரணமாயின் $100,000 ஆகவும் அந்த அகால மரணம் பொதுமக்கள் உபயோகப்படுத்தும் வாகனம், புகையிரதம், விமானம், பேருந்து ஆகியவற்றில் பயணம் செய்யும் போது ஏற்படின் $150,000ஆகவும் இருக்கும். வயது 40 தாண்டியதும் இதே நிறுவனத்தில் உடனடியாக அமுலுக்கு கொண்டு வரும் ஒப்பந்தத்திற்கு மனுச்செய்து ஏற்கெனவே எடுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்யலாம். ஏனெனில் இந்த நிறுவனத்தை பொறுத்தவரை மொத்தமாக மனுச் செய்யும் தொகை $50,000இற்கு மேற்படக் கூடாது. அத்துடன் இந்த இரண்டாவது வகை திட்டத்தின் மாதாந்த அல்லது வருடக்கட்டுப்பணம் முதலாவது வகையைவிட குறைவாகவிருக்கும்.

இவரது வயது குறைவானபடியால் இந்த இரண்டாவது வகை திட்டத்தில் $30,000 வரை வருடாவருடம் 3 வீதத்தினால் அதிகரிக்கும் திட்டமாக, மாதக்கட்டணம் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை மாறாத திட்டமாகவும் மீதி $20,000இனை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை காப்புறுதி தொகையும், மாதாந்த கட்டுப்பணமும் மாறாத திட்டமாகவும் மனுச்செய்வது சாலவும் சிறந்தது. இதைவிட மேலதிகமாக காப்புறுதி தேவைப்படின் நிறுவனம் B மூலம் $50,000 வரை வருடாவருடம் 3%இனால் அதிகரிக்கும் காப்புறுதிட்டம் மாதாந்த கட்டணம் ஒருபோதும் மாறாத திட்டமாக மனுச் செய்வதனால் இரண்டு திட்டங்களும் வருடாவருடம் 3 வீதத்தினால் அதிகரிக்கும்படியாக வழிவகுக்கலாம். ஒருவகையில் இந்த மாதிரியான திட்டங்கள் சாதாரண மருத்துவரீதியின்றி கொடுக்கப்படும் திட்டங்களிலும் பார்க்க மலிவானதாகவும் நாள் போக்கில் இலாபகரமானதாகவும் இருக்கும் என்றால் மிகையாகாது. உதாரணமாக நிறுவனம் A, B, இனை பொறுத்தவரை காப்புறுதிதொகை முறையே $900, $1500இனால் அதிகரிப்பதனால் காப்புறுதிக்கான மொத்த செலவு குறைவாக இருக்கும். ஏனெனில் கட்டும் வருடாந்த தொகை முறையே $1200, 1800ஆக இருப்பின் மொத்த காப்புறுதிக்கான செலவு முறையே $300, $300, ஆகும். அதாவது ($1200 - $900 = $300, $1800 - $1500 = $300) இப்படியே வேறு நிறுவனங்களிலும் மனுச் செய்யலாம். காரணம், இந்த மாதிரியான நிறுவனங்களின் விண்ணப்பதாளில் கேட்கும் கேள்விகளுக்கு 'ஆம்/இல்லை' என்ற பதில் மட்டுமே கொடுக்க வேண்டியதேயொழிய வேறு விவரம் கேட்கமாட்டார்கள். ஆனால் மருத்துவரீதியாக கொடுக்கப்படும் காப்புறுதி ஒப்பந்தங்களில் முழு விவரமும் கொடுக்கப்பட வேண்டும். இதன் காரணமாக மனுச் செய்த காப்புறுதி நிராகரிக்கப்பட்டபின்னர் மருத்துவ ரீதியின்றி கொடுக்கப்படும் காப்புறுதிக்கு மனுச்செய்ய முடியாது. இன்னுமோர் நிறுவனம் இருக்கின்றது. இவர்களது மாதாந்த கட்டுப் பணம் குறைவாக இருந்தாலும் காப்புறுதி இழப்பீட்டின் போது பொறுமையை சோதிக்கும் அளவு கேள்விகளும், தாமதங்களும் சில சமயம் நிராகரிப்பும் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு இருப்பதனால் இந்த நிறுவனத்தை என்னைப் பொறுத்தவரை தவிர்க்க விரும்புகிறேன். ஏனெனில், காப்புறுதி ஒப்பந்தம் விற்பனை செய்வது இலகு. ஆனால் காப்புறுதி இழப்பீட்டு தொகையை மீளப்பெறுவதற்கு சிரமம் ஏற்படும் போது அது காப்புறுதி விற்பனைப் பிரதிநிதிக்கும், வாரிசுதாரருக்கும் பலத்த சோதனைகளை ஏற்படுத்தும். அத்துடன், களங்கத்தையும் ஏற்படுத்தும்.

**எனது கணவர் வயது 50 அடிக்கடி வெளிநாட்டிற்கு வியாபார ரீதியாக பயணம் செய்பவர். இவருக்கு ஆயுள் காப்புறுதிக்கு மனுச்செய்த போது ஒரு நிறுவனம் ஏகப்பட்ட மேலதிக அறவீட்டு கட்டணத்தையும் மற்றய 3 நிறுவனங்கள் நிராகரித்தும் விட்டன. இதற்கான காரணம் என்ன? ஏதாவது நிவாரணம் உண்டா?**

இவருக்கு இந்த பதில் 2 வருடங்களிற்கு மேல் ஏற்பட்டிருந்தால் மருத்துவரீதியின்றி காப்புறுதி அளிக்கலாம். ஏறத்தாழ $375,000 வரை மனுச்செய்யலாம். காரணம், இந்த விண்ணப்ப பத்திரங்களில் வெளி நாட்டுப் பயணம் பற்றிய கேள்விகள் கேட்கப்படுவதில்லை. மருத்துவரீதியாக கொடுப்பதாயின் ஒரேயொரு நிறுவனம் மட்டுமே ஒருவித மேலதிக சலுகையில்லாமல் காப்புறுதி ஒப்பந்தம் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மட்டும் மனுச்செய்ய அனுமதிக்கின்றது. அதுவும் குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைய கொடுக்க முன்வருகின்றது. ஒரு சில நிறுவனங்கள் ஒரு கனேடிய பிரஜையாக இருந்து, கனடாவில் தனது வருமான வரியை கட்டுபவராக, குறைந்த பட்சம் ஒவ்வொரு வருடமும் 6 மாதத்திற்கு மேற்பட்டகாலமாக கனடாவில் வசிப்பவராக இருந்தால் மட்டும் தான் சாதாரண கட்டுப்பணத்திலும் பார்க்க சற்று கூடிய அறவீட்டுப் பணத்தில் காப்புறுதியை கொடுக்க முன்வருகின்றன. இதற்கான முக்கிய காரணங்கள் குறிப்பாக போகும் நாடுகளின் விவரம். அங்கு தங்கியிருக்கும் நாட்களின் விவரம், செய்யும் தொழிலின் விவரமாகும். உதாரணமாக மத்திய கிழக்கு நாடுகள், இலங்கை, இந்தியா பாக்கிஸ்தான், சீனா ஆகிய நாடுகளில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்படுவதனால் காப்புறுதி அளிப்பதற்கு தயங்குகின்றன. சில சமயம் நிராகரிக்கின்றன. ஏனெனில், இந்த நாடுகளில் எந்த சமயத்திலும் எதிர்பாராத விதமாக எதுவும் ஏற்படலாம். ஆனால் காப்புறுதிக்கு மனுச்செய்யும் போது இந்த ஊரிலேயே தொழில் புரிபவராக இருந்து எதிர்காலத்தில் இந்த மாதிரியான நாடுகளிற்கு போவதனால் ஒரு பாதிப்பும் ஏற்படாது.

**எனது தயார் 8 மாதத்திற்கு முன்னர் இலங்கையில் இருந்து கனடாவிற்கு வந்தார். இந்த ஊர் பிடிக்கவில்லை என்ற காரணத்தால் திரும்பவும் ஊருக்கு போய் நிரந்தரமாக வசிக்க விரும்புகிறார். இந்த நிலையில் இவருக்கு காப்புறுதிக்கு மனுச் செய்யலாமா? இதனால் ஏதும் பாதிப்பு ஏற்படுமா?**

47ம் பக்கம் பார்க்க...


# சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 169 துரித காப்புறுதி இழப்பீடுகள். 39 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors).
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**

வாகனக் காப்புறுதி (Car Insurance). தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



## மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$375,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.

**சக்திவேல்**

**416 706 3530**



**Shan Thayaparan**
*Sales Representative*

**Dir: 416.567.7675**
**Bus: 416.321.2228**

www.shan123.com
E mail: Shan123@rogers.com

RE/MAX
Above the Crowd!
Vision Realty Inc.
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6

# Scarborough




4 Bedrooms, Huge Backyard
Hardwood main floor. Finished
basement with separat entrance
Close to Schools, Shopping
401, TTC and more!!!

# Markham




Updated Home!!!
Hardwood throughout. Finished
New Kitchen, New Hardwood
Staircase. Finished basement
Close to Schools, 407 & More

# Stouffville





2600 Sqf4 Bedrooms, 3 Full
Washrooms, Hardwood Floors
throughout, Walkout basement,
Upgraded kitchen, Granite
counter top and many mored!!!

# Brampton




4 Bedroom Semi Home!!!
Closing on 2011.
Builder selling for more than
$410,000.


REALTY EXECUTIVES
REALTY EXECUTIVES GTA LTD.
Brokerage.
9889 Markham Rd. (Hwy 48),Suite 209
Markham ON L6E 0B7
Office: 905-209-7500
Fax: 905-209-7501
FREE RECORDED INFORMATION - 24 HOURS A DAY!
CALL 905-209-7686 Ext XXXX
Jane/Trethewey
Business for Sale!
Recorded Info - 24 hours
905-209-7686 X 2202
Islington/Hwy 401
3 Bedroom Home.
Recorded Info - 24 hours
905-209-7686 X 2302
Highway 7/Bullock Dr.
2 Bedroom Bungalow.
Recorded Info - 24 hours
905-209-7686 X 2402
Winston Churchill/Britannia
4 Bedroom Home.
Recorded Info - 24 hours
905-209-7686 X 2502
Hwy 27/Humber College
5 Bedroom Home.
Recorded Info - 24 hours
905-209-7686 X 2602
Markham/Lawrence
Open House
Oct 30th and 31st
2pm - 5pm
For more information about this property "Scan Here"
Get the free mobile app at
http://gettag.mobi
Nawaid Qamar*
Nisha Sidhu*
Agnelo Almeida*
Vignes Sinnadurai*
Pravisha Nagaretnam*
Kumaran Pathmanathan*
Kay Visvanathan*
Priya Jayasiri **
Rafiq Charaniya*
Tyrone Caldera*
Babu Selvarajah*
Yoga Sivagnanasundaram*
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Each Office is Independantly Owned and Operated. Not intended to solicit
buyers and sellers already under contract. *Sales Representative **Broker

# எந்திரன் - ஒரு கண்ணோட்டம்




ஜிப்ரி
உதுமாலெப்பை
- கணினி வல்லுனர் -

ஆண்டவன் மனிதன் என்ற உயிரினத்தைப் படைக்க நினைத்து உருவாக்கிய ஆதாம் தனக்கு ஒரு உதவி தேவை என்று கேட்டதனால் ஏவாள் உருவாக்கப்பட்ட காலம் தொடங்கி, பின்னர் அவர்களின் சந்ததிகளின் வளர்ச்சி மூலமாக குடும்பம் உருவாகி, அதுவே கிராமமாகி, அதுவே பின் நகரமாகி மனித சமுதாயம் பரந்து விரிந்து தமது தேவைக்கும் வாழும் சூழலுக்கும் ஏற்ப தனது பரிணாம வளர்ச்சியை முன்னெடுத்துக்கொண்டே செல்கின்றது நம் மனித சமுதாயம்.


ஆரம்பத்தில் முதல் மனிதன் ஆதாம் ஆண்டவனிடம் கேட்ட முதல் உதவி இன்னும் ஒரு மனித இனத்தின் முக்கியமான உயிரினம் உருவாகக் காரணமாக இருந்தது. அதன் தொடர்ச்சியாக மனிதன் தன் வாழ்க்கையை எளிதாகவும் இனிமையானதாகவும் மாற்றிக் கொள்ள தானாகவே பல உபகரணங்களைக் கண்டுபிடித்தது மட்டுமல்லாமல் தான் வாழும் உலகில் இருக்கும் விலங்கினம், பறவைகளுடன் சேர்த்து இயற்கையையும் தனக்கு ஒரு உதவியாக இருக்கக்கூடியதாக மாற்றி அமைத்துக்கொள்ளப் பழகிக்கொண்டான்.

மனிதன் பொறியியல் கண்டுபிடிப்புகள் மூலமாக தாம் செய்யும் ஒரு வேலையை மீண்டும் மீண்டும் செய்யக்கூடிய இயந்திரங்களைக் கண்டுபிடித்தான். உதாரணமாக நம் முன்னோர் வாழ்க்கையை எளிதாக்கிய நீர் இறைக்கும் இயந்திரம், அச்சடிக்கும் இயந்திரம் என்று சிலவற்றைக் கூறலாம்.











உயிரினம் இல்லாத சக்கரம் என்ற உபகரணத்தைக் கண்டுபிடித்து எளிதாக பொருட்களைத் தூர இடத்துக்குக் கொண்டுசெல்லவும், நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்து உயிரினத்தின் வலு இல்லாமல் சக்கரத்தைப் பாவித்து வேகமாக இயந்திரத்தின் உதவியைக்கொண்டு வேலை வாங்கும் கலையைக் கற்றுக்கொண்டான். மின்சாரம் என்ற சக்தி வடிவம் கண்டுபிடிக்கப்பட்டபோது இலத்திரனியலின் சக்தியை மனிதன் கண்டு கொண்டான். மின்சார சக்தியை மின்கலங்களில் சேமிக்கவும் தேவையான நேரத்தில் பயன்படுத்தவும் மனிதன் பழகிக்கொண்டான். மின்கலங்கள் 1779ஆம் ஆண்டில் Alessandro Volta என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்டது.

Vacum Tube என்ற அமைப்புக்குள் மனிதனின் சாதாரண தகவல்களை சேமிக்கவும், சிலிக்கன் என்ற தாதுப்பொருளைக் கொண்டு பல ஆயிரம் Vacum Tubeகளை Transistorகளுக்குள் அடக்கவும், பலகோடி Tranகளை ஒரு மிகச் சிறிய chipsஇற்குள் அடக்க மனிதன் பழகினான். தனக்குத் தேவையான அவசியப்பட்ட தகவல்களைச் சேமித்துவைத்து தான் நினைத்ததை நினைத்த நேரத்தில் கேட்டால் திரும்ப எடுத்துவரக் கூடிய ஞாபகசக்தியும் வேகமும் விவேகமும் உள்ள ‘கணினி’ என்ற உதவியாளனை மனிதன் படைத்துக்கொண்டான். இன்றைய உலகில் மனிதனுக்கு ஞாபக சக்தியே தேவையில்லை என்று சொல்லுமளவுக்கு வாழ்வின் வழித்துணையாக கணினி மாறிவிட்டது. கேட்ட தகவல்களை வினாடிக்குள் எடுத்துவரும் இணைய அமைப்பு, தொலை தூரங்களையே பக்கத்தில் கொண்டு வந்த ஒலி, ஒளி தொடர்புகள் தரும் செய்மதிகள், செல்லும் வழிதனைச் சட்டெனக் கூறும் GPS, மகப்பேறு முதல் வயதானவர்களின் கடைசி மூச்சைக் கூறும் கருவிகளாகவும் மனிதனின் உற்ற தோழனாக இருக்கிறது.

மனித உடலின் பாகங்களுக்குப் பதிலாக கணினிகள் மனித உடம்புக்குள் புகுந்து மனிதனுக்கே வாழ்வளிக்கத் தொடங்கியுள்ளது. மனித உடல் பாகங்களில் 23 பாகங்கள் இப்படி கணினிமயப்படுத்தப்பட்டு மனித நரம்பு, தசை, இரத்தத்துடன் இயங்கக்கூடியதாக இருப்பதாகக் கூறப்படுகிறது. Robotic arm, Robotic leg, Pacemaker என்பவற்றை உதாரணமாகக் கூறலாம்.

Deep Blue என்ற IBM நிறுவனம் தயாரித்த கணினி, உலகின் மிகப்பெரிய சதுரங்க வீரருடன் விளையாடி அவரை ஜெயித்து தனது சிந்தனைத் திறனை மனிதனுக்கு ஈடானதாக்க முடியும் என்று நிரூபித்தது.

எந்திரன் என்ற சொல்லுக்கு மின்னணுக்களால் சக்தியுடன் சிந்தனை செய்யக்கூடிய பொறி முறையால் இயங்கும் இயந்திரம் என்று அர்த்தம் கூறலாம். இவை கணினி மூலமாக அல்லது இலத்திரனியல் கட்டளை கோப்புகள் மூலமாக வழிநடத்தப்படலாம். Robot என்ற சொற்பதம் Czech மொழி சொல்லான robota என்ற சொல்லில் இருந்து வந்தது. Robota என்ற சொல்லுக்கு ‘கட்டாயப்படுத்தப்பட்ட தொழிலாளிகள்’ என்பதே அர்த்தம். 1920ஆம் ஆண்டில் செக்கோச்லவாகியா நாட்டவரான Karel Capek என்பவர் எழுதிய R.U.R. Rossum’s Universal Robots நாடகத்தில் எந்திரங்கள் தன்னை உருவாக்கிய ஆசானின் கட்டளைகளை மீறி உலகை ஆளநினைப்பதாக கதை (எங்கேயோ கேட்ட மாதிரி இல்லை?).

எந்திரங்கள் பொதுவாக இரண்டு வகைப்படும். ஒன்று Autonomous Robots. இவை ஒரு கணினியைத் தன்னகத்தேகொண்ட தனியான எந்திரங்கள். இரண்டாவது வகை insect robots. இவை ஒரு கணணியின் controller என்று அழைக்கப்படும் மேற்பார்வையின் கீழ் இயங்கும் எந்திரங்கள்.

1495ஆம் ஆண்டுகளில் Leonardo Davinci மனிதன்போல் செயல்படக்கூடிய எந்திரங்களின் படங்களை வரைந்தார். 1898ஆம் வருடங்களில் ஐப்பானைச் சேர்ந்த Nikola Tesla ஒலி அலைகளால் கட்டுப்படுத்தக்கூடிய Torpedo களை வடிவமைத்தார். இந்த முறையை அமெரிக்கக் கடற்படை தமது ஆயுத வடிவமைப்புடன் சேர்த்துக் கொண்டார்கள். 1929ஆம் ஆண்டு Makoto Nishimura என்ற வேதியியல் நிபுணர் மனிதனைப் பிரதிபலிக்கக்கூடிய Android வகையான பொறியியல் முறையில் இயங்கக்கூடிய இயந்திரங்களை வடிவமைத்தார். 1938ஆம் ஆண்டு அமெரிக்காவில் Gakutensoku என்பவர் மனிதனைப்போல் அழக்கூடிய முக அசைவுகளைக் காட்டக் கூடிய Elektro என்ற இயந்திரத்தை உருவாக்கினார்.

முதலாவது Autonomous என்ற எந்திரன் கண்டுபிடிக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு இங்கிலாந்தில் William Grey Walterg என்பவரினால் இலத்திரனியல் முறைமூலம் கட்டளைக் கோப்புகளை (Programmable) கொண்டு செயல்படக்கூடிய எந்திரனை 1954ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த ஜோர்ஜ் டெவோல் என்பவர் முதன் முதலாக உருவாக்கினார். இதற்கு Unimate என்று பெயரிட்டு அழைத்தார். இந்த எந்திரனை 1960ஆம் ஆண்டு ஜெனரல் மோட்டோர்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்தார். இந்த எந்திரன் மிகவும் சூடான இரும்புக் கட்டிகளைத் தூக்க Trenton, New Jerseyஇல் பாவிக்கப்பட்டது.

நான்காவது தலைமுறை எந்திரங்கள் பரிசோதனைக் கூடங்களில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இவை மனிதனை ஒத்தவையாக இருக்கா, இவை Nano தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைந்ததாகவும் தங்களைப் போன்ற பல எந்திரங்களைத் தாங்களே உருவாக்கக்கூடிய அல்லது அளிக்கக்கூடிய அறிவு உடையவையாகவும் இருக்கும்.

எந்திரங்கள் பொதுவாக மனித உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய வேலைகளிலும், ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களிலும், இரசாயனப் பதார்த்தங்கள் நிறைந்த அல்லது கூடிய வெப்ப நிலையுடைய அல்லது மிகவும் தனிமைப்படுத்தப் பட்ட பகுதிகளிலும் அதிகமாகப் பாவிக்கப் படுகின்றன. வாகன தயாரிப்பு நிறுவனங்களில் முக்கிய பங்கு வகிக்கின்றன. Laser welding, Paint spray. packing, Electrical parts தயாரிக்கும் நிறுவனங்களில் மிக அதிகமாக எந்திரங்கள் பாவிக்கப்படுகின்றன.

jiffry.uthumalebbe@thaiveedu.com

■ ■ ■





ஆனந்தமான அனுபவம் ! தகவல்களின் சுரங்கம்

இசையும் ஆழ்ந்த அறிவும் தமிழின் பலமே!

கலசம்

www.KALASAM.com

தமிழின் சுவைகூறும் இணையத்தள ஒலிபரப்பு

# எப்படி இருந்தவர் இப்படி ஆகிவிட்டார்!



கந்தசாமி
கங்காதரன்

கனடிய இராணுவ வான் பிரிவின் உயர் அதிகாரி கேணல் ரசல் வில்லியம்ஸ்...

கனடியப் பிரதமர், ஆளுனர் நாயகம், எலிசபெத் மகாராணி போன்ற பிரபலங்கள், ஆட்சிப் பொறுப்பின் உயர்பதவிகளில் இருப்போர் பயணம் செய்யும் கனடியப் படைகளின் VIP Aircraftஇன் விமானியாகவும் பணியாற்றிய பெருமைமிக்கவர். ஆப்கானிஸ்தானில் உயிர் நீத்த படையினரின் உடலங்கள் கொண்டு வரப்படும் Trenton படைத்தளத்தின் முதன்மைக் கட்டளை அதிகாரியாகவும் பதவி வகித்தவர். கடந்த பெப்ரவரியில் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார். ஒக்டோபர் 22, 2010இல் அவருக்கு வழங்கப்பட்டிருந்த பதவி, தகுதி, தராதரம், பதக்கங்கள், விருதுகள் அனைத்துமே அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன அல்லது அகற்றப்பட்டன.

இத்தகைய உயர் பொறுப்பிலிருந்தவர் ஏன் இவ்வாறான ஒரு நிலைக்கு வந்தார்?

சிலருக்குச் சில மனப்பிறழ்வுகள் இருப்பதுண்டு. இவருக்கும் அப்படியான சில சிக்கல்கள். 80க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் திருட்டுத்தனமாக நுழைந்ததோடு நின்றுவிடாது சில பொருட்களையும் சுருட்டிக் கொண்டுபோய் சேகரித்து வைத்திருந்துள்ளார். அப்படி அவர் சுருட்டிக் கொண்டுபோனவை... பெண்களின் உள்ளாடைகள். அவ்வப்போது இவ்வாறான உள்ளாடைத் திருட்டுக்களில் ஆண்கள் மாட்டுப்படுவது எம் கண்களில் படும் செய்தி. இந்த ரசல் சிறுமிகளின் உள்ளாடைகளைக் கூடத் திருடி இன்பம் கண்டுள்ளார். தனது சேகரிப்பை பல விபரங்களோடு தொகுத்து வேறு வைத்திருந்துள்ளார்.

ரசலின் குற்றப்பட்டியல் திகைக்கவைக்கின்றது. பாலியல் வல்லுறவு, கொலைகள் வரை நீண்டிருக்கின்றது பட்டியல்.

2010 ஜனவரியில் தனது வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த போது Belleville என்ற நகரில் ஒரு வீட்டின் சாளரம் வழியாக, Treadmillஇல் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த ஜெசிகா லொயிட் என்ற 27 வயதுப் பெண்ணைக் கண்ணுற்றார். ஜனவரி 28இல் ஜெசிகாவின் வீட்டுக்குச் சென்று பின்வளவில் காத்திருந்து தருணம் பார்த்து வீட்டினுள் நுழைந்துள்ளார். ரசலின் வாக்கு மூலம் இது. மேலும் விபரிக்கிறார். உள்ளே நுழைத்து ஜெசிகாவைத் தாக்கி கைகளைக் கட்டி வாய்க்கும் Duct Tapeஐ ஒட்டியுள்ளார். ஜெசிகாவை மிரட்டி உள்ளாடையோடு Catwalk செய்வித்துப் பார்த்து இரசித்திருக்கிறார். படமும் பிடித்துவைத்துக் கொண்டார். பலமுறை ஜெசிகாவை வல்லுறவுக்கும் உட்படுத்தினார்.

பின்னர் கைகளும் கண்களும் கட்டப்பட்ட நிலையில் தனது வாகனத்தில் ஜெசிகாவை ஏற்றிக் கொண்டு தனது விடுமுறை வதிவிடமொன்றுக்குக் (Cottage) கொண்டுசென்றுள்ளார். 30 நிமிடமளவில் பயணம். கைகள் கட்டப்பட்ட நிலையிலேயே பல தடவைகள் வல்லுறவுக்குள்ளக்கிவிட்டு. ஜெசிகாவைக் குளிக்கச் செய்திருக்கின்றார். அவரே சவர்க்காரமும் போட்டுத் தேய்த்துமிருக்கிறார். குளிரில் நடுங்கி வலிப்பு ஏற்படுகின்றது ஜெசிகாவுக்கு.

‘ஜெசிகாவை விட்டுவைப்பது நல்லதில்லை’ என்று நினைக்கும் ரசல் கைகளைக் கட்டப் பயன்படுத்திய Plastic Zipper இனாலேயே ஜெசிகாவின் கழுத்தை இறுக்கிக் கொல்லத் தீர்மானிக்கிறார். இதுவரையிலும் ‘இயலுமான வரையில் ரசலுடன் ஒத்துழைத்து உயிரையாவது காப்பாற்றிக்கொள்ளலாம்’ என்று நினைத்து ஒத்துழைத்துக் கொண்டிருந்த ஜெசிகாவுக்கு இனி உயிர் பிழைப்பது கடினம் என்ற எண்ணம் உறுதியாயிற்று.

நீதிமன்றத்தில், ரசலின் வாக்குமூல ஒளிப்பதிவை முன்னரே பார்த்திருந்த அரச வழக்குத் தொடுநர் (Crown Procecutor) ஜெசிகாவின் இறுதி நிமிடங்களைக் கண்ணீர் மல்க விபரிக்கிறார். “நான் இறந்தால், என்னுடைய அம்மாவிடம் நான் அவரை நேசிப்பதாகச் சொல்வாயா?” (If I die, will you tell my mom that I love her) என்று கொலையாளியிடம் ஜெசிகா இறைஞ்சியதை வழக்குத் தொடுநர் சொன்ன போது பார்வையாளர்கள் மத்தியில் பலரிடமிருந்து ‘ஜீசஸ்’ என்ற குரல் ஏழுந்தது. பலர் அழுதது நீதி தேவதையின் காதுகளிலும் நிச்சயம் கேட்டிருக்கும். கட்டப்பட்ட கண்களுக்கும் தெரிந்திருக்கும்.

> “ நான் இறந்தால், என்னுடைய அம்மாவிடம்
> நான் அவரை நேசிப்பதாகச் சொல்வாயா?
> என்று கொலையாளியிடம் ஜெசிகா இறைஞ்சினார். ”



ஜெசிகாவைத் துடிக்கத் துடிக்க கழுத்தை இறுக்கிக் கொன்றுவிட்டு படைத்தளத்துக்கு வந்து வழமைபோல் தனது அலுவல்களைப் பார்த்தார் ரசல். பணிசார் பயணமாக ஒட்டாவாவுக்கும் கலிபோர்ணியாவுக்கும் சென்றுவிட்டுத் திரும்பிவந்து ஜெசிகாவின் உடலை அருகேயுள்ள வயல்வெளியோரத்தில் ஒரு பற்றைக்குப் பின்னால் கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வந்து நல்ல பிள்ளையாக நடந்துகொண்டார்.

இரண்டு வாரம் ஜெசிகாவைத் தேடினார்கள். ரசல் அகப்பட்டுக்கொண்டபின்னர் அவரே உடலம் கிடந்த இடத்தைக் காட்டினார்.

இதற்குச் சில மாதங்கள் முன்பும் தனது படைத்தளத்தில் பணிபுரிந்த கோப்ரல் Marie – France Comeau என்ற 37 வயதுப் பெண்மீதும் ரசல் கண்வைத்திருந்தார். Marie – Franceஇன் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து, கையில் வைத்திருந்த பாரமான மின்சூளினால் (Torch) தலையில் அடித்துக் காயப்படுத்தி, வல்லுறவுக்குட்படுத்தினர். ஜெசிகாவைப் போல் இல்லாது Marie – France முதலில் கடுமையாகப் போராடிப் பார்த்திருக்கிறார். முடியாது போகவே ரசலிடம் கெஞ்சிக்கேட்டிருக்கிறார். “என்னைக் கொல்லப் போகின்றாய்... அல்லவா? “தயவு செய்து என்மீது கருணை காட்டு, நான் வாழவேண்டும்” என்றெல்லாம் கதறியும் பலனில்லை Basementலிருந்து குருதி வழிய வழிய Marie – Franceஐ மாடியிலுள்ள படுக்கையறைக்கு இழுத்து வந்து கட்டிலோடு சேர்த்துக் கட்டிவிட்டு அங்கும் வல்லுறவு புரிந்தார் ரசல். ஒரு கட்டத்தில் ‘வேறு யாராவது வருகிறார்களா?’ என்று நோட்டம்விட ரசல் சென்றிருந்த வேளையில் கட்டுக்களை அறுத்துக்கொண்டு தப்பியோடினார் Marie – France. ஆனாலும் மிக இலகுவாக அவர் மறைந்திருந்த குளியலறைக்குள் தேடிவந்து மீண்டும் மின்சூளினால் உச்சந்தலையில் இன்னொரு போடு, மீண்டும் மீண்டும்... குறைந்தது 5 அடிகள்... தலை, முகம், காது எங்கும். மீண்டும் வல்லுறவு, “எனக்குச் சாக விருப்பமில்லை” (I don’t want to die) என்று Marie – France உயிர்ப்பிச்சை கேட்பதை வீடியோ எடுத்தார் ரசல்.

Duct Tapeஇனால் வாயையும் மூக்கையும் ரசல் ஒட்டியதும் மூச்சுத் திணறி உயிரை விட்டார் Marie – France.

தனது பல குற்றச்செயல்களையும் வீடியோ படம் பிடித்தும் நிழற்படம் எடுத்தும் சேர்த்து வைத்துப் பார்த்து மகிழும் பழக்கமும் இருந்துள்ளது ரசலிடம். செய்யும் செயல்களின் இலட்சணத்தில் படப்பிடிப்பு வேறு. சிறுமிகள், பெண்களின் உள்ளாடைகளைத் திருடிவந்து அவற்றை அணிந்து ஆயிரக்கணக்கான படங்கள் எடுத்து ஒரு பெரிய களஞ்சியமே வைத்திருந்தார் ரசல். அவரது கணினியில் இந்தப் படங்களையும் வீடியோக்களையும் பார்த்த காவல் துறையினர் அதிர்ந்து போயினர்.

சரி, கெட்டித்தனமான இந்தக் கொலையாளி எவ்வாறு அகப்பட்டார்?

ஜெசிகாவின் வீட்டருகே இவரது வாகனம் ஜெசிகா காணாமற்போன இரவு நின்றிருந்தது. குறைந்தது 3 பேர் கவனித்திருந்தனர். ஜெசிகா வீட்டருகே இருந்த வாகன ரயர் அடையாளம் காட்டிக் கொடுத்துவிட்டது. வழமையாக ஒரு BMW காரைத்தான் ரசல் பயன்படுத்துவார். ஜெசிகா வீட்டருகே இருந்தது வழமையாக Pathfinder வாகனங்களுக்குப் பயன்படும் ரயரின் அடையாளம். காவல்துறையினர் வீதியில் வாகனங்களின் ரயர் அடையாளங்களைச் சேகரித்தபோது அன்றைக்கெனத் தனது BMW வில் வாராமல் எப்போதாவது பயன்படுத்தும் Pathfinderஇல் வந்திருக்கிறார் ரசல். உடனடியாகவே ரசல்மீது சந்தேகம் விழுந்துவிட்டது. கிராமப்புறங்களில் ரயர் அடையாளம் இலகுவில் காட்டிக்கொடுத்துவிடும். அத்தோடு குற்றம் நடந்த இடமொன்றில் இருந்த பாதணி அடையாளமும் ரசலின் பாதணியொன்றோடு ஒத்துப்போனது. மாட்டிக்கொண்டார் ரசல்.

முன்பும் ஒரு தடவை அயல் வீடொன்றில் பச்சைக் குழந்தையோடு வீட்டிலிருந்த இளம் தாயையும் அத்துமீறி நுழைந்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றிருக்கிறார் ரசல். முடியாது போனபோது படம்பிடித்துக் கொண்டு ஓடிவிட்டார் ரசல். அந்தத் தாய்க்கோ அயலில் வேறொருவர் மீது சந்தேகம். காவல் துறையும் விசாரித்திருந்தது. இப்போதுதான் அந்த அயலவர் நிம்மதியாக இருக்கிறார்.

எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக் கொண்டார் ரசல்.

இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 25 ஆண்டுகளுக்கு நன்னடத்தைப் பிணையிற்கூட வெளியே வரமுடியாது.

இத்தகைய குற்றச்செயல்கள் நடக்கும்போது, குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆபிரிக்கராகவோ ஆசியராகவோ தென்னமெரிக்கராகவோ இருந்தாலே அவரின் பூர்வீகம், அவர் சார்ந்த சமூகம் எல்லாம் செய்தியாவது அல்லது ஆக்கப்படுவது நாம் காணும் ஒரு மிக மோசமான விடயம். குற்றம் செய்பவர்கள் எல்லாச் சமூகங்களிலும் உள்ளனர். ஆனால் பெரும்பான்மையாக இருப்பவர்கள் குற்றம் செய்யும்போது அவர்களின் பூர்வீகம் ஆராயப் படுவதில்லை. முக்கிய செய்தியாவதுமில்லை. சிறுபான்மைச் சமூகமென்றாலே ஈவிரக்கமின்றி எழுதும் பத்திரிகைகளும் உள்ளன. இந்த ரசல் பிறந்தது 1963இல் இங்கிலாந்தில். 4 வயதில் கனடாவில் குடியேறினார். போகிறபோக்கில் ஒரு வரிச் செய்தியாகவே இது இடம் பெற்றிருந்தது.

முதலில், ஒரு தமிழர் ஏதாவது சிறுகுற்றமொன்றில் கைதாகும்போதுகூட ‘எங்கடையள் திருந்தாதுகள்’ என்று சொல்வதை நிறுத்தப் பழகுவோம்.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

ARGENTUM LENDING DIRECT CORPORATION
Reg # 10466
3621 Hwy 7 East, Suite # 211 Markham, ON, L3R 0G6
1193 A Brimley Rd, Unit 7, Scarborough, ON M1P 3G9

வீட்டு அடமானக் கடன் பெற்றிட உங்களுக்குத் தேவை நம்பிக்கையான ஒரு முகவர்...
OUR SERVICES:
• 1st & 2nd Mortgage
• Refinancing
• Commercial Loan
• Home Equity Mortgage
• Much more...
Are you a Temporary resident? Self Employed? Bankrupt? New Immigrant? Is Your SIN begining with 9? Not to worry
We will help you

Theven Kankesu, AMP
(Mortgage Agent)
FSCO LIC # M08008759
Direct: 416.939.8786
Fax: 647.343.0135
Email: theven.kankesu@migroup.ca

# HomeLife/Future Realty Inc., Brokerage*

Birchmount & Ellesmere



$349,900
4 Bed Rooms
3 Wash Rooms

Warden & Finch



$299,000
•3 Bed Room
•4 Wash Room

Sheppard & Brimley



$119,000
Business Unit

Downtown Condo



CALL FOR PRICE
With More VIP Price Condos
Call NOW

Scarborough Condo



CALL FOR PRICE
With More VIP Price Condos
Call NOW

Markham Condo



CALL FOR PRICE
With More VIP Price Condos
Call NOW

Mississauga Condo



CALL FOR PRICE
With More VIP Price Condos
Call NOW



**RAJ NADARAJAH**
Sales Representative

வீடு வாங்க விற்க
இலவச ஆலோசனைகளுக்கு

**Direct: 416-333-6115**
Office: (905)-201-9977
FAX: (905)-201-9229
E-mail: nanohomes@gmail.com
7 Eastvale Dr., Unit 205, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®

**Buying/Selling Your Home ?**

Call Now!
Lets Talk!

**Direct: 416-333-6115**

# NANO COMPUTERS .INC



**Bus. 416-333-6115**

4465 Sheppard Ave E.
Unit 09
Scarborough, ON,
M1S-5H9

Service. Upgrade. Repair **FREE ESTIMATE**

16 YEARS ஆண்டுகள் தமிழர்களின் பேராதரவைப் பெற்ற **NaNo Computer** ஸ்தாபனத்தின் விரிவுபடுத்தப்பட்ட உங்கள் முகவர்



Since 2003

# Kannan Kankesu

REAL ESTATE & MORTGAGE BROKER

Mortgage/Refinance

**Cell: 416 418 5189**
Bus: 416 284 5555

RED CARPET.
Royal Realty Ltd., Brokerage

880 Ellesmere Road, Suit 204, Toronto, ON
kkankesu@gmail.com

14th &9th



Must be seen
Over 120K upgraded 4+1Bedroom
Box Grove Arista Home 4 Washrooms

Pharmacy &Finch




Very Clean & Renovated
$294,900 3+1Bedroom
Finished Basement 2Washrooms

Elson/Coppard



$455,000 Finsd Bsmt/SepEnt
4+2 Bedroom 4 Washrooms

Birchnount/Steeles



$439,000 Finished Basement
3 Bedroom 4 Washrooms

# Free Seminar Stocks Option & Forex

LEARN EXACTLY WHEN TO BUY OR WHEN TO SELL
MOST POWERFUL TRADING TECHNIQUES
LIFE TIME SUPPORT

பங்கு சந்தை பற்றி தமிழில் கற்பிக்கப்படுகிறது
மிகக்குறைந்த முதலீட்டில் ஆரம்பிக்கலாம்

Kannan Kankesu Only 8 Classes 416-418-5189

# மனச்சோர்வின்றி வாழ்வது எப்படி?



சிவவதனி பிரபாகரன்

'மனமுண்டானால் இடமுண்டு' என்பர். 'மனம் உடலில் எங்கே இருக்கின்றது?' பலர் இதயத்தில் என்பர். இதயம் என்பது சிந்திக்கத் தெரியாத சதைப்பிண்டம் மட்டுமே. எம் உடலில் சிந்திக்கும் ஆற்றல் கொண்டது மூளை. ஆனால் நாம் அன்பானவர்களைப் பார்த்து 'என் இதயம் நீ' என்கின்றோம். 'இதயத்துள் பூட்டி வைத்திருக்கும் உணர்வுகள்' என்கின்றோம். யாரையும் பார்த்து 'என் மூளையே!' என்பதில்லை. மாறாக 'என் இதயமே' என்று தான் அன்பைக் கொட்டுகின்றோம். மனம் இதயத்தில் இல்லாதபோது இது சரிதானா? எது எப்படியாயினும் 'மனம் எங்கு இருக்கின்றது?' என்பதை விட அது 'எப்படிச் செயல்ப்படுகிறது?' என்பதுவே முக்கியமான வினாவாகும்.

மனதின் செயல்ப்பாடுகள் விந்தையானவை. மனிதர்க்கு மனிதர் மாறுபாடானவை. இருந்தாலும் மனதிற்கென்றும் ஒரு சில பொதுமை இயல்புகள் உள்ளன. அடுத்தவர் மனங்களை நாம் புரிந்துகொள்ள முயலும் முன்பாக எம் மனதை நாம் சரிவர புரிந்திருக்கிறோமா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மனம் எப்படிச் செயல்ப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டால் மனதில் தோன்றும் பல நோய்களை தவிர்த்துக் கொள்ளலாம். மனதை புரிந்து கொள்ள முடிந்தால் எமக்கு நாமே வைத்தியராகவும் ஆகலாம்.

'மனச்சோர்வு' என்கின்றனர். உண்மையில் மனம் தானாகச் சோர்வதில்லை. சோர்வு உணர்ச்சிக்குள் நம் மனதை நாம் புதைக்கும் போது தான் மனம் சோர்வடைகின்றது. எமது எண்ணங்களே எங்கள் மனதின் இயல்புகளுக்கு காரணமாகின்றன.

நாம் பிறரோடு பழகுகையில் அவர்களைப் பற்றி எமக்குள் ஒரு மதிப்பீட்டை வைத்துக் கொண்டு பழகுகிறோம். அவர்களோடு பழகுமுன்பாகவே அவர்களைப்பற்றி ஒரு கணக்குப் போட்டு விடுகின்றோம். இந்த கணக்கு பிழைக்கும் போது அந்த உறவுகளில் விரிசல்கள் உருவாகின்றன. 'வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்' என்னும் பழமொழிக்கமைய ஒருவரைப் பிடிக்காது போகையில் அவர் உலகமகா அயோக்கியனாக மனதில் பதிந்து போகின்றார். இதனால் பகைமை உணர்வு அவர் மேல் மேன்மேலும் வளர்கிறது. 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்ற மூத்தோர் வாக்கை மறந்து 'அவன் கெட்டவன்' 'இவன் சுயநலவாதி' 'அவன் திருடன்' என அடுத்தவரை விமர்சித்து சுற்றி உள்ளவர்களை வெறுத்து, போட்டி, பொறாமை, பகைமை என்னும் காழ்ப்புணர்வுகளால் எங்கள் மனங்களை குப்பைத் தொட்டிகளாக்கி அழுக்குகளால் நிரப்புகின்றோம். அடுத்தவர்களைக் குற்றம் கூறிச் சுட்டிக் காட்டும் போது எம் மற்றைய மூன்று விரல்களும் எம்மைச் சுட்டிக் காட்டுவதை நாம் கவனிப்பதே இல்லை. நாம் யார் என்பதைப்பற்றியோ எமது நிலைமைகளுக்கு நாம் தாம் காரணம் என்பது பற்றியோ அறிய முயல்வதேயில்லை. 'பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்' என்பர். மனதை எதிர்மறை உணர்வுகளுள் ஆழப் புதைத்தால் மனம் எங்ஙனம் லேசாகும்? இன்பம் தரும் அழகுணர்வுகளின் சுகமான வருடங்களை எம்மனம் உணர்வதற்கு நாம் வாய்ப்பளிப்பதேயில்லை.

'சுத்தம் சுகம் தரும்' என்பர். இது மனதுக்கும் பொருந்தும். மனதைச் சுத்தப்படுத்தி ஆலயமாக வைத்திருந்தால் தான் ஆக்கசக்திகளும் நேர்மறைச் சிந்தனைகளும் குடிகொள்ளும்.

> **"எதிர்மறைச் சிந்தனைகள் மனதை சோரவைப்பது உண்மையானால் நேர்மறைச் சிந்தனைகள் மனதிற்கு உற்சாகமூட்டும் என்பதும் உண்மையாகின்றது."**

மனம் எப்பொழுதும் உற்சாகமானதாக இன்பமயமானதாக ஆக்கபூர்வமானதாக செயல்ப்பட வேண்டுமானால் இத்தகைய ஆக்கபூர்வமான வலுக்களை மனம் பெற்றாக வேண்டும்.

"மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்படவேண்டும்"
என்றார் பாரதியார்.

அவர் தனது மற்றோர் பாடலில்

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்"
என்கின்றார்.

நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும். எனவே எண்ணங்கள் தான் எங்கள் வாழ்வை, மனதின் இயல்புகளை தீர்மானிக்கின்றன. எண்ணங்கள் தோற்றுவிக்கும் பயம் மனதை பயப்பட வைக்கின்றது. எண்ணங்களில் சோக உணர்வு மனதை சோகத்தில் சோர வைக்கின்றது. எங்கள் மனதை நாம் அதன் இயல்பு நிலையில் வாழ விடுவதேயில்லை. அதனால் எல்லையற்ற சோதனைகளை மனதுக்குக் கொடுக்கின்றோம்.

மனதிற்கொன்று தனியான குணங்கள் ஏதுமில்லை. இந்த அடிப்படையான உண்மையைப் புரிந்து கொண்டால் நாம் உருவாக்கும் எண்ணங்களின் மூலம் மனதை எம் சுய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். எதிர்மறைச் சிந்தனைகள் மனதை சோர வைப்பது உண்மையானால் நேர்மறைச் சிந்தனைகள் மனதிற்கு உற்சாகமூட்டும் என்பதும் உண்மையாகின்றது. இந்த அடிப்படையை நாம் மனதில் ஏற்றோமானல் மன நோய் என்ற பிரச்சனைக்கே இடமில்லை.

சில சமயங்களில் வாழ்வு வசந்தத்தையே மறந்து திரும்பும் திசையெல்லாம் இருண்டு தோற்றமளிக்கலாம். அவ்வேளைகளில் செயற்-

48ம் பக்கம் பார்க்க...


$10,000 Non Medical Insurance / Funeral Expense

| Age | Female | Male | Male Smoker |
|---|---|---|---|
| 60 | $36.00 | $44.13 | $61.00 |
| 65 | $47.00 | $60.04 | $71.00 |
| 70 | $62.00 | $82.92 | $89.00 |
| 75 | $83.00 | $116.25 | $117.00 |

Some conditions may apply

அனைத்து
ஆயுட் காப்புறுதித்
தேவைகளுக்கும்



பகீரதன் சகாதேவன் 416-908-6003



Century 21
Affiliate Realty Inc. Brokerage
Off: 416.290.1200
பகீரதன் சகாதேவன்
முழுநேர விற்பனை முகவர்

some conditions may apply

McCowan & Steeles



3 Bedrooms,
3 Washrooms

Warden & St.Clair
Brand New House



4 Bedrooms,
3 Washrooms

Ellesmere & Morningside



2+1 Bedrooms,
2 Washrooms

CALL 416.908.6003 SAVE MONEY

Commission Cash Back

Select me as your agent and get commission cash back

# சிறைத்தண்டனை...

39ம் பக்கத் தொடர்ச்சி...

னம் செலுத்தினால் அது கிரிமினல் குற்றமாகும் இந்த குற்றசாட்டு ‘அதிவேக வாகன ஓட்டம்’ (Speeding) என குற்றம் சாட்டப்படமாட்டாது. ‘அதிவேக திறில் ஓட்டம்’ (Racing) என குற்றம் சாட்டப்பட்டதாக இருக்கும்.

ஒரு வீதியில் ஆக கூடுதலாக வரையறுக்கப்பட்ட வேகம் என்ற நிலையினை மீறி அதிக வேகத்தில் போட்டிக்கு வாகனம் செலுத்தினாலும் இதே குற்றசாட்டில் வழக்கு பதிவாகும்.

வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட அதிக வேகத்தில் ஒரு வாகனத்தினை இன்னொரு வாகனத்தில் துரத்தினாலும் இதே குற்றச்சாட்டில் வழக்கு பதிவாகும்.

ஒவ்வொரு வாகனத்திற்கு முன்னாலும் ஆபத்தான முறையில் ஒழுங்கை மாறி மாறி அவசரப்பட்டு முந்தி அடித்துக்கொண்டு வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட அதிகமாக பாய்ந்து கொண்டு ஓட்டுகின்றேன் எனப் பிடிபட்டாலும் இதே குற்றசாட்டில் வழக்கு பதிவாகும்.

இப்படி சில உதாரணங்கள் இதன் சட்ட பிரிவுகளில் இக்குற்றசாட்டுகள் எது என்பதனை வரைவிலக்கணப்படுத்துகின்றது.

### மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபடுதல் அல்லது அதனுடன் தொடர்புடைய குற்ற சாட்டுகள் (Drink & Driving Related Offence)

வாகனமோட்டுவதில் கிரிமினல் குற்றமாக கருதப்படும் வரிசையில் அடுத்தது மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபடுவது ஆகும். இது சகலருக்கும் தெரிந்த ஒரு விடயம்தான். இவ்வாறு பிடிபடும் போது உடனடி கௌரவ கைவிலங்கு மாட்டப்படும். தொடர்ச்சியான தண்டனைகள் நீதிமன்ற விசாரணை அலைச்சல், லைசென்ஸ் பறிமுதல், சிறைதண்டனை கிரிமினல் குற்றபதிவுகள் என இப்படியே இந்த தவறுக்கு தண்டனைகள் என்பது பலவாக இருக்கும்.

துர்அதிர்ஸ்டவசமாக இந்த தவறில் அகப்பட்டுக்கொண்ட கனடாவின் கௌரவ தமிழ் மனிதர்களும் ஏராளம்.

இறுதியானதும் உறுதியானதுமான ஒரு முடிவு! இவைகளை புரிந்து கொண்டு கார் திறப்பு கோவையினை கையில் எடுப்பது என்பதே புத்திசாலித்தனமான முடிவாகும்.

siva.panchalingam@thaiveedu.com

■ ■ ■

# காப்புறுதியில் ஏற்...

40ம் பக்கத் தொடர்ச்சி...

மருத்துவ ரீதியின்றி செய்தால் ஒருவித பாதிப்பும் ஏற்படாது. ஏனெனில் இங்கு வெளிநாட்டுப்பயணம் பற்றிய கேள்விகள் இதுவரை கேட்கப்படவில்லை. அத்துடன் மனுச்செய்து ஒரு கிழமைக்குள் உடனேயே அமுலுக்கு கொண்டு வரும் காப்புறுதி குறைந்தபட்சம் $100,000 வரை மனுச்செய்யலாம். அத்துடன் இந்த மாதிரியான திட்டங்களில் மரணம் ஏற்படும் போது எந்த நாட்டில் ஏற்பட்டாலும் வாரிசுதாரருக்கு ஒருவித சிரமமும் இன்றி, வருமான வரியின்றி சென்றடையும். அத்துடன் இந்த மாதிரியான சூழ்நிலையில் எனது கடந்த 27 வருட கால முழுநேர சேவையில் இதுவரை 30 காப்புறுதி இழப்பீட்டு தொகையை மீட்டுக் கொடுத்திருக்கிறேன்.

**உங்கள் மூலம் ஏறத்தாழ 3 வருடத்திற்கு முன்னர் நிறுவனம் A மூலம் எனது பெற்றோருக்கு ஒரு கணிசமான தொகையான $15,000 இற்கு மனுச் செய்துள்ளோம். இதுவரை அவர்கள் தான் மாதாந்த கட்டுப் பணத்தை செலுத்தி வருகிறார்கள். ஆனால், நான் தான் உரிமையாளர். விரைவில் அவர்கள் இலங்கைக்கு நிரந்தரமாக தங்க இருக்கிறார்கள். அதனால் இந்த காப்புறுதியை ரத்து செய்தால் என்ன என்று யோசிக்கிறோம். ரத்து செய்வதனால் கட்டிய முழுத்தொகையையும் மீளப்பெறலாமா? ஒரு ஊடகம் மூலம் இதை முழுவதாக மீளப்பெறலாம் என்று கேள்விப்பட்டேன்.**

நீங்கள் எடுத்தது பாதுகாப்பு திட்டமேயொழிய சேமிப்பு திட்டமல்ல. அதாவது மனுச்செய்து ஒப்பந்தம் கிடைத்த மறுநாளே மரணம் ஏற்பட்டால் காப்புறுதி இழப்பீட்டு தொகை $15,000 யேயொழிய கட்டிய பணமல்ல. சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் 19ந்திகதி இந்த மாதிரியான ஒப்பந்தம் எனக்கு கிடைத்து 5 நாட்களுக்குள் காப்புறுதிசெய்யப்பட்ட நபர் வாகனவிபத்தில் இறந்து இரட்டிப்பு தொகையை அவரது வாரிசுகாரருக்கு அளித்துள்ளேன். மரணம் என்பது எப்போது ஏற்படும் என்பது தெரியாது. எந்த நாட்டில் எந்த தருணத்தில் ஏற்படும் என்பதும் தெரியாது. ஆனால் எந்த நாட்டில் இருப்பினும் மரணம் நிச்சயமாக ஏற்படும். இந்த மரணம் இலங்கையில் ஏற்படுமாயின் காப்புறுதி இழப்பீட்டு தொகை இலங்கை பணத்திற்கு 1 ½ கோடி. ஆனால் மரணச் செலவு 1 லட்சத்தை தாண்டாது. ஆனபடியால் நீங்களோ அல்லது உங்களது சகோதரமோ அல்லது இருவருமே பொறுப்பெடுத்து கட்டுவதனால் இழப்பீட்டு தொகையில் மேலதிக பணத்தை உங்கள் பிள்ளைகளின் படிப்பு செலவிற்கோ அல்லது பிரயாணச் செலவிற்கோ உபயோகப்படுத்தலாம். பதிலாக இதை இப்போது ரத்து செய்வதனால் ஒரு சதமும் உங்களுக்கு கிடைக்கப்போவதில்லை. உங்களுக்கு இந்த பணம் கட்டுவது சிரமமாக இருப்பின் இன்னும் ஒரு வருடத்திற்கு மட்டும் கட்டிவிட்டு அதன்பின் கட்டிய பணத்தை வைத்து அதற்கான ‘குறைந்த ஆயுள்காப்புறுதியாக’ இதை மாற்றலாம். இதையே ஆங்கிலத்தில் Reduced Paid up Insurance என்று அழைக்கிறோம். இதன்படி 4 வருட முடிவில் கட்டிய பணத்தை வைத்து ஏறத்தாழ $3,750 டொலருக்கு ஆயுள்காப்புறுதியாக மாற்றினால். அது உங்களுக்கு நிச்சயம் எதிர் காலத்தில் மனஆறுதல் திட்டமாக அமையும். கட்டிய பணத்தை முழுவதும் மீளப்பெறலாம் என்று சொன்னது தவறு. இப்படிச் சொல்பவர்களிடம் ‘எழுத்தில்’ கையொப்பம் இட்டு வாங்கினால் உண்மை புரியும்.

**பொதுப்பணித்துறையில் இருக்கும் வைத்தியர்கள் காப்புறுதி பிரமுகர்கள், வழக்கறிஞர்கள் பகிரங்கமாக தமது வாடிக்கையாளர்களின் பெயர்களை அவர்கள் சம்மதமின்றி மற்றவர்களுக்கு சொல்லலாமா அல்லது பிரசுரிக்கலாமா?**

இது முற்றிலும் தவறு. இந்த தகவல் பிரத்தியேகமானதும் அந்தரங்கமானதும் ஆகும். இதையே ஆங்கிலத்தில் PRIVACY ACT என அழைப்போம். இதுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு புகார் செய்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மாதிரியான விவகாரம் ஒன்று ஒரு பிரபல வைத்தியருக்கு அண்மையில் ஏற்பட்டு இதன் பிரதிபலிப்பாக அந்த சம்பந்தப்பட்ட அமைச்சு அவருக்கு எச்சரிக்கை விடுத்து அதன் காரணமாக அவர் சம்பந்தப்பட்ட தனது வாடிக்கையாளருக்கு எழுத்து மூலம் மன்னிப்பு கேட்டிருந்தார் என்ற விவகாரம் கேள்விப்பட்டிருந்தேன்.

தொடரும்...

saththivel@thaiveedu.com

■ ■ ■



## நீங்கள் முகவருக்கூடாகத் தொழில் புரிபவரா?

# உரிமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

சென்ற இதழின் தொடர்ச்சி...



என். மிலான்

முகவருக்கூடாகத் தொழில் புரிபவர்களது உரிமைகளும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்களையும் கடந்த இதழில் பார்த்திருந்தோம். அதன் தொடர்ச்சியை இங்கே தருகின்றேன். கடந்த இதழை வாசிக்க தவறியவர்கள் www.thaiveedu.com என்ற இணையத்தளத்திற்கு சென்று வாசித்தறிந்து கொள்ளலாம்.

### நீங்கள் வேலைக்கு நியமன மாகியும் வேலைக்கு இன்னும் அமர்த்தப்படவில்லை. அதனால், உங்களிற்கு அரசு விடுமுறைச் சம்பளம் கிடைக்காது என்று உங்களுடைய தற்காலிக முகவர் உங்களிடம் கூறுவது சரியானதா?

வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசு விடுமுறைகளுக்கான உரிமைகளை பெறும் தகுதி இல்லாதவர்கள் என்று கூறும் சட்டத்தை; 2008ல் அரசு இயற்றியுள்ள சட்ட மசோதா ரத்துச் செய்துள்ளது. அரச விடுமுறைகளுக்கான உரிமைகள் தற்காலிக ஏஜன்சி ஊழியர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தவே அரசு இதை கொண்டு வந்துள்ளது. வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பதை காரணம் காட்டி, அரசு விடுமுறைகளுக்கான சலுகைகளை இனிமேல் முகவர்கள் தட்டிகழிக்க முடியாது.

### அடுத்த அரசு விடுமுறைக்கான ஊதியத்தை உங்களுடைய ஏஜன்சி உங்களிற்கு தரவில்லை என்றால் நீங்கள் என்ன செய்யலாம்?

அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் மற்றும் உங்கள் அரசு விடுமுறை தின ஊதியத்தை எப்படி நீங்கள் கணக்கிட வேண்டும் என்பதற்கு எங்களை அழையுங்கள் உங்களுடைய ஏஜென்சி அதன் அனைத்து ஊழியர்களுக்கும் அரசு விடுமுறை தின ஊதியத்தை ஒழுங்காக வழங்கிறதா என்பதை உறுதி செய்ய தொழிலாளர் நடவடிக்கைகளிற்கான மையத்தை தொடர்பு கொண்டு கலந்தாலோசியுங்கள் (Worker's Action Centre. 416-531-0778 Ext 224 அல்லது www.workersactioncentre.org).

### உங்கள் முகவர் இதுபோன்ற சட்டங்களிற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அதிலிருந்து உங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?

- நீங்கள் வேலை பார்த்த அனைத்து திகதி மற்றும் மணி நேரங்கள் ஆகியவற்றிற்கான ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருங்கள்.
- உங்கள் அனைத்து paystubs மற்றும் T4களின் நகல்களை வைத்திருங்கள் நீங்கள் முகவரை விட்டு விலகும் போது நீங்கள் வேலை பார்த்ததற்கான ஆதார (ROE) நகலைத் தயார் செய்து கொள்ளுங்கள்.
- உங்களுக்கு எதுவெல்லாம் சேரவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அது குறித்து உங்கள் முகவருக்கு சுருக்கமாக ஒரு கடிதம் எழுதுங்கள். அவைகளை திரும்பதருவதற்கு ஒரு காலகெடு அவர்களுக்கு விதியுங்கள். நீங்கள் இன்னமும் முகவரிடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தால் நீங்கள் சில இன்னல்களை சந்திக்க நேரிடலாம். அது சம்பந்தமாக ஒரு திட்டத்தை கலந்தாலோசிப்பதற்கு workers' Action Centerஐ தொடர்பு கொள்ளுங்கள்.

தொழிலாளர் அமைச்சகத்தின் இணையதளம், உங்களுக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு அரசு விடுமுறைக்குரிய சம்பளத் தொகையை கணக்கிடுவதற்கு ஒரு இலகு முறையை நியமித்துள்ளது.

- உங்களுக்கு சம்பளம் தரவேண்டிய தகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் உங்கள் சம்பளப்பாக்கி சம்பந்தமாக நீங்கள் தொழிலாளர் அமைச்சகத்திற்கு புகார் எழுதி கொடுக்க வேண்டும்.

ஒரு முகவர் நிறுவனம் சட்டத்திற்கு புறம்பாக செயல்படுகிறது என்பதை நீங்கள் கண்டு பிடிக்கும் போது, அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு, தொழிலாளர்களின் நடவடிக்கைகளிற்கான மையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுடைய சகல விடயங்களும் இங்கே மிக இரகசியமாகப் பேணப்படும்.

> “ வேலை செய்யுமிடத்தில்
> இனம், நிறம், மொழி, பிறப்பிடம், வயது,
> பாலினம், உடல்க் குறைபாடு, திருமணம்,
> குடும்ப சமூக அந்தஸ்து, மதம், குடியுரிமை
> மற்றும் மன்னிக்கப்பட்ட குற்றவியல் செயல்கள்
> அடிப்படையில் பாகுபாடு காட்டுதல்
> தடை செய்யப்பட்டுள்துள்ளது. ”

### உங்களுக்கு உதவி தேவைப் படின் நாட வேண்டிய இடங்கள்:

**Workers' Action Centre (தொழிலாளர்களின் நடவடிக்கைகளிற்கான மையம்):** உங்கள் உரிமைகள் பற்றி மேலும் கூடுதல் விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 416-531-0778 அல்லது இணையத்தளம் www.workersactioncentre.org.

**தொழிலாளர் அமைச்சகம்:** சம்பளம் தரவேண்டிய தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் உங்கள் சம்பள பாக்கிகள் சம்பந்தமாக தொழிலாளர் அமைச்சகத்துக்கு நீங்கள் புகார் எழுதிக் கொடுக்க வேண்டும். உங்களுக்கு உதவவேண்டும் என்பதற்காக தொழிலாளர் அமைச்சகம் ஒரு அரசவிடுமுறை கணக்கீட்டு இலகு முறையை தனது இணையத்தளத்தில் நிறுவியுள்ளது.

**மனித உரிமைகள் சட்ட சேவை மையம்:** இவ்வமைப்பின் முகவரிக்கு இலவச தொலை பேசி எண் 1-800-531-551இன் மூலம், அல்லது www.labour.gov.on.ca இணையதளத்தின் மூலம் தொடர்புகொள்ளலாம். நீங்கள் பாகுபாடாக நடத்தப்படுகிறீர்கள் என்பதை உணர்ந்தால் இந்த இலவச சட்ட மையத்தின் சேவைகளை நீங்கள் நாடலாம். அதற்கான இலவச தொலைபேசி எண் 1-866-625-5179 அல்லது இணையதளம் www.hrisc.on.ca.

### மனித உரிமைகள் மற்றும் தற்காலிக ஏஜன்சி தொழிலாளர்கள்:

ஒரு தற்காலிக முகவர்; இனம், நிறம், மொழி, பிறப்பிடம், வயது, பாலினம், உடல்க் குறைபாடு, திருமணம், குடும்ப சமூக அந்தஸ்து, மதம், குடியுரிமை மற்றும் மன்னிக்கப்பட்ட குற்றவியல் செயல்கள் ஆகியன அடிப்படையில் வேலை செய்யும் இடத்தில் யார்யாரை எந்தெந்த வேலைக்கு அல்லது பணிக்கு அனுப்பவேண்டும் என்று பாகுபாடு காட்டுதல் மற்றும் கொடுமை செய்தல், ஆகியவற்றை மனித உரிமைகள் சட்டம் தடை செய்துள்ளது. உங்களுக்கு ஒரு வேலை அளிப்பதற்குமுன் தற்காலிக முகவர், உங்கள் SIN, பாஸ்போட், பிறந்த தேதி அல்லது பிறந்த நாடு சம்பந்தமாக உங்களிடம் விசாரிப்பது சட்டத்திற்கு புறம்பான விடயமாகும். தான் பாகுபாடுடன் நடத்தப்படுகிறோம் என்று நினைக்கும் ஒரு தொழிலாளர் அது குறித்து மனித உரிமைகள் தீர்ப்பாயத்திடம் புகார் செய்யலாம். உங்கள் மீது காட்டப்பட்ட பாகுபாடு பற்றி விபரமாக எழுதி வையுங்கள். இதுபற்றிய புகார் ஒன்றை கொடுக்க நீங்கள் நினைக்கும் போது அது உங்களுக்கு உதவியாக இருக்கும்.

milan@thaiveedu.com

■ ■ ■

# மனச்சோர்வின்றி...

46ம் பக்கத் தொடர்ச்சி...

கையாக விளக்கேற்றியேனும் எம் வாழ்வில் ஒளியூட்ட நாம் பயில வேண்டும். மனதை மகிழ்வூட்ட இயற்கையிடமே மருந்திருக்கின்றது. ஒரு பொழுது வாழும் வண்ணத்துப்பூச்சிகளின் அழகை, படபடப்பை பார்த்து இரசியுங்கள். காலை மலர்ந்து மாலை வாடும் மலர்கள் கூட அழகாக சிரிப்பதைப் பாருங்கள். எந்தக் கவலைகளுமின்றி இரைதேடும் பறவைகள் கூடி உண்ணும் அழகைப் பாருங்கள். மனதில் புதிய உற்சாகம் தொற்றிக் கொள்வதைக் காண்பீர்கள். பால்மணம் மாறா மழலைகளின் கள்ளமற்ற வெள்ளை மனச் சிரிப்பின் அழகையும் அவர்களின் குறும்புத்தனங்களையும் இரசித்தாலே வாழ்வின் அழகு மனதுக்குள் அழகூட்டும்.

எம்மை வீழ்த்த நினைக்கும் எண்ணங்களை வென்று எம்மை சாதிக்க உந்தும் உயர் சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் மனச் சோர்வின்றி வாழ முடியும். மனம் உற்சாகம் கொண்டால் உடல் சுறுசுறுப்படையும். மனம் ஆரோக்கியமாகத் திகழ்ந்தால் உடலும் ஆரோக்கியம் பெறுகின்றது. உடல் ஆரோக்கியத்தை பேணிக் காப்பதில் மனதின் பங்கு மிகப் பெரியது.

உடற்கூற்று முறைகளின்படி பார்த்தாலும் எங்கள் மனநிலைக்கேற்ப உடலிலுள்ள உறுப்புகள் செயல்ப்படுவதனை உறுதியாக அறிய முடிகின்றது. எனவே தான் இன்றைய மருத்துவர்களும் எந்த நோய்க்கு சிகிச்சை அளிக்கு முன்பாகவும் நோயாளிகளின் கருத்துகளையும் மனநிலையையும் கருத்திலேற்க வேண்டிய கட்டாயமுள்ளவராகின்றனர்.

மனமாற்றங்கள் உடலைப் பாதிக்கின்றன. கோபம் அதிகமானால் இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு அதிகரிக்கின்றன. சிலருக்கு அதீத கோபத்தால் உடல் நடுங்குவதைக் காணலாம். பயத்தாலும் சிலரது உடல் நடுங்குவதுண்டு. பயம், அதிர்ச்சி ஏற்படும் போது உடல் வியர்க்கின்றது. உடலில் ஏற்படும் மிகையான சூடைத் தணிப்பதற்காகவே வியர்வை வெளியேறுகின்றது. இன்றைய மருத்துவர்கள் கவலைகள் அதிகரிக்கும் போது இரத்தக்கொதிப்பு மட்டுமன்றி இரத்தத்திலுள்ள சீனியின் அளவும் அதிகரிப்பதாகக் கூறுகின்றனர். இவ்வண்ணம் மனம் உடல் ஒன்றையொன்று பாதிப்பதற்கான ஆதாரங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

உணர்ச்சிகள் என்றால் என்ன? அது ஒரு மனநிலை. இன்பம், துன்பம், ஏமாற்றம், என பலவடிவமேற்கும் மனோநிலை. உணர்ச்சிகள் மனிதனால் கட்டுப்படுத்தப்படக் கூடியவை. உணர்ச்சிகள் அனைத்தையுமே மனிதமனதால் கட்டுப்படுத்த முடியும். எங்கள் எண்ணங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். இதன் மூலம் மனதையும் கட்டுப்படுத்த முடியும்.

எம்முன் தோன்றும் எண்ணங்கள் எப்படி இருக்க வேண்டும் என முடிவு செய்யும் உரிமை எங்களுக்கு உள்ளது. கணநேரத்தில் உங்களுள் பெருக்கெடுக்கும் ஆயிரக்காணக்கான எண்ணங்களுள் எதனைத் தெரிந்தெடுத்துச் செயல்வடிவமாக்குவது என முடிவு செய்யும் தெரிவு உங்கள் கையிலேயே உள்ளது. எண்ணங்களைத் தெரிவு செய்ய எப்படி முடிகிறதோ அங்ஙனம் நிராகரிக்கவும் எம்மால் முடிகின்றது. எண்ணங்கள் எம்மை ஒருபோதுமே ஆளக்கூடாது. நாம் தான் எண்ணங்களை ஆளவேண்டும். எண்ணங்களை ஆள முடிந்தால் எங்கள் மனதையும் எம்மால் ஆள முடியும். மனநிலைகளை ஆள முடியுமானால் எங்கள் உடலையும் எம்மால் ஆளமுடியும்.

மனக்கட்டுப்பாட்டின் மூலம் உடலியக்கத்தைக் கட்டுப்படுத்தப் பழகினோமேயானால் உடலிலோ மனதிலோ நோய்கள் ஒருபோதுமே உண்டாகமாட்டா. மனதின் இயல்புகள் அதன் எண்ணங்களின் வசமே என்னும் அடிப்படையை நாம் புரிந்து கொண்டால் மனதளவில் நாம் என்ன செய்தால் உடலாலும் மனதாலும் சோர்வின்றி நோய்களின்றி ஆரோக்கியமாகவும் இன்பமாகவும் வாழலாம் என்பது புலனாகும்.

வாழ்வு ஒரு முறையே! வாழ்வாங்கு வாழுங்கள் நலமோடு!

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
$399,000
SOLD
Markham/Steeles
$139,000
Midland/Lawrence
2 Bedroom Condo
In Prime Location
$258,930
Bank Sale
Lawrence/Sgc Lane
3+1 Bedrooms
2 Washrooms
$399,900
SOLD
Mccowan/16th Ave
$299,000
Finch/Warden
Super Location
3 Bedroom
Close to Mall
Park & School
$189,000
SOLD
Finch/Middlefield
$199,000
GTA SQUARE
Finch/Middlefield
Excellent Location
Commercial Unit For Retail
Store Related
$199,000
Finch/Middlefield
2+1 Bedrooms
$469,000
SOLD
Steeles/Middlefield
$572,900
SOLD
Yonge/Sheppard
$499,000
SOLD
9th Line/Reeves Way
$239,900
Morningside/Mclevin
3+1 Bedrooms 2 Wash
$269,600
Birchmount/Huntingwd
3+1 Bed Rooms
3 Washrooms
$269,900
Huntingwd/Midland
3+1 Bedrooms
3 Washrooms
$294,000
Finch/Mccowan
3+1 Bedroom
Finished Bsmt, Sep. Entance.
$199,000
Finch/Middlefield
commercial unit for Retail
Store related
More Houses Visit
www.krishome.ca
Krish Sivapatham
Sales Representative
Full Time Realtor
Direct : 416-895-4457
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229
Indepently Owned and Operated, REALTOR
HOMELIFE
HIGHER STANDARDS
25th ANNIVERSARY
www.NewCondoInGTA.com
New Condos Call Krish
VIP Price & Floor PLan


வீடு வாங்கவும், விற்கவும்.......
$479,000
$2,100 Rent
Bathurst / Lakeshore
2 Bedrooms, 2 Washrooms
Brand New Condo at Downtown
$349,990
Mccowan/Mcnicoll
3 Bedrooms, 2 Washrooms
New Furnace And Cac
$669,000
Mccowan/Highglen
6+2 Bedrooms, 5 Washrooms
Close To Schools,Public Transit
$709,900
14th/9th Line/407
4+1 Bedrooms, 4 Washrooms
Over 120K Upgraded
சகல விதமான
படிவங்களும்
நிரப்பிக்
கொடுக்கப்படும்
இரஞ்சன் or
செல்வா
416.816.1220
$539,900
Derry / Thompson
4+1 Bedrooms, 4 Washrooms
Upgraded Corner Lot, Aprox 2600 St
$619,900
King / Younge
5 Bedrooms, 4 Washrooms
2901 Sqft Luxury Home
$386,900
Park Lawn/Lake Shore
2 Bedrooms, 2 Washrooms
Newer Bldg Steps To Lake!
$1,250
For Lease
Dixie/Bloor
2 Bedrooms, 2 Washrooms
Close To All Amenities
$364,900
Mccowan/Lawrence
4 Bedrooms, 2 Washrooms
Few Minutes To Shopping, Hospital
$334,900
Bovaird / Bramalea
3 Bedrooms, 4 Washrooms
Close to Hospital, Transit
$299,900
Warden / Finch
3 Bedrooms, 3 Washrooms
Low Maintenance Fee Condo House
Ellesmere/Morningside
3 Bedrooms, 1 Washroom
Spacious Basement Apartment.
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Office: 416.284.5555
RANJAN FRANCIS XAVIER
Sales Representative
Cell: 416.816.1220
வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......

## ஹோமியோபதி - மனிதநேய மருத்துவம்

# உடலும் உள்ளமும் நலந்தானா?



போல் யோசேப்
ஹோமியோ மருத்துவ நிபுணர்

நலம், ஆரோக்கியம் என்றால் ஒரு மனிதன் நோயின்றி வாழ்வது என்பதல்ல. உடல் ரீதியாக, உளரீதியாக, சமூகரீதியாக முழுமையான நல்ல நிலையில் இருத்தல். ஆம், இதுதான் இறுதியாக வடிவமைக்கப்பட்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆரோக்கியத்துக்கான வரைவிலக்கணம். இதைப்பற்றி கொஞ்சம் விரிவாக இந்தக்கட்டுரையில் பார்க்கப் போகிறோம்.

பொதுவாக நாம் ஒருவரை சந்திக்கும் பொது முதலில் விசாரிப்பது "நலமா" "சுகமாக இருக்கிறீர்களா" என்பதுதான் இதை மருத்துவ அடிப்படையில் புரிந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

உடல் ரீதியாக நலமாக இருத்தல், உடல் உறுப்புகள் எல்லாம் மிகச்சரியாக எந்தத் தடுமாற்றம் அல்லது மாறுபாடு இன்றி சம நிலையில் பணிபுரிதல், உயிரியல் அடிப்படையில் ஒவ்வொரு கலங்களும், இழையங்களும், உறுப்புகளும் சரியாக இயங்குதல். இவை இவ்வாறு இயங்குமானால் தெளிவான சுவாசம், முறையான பசி, சரியான உறக்கம், ஒழுங்கான உடல்எடை, கழிவுகளை சரியாக வெளியேற்றும் ஆற்றல், ஐம்புலன்களின் தெளிவான தன்மை, முறையான நாடித்துடிப்பும், இரத்த அழுத்தமும், நல்ல உடல்வாகு, சமநிலையான நடையும் அவயவங்களின் இயக்கமும்... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

உடல்ரீதியாக எல்லாம் ஒழுங்காக இருந்தாலே இன்றைய மருத்துவமும், மருத்துவர்களும், நீ ஆரோக்கியமாக இருக்கிறாய் என்று முடிவு செய்துவிடுகிறார்கள். ஆம் அதாவது உடலில் எந்த விதமான குணங்குறிகள் ஏதும் இல்லையென்றால் மனிதன் நலமாக இருக்கிறான் என்று தாங்களே முடிவு செய்து கொள்கிறார்கள். ஒருவருக்கு பல பரிசோதனைகளைச் செய்து அதாவது இரத்தத்தில் உள்ள பல விடயங்கள் சமநிலையில் இருக்கிறதா? இரசாயணங்கள் சரியாக இருக்கிறதா? சிறுநீரில் உள்ள உப்புக்களும் கலவைகளும் எப்படியிருக்கிறது, மேலும் இன்றைய அதிநவீன கண்டு பிடிப்புகளான அல்ராசவுண்ட், ஸ்கான், சி.ரி.ஸ்கான், எம்.ஆர்.ஐ இப்படி இன்னும் பல கருவிகள் மூலம் அலசி ஆய்வு செய்து பார்க்கிறார்கள்.

இதிலும் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மனிதன் நலமாக இருக்கிறான் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆம் வாசகர்களே! ஒரு உண்மையை உங்களுக்குச் சொல்கிறேன், ஒரு மனிதனின் உடலில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட உடல்இயக்கம், உயிர் இரசாயன மாற்றம், எப்படி இயக்குகிறது (Physiology and Biochemistry) போன்ற கண்டுபிடிப்புக்கள் வெறும் 10 சதவீதத்துக்கும் குறைவுதான். இது இப்படியிருக்க சில நோய்களுக்கான காரணிகள், நோய்கள் உருவாகும் விதம் போன்றவற்றின் கண்டுபிடிப்புகள் 5 சதவீதத்துக்கும் குறைவுதான். பொதுவாக மருத்துவ நூல்களிலே ஒரு வியாதியைப் பற்றி விளக்கும் போது பல காரணிகளைக் குறிப்பிட்டுவிட்டு, "இவற்றினால்தான் இந்த நோய் வரலாம்" என்று ஊகிக்கப்படுகிறது என்றுதான் விஞ்ஞானம் சொல்லுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அதைவிட முக்கியம் என்னவென்றால் மிகப்புகழ் பெற்ற மருத்துவ நூல்களில் கூட அதாவது மருத்துவக்



கல்லூரிகளில், ஆராய்சிகளுக்குக்கும் பயன் படுத்தும் நூல்களில் கூட ஒரு வியாதியினைப்பற்றி விளக்கி விட்டு கடைசியில் அல்லது முதலில் ஒன்றினை குறிப்பிடத்தவறுவதில்லை. அது என்னவென்றால் Unknown Causes, (or) Idiopathic Causes (or) Aetiology is not known என்பதாகும். இந்த குறிப்பிட்ட நோய்களுக்கு சரியான, தெளிவான காரணம் தெரியவில்லை என்பதாகும். இப்படி மருத்துவம் படிக்கும் நூல்களில் குறிப்பிடுவது இரண்டு மூன்று வியாதிகளுக்கல்ல. பொதுவாகப் பார்த்தால் 90 சதவீதமான நோய்களுக்கு இப்படித்தான் குறிப்பிட்டிருக்கும். பேராசிரியர்களும் இதைத்தான் எங்களுக்கு சொல்லித் தருகிறார்கள் அவர்களும் ஒத்துக் கொள்கிறார்கள்.

அதைவிட் முக்கியம் என்னவென்றால் கண்டு பிடிக்கப்பட்ட வியாதிகள் என்று சொல்லப்படுவன சில ஆயிரங்கள் இருக்கலாம். இன்னும் கண்டுபிடிக்கப்படாத பெயர் சூட்டாத வியாதிகள் மேலும் பல ஆயிரங்கள் இருக்கலாம். ஏனென்றால் மனித உடலில் செயற்பாட்டில் இதுவரை கண்டுபடித்ததே பத்து சதவீதம் தானே. இப்படி எழுதுவதால் மருத்துவர்களில் சிலர் என்னடா இப்படி எல்லாவற்றையும் பொது மக்களுக்க வெளிப்படுத்துகிறான் என்று கோபப்படலாம். ஆம் வாசகர்களுக்கே இதைக்கேட்டு ஆச்சரியம் வரலாம். உண்மை இதுதான். இன்னும் பல உண்மைகளை வெளிச்சத்துக் கொண்டு வருவதுதான் இந்தக்கட்டுரையின் நோக்கமாகும். ஆகவே இப்படி அரைகுறையாகக் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களுக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டு அதற்கென மருந்துகளும் தயாரிக்கப்படுகிறது. இப்படி இந்த நோய்க்கு இந்த மருந்துதான் என்று இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். கடந்த பத்தாண்டுகளில் உள்ள மருந்துகளின் வரலாறைப் பார்த்தால். எத்தனையோ மருந்துகள் அவற்றின் பக்கவிளைவுகள் காரணமாக தடைசெய்யப்பட்டுள்ளன. சில நாடுகளில் தடைசெய்யப்பட்ட மருந்துகள் பலநாடுகளில் இன்னும் பாவனையிலுள்ளன.

பல ஆண்டுகளாக பிரபலமாக வழக்கத்திலும், ஏன் கட்டாயமாக போடவேண்டும் என்ற தடுப்பூசிகள் (Vaccines) மனித சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கம். இப்போது தான் விஞ்ஞானிகளுக்கும் மருத்துவ உலகிற்கும் ஆச்சரியத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அதில் ஒன்றுதான் இன்று குழந்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள 'ஓட்டிசம்' 'Autism' என்ற மாபெரும் மருத்துவப் பிரச்சினையாகும். இதன் காரணம் என்ன, எப்படி வருகிறது, என்ன மருத்துவம் செய்வது என்பது இன்னும் புரியாத புதிராகவுள்ளது.

இது ஒரு உதாரணம் தான்.

உடல்ரீதியாக ஒரு மனிதனைப் பற்றி மருத்துவம் முழுமையாக அறியாத போது அதற்கு மருத்துவம் செய்து மருந்துகளை குறிப்பாக இரசாயனக் கலவை மருந்துகளை அள்ளி அள்ளி கொடுப்பது என்பது எந்தவகையில் ஏற்றுக் கொள்ளக்கூடியது. அப்படிக் கொடுத்தாலும் அவை முதலில் விலங்குகளில் பரிசோதனை செய்து அதாவது முதலில் எலிகளில், பன்றிகளில், குரங்குகளில் பின்பு மூன்றாம் உலக நாடுகளிலுள்ள ஏழை மனிதர்களில் அதன்பின் ஒரு குறிப்பிட்ட சில ஆண்டுகளில் ஏதும் பக்கவிளைவுகள் இந்த ஏழை மனிதர்களில் காணப்படவில்லை யென்றால் அதன்பின்பு பணக்கார நாடுகளிலும் புழக்கத்திற்கு விடப்படுகிறது.

மருந்து நிறுவனங்கள் எடுத்தெறியும் எலும்புத்துண்டுக்கு ஆசைப்பட்டு மூன்றாம் உலக நாடுகளின் அரசியல் வாதிகள், அதிகாரிகள் போன்றவர்கள் தம் மக்களின் நலனில் அக்கறையற்று இவ்வாறான செயல்களுக்குத் துனைபோகின்றார்கள்.

இந்த மருந்து தயாரிப்பு உரிமை பெரிய மருந்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு அவை கொள்ளை இலாபம் அடிக்க மனித உயிர்கள் பலியாக்கப்படுகிறது.

இப்படி மருத்துவக் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் என்ற பெயரில் மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டதைவிட அழிகின்ற தொகை தான் அதிகம் என்பதற்கு நான் இங்கு தரப்போகின்ற ஆதாரமே போதுமானதாகும்.

மருத்துவத்தில் 'Iatrogenic' என்ற ஒரு இரகசிய வார்த்தை இருக்கிறது. இதன்பொருள் என்ன வென்றால் 'மருத்துவர்களாலும், மருத்துவ சிகிச்சைகளாலும், மருந்துகளாலும் மனித உலகிற்கு ஏற்படும் அழிவு' என்பதே.

வாசகர்களே உங்கள் மனதைக் கொஞ்சம் தைரியப்படுத்திக் கொள்ளுங்கள். உலகிலே அதிகமான உயிரிழப்பை ஏற்படுத்தும் வியாதி எதுவென்றால் ஹாட் அற்றாக் என்ற இதயச் செயலிழப்பு அல்லது மாரடைப்பு. இரண்டாவது 'ஸ்ரோக்' என்கிற பக்கவாத நோயால் ஏற்படும் உயிரிழப்பு, மூன்றாவது என்னவென்றால் எல்லோரும் கான்சர் என்று தான் நினைப்பீர்கள். அதுவல்ல உண்மை. இந்த Iatrogenic தான். ஆம் மருத்துவர்களாலும், சிகிச்சை முறைகளாலும், மருந்துகளாலும் உண்டாகும் உயிரிழப்பு.

பெரிய ஆராய்ச்சிகள் புதிய கண்டுபிடிப்புகள், மிகப்பெரிய மருத்துவமனைக் கட்டிடங்கள், எப்போதும் 'பிஸியாக' இருக்கும் மருத்துவ மனைகள். மருத்துவத்திற்காக ஒதுக்கப்படும் நிதியின் அதிகரிப்பு. சிறப்பு மருத்துவநிபுணர்களிடம் முற்பதிவுசெய்வதற்கு பல மாதகாலம் காத்திருக்கும் மக்கள் கூட்டம். புதிய புதிய வியாதிகள். பெயர் தெரியாத வைரஸ்கள். இவையெல்லாம் எதைக் காட்டுகிறது? மனித சமூகம் மேலும் மேலும் 'நலம்' குன்றிப் போகிறது என்பதுதானே?

தொடரும்...

paul.joseph@thaiveedu.com

■ ■ ■

KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca



Formula Honda
Where You're Treated like Family
Rajah Tharmalingam
Dir: 647-833-4998
All are HONDA Certified Used Vehicles
2240 Markham Road (at Finch), Scarborough
www.formulahonda.com
Email: rajah@formulahonda.com
FORMULA HONDA'S
2010
LAST CHANCE
CLEARANCE EVENT
CASH REBATES UP TO
$6,000
ON SELECTED MODELS
OR
PURCHASE FINANCING
AS LOW AS
0.9%
UP TO 60 MONTHS ON SELECTED MODELS
PURCHASE 4 SNOW TIRES THIS OCTOBER AND GET A $50 INSTANT REBATE & $70 MICHELIN REBATE
WINTER TIRES $89
WINTER TIRE & RIM PKG. $670
BUY USED FROM FORMULA HONDA.
ONE OF THE TOP VOLUME CERTIFIED HONDA DEALERS IN CANADA!
HONDA Certified Used Vehicles
ONE ONLY! HURRY!
07 HONDA CIVIC SI
MANAGER SPECIAL
SPECIAL REDUCED PRICE
$17,995
1.9% 24 MOS. 30 UNITS IN STOCK
08 HONDA CIVIC DX-G
MANAGER SPECIAL
SPECIAL REDUCED PRICE
$15,299
1.9% 24 MOS. 20 UNITS IN STOCK
08 HONDA ACCORD
MANAGER SPECIAL
SPECIAL REDUCED PRICE
$19,299
1.9% 24 MOS. 10 UNITS IN STOCK
05 HONDA CRV EX
MANAGER SPECIAL
SPECIAL REDUCED PRICE
$15,299
1.9% 24 MOS. 10 UNITS IN STOCK
06 HONDA CIVIC LX COUPE
MANAGER SPECIAL
SPECIAL REDUCED PRICE
$12,804
1.9% 24 MOS. 20 UNITS IN STOCK
08 HONDA ACCORD EX-L
MANAGER SPECIAL
SPECIAL REDUCED PRICE
$25,995
1.9% 24 MOS. ONE IN STOCK
06 HONDA CIVIC DXG
MANAGER SPECIAL
SPECIAL REDUCED PRICE
$10,995
1.9% 24 MOS. 10 UNITS IN STOCK
08 HONDA CIVIC SPORT
MANAGER SPECIAL
SPECIAL REDUCED PRICE
$16,995
ONE ONLY IN STOCK
08 HONDA FIT SPORT
MANAGER SPECIAL
SPECIAL REDUCED PRICE
$15,995
1.9% 24 MOS. 10 UNITS IN STOCK
07 HONDA ACCORD
MANAGER SPECIAL
SPECIAL REDUCED PRICE
$19,995
5 DAY CARNIVAL CRUISE FOR TWO!
WITH PURCHASE* OF A HONDA CERTIFIED VEHICLE!
Carnival
30 Years of Fun

உலகப் புகழ் பெற்ற

# சைக்கிள் பிராண்ட்
# அகர் பத்திகள்




**சகல சமய நிகழ்வுகள், மங்கல வைபவங்கள், பிராத்தனைகள்,**
**இல்ல வழிபாடுகள், போன்ற அனைத்துத் தேவைகளுக்கும்**

## நீடித்த நறுமணம் தரும்
## சைக்கிள் பிராண்ட் அகர் பத்திகளை

**கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்**

*இப்போது சகல வர்த்தக நிறுவனங்களிலும் கிடைக்கிறது.*

விற்பனைப் பிரதிநிதி:
**URUTHIRA BROTHERS LTD.**
**Tel: 416 412 4427**

இறக்குமதியாளர்கள்/மொத்த விற்பனையாளர்கள்
**Fernando Enterprises Inc.**
**90 Hymus Road, Unit 1**
**Scarborough, ON. M1L 2C9**
**Tel: 416 615 4446**



உங்களின் சுதந்திரமான முடிவுக்கு...
RBC
RBC Royal Bank
Mayuran Ketheeswaran
Mobile Mortgage Specialist
Royal Bank of Canada
Cell : 416 823 4479
Fax : 416 444 4433
mayuran.ketheeswaran@rbc.com




Free market evaluation of your house
Woodbine & 16th
4+2 Bedrooms, 4 Washrooms
$ 689,000
McCowan & Hwy 7
4+2 Bedrooms, 4 Washrooms
$ 469,900
Donmills & Steeles
4 Bedrooms, 4 Washrooms
$ 619,900
Brook & Hwy 2
4+3 Bedrooms, 4 Washrooms
$ 389,900
Old Finch & Morningside
4+2 Bedrooms, 5 Washrooms
$ 499,000
Morningside & Finch
4 Bedrooms, 3 Washrooms
$ 359,000
Westney & Mcgill
4+2 Bedrooms, 4 Washrooms
$ 369,900
McCowan & Steeles
2+1 Bedrooms, 2 Washrooms
$ 212,000
Thickson & Tauton
4 Bedrooms, 4 Washrooms
$ 469,900
McCowan & Steeles
2+2 Bedrooms, 2 Washrooms
$ 215,000
Bathurst & Lakeshore
1 Bedroom, 1 Washroom
$ 335,000
Bur Oak & 9th Line
2 Bedrooms, 3 Washrooms
$ 348,000
RE/MAX®
Crossroads Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Not intended to solicit buyers/ sellers under representation agreement
Yathavann Selvarajah
Sales Representative
Dir : 416-992-4474
Office : 416-491-4002
www.universalagent.ca



Enjoy Caribbean for
From $199.00 + Taxes
Varadero $ 199.00 + Taxes
Cayo Coco $ 199.00 + Taxes
Holguin $ 199.00 + Taxes
Santa-Lucia $ 249.00 + Taxes
Puerto Plato $ 199.00 + Taxes
Punta Cana $ 199.00 + Taxes
The prices effective from Nov. 16-22, 2010
Toronto - Washington - Doha - Colombo $850 + Tax
QATAR AIRWAYS
Toronto - London - Colombo $1375 + Tax
SriLankan Airlines
Toronto - Brussels - Chennai $749 + Tax
JET AIRWAYS
Toronto - Abudhabi - Chennai $725 + Tax
الإتحاد ETIHAD AIRWAYS
Toronto - London - Bahrain - Colombo $849 + Tax
طيران الخليج GULF AIR
Toronto - London - Bahrain - Chennai $869 + Tax
طيران الخليج GULF AIR
- digi Media -
SriLankan ETIHAD Emirates FLY KINGFISHER
JET AIRWAYS QATAR AIRWAYS KUWAIT AIRWAYS GULF AIR
TICO 50012691
IATA
www.serandibtravel.com
Serandib Travel
Your satisfaction is our success
2075 Lawrence Ave, E, Suite 202,
Toronto, ON
(Warden & Lawrence)
416.750.0009
7 Eastvale Drive, Unit 207
Markham, ON
(Markham & Steeles)
905.201.6660
New Location
Montréal : 514-448-1389, Calgary: 403-770-9647, Ottawa: 613-482-6590
Vancouver: 604-625-0495, Mississagua: 905-564-7564
* Above fares are seat sale fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of the seats. Taxes vary from $210 - $465.

# பாலி தீவின் பண்பாடு

எதற்கெடுத்தாலும் பயம் என்பது நம்மோடு ஒட்டிப் பிறந்துவிட்டது. ஊரில் ஆமிக்காரர்களுக்கு பயந்தார்கள். வரும் வழியில் Immigration காரர்களுக்குப் பயந்தார்கள். வந்து இறங்கிய பிறகு Hearing வருகிறதென்று பயந்தார்கள். எல்லாம் முடிந்து Citizen எடுத்தாகிவிட்டது, கனடாவை விட்டு எங்காவது போய் வாருங்கள் என்று சொன்னால் ஒரு நடுக்கம் தொடங்கிவிடும். பக்கத்தில் இருக்கும் USAக்கு போய்வாருங்கள் என்றால் "ஐய்யோ US Immigration கெடுபிடியாம்" என்று அலறுகின்றார்கள்.

இனி என்ன கையைப்பிடித்தா கூட்டிப் போவது. இந்த விசயத்தில் நமது அடுத்த தலைமுறை 10 அடி முன்னால் பாய்ந்து போய்விடும். காலப்போக்கில் மேளதாளம், மணவறை, மந்திரம், ஐயர் என்று இருக்கும் பாரம்பரிய முறைகள் மறையத் தொடங்கிவிடும்.

இப்படி எல்லாமே நம்மைவிட்டு கைநழுவி போகத் தொடங்கிவிட்ட நிலையில் கட்டாயமாக எல்லோருமே உல்லாசப் பிரயாணம் சென்று மனத்தை அமைதிப்படுத்தும் நிலையொன்று தோன்றிக்கொண்டிருக்கிறது.


சரி மலேசியா உல்லாசப் பிரயாண சபையின் (Toursim Malaysia) அழைப்பின் பேரில் மலேசியா சென்ற போது பக்கத்தில் இருக்கும் தாய்லாந்தையா அல்லது இந்தோனேசியாவில் இருக்கும் Baliயையா போய்ப் பார்ப்பது என்றவுடன் அப்பப்பா வேண்டாத வேலை இரண்டு நாட்டிலும் எந்த நேரமும் 'குண்டு வெடிக்கும் சூழ்நிலை உண்டு என்று அண்டை நாடுகள் வகுத்த எச்சரிக்கை Noticeகளை email பண்ணினார்கள்'. சொல்லிவிட்டுச் போவதால் தான் பிரச்சினை சொல்லாமல் நடையைக் கட்டுவது தான் புத்திசாலித்தனம் என்று தீர்மானித்து 'பாலி'யை நோக்கிய பயணம் ஆரம்பமாகியது.

Bali தீவு இந்தோனேசியாவில் அமைந்திருக்கும் ஓர் அழிகிய தீவு. The Island of Gods என்று அழைக்கப்படுவதை கேட்டவுடனேயே ஓர் ஆன்மீக உணர்வு அப்பிக் கொண்டது. 3,559,000 சனத் தொகையைக் கொண்டதீவு என்னும் போது ஆச்சரியமாக இருக்கிறது. இதிலும் ஆச்சரியம் என்னவென்றால் இந்தோனேசியாவில் பெரும்பான்மை இந்துக்கள் (Hindus) வாழும் தீவு இதுவென்பது ஆச்சரியமான விசயம். 93.2% சனத்தொகையினர் Balinese Hinduism மதத்தை சேர்ந்தவர்கள் மிகுதியானவர்கள் முஸ்லிம்களே. இந்தோனேசிய நாட்டின் மிகப் பெரும்பாமையான உல்லாசப் பிரயாணிகள் Bali தீவை பார்க்கவே வருகின்றார்கள்.

Bali தீவின் கலாச்சர முறை இந்தியா சீனா ஆகிய இரண்டு நாடுகளை தளுவியதாக இருக்கின்றது பலரது பெயர்களும் இராமாயணத்தை ஒத்த, Rama எனப்படும் பெயர்களை இடைச்சொருகலாக கொண்டனவாக இருக்கின்றன. இராமயாணத்தை இங்கேயிருந்து தான் Bali மக்கள் ஆரம்பிக்கின்றார்கள் இராம பிரான் ஆட்சிபீடம் இங்கே அமைந்திருந்தாக சான்றுகளைக் காண்பிக்கின்றார்கள். இங்கே இருக்கின்ற Hotelகள் Villa எனவே அழைப் படுகின்றது. பல Villaகளும் இராமாயண பெயர்களை ஒத்ததாக காணப்படுகின்றன. உதாரணத்திற்கு சொல்வதானால் அயோத்தியா Villa கிட்டத்தட்ட ஒரு நாள் தங்கும் பணமாக $10,000 அமெரிக்க டொலர்கள் கட்டணமாக அறவிடுகின்றார்கள். எல்லா Villaகளுமே கடற்கரையை அண்டியபடி தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. காலையில் சூரிய உதயத்தின் போது பல உல்லாசப் பிரயாணிகள் தியான முறையில் உட்காந்திருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

நாம், நம் நாட்டை விட்டு வந்து இங்கே கனடாவில் என்னத்தை தொலைந்தோமோ அதனை அங்கே கண்டபோது கண்களில் கண்ணீர் சிதறியது. கூட்டுக் குடும்பமாக சகோதரப் பாசத்துடன் தனது தாய் தந்தையை கடவுள்களாக மதித்து தம்மோடு பாதுகாப்பாக வைத்திருப்பதை கண்ட போது உடல் சிலிர்த்தது. ஏன் கூட்டுக் குடும்பமாக வாழ்கின்றீர்கள் என்றபோது "அவர்கள் எங்களுக்காக வாழ்ந்தார்கள், நாங்கள் இப்போ அவர்களுக்காக வாழ்கின்றோம்" என்ற போது என்நெஞ்சை சம்மட்டி கொண்டு அடிப்பது போல் இருந்தது. ஈழத்தில் நாம் அயல்வீடுகளுக்கு எந்தவித கேள்வியும் இல்லாமல் எந்த நேரத்திலும் போய் உறவாட முடிந்ததோ அதே பாணியில் தான் Bali மக்கள் வாழுவதை பார்த்தபோது நாம் தொலைத்துவிட்டதை எண்ணி மனம் குறுகியது.

திரும்பிய பக்கமெல்லாம் ஒவ்வொரு வீடும் ஆலயங்களாகவே மதிக்கப்படுகின்றன. அவர்கள் ஆலயங்கள் அமைத்து 3 நேரமும் நல்ல ஆவி (Good Spirits) தம்மை வழி நடந்த வழிபாடு செய்கின்றார்கள். இதனால்தான் அங்கே பாலங்களோ அல்லது உயரமான கட்டிடங்களோ கட்டுவது இல்லை. காரணம் இந்த ஆயிரக் கணக்கான ஆலயங்களுக்கு



மேலாக எதுவும் எழுப்பக்கூடாது என்பது இங்குள்ள இந்துக்களின் நியதி. நான்கு பிரதான ஆலயங்களான Tanah Lot, Besakih, Ulu Watu, Ulu Danu, என்பவை உல்லாசப் பிரயாணகளால் நிரம்பி வழிகின்றன. Baliஇன் பிரமாண்டமானதும் புனிதமானதுமான ஆலயமாக Gura Besakih அழைக்கப்படுகின்றது. இது Mother Temple (அம்மன் ஆலயம்) என்று தான் இங்குள்ளவர்களால் சொல்லப்படுகின்றது.

இந்துப் புதுவருடப் பிறப்பு இங்கே கோலாகலமாக கொண்டாடப்படுகின்றது. பல ஆல யங்கள் பாசிபடர்ந்து கிடக்கின்றது. தாம் வருடத்தில் ஒரு தடவைதான் இங்கே திரு விழா நடத்துவதாக குறிப்பிடும் இவர்களிடம் "இப்படி பாசி படர்ந்து இருக்கிறதே" என்று நான் கேள்வி எழுப்பிய போது "அதுவா திருவிழா காலங்களில் அவற்றை துணியால் மூடி (வெள்ளை கட்டுதல்) கட்டி மறைத்து விடுவோம் என்கின்றார்கள். முக்கியமான திருவிழாக் காலங்களில் Ramayana (இராமாயணம்) நாடகம் அரங்கேற்றப்படுகின்றது.

இவை மட்டுமன்றி சாதி பாகுபாடு மிகத் தீவிரமாக இங்கே கடைப்பிடிக்கப்படுகிறது. சக்திரியன், பிராமணன் என்று தமது சாதிகளை குறிப்பிடும் இவர்கள் குறைந்த சாதியினரை உயர்ந்த சாதியினர் தமது கூலி வேலைகளுக்கு பயன்படுத்துகின்றனர். இதைக் கண்டபொது 80களில் ஈழத்தில் வாழ்ந்த வாழ்க்கை முறை மனதில் படமாக ஒடியது. மிகத் தீவிரமாகவும் கண்டிப்பாகவும் தமது சாதி வேற்றுமையைக் காட்டுவதில் அவர்கள் எந்த தயக்கமோ கூச்சமோ காட்டவில்லை. "இது எதற்காக" என்கின்ற போது அது அப்படித்தான் என்று அகங்கரமாக பதில் வருகின்றது.

பணத்தை சேமிப்பதை பார்க்கின்ற போது சுரீரென்று உறைத்தது. இங்கே நாம் Car, Mortgage போன்றவற்றிற்கு பணம் சேமிப்பது போல் அவர்கள் எதற்கு பணம் சேமிக்கின்றார்கள் என்பதைச் சொன்னால் வாயில் கை வைப்பீர்கள். ஒவ்வொரு வரும் தமது குடும்ப செத்த வீட்டுச் செலவுக்காகவே பணத்தை சேமிக்கின்றார்கள். செத்த வீட்டை தமது உறவுகளை எல்லாம் அழைத்து பெரும் செலவில் ஒரு விழாவாகவே விருந்து கொடுத்து ஒரு பெரும் கொண்டாட்டமாகவே செலவிடுகின்றார்கள். நாம் வாழும் போது பணத்தை செலவு செய்கின்றோம் அவர்கள் தமது இறப்புக்காக செலவு செய்கின்றார்கள். இந்து குருக்கள்மார் செத்தவீட்டு ஒழுங்குகளைக் கவனிக்கின்றார்கள். இந்து முறைப்படி செய்யப்படும். இறுதிக் கிரியையின் போது விருந்து கொடுத்து வந்திருப்போரை கௌர வித்து விழாவாகவே இங்கே இறப்புக் கொண்டாப்படுகின்றது.

மொத்தத்தில் 20,000 Puras (Temples) இங்கே காணப்படுகின்றன. இதனால்தான் Baliஐ 'Island of a Thousand Puras' என்றும் அழைக்கின்றார்கள். முக்கியமாக மொழியாக Balinese



திரு மகேசன்

பேசப்படுகின்றது. Baliஇன் உல்லாசப் பிரயாண சுலோகமாக "Bali Shanti Shanti Shanti" என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்படுகிறது. அதாவது Bali என்றால் அமைதி அல்லது சாந்தம் என்று கொள்ளலாம்.

மிக முக்கியமாக நமது நாட்டில் இருப்பது போல் தாம் பிறந்த இடத்தில் நெருக்கமான உறவுகளை பேணி வருகிறார்கள். தொலை விலிருந்து வந்து தமது ஊர் என்று பெருமையாக உறவு கொண்டாடி சமய சடங்குகளையும் நிறைவேற்றி செல்வதோடு தமக்குள் இந்தியாவிலிருப்பது போல் கட்டப்பஞ்சாயத்து முறைபோல் இதிலிருந்து தவறுபவர்களை தமது பாரம்பரிய தண்டனைக்கு உட்படுத்தி தமது ஊர் வழக்கத்திலிருந்து தள்ளிவைப்பதை பார்த்த போது ஆச்சரியமாக இருந்தது. தமது பிறந்த மண்ணை மதிக்காதவர்கள் நமக்குத் தேவை இல்லை என்று முறைப் பாகவே அந்த இடத்தில் ஒரு முதியவர் சொன்னபோது ஒரு கணம் திடுக்கிட்டுவிட்டேன்.

இலங்கையின் மலைகளில் எம் கண்களைக் கவர்ந்திழுத்த பச்சைப் பசேல் என்ற படிக் கட்டுப் பயிர்ச் செய்கை இங்கே கொடி கட்டிப் பறக்கிறது. Tagallalang கிராமம் Baliஇன் மத்தியிலிருக்கிறது. இங்கே தான் உல்லாசப் பிரயாணிகள் படிக்கட்டுப் பயிர்ச் செய்கையை காணப் படையெடுக்கின்றார்கள். ஆற்றின் அருகே எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேலென்று காட்சி தரும் வயல்களில் எருமை மாடு கொண்டு உழவு செய்வதை காண மகிழ்ச்சியாக இருக்கிறது. நம் நாட்டில் தொலைத்து விட்டதை இங்கே காசு கொடுத்து விமானம் ஏறி வந்து பார்க்க வைக்கின்றார்களே என்ற போது வயிறு பற்றி எரிந்தது.

நெற் பயிர்ச் செய்கையில் கொடி கட்டிப் பறக்கும் bali உழவர்கள் தமக்குள் விவசாயக் குழுக்களை அமைத்து தண்ணீர் பங்கிடுவதில் மிகக் கவனம் செலுத்துகின்றார்கள். யாருக்கும் அதிகம் தண்ணீர் பாய்ந்துவிடாது கண்ணும் கருத்துமாக பார்த்து எல்லோரும் பயன்படும் வகையில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதைப் பார்க்க பூரிப்பாக இருந்தது.

உணவு வகைகளைப் பொறுத்தவரை எந்தவித பிரச்சினையுமில்லை. உல்லாசப் பிரயாணிகள் விரும்பி வருவதால் சகலவித சர்வதேச உணவு வகைகளும் இங்கே பரிமாறப்படுகின்றன. பல இடங்களில் நமக்கு சுவையான சோற்றொடு கறி வகைகளையும் பறிமாறி நம்மை ஆச்சரியத்தின் விளிம்புக்கே கொண்டு சென்று விடுகின்றார்கள். கடற்கரைகளுக்கே கொண்டு வந்து பரிமாறி சந்தோசப்படுத்துகின்றார்கள்.

Baliக்கு புறப்பட முன் Internetஇல் உங்கள் Hotel (Villa) வசதிகளை Book பண்ணிச் செல்வது அவ்வளவு உசிதமல்ல. காரணம் அங்கே சென்ற பின் Rate விபரங்களை பார்க்கும்போது மிகப் பெரிய வித்தியாசயம் தெரிகின்றது. காரணம் பல போலி Internet பதிவளர்கள் மிக மலிவாக எமக்கு விலையை காட்டுகின்றார்கள். ஆனால் Book பண்ணி விட்டு அங்கே சென்றதும் விலைவித்தியாசத்தால் மாட்டுப்பட்டு விட வேண்டிய நிலை ஏற்படும்.

வாழ்க்கையில் நிச்சயம் ஒரு முறை சென்று பார்க்க வேண்டிய இடம் Bali திரும்பிய பக்கமெல்லாம் அழகிய மலர்கள் கண்ணைப் பறிக்க அதன் வாசனை விமானம் ஏறுமட்டும் நம்மில் கமகமக்கிறது. மீண்டும் கட்டாயம் ஒருமுறை திரும்பி வரவேண்டும் என்ற எண்ணத் தோடு என்னை விமானமேற்றிய முதலாவது நாடு Bali என்றால் அது மிகையில்லை.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

# குளிர்காலம்: பராமரிப்பும் பயன்பாடும்



ஜெறாட் றட்ணராஜா
- Energy Advisor -

## குளிர்காலம் நெருங்குவதற்கு முன் உங்கள் வீட்டை எப்படி தயார்படுத்த வேண்டும்?

குளிர்காலத்தை எப்படியும் நம்மால் சமாளிக்க முடியும் என்று நாம் நம் மனதில் நினைத்துக் கொண்டாலும் எப்போதும் நாம் சில விடயங்களை கவனிக்கத் தவறிவிடுகிறோம். வீட்டின் வெளியே உள்ள இடத்தை குளிர்காற்று, பனிபொழிவு மற்றும் ice ஆகியன தாக்கிய பிறகு தான் நாம் அதைபற்றி கவலைப்பட ஆரம்பிக்கிறோம். குளிர்காலத்தை நீங்கள் திறனுடன் சமாளிக்க கீழ்வரும் எளிய பட்டியல் உங்களுக்கு உதவும்.

## ஜன்னல்களும் மற்றும் கதவுகளும் (Windows and Doors):

- ஜன்னல்கள் மற்றும் கதவு சட்டங்கள் (Door frames) ஆகியவற்றை சுற்றியிருக்கும் Weather strippingகளில் ஏதாவது கசிவுகள் இருந்து வெப்பம் வெளியேறுகிறதா என்பதை நான்கு பரிசோதனை செய்யுங்கள். தேவைப்பட்டால் புதிய weather strippingஐ பொருத்துங்கள்.
- அனைத்து புறக்கதவுகளுக்கு Screen doorகளை மாற்றி storm doorகளை பொருத்துங்கள்.
- அனைத்து ஜன்னல்களுக்கும் Screen Windowக்களை மாற்றி Storm windowகளை போடுங்கள்.
- ஜன்னல்களிலுள்ள பலகை சட்டங்கள் (Wooden Window frames) கெட்டுபோய் அல்லது அரித்து போய் உள்ளனவா என்று சோதியுங்கள். அவை சரியான கட்ட அமைப்புடன் இருக்கும் படி புதிதாக மாற்றுங்கள்.
- ஜன்னல்கள் மற்றும் கதவுகளை சுற்றி இருக்கும் பகுதியில் தேவைப்படும் பழுதுகளை தீருங்கள். உட்புறம் மற்றும் வெளிப்புறம் வழியே வெளியேறும் வெப்பத்தை தடுக்க கோக்கிங் பூசுங்கள் (Caulk).
- ஜன்னல்களில் ஏதாவது ஓட்டைகள், உடைந்த கண்ணாடிகள், அல்லது இடைவெளிகள் (gaps) உள்ளனவா என்பதை நன்கு சோதித்து, பழுது தீருங்கள் தேவைப்பட்டால் புதியதை பொருத்துங்கள்.

## Heating, Ventilating and Air-conditioning (வெப்பமாக்குதல், காற்றோட்டம் உண்டு பண்ணுதல் மற்றும் குளிரூட்டுதல்)


புகைப்போக்கி மற்றும் அதன் அமைப்புகளில் ஏதாவது கரிப்புகை அல்லது கீல் எண்ணெய் (soot or creosote) உள்ளனவா என்பதை பரிசோதனை செய்யுங்கள். அவற்றை நன்கு சுத்தப்படுத்துங்கள். அவற்றில் ஏதாவது ஓட்டைகள் அல்லது இடைவெளிகள் இருந்தால் அவைகளை அடைத்து தீ விபத்தை தவிர்த்து விடுங்கள்.

Fire Placeல் உள்ள பழுதுகளை திருத்துங்கள். Damper மூடியிருந்தபோதிலும் அது குளிர்ச்சியாக இருந்தால் damper சேதமடையவோ அல்லது துருப்பிடிக்கவோ செய்திருக்கலாம். புகைப்போக்கி குழாயில் காற்று நுழையாமல் இருக்க ஒரு Chimney ballonஐ flueன் உள்ளே விட்டு காற்றை தடுத்துவிடுங்கள். காற்று கசிந்தொழுகிறதா என்பதை நன்றாக சோதித்துப் பாருங்கள். ஒரு Energy audit பரிசோதனை செய்வதன் மூலம் வீட்டிலுள்ள காற்றுக் கசிவுகளைக் கண்டுபிடிக்க முடியும்.

உங்கள் furnaceல் உள்ள காற்று வடிகட்டியை (air filter) சுத்தம் செய்யுங்கள் அல்லது புதிதாக மாற்றுங்கள்.

உங்கள் மத்திய humidifierஐ சுத்தம் செய்யுங்கள். அத்தோடு evaporator padஐ புதிதாக மாற்றுங்கள்.

ஏதாவது hot water radiatorகளில் உள்ள Bleed Valveகளின் உள்ளே காற்று அடைபட்டு இருந்தால் அதை வெளியேற்றிவிடுங்கள்.



Smoke alarmகள் மற்றும் carbon monoxide detectorகள் ஆகியன நன்கு வேலை செய்கின்றனவா என்பதை சோதித்துப் பாருங்கள்.

வெப்பம் வெளியேறுவதைத் தடுக்க ஜன்னல்களில் உள்ள air conditionerகளை insulated linerகள் கொண்டு மூடுங்கள் அல்லது கழற்றி விடுங்கள்.

உங்கள் thermostat பழையதாகி விட்டால் வெப்பமாக்கும் செலவுகளை மிச்சப்படுத்த, அதில் ஒரு Programmable unitஐ பொருத்துங்கள்.

வெளியே காற்று செல்லாமல் தடுக்க வெளிப்புற சுவர்களின் மீதுள்ள Outletகள் மற்றும் Switch plateகளின் பின்பகுதியை foam insulating sheetகளால் மூடுங்கள்.

Switchஐ போட்டதும் கூரையில் பொருத்தப்பட்டிருக்கும் மின் விசிறிகளை மணிக்கூட்டு சுழற்சி முறையில் சுற்றும்படி செய்வது அவசியம். அப்போது தான் வெதுவெதுப்பான காற்று தரையை நோக்கி வீசும்.

hot water heater tank கின் அடியில் உள்ள கழிவுகளை (Sediment) அகற்ற flush செய்யுங்கள். Pressure relief valve நன்கு வேலை செய்கிறதா என்பதை கவனியுங்கள்.

Attic, basement மற்றும் Crawl spaceகளில் வெளியே தெரியும் குழாய்களில் (Ducts) ஏதாவது ஓட்டைகள் இருந்தால் ஒரு sealant மூலம் அவற்றை அடைத்துவிடுங்கள்.

## கூரை மற்றும் கழிவுக்குழாய்கள் (Gutters, Roof and Drains):

தண்ணீர் ஒழுகுவதற்கு முன் கூரைகளில் தவறியுள்ள அல்லது பழுதடைந்துள்ள shingleகளுக்கு பதிலாக புதியதை பொருத்துங்கள்.

புகைப்போக்கி, சுவர்கள், கூரை கண்ணாடிகள் மற்றும் காற்றுத் திறப்புகளிலுள்ள குழாய்கள் ஆகியன சேதமடைந்து இடைவெளிகள் ஏற்பட்டுள்ளனவா என்பதை கவனியுங்கள் அவைகளின் வழியே தண்ணீர் கசிந்து விடும் என்பதால் அவற்றை roofing cement மற்றும் ஒரு caulking gun கொண்டு அடைத்துவிடுங்கள்.

Gutterகள் மற்றும் downspoutகளை கெட்டியாகவும் மற்றும் பலமாகவும் இணைத்து வையுங்கள். இல்லையென்றால் பனிப்பொழிவு (snow) மற்றும் பனிக்கட்டிகளின் (ice) எடை gutterகளை விழுத்திவிடும்.

Gutterகளிலுள்ள அனைத்து குப்பைகளையும் அகற்றிவிடுங்கள். Downs Spouts வீட்டிலிருந்து வெளிப்பக்கம் குறைந்தது 5 அடியாவது வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் படி அமையுங்கள். அப்போது தான் வெள்ளம் மற்றும் பனி உருகுதல் (snowmelt) ஆகியவற்றினால் அத்திவாரம் (foundation) சேதமடைவதை தடுக்க முடியும்.

வீட்டைச் சுற்றியுள்ள முற்றம் மற்றும் மடைகள்(Court yard and Poolstorm drains)களில் கிடக்கும் இலைகள் மற்றும் குப்பைகளை அகற்றி, அடைப்புகளை நீக்கிவிடுங்கள்.

பூச்சிகள், பறவைகள் மற்றும் சிறுபிராணிகள் ஆகியன கூடுகட்டாதவாறும் உட்புகாதவாறும் தடுப்பதற்கு அவை அனைத்தையும் வலை கொண்டு மூடிவிடுங்கள்.

## பசும்புல்வெளி, தோட்டம் மற்றும் மேடான இடம் (Lawn, Garden and Deck):

வீடு மற்றும் மின்கம்பிகளிலிருந்து சற்று தள்ளி இருக்கும்படி நன்கு வளர்ந்திருக்கும் மரக் கிளைகளை வெட்டி ஒழுங்குப்படுத்துங்கள். அதனால் பனிப்பொழிவு மற்றும் குளிர்காற்றின் காரணமாக கிளைகள் அசைந்து வீட்டை சேதப்படுத்துவதை தடுக்கமுடியும்.

பசும்புல் வெளியில் (lawn) நன்கு காற்று புகவிடுங்கள். புல்கள் இல்லாத, அடர்த்தி குறைந்த இடங்களில் புல் விதைகளை விதைப்பதுடன் அதற்குரிய பசளைகளை (fertilizer) போடுங்கள். அப்போது தான் வசந்த காலத்தில் புல்செழித்து வளரும்.

வீட்டிற்கு அப்பால் சற்று வெளியே மழை அல்லது பனி வடிகால் (drain)களை அமைத்தால் அத்திவாரத்தில் (foundation) பாரிய பிரச்சினைகள் ஏற்படாது தவிர்க்கலாம். உங்கள் வீட்டிலிருந்து வெளியில், அழுக்குகள் வெளியேறும் வழி சாய்வாக இருக்கவேண்டும்.

வீட்டு வெளிப்புறத் தளபாடங்கள் (Patio furniture) சுத்தமாகவும் மற்றும் உலர்ந்தும் இருக்கவேண்டும். அவற்றை ஒரு கனத்த tarp கொண்டு மூடவோ அல்லது அவற்றை ஒரு shed அல்லது garageன் உள்ளேயோ வைத்துப் பாதுகாக்க வேண்டும்.

தாவரங்கள் நிற்கும் பகுதியிலுள்ள மண்ணை கிளறிவிடுங்கள். களிமண் சாடிகள் அல்லது அது போன்ற உடையகூடிய சாடிகளில் வளரும் தாவரங்களை வீட்டினுள் வளருங்கள். ஏனென்றால் Terracotta ஜாடிகள் குளிரில் வீங்கிப் புடைத்து உடைந்துவிடும். ஏனைய சாடிகளை பலகையின் மேல் சரித்து வையுங்கள்.

வசந்த காலத்தில் மறுபடியும் நடுவதற்கென மலர்க்கிழங்குகளை (Bulbs) கிழறியொடுத்து Peat Moss உடன் சேர்த்து ஒரு பையிலோ அல்லது பெட்டியிலோ பாதுகாத்து வையுங்கள்.

நீர்க்குழாய்களுடன் (Tap) இணைக்கப்பட்டுள்ள hoseகளை அகற்றிவிடுங்கள். குளிர்காலத்தின் கடுங்குளிரால் அவறில் வெடிப்புகள் ஏற்படாமல் இருப்பதற்கும் மற்றும் அவறின் பாவனை காலத்தை நீடிக்கச் செய்யவும், தண்ணீர் உறைந்து சேதம் விளைவிக்காமல் இருப்பதற்கு உள்ளிருக்கும் நீரை அகற்றியபின் அவற்றை ஒரு பாதுகாப்பான இடத்தில் வையுங்கள்.

வெளியில் உள்ள faucetகளை அடைத்து விடுங்கள். Pipe வெடித்துவிடாமல் இருப்பதற்கு வெளியே உள்ள pipeகள், Valveகள், மற்றும் Sprinkler headகளில் உள்ள தண்ணீரை வெளியேற்றி விடுங்கள்.

58ம் பக்கம் பார்க்க...

ENERGY AUDIT
Gerard Ratnarajah, P. Eng.
Tel: 647-206-4494
Green Innovations For Living

# ATTIC INSULATION

There are over 1 million homes without enough attic insulation!

## INSULATE YOUR ATTIC NOW

**For a limited time government will pay rebate for insulating your attic**

**+ Provincial (750) + Toronto (200) = $ 950**

from existing R-12 insulation to raise it up to R50

### How can attic insulation help me?

-Reduce the heat loss through attic

-Save on heating & cooling cost

-Prevent roof rot and mold in a well

-insulated & vented attic

Energy Audit செய்தபின் உங்கள் வீட்டின் Attic ஐ Insulate செய்வதனால் அரசாங்கத்திடமிருந்து rebate பெறுவதோடு மட்டுமல்லாமல் உங்கள் மாதாந்த கட்டணங்களையும் குறைத்துக்கொள்ளுங்கள்.

## Call for no obligation free quote

மேலதிக விபரங்களுக்கு அளையுங்கள்

ENERecon INSULATION

Tel 416-847-7171 | Fax 416-847-7181 | info@enerecon.com

Stay warm in winter. Be cool in summer

# IMHOவும் செயற்பாடுகளும்

நலம் காப்போம் - 4

- மணிமைந்தன் -

தாயகத்தில், போரின் பின்னான அவல நிலையிலிருந்து எமது மக்களின் துன்ப நிலையினை மாற்ற IMHO எனும் அனைத்துலக மருத்துவ சுகாதார அமைப்பு தன்னாலான சகல முயற்சிகளையும் புலம் பெயர் மக்களின் பேராதரவுடன் தொடர்ந்தும் முன்னெடுத்து வருவது நாம் யாவரும் அறிந்ததே. இந்த வகையில் கடந்த செப்டம்பர் மாதம் IMHOவினால் சில செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

Micro Credit Program என்ற சிறிய கடனுதவித் திட்டம் மூலம் மிகவும் மோசமான பாதிப்புக்குள்ளகியவர்களுக்கு புதிய தொழில் தொடங்க வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வரும் இத்திட்டம் அவர்களை அவர்களின் சொந்தக் காலில் நிற்பதற்கும் அவர்கள் வாழ்வை வளமாக்குவதற்கும் உறுதுணை புரியுமென்பதும் என்பதும் மறுப்பதற்கில்லை.

நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தினால் சேகரிக்கப்பட்டு IMHOவிற்கு வழங்கப்பட்ட 5,000 டாலர்களுடன், IMHO அதற்கு சமமாக 5,000 டாலர்களை வழங்கி நெடுந்தீவு வைத்திய சாலைக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்திருந்தனர். நெடுந்தீவுச் சங்கத் தலைவர் அவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் RDHS (Regional Director for Health Services) Dr கேதீஸ்வரன் அவர்களைச் சந்தித்தும் அறிந்து கொண்டார். இதற்கும் மேலாக IMHO புதிய முச்சக்கர வண்டியொன்றையும் ($3500 ) வழங்கியது. நோயாளர்களை கொண்டு செல்ல இது பயன் படுகிறது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இதயப் பரிசோதனை இயந்திரம் (Cardiac Monitor) ஒன்றை 1,000 டாலர்கள் செலவில் கொள்வனவு செய்து கொடுத்தனர். மேலும் இரண்டு கிராமங்களுக்கு இதயப் பரிசோதனை இயந்திரமும் (ECHO), சிறுநீரகப் பரிசோதனை இயந்திரமும் (Renal Dialysis Machine)உம் $42,000 செலவில் அமைத்து இருதய நிபுணர் வைத்திய கலாநிதி அருள்நிதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மாரடைப்பு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிக தூரத்திலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் போது மரணமடையும் சந்தர்ப்பம் அதிகமாகும். இதனைத் தடுக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட இந்நிலையத்தால் பல பேர் மரணத்தின் பிடியில் இருந்து தப்பியுள்ளனர்.

95ஆம் ஆண்டில் யாழிலிருந்து வெளியேறி வன்னிக்கு இடம்பெயர்ந்தோர் போர் முடிவுற்றதால் மீண்டும் யாழ் நகரில் குடியேறியுள்ளனர். இப்படி கோப்பாயில் வசிப்பவர்களின் சொந்த வீடுகளில் மலசல கூடங்கள் இடிந்து போன நிலையில், 100 பேருக்கு $37,000 செலவில் மலசல கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை மன நோயாளர் மருத்துவமனைக்கு $6,700 செலவில் உபகரணங்கள் வழங்கப் பட்டன.

பல வருடகாலமாக மேட்கொள்ளப்பட்டுவரும் மகாசக்தி பெண்கள் அமைப்பின் ஊடாகவும், புளியங்குளம் யோகசக்தி பெண்கள் அமைப்பின் ஊடாகவும் தலா 5,000 டொலர்கள் வழங்கப்பட்டுள்ளது. இழந்து போன வாழ்விலிருந்து மீண்டு எழ உதவும் இந்த கடனுதவியை ஏராளமான மக்கள் எதிர்பார்த்திருக்கும் நிலைமைதான் இருக்கின்றது. இந்த கடனுதவியை ஒரு நீண்ட கால திட்டமாக IMHO செயற்பட்டு முழு மக்களினதும் வாழ்விலும் தன்னிறைவு ஏற்படுத்த முடிவு செய்திருக்கின்றது.

யாழ்பாணத்தில் புற்று நோயாளர்களுக்கான சத்துணவுத் திட்டத்திற்கு $2400 செலவிடப்பட்டுள்ளது.

மூளை வைத்தியசாலையின் மேற்பார்வையில்






கர்ப்பிணித் தாய்மாருக்கான சத்துணவுத்திட்டத்தின் படி தெல்லிப்பளையில் $3500 செலவில் சத்துணவு வழங்கப்பட்டது. மற்றும் அளவுக்கு மீறிய மதுப் பழக்கத்தால் மனநிலை பாதிப்புக்குள்ளானவர்களுக்கான மருத்துவ சிகிச்சை நிலையத்திற்கு $3500 வழங்கப்பட்டது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் IMHOவினால் ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையம் தான் இலங்கையிலேயே இருந்கின்ற ஒரேயொரு நிலையமாகும்.

Micro Credit Program மூலமாக கிளிநொச்சி $8,000 செலவில் வட்டுக்கோட்டை, சங்கானை, காரைநகர், சண்டிலிப்பாய், பிரதேசங்களில் நடமாடும் வைத்திய நிலையம் செயற்படுகின்றது. போக்குவரத்து வசதிகளற்ற பெரும்பாலானவர்கள் மிகவும் பயனடையும் திட்டமாக இது அமைகின்றது.

உடல் அங்கங்களை இழந்தவர்களுக்கான சக்கர நாற்காலிகளுக்காக யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு $3,000 வழங்கப்பட்டது. கொடிய போரின் தீராத காயமாக இருக்கப்போவது இந்த அங்கவீனக் குறைபாடு தான். பாதிக்கப்பட்டிருக்கும் மனிதர்களில் கடைசி மனிதனுக்கு செயற்கை கை, கால் பொருத்தும் வரை IMHO அமைப்பு தனது சேவையை தொடரும். இதனை ஒரு பெரும் சவாலாகவே தமக்குள் எடுத்திருக்கும் IMHO, மக்களின் ஆதரவு விரைவாக கிடைக்குமானால் விரைவிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளனர்.

சுனாமியின் பதிப்பின்போது எப்படி அனைத்துலகமும் உதவியதோ அது போலவே மனித நேய அடிப்படையில் பூகம்பம் ஏற்பட்டு அழிந்து போன Haiti நாட்டிற்கு $5,000, நீண்ட போரின் பின் பட்டினியால் வாடும் எதித்திரியாவிட்கு $25,000 பெரும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு பாதிப்படைந்த பாகிஸ்தானிய ஏழை மக்களுக்கு $5,000 எனவும் உதவியிருக்கின்றது.

ஆதரவு தரும் அனைத்து உள்ளங்களையும் IMHO நன்றியுடன் நினைவு கொள்கின்றது.

imho@thaiveedu.com

■ ■ ■

# குளிர்காலம்: பராம...

56ம் பக்கத் தொடர்ச்சி...

Mold மற்றும் Mildew வளர்வதை தடுப்பதற்கு பலகை deckகளின் இடையே விழுந்து கிடக்கும் இலைகள் அழுக்குகள் மற்றும் பயின் மரக்குச்சிகள் (Pine Needles) களை அகற்றி விடுங்கள்.

உங்கள் வீட்டின் வெளியில் உள்ள இடத்தில் போடப்பட்டிருக்கும் விளக்குகள் (Outdoor lighting) நன்றாக எரிகிறதா என்பதை சோதனை செய்யுங்கள். வெளிப்புறம் நல்ல வெளிச்சமாக இருந்தால் தான் இரவு நேரத்தில் பனிபடிந்து கிடக்கும் நடைபாதைகளில் (icy walkways)களில் விபத்துகள் ஏற்படுவது குறையும்.

Exterior stairsகளில் உள்ள hand rails நன்றாக உள்ளனவா என்பதை கவனியுங்கள்.

### கருவிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் (Tools and Machinery)

அனைத்து பருவகால கருவிகளையும் வீட்டினுள்ளே கொண்டு வாருங்கள். அவை துருப் பிடிக்காமல் இருப்பதற்கு அவற்றின் மீது தடிப்புக் குறைந்த எண்ணெயினை பூசி விடுங்கள்.

உங்கள் lawnmowerல் இருக்கும் மண், இலைகள், புல், சேறு மற்றும் குப்பைகளை அகற்றி சுத்தமாக வைத்திருங்கள்.

எளிதில் கையில் கிடைக்கும்படி உங்கள் snowblower மற்றும் shovelகளை garage அல்லது shedன் முன் பகுதியில் வைத்திருங்கள்.

Ice Chopperஐ கூர்மையாக்கி (Sharpen) வையுங்கள் வரப்போகும் பருவகால வேலைகளுக்கு snow shovelகள் ஏற்றதாக உள்ளனவா என்பதை உறுதி செய்யுங்கள்.

Snow blowerல் எண்ணெயை மாற்றுங்கள் மற்றும் புதிதாக spark plug பொருத்தி தயார் செய்து வையுங்கள்.

படிகள் நடைபாதைகள் மற்றும் வாகனப்பாதையில் போடுவதற்கு, அவற்றுக்கேற்ற, போதுமான அளவு உப்பு (Ice melt) உங்கள் கைவசம் இருக்கவேண்டும்.

மேற்கண்ட முன்னேற்பாடுகளை செய்துவிட்டீர்களா? உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள். நீங்கள் குளிர்காலத்திற்கு தயாராகி விட்டீர்கள்.

gerard.ratnarajah@thaiveedu.com

■ ■ ■

INTERNATIONAL MEDICAL HEALTH ORGANIZATION

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO)

துயர் துடைக்க விரும்புவோருக்கான பங்களிக்கும் முறைகள்:

1. தபால் மூல முகவரி: (காசோலையாக) "IMHO Canada", 5637 Finch Avenue East, Unit #7, Scarborough, ON M1B 2T9

2. இணைய த்தள மூலம் : www.imhocanada.org ⟶ Paypal

3. வங்கிக் கிரமக்கழிவு: இணையத்தளத்திலிருந்து அதற்கான படிவத்தை தரவிறக்கி நிரப்பி அனுப்பலாம் (Monthly contribution)

தொடர்புகளுக்கு: 416 321 9555; contact@imhocanada.org

RBC Insurance

# நிறுவனத்தின் காப்புறுதி இப்பொழுது மிகக் குறைந்த கட்டணத்தில் கிடைக்கிறது!!!

| Monthly Rates for 10 Year Term Insurance | | | |
|---|---|---|---|
| **Age** | **$250,000** | **$500,000** | **$1,000,000** |
| 30 | $11.25 | $15.39 | $25.20 |
| 35 | $10.35 | $15.84 | $25.56 |
| 40 | $13.23 | $19.35 | $33.48 |
| 45 | $16.29 | $24.21 | $42.30 |
| 50 | $23.58 | $37.89 | $68.58 |

Female Non Smoker Good Health and Prefered Rate

**Diabetic, Heart attack, Stroke, High blood pressure, cholesterol or decline from other companies**

## NO PROBLEM

| $20,000 | Age 40 Female |
|---|---|
| Company A | $23.42 |
| Company B | $39.71 |

**We will shop around and find the best Price**

## Choice is yours

- Rates are based on non-smoker status and may vary depending on health
- Also available 15-year, 20-year and 30-year term to 100, joint last survivor, tax-advantaged life and critical illness insurance
- Rates are guaranteed for the term period selected convertible and guaranteed renewable.



Royal Brokers Corporation

## Siva Kandiah

CEO & Managing General Agent

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com

RBC Insurance
Manulife Financial
Canada Life
Assumption Life
Industrial Alliance Insurance and Financial Services Inc.

சிறப்புத்தேவையுள்ள பிள்ளைகளை இனங்காணல் (Identifying Special Needs children)

# செவிப்புலனற்ற மற்றும் குறைபாடுடைய பிள்ளைகள்

## (Deaf and hard of hearing children)

ஜீவா திசைராஜா



தொடர் - 7

"அரிது அரிது மானிடராதல் அரிது. அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல்" என்று பாடினார் அவ்வையார். மானிடராய் பிறந்தாலும், குருடராய், செவிடராய், பெண்களாய் பிறந்தால் வாழ்தல் கடினம் என்பதே இதன் கருத்து. இது அவர் பாடிய காலத்திற்கு பொருந்தும். அவ்வளவு தூரத்திற்கு குருடர், செவிடர், பெண்கள் வாழ்வதற்கு கஷ்டப்பட்டிருப்பர். ஆனால் தொழில்நுட்பம் முன்னேறிய இந்த 21ஆம் நூற்றாண்டில் அங்கவீனங்களோ, புலன்குறைபாடுகளோ அல்லது பெண்களாய் பிறத்தலோ எந்த பாதிப்பையும் யாருக்குமே ஏற்படுத்துவதில்லை. எந்தக் குறைபாடுகளுமின்றி பிறந்தவர்கள் வாழத் தெரியாமல் தடுமாறுவதையும் அதே நேரம் குறைபாடுகளுடன் பிறந்தவர்கள் தன்னம்பிக்கையுடன் வீறுநடை போடுவதையும் நாம் எமது கண்கூடாகக் காண்கின்றோம். இதற்கு அவர்களது குறைபாடுகளை அவர்களோ மற்றவர்களோ இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கு வழிவகைகளை மேற்கொண்டிருத்தலே காரணமாகும்.

இக் கட்டுரையில் செவிப்புலனற்ற மற்றும் செவிப்புலன் குறைபாடுடைய பிள்ளைகளை எவ்வாறு இனங்காணுதல், அவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பதை நோக்குவோம். ஏனைய அங்கக் குறைபாடுகள் வெளிப்படையாகத் தெரிந்த போதிலும் ஒரு பிள்ளையைப் பார்த்த மாத்திரத்திலேயே அப்பிள்ளை செவிப் புலன் குறைபாட்டைக் கொண்டது என்று கூறமுடியாது. காது கேளாமை, உடலியல் துன்பத்தை ஏற்படுத்தாது. ஆனால் கேட்கும் சக்தியை இழந்து போகும்போது அது பிள்ளையின் வாழ்க்கையைப் பாதிக்கலாம்.

### கேட்கும் சக்தி இழத்தல் தொடர்பான சில புள்ளி விபரங்கள் சில பின்வருமாறு:

பிறக்கும் ஆயிரம் பிள்ளைகளில் ஒரு பிள்ளை கேட்கும் சக்தியற்று பிறக்கின்றது. அதே நேரம் வளர்ந்தோரின் வாழ்வின் எந்தப் பகுதியிலும் காது கேட்கும் தன்மையை அவர்கள் இழந்து போகலாம். இந்த நாட்டில், 18 வயதை விட குறைவான, நிரந்தரமாக செவிப்புலனை இழந்தவர்களாக 1 மில்லியன் பிள்ளைகள் உள்ளனர். அநேகமான மக்கள் தமது வாழ்வின் பிற்பகுதியில் செவிப்புலனை இழந்து போகிறார்கள்.

### பிள்ளைகளின் செவிப்புலன் இழப்பின் அறிகுறிகள்:

உங்கள் பிள்ளை வளர்ந்து வரும்போது அப்பிள்ளையின் கேட்கும் திறனில் ஏதாவது பிழையாக காணப்படுகின்றதா? பிள்ளையின் அருகில் நீங்கள் சத்தமாக பேசும்போது பிள்ளை மிகவும் ஆழ்ந்து நித்திரை செய்கின்றதா? மழலை ஒலிகள் கேட்காமல் போகிறதா (9 மாதங்கட்குப் பிறகு)?

### சாதாரணமாக காது கேட்டலின் அறிகுறிகள்:

உங்கள் பிள்ளை செவிப்புலனை இழந்து போகிறது என நீங்கள் நினைத்தால், உங்கள் வைத்தியருடன் கதையுங்கள். இதன்மூலமாக அநேகமான காது கேட்கும் குழந்தைகள் சத்தம் தொடர்பாக எந்த வயதுக் கட்டங்களில் எவ்வாறு பிரதிபலிப்பார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு பிள்ளையும் வித்தியாசமானது. இந்தக் குறிப்பிட்ட காலத்தில் பின்வருவன அனைத்தையும் எல்லாப் பிள்ளைகளும் செய்யும் எனக் கூறமுடியாது.

### பிறப்பில் இருந்து 3 மாதம் வரை:

- உரத்த சத்தங்களுக்கு பிரதிபலித்தல்.
- உரத்த சத்தங்களைக் கேட்டு கண்விழித்தல்.
- உங்கள் குரலைக் கேட்டு ஆறுதலடைதல்.
- பிள்ளை மெதுவாக ஒலி எழுப்ப ஆரம்பித்தல்.

### 3 மாதத்தில் இருந்து 6 மாதம் வரை:

- உங்கள் குரலைக் கேட்கும் போது அதற்கு பிரதிபலித்தல்.
- சத்தம் வரும் திசையை நோக்கி தனது தலையையோ அல்லது கண்களையோ திருப்புதல்.

> " ஒரு பிள்ளையைப் பார்த்தவுடனேயே செவிப் புலன் குறைபாட்டைக் கொண்டவர் என்று கூறமுடியாது. ஆனால், கேட்கும் சக்தியை இழக்கும்போது அது பிள்ளையின் வாழ்க்கையைப் பாதிக்கலாம். "

- ஒலியெழுப்பும் பொம்மைகளுடன் விளையாட விரும்புதல்.
- யாரும் கதைத்தால் புன்முறுவல் செய்தல்.
- வெவ்வேறு தேவைகள் எழும்போது வெவ்வேறு விதமாக அழுதல். உதாரணமாக பசியாயிருக்கும்போது அல்லது தேவைகள் மாறுபடும்போது வெவ்வேறுவிதமாக அழுகைக் குரல் எழுப்பல்.

### 6 மாதத்தில் இருந்து 12 மாதம் வரை:

- தனது பெயர் அழைக்கப்பட்டால் அதற்கு பிரதிபலித்தல்.
- அநேக வெவ்வேறான மழலை ஒலிகளை எழுப்பல்.
- அம்மா, அப்பா என சிறு சொற்களை விளங்கிக் கொள்வதோடு bye-bye என கை அசைத்தல். உங்கள் குரலின் தன்மை மாறுவதற்கேற்ப பிரதிபலித்தல்.

### 12 மாதமளவில்

- பிள்ளை தான் கேட்கும் சத்தங்களைப் போல் ஒலி எழுப்பும். எளிமையான வினாக்கட்கு விடையளிக்கும். தனது பெயரை இனங்காணும். "ஆம்", "இல்லை" என்றால் என்ன என்பதை விளங்கிக்கொள்ளும்.

### 12 மாதத்தில் இருந்து 18 மாதம் வரை:

- பிள்ளையிடமிருக்கும் பொம்மையை நீங்கள் கேட்டால் உங்களிடம் கொண்டு வந்து தரும்.
- பிள்ளையிடம் கேட்டால் உடலின் பாகங்களை தொட்டுக் காட்டும்.
- ஒலிகளை சேர்த்து குரலெழுப்பும்.
- அம்மா, வேண்டும், இல்லை என சில எளிமையான சொற்களைக் கூறும்.
- பிள்ளையிடம் நீங்கள் கூறும் சிறிய அறிவுறுத்தல்களை பின்பற்றும்.

### 18 மாதத்தில்:

- 50 சொற்களையாவது விளங்கிக் கொள்ளும்.

### 2 வயதில்:

- ஆம், இல்லை போன்றவற்றை விளங்கிக் கொள்ளும். வீடு அல்லது பாடசாலையில் பொதுவாக பயன்படுத்தும் சொற்களை பிள்ளை பயன்படுத்தும். எளிமையான வசனங்களை உருவாக்கிப் பேசும். செய்து காட்டாவிட்டாலும் கூட எளிமையான அறிவுறுத்தல்களைப் பின்பற்றும்.

### 2 ½ வயதளவில்:

- கிட்டத்தட்ட 270 சொற்களை பாவிக்கும். சிறிய கவிதைகள் அல்லது பாடல்களை சொல்லும் அல்லது பாடும். ஆர்வமுள்ள ஒலிகளை தேடும். அல்லது அவற்றைப் பற்றி மற்றவர்களுக்கு கூறும்.

### 3 வயதளவில்:

3-4 சொற்களுள்ள எளிமையான வசனங்களை உருவாக்கும். கிட்டத்தட்ட 1000 சொற்களை பயன்படுத்தும். ஒரு கதையைக் கூறக்கூடியதாக இருக்கும். தனது பெயரையும் குடும்பத்திலுள்ள மற்றவர்களின் பெயரையும் அறிந்து வைத்திருக்கும். பாடல்களைப் பாடும்.

இந்த வயதுக் கட்டங்களில் பிள்ளை இவற்றை செய்கின்றதா என அவதானியுங்கள். பிள்ளையில் எந்தக் குறைபாடுகள் இல்லாவிட்டாலும், பெற்றோர் கதை குறைவாக இருத்தல், அல்லது பெற்றோர் செவிப்புலன் குறைபாட்டைக் கொண்டிருந்தாலும் பிள்ளை அந்தந்த வயதுக்கட்டங்களில் தனது குரலை வேண்டியவாறு பயன்படுத்தாது. இதற்கு வைத்தியரை அணுகி கலந்தாலோசித்தல் நல்லது.

### செவிப்புலன் இழப்பின் வகைகள்:

வெவ்வேறு வகையான செவிப்புலன் இழப்புகள் காணப்படுகின்றன.

- உங்கள் உட்செவியினை ஒலி சென்று அடையாவிடின் அது கடத்தல் செவிப்புலன் இழப்பு (Conductive hearing loss) எனப்படும்.
- உட்செவி அல்லது கேட்கும் நரம்பு (Auditory nerve) வேலை செய்யாவிடில் sensorineural hearing loss எனப்படும்.
- Conductive மற்றும் sensorineural செவிப் புலன் இழப்பு காணப்படும்போது அது கலப்புற்ற செவிப்புலன் இழப்பு எனப்படும்.

இன்னொரு வகையான செவிப்புலன் இழப்பு ஒரு நபர் எவ்வாறு கேட்கிறார் என்பதை அடிப்படையாகக் கொண்டது.

ஒரு செவியில் மட்டும் கேட்கும் சக்தி இழந்து போனால் அது unilateral hearing loss எனப்படும். தொடர்ந்த செவிப்புலன் இழப்பு (Progressive hearing loss) என்பது காலப் போக்கில் செவிப்புலன் இழப்பு மோசமாகி வருவதைக் குறிக்கும். செவிப்புலன் இழப்பு மாறுபடும்போது அது தளம்பல் செவிப்புலன் இழப்பு (Fluctuating hearing loss) எனப்படும். இது சில சமயம் மோசமாக இருக்கலாம் அல்லது நன்றாக வரலாம். Central Auditory Processing Disorder (CAPD) என்பது உங்கள் பிள்ளையின் மூளை தனது காதுக்கு வரும் சமிக்ஞைகளை எவ்வாறு மொழி பெயர்க்கிறது என்பதில் தவறுகள் இருக்கும் போது ஏற்படுகிறது.

### செவிப்புலன் இழப்பின் காரணங்கள்:

இது பெற்றோரின் தவறா?

இதற்கு விடை 'இல்லை' என்பதே ஆகும். பிள்ளைகள் செவிப்புலன் இழப்பு பிரச்சினைகளுடன் பிறக்கலாம். அல்லது ஏனைய காரணிகட்காக பிறப்பின் பின்னர் இதனைப் பெறலாம். உங்கள் பிள்ளையின் கேட்கும் சக்தி இழப்பிற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் கூற முடியாது.

### இதற்குக் காரணமானது என்ன என்பது முக்கியமா?

உங்கள் பிள்ளையின் செவிப்புலன் இழப்பிற்கு என்ன காரணமாக இருக்கும் என்பதை அறிவது உதவியாக இருக்கும். செவிப்புலன் இழப்பை எவ்வாறு குணப்படுத்துவது என்பதை தீர்மானிப்பதற்கு இது உதவலாம். நீங்கள் கவனிக்க வேண்டிய ஏனைய பிரச்சினைகளைப் பற்றி இது உங்களை எச்சரிக்கலாம். உங்கள் பிள்ளை வளரும்போது செவிப்புலன் இழப்பு நிலைமையில் மாற்றம் ஏற்படுமா என்பதை அது தெரியப்படுத்தும். இது ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கும் செவிப்புலன் இழப்பு ஏற்படுமா என்பதை உங்களுக்கு தெரிவிக்கும்.

### குழந்தைகளிலும் பிள்ளைகளிலும் செவிப்புலன் இழப்பு ஏற்படுவதற்கான காரணிகள்.

- காதில் தொற்று ஏற்படல்.
- கர்ப்பகாலத்தின்போது ஏற்படும் தொற்று.
- பிள்ளை பிறக்கும்போது தாயிற்கு தொற்று நோய்கள் காணப்படல்.
- பிறப்பின்போது பிரச்சனைகள் ஏற்படல்.
- குழந்தைப் பருவத்திலும் பிள்ளைப் பருவத்திலும் தொற்று ஏற்படல்.
- மருந்து, அதிக சத்தம், பரம்பரை.

63ம் பக்கம் பார்க்க...

# JRS College

"Committed to provide Quality Training"

# SCARBOROUGH CAMPUS

## Computer Basic Class

Starts on Nov 14th@10.00AM(Sunday)



## MS Office

Starts on Oct.30th@9.00AM(Saturday)



## Food Handler Training

Starts on Oct. 30th@10.00AM(Saturday)



# DIPLOMA PROGRAMS

Accounting and Payroll Administration

Health Office Administrator (HOA)



Computerized Accounting

Office Assistant

## CERTIFICATE COURSES

- MS Office
- Business Communication
- Payroll
- QuickBooks
- Bank Teller
- Cashier
- Food Handling
- Simply Accounting
- Accpac

Some Courses are not available in Etobicoke Campus

(Registered and Approved as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

| SCARBOROUGH CAMPUS | ETOBICOKE CAMPUS |
|---|---|
| (Midland & Finch) | (Kipling & Dundas) |
| 330-4168 Finch Ave East | 300-5359 Dundas St West |
| Scarborough, ON M1S 5H6 | Etobicoke, ON M9B 1B1 |
| 416-292-2455 | 416-207-9975 |



# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!

# FIREMAN STEINMETZ

PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

## MOTOR VEHICLE ACCIDENT

FRACTURES - SPINAL CORD INJURY - BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT - INTERNAL INJURIES OR DEATH



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**Harry F. Steinmetz**
Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

## உங்களுக்குத் தெரியுமா?

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக $330,000.00 வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் $86,000.00 வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் $86,000.00 வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**If the impairment catastrophic your claim can be:**

- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

***OVER 50 YEARS COMBINED EXPERIENCE***

**even if you are:**
unemployed - employed - passenger - pedestrian
cyclist - traveling in public transit - student - housewife

You may be eligible for benefits to THOUSANDS of dollars

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S-per week வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்!

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

# தீபன்

24 Hours Direct Line
[416] 505 - 9804
[416] 624 - 4751

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)
www.thipaninjuryclaim.com
thiparanjan@gmail.com

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

TORONTO | SCARBOROUGH | MISSISSAUGA

# கனவுகள் மெய்ப்பட வேண்டும்

அப்பா பஞ்சாங்கம் பார்த்துக் கொண்டிருந்தார். சின்ன மகள் வந்து, “அப்பா, அப்பா, ஒரு வடிவான பொம்பிளை நிறைய நகைகள் போட்டுக் கொண்டு வாசலில் வந்து நிற்கக் கனவு கண்டனான்” என்றாள். “ஓ, அதுவா? கொஞ்ச நாளாக அம்மனுக்குப் பொங்கவில்லை. அதுதான்” என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டு, வியாழன் என்னும் கிரகம் இப்பொழுது எங்கே இருக்கிறது என்பதைப் பஞ்சாங்கத்தில் தேடிக் கொண்டிருந்தார் அப்பா.

“ஓமப்பா, நானும் ஒரு கனவு கண்டனான். புளியடி ஒழுங்கையிலை ஒரு கறுத்த நாய் என்னைத் துரத்திக் கொண்டு வந்தது” என்றான் சின்னவன். அப்பா சிரித்துவிட்டுச் சொன்னார். “உது உந்த வயிரவரின் வேலைதான். கெதியாக அவருக்கு ஒரு வடைமாலை சாத்த வேணும்.”

“அப்ப, பெரியப்பா...,” என்று தொடங்கினாள் அவருடைய தம்பியின் மகள். “வன்னியிலை இத்தனை ஆயிரம் பேரைக் கொலைசெய்த போது உங்கடை அம்மனும் வயிரவரும் summer vacationக்கு எங்கையாவது foreign tour போயிருந்தவையே?” அப்பாவுக்கு முகம் சிவந்தது. “அ(ட்)டி வாங்கப் போறாய். உனக்கு வாய் நீண்டு போச்சடி. போடி! போய் அடுப்படியிலை ஏதாவது வேலை இருக்கும், பார்.”

50 - 60 வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டில் மக்கள் கூடும் சந்தை போன்ற பொது இடங்களில், ஒருவர் மூன்று கம்புகளை நிலத்தில் ஊன்றி, அதில் ஒரு பெட்டியை வைத்து ‘பயஸ்கோப்’ காட்டுவாராம். பெட்டியின் யன்னல் போன்ற வாசலில் ஒருவர் முகத்தை வைத்து உள்ளே பார்த்துக் கொண்டிருக்க, பெட்டிக்காரர் ஒரு சாவியைச் சுழற்றியபடி, “தருமராசன் வாறார் பாரு. வீமசேனன் வாறார் பாரு…” என்று பாடிக் கொண்டேயிருக்க, பெட்டிக்குள் படங்கள் வந்து கொண்டே இருக்குமாம். அந்தக் கலை வளர்ந்து ‘சிறுத்து’ இன்று உள்ளங்கையில் செல்போன் திரையில் ‘பயஸ்கோப்’ காட்டிக் கொண்டிருக்கிறது. சுருக்கமாகச் சொல்லப் போனால், நமது கட்டுப்பாட்டில் இல்லாமல் நமது மனமேடையில் அரங்கேற்றப்படும் இன்பியல் துன்பியல் குட்டி நாடகங்களே கனவுகள். அப்படிப் பார்த்தால் கனவுகளும் ஒருவகை பயஸ்கோப் தான். ஆனால் அவை இயல்பானவை. நாம் விரும்பியவாறு கூட்டவோ குறைக்கவோ ‘எடிற்’ செய்யவோ முடியாதவை

கனவு காண்பவரே அந்தக் கனவின் கதாநாயகனாக இருப்பார். சில சமயங்களில் ஒரு முக்கிய பங்காளியாக அல்லது ஒரு பார்வையாளராகவும் இருக்கலாம். அவர் மட்டும்தான் அந்த பயஸ்கோப்பைப் பார்க்கலாம். கனவின்போது உணர்ச்சிவசப்பட்டுத் திடுக்கிட்டு விழிக்கும் சந்தர்ப்பங்களும் வரலாம். கனவுகள் கறுப்பு வெள்ளையில்தான் வரும் என்பது ஆய்வுகளின் முடிவு. ‘இல்லையில்லை. அது ஈஸ்மன்ட் கலரிலும் வரும்’ என்று அடம்பிடிப்பாரும் உளர். எதற்கும் ஆதாரம் இல்லை. ஆனால் ஆய்வுகள் தொடர்கின்றன. அந்தந்தப் பருவத்தில் எதுவெதில் அக்கறை, ஆசை, ஆர்வம் தொடர்பாக அடிமனதில் உறங்கிக் கிடக்கும் செய்திகள் கற்பனைகள் ஆகியவை அப்படியே அல்லது எதிர்மறையாகக் கனவுகளில் வரும். பொதுவாகக் குழந்தைகளுக்குக் கதைகளில் படித்த கேட்ட அவர்கள் விரும்பும் அல்லது அஞ்சும் பொம்மைகள் மிருகங்கள் பறவைகள் வரலாம். இளைஞர்களுக்கு படிப்பு பதவி திருமணம் பற்றிய கனவுகள் வரலாம். தம்பதிகளுக்குத் தமது பிள்ளைகளைப் பற்றிய கனவுகள் வரலாம். கனவுகளில் பாலியல் கனவுகள் பத்து விழுக்காடுதான் வர வாய்ப்புண்டு என்று ஓர் இளம் விஞ்ஞானி கவலைப்படுகிறார். தமிழ்த் திரைப்படங்களில் வரும் கனவுகளில் கதாநாயகனும் கதாநாயகியும் கைகளைக் கோத்தபடி மரங்களைச் சுற்றிச்சுற்றி ஓடியாடிக் கட்டிப்பிடித்து டுயட் பாடுவது போன்ற கனவுகளும் வருமா என்று கேட்காதீர்கள். அதை பற்றிச் சத்தியமாய் எனக்குத் தெரியாது.

டி.எஸ்.பத்மநாதன் என்பவர் இணையத்தில் கனவுகளைப்பற்றி இவ்வாறு எழுதுகிறார்.

(1) பொதுவாக பத்து வயதுக்கு மேலான அனைவரும் ஒரு நாளைக்கு நாலிருந்து ஆறுமுறை தூக்க நிலையில் REM (Rapid Eye Movement) எனப்படும் துரிதமான கண்ணசைவு நேரங்களில் கனவு காண்கிறார்கள். இந்த துரிதக் கண்ணசைவு நேரங்களில் நாம் விழித்திருக்கும் நிலையைப் போலவே நமது மூளை இயங்குகிறது.

(2) இந்த REM (தூங்க ஆரம்பிக்கும் வேளை) முன்னிரவில் ஐந்திலிருந்து பத்து நிமிடங்களும் பின்னிரவில் 30லிருந்து 34 நிமிடங்களும் நீடிக்கின்றன. எனவே கனவு கிட்டத்தட்ட அரைமணி அளவுக்கு நீடிக்கலாம் எனத் தெரிகிறது.



(3) துரிதக் கண்ணசைவு இல்லாத, மூளை சாதாரணமாக இயங்கத் துவங்கும் விடிகாலை நேரங்களிலும் கனவுகள் வருகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

(4) ஆனால் நாம் தூங்கும் நேரங்களில் மட்டும்தான் கனவுகள் வருகின்றன என்று தீர்மானமாகச் சொல்லமுடியாது. பகலில் சில நேரங்களில் நாம் விழித்திருக்கும்போதுகூட, அசந்த நிலையில் நம்மைச் சுற்றி இருப்பதை மறந்திருக்கும்போது கூடப் பகல் கனவுகள் வருகின்றன.

(5) நம்மையும் நம்மைச் சுற்றி உள்ளவற்றையும் மறந்த சூழ்நிலையில், மூளை குறிப்பிட்ட அளவு செயல்பாட்டுடன் இருக்கும் போது எந்த நேரத்திலும் கனவு காணலாம் எனத் தெரிகிறது. பத்து வயதுக்குக் குறைவானவர்கள் துரிதக் கண்ணசைவுகளின்போது 20 சதவிகித நேரங்களில்தான் கனவு காண்கிறார்களாம்.

(6) முடிவாக, நாம் துரிதக்கண்ணசைவு நேரங்களிலோ அல்லது கண்ணசைவு இல்லாத நேரங்களிலோ, விழிப்பு நிலையிலோ கனவு காண்கிறோம். துரிதக் கண்ணசைவு நேரங்களில் கட்டாயம் கனவு காணவேண்டும் என்பதும் இல்லை. அந்த நேரங்களில் கனவுகள் வராமல்கூட இருக்கலாம்.

கனவுகள் தெளிவாகவோ குழப்பமாகவோ வரலாம். கனவில் யாரோ துரத்துவதுபோல இருக்கும். நீங்கள் ஓடுவீர்கள். கால்களைப் பெயர்க்க முடியாமல் தடுமாறுவீர்கள். சில கனவுகள் விழிப்பு வந்த பின்னரும் நினைவில் நிற்கும். சில மறந்து போகும். சில கனவுகள் அச்சமூட்டும். சில ஆசை காட்டும். யாரையாவது அல்லது எதையாவது அழுத்தமாக நினைத்திருந்தால் அவர் அல்லது அது கனவில் அப்படியே அல்லது அந்தச் சாயலில் வேறொன்றாக வர வாய்ப்புண்டு. கனவுகளில் தெரிந்தவர்கள் தெரியாத அந்நியர்கள், இறந்தவர்கள், விசித்திரமான உருவமுடைய உயிரினங்கள் என எதுவும் வரலாம்.

கனவு காணும்போது எமது விழிகளில் நிகழும் அசைவுகள் நினைவுத் திறனை மேம்படுத்தி நினைவாற்றலை வளர்க்கும் என்கிறது அறிவியல். இந்தக் கருத்தை தூக்கவியல் ஆய்வாளரான டாக்டர் சாரா மெண்டிக் உறுதிப்படுத்துகிறார். சிறந்த நினைவாற்றல் உள்ளவர்கள் கனவுகளின் அடிப்படையில் தமது எதிர்காலத்தையே தீர்மானிக்கலாம் என்கிறார் உளவியல் நிபுணர் டானியல் ஷாக்டெர். கனவு காணும்போது கண் அசைவுகளை வைத்து எந்தவிதமான கனவு என்பதை அறியலாம் என்று விஞ்ஞானி அஸெரின்ஸ்கி 1953லேயே கூறினார். வெறித்தனமான அன்பு, ஆசை, கோபம் போன்ற தீவிரமான உணர்ச்சிகளின் வெளிப்பாடாகவும் கனவுகள் அமையலாம் என்பது ஆய்வாளர் ஆலன் ஹாப்சனின் கருத்து. ஒரு கனவின் நடுவில் விழித்துக் கொண்டு மீண்டும் தூங்கி அதே கனவைத் தொடர்வதை continual activation என்றார் விஞ்ஞானி ஹாங்.

கண்கள் மூடிய நிலையில் சில காட்சிகளைக் காண்பதையே கனவு என்கிறோம். உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் உணர்வுகள், ஆழ்மனதில் அமிழ்ந்து கிடக்கும் அனுபவங்கள், மூளையில் பதிவாகியிருக்கும் சம்பவங்கள் ஆகியவை கனவுகளுக்கு அத்திவாரம் என்பது அறிஞர்களின் கருத்து. கனவுகள் ஆழ்மனதில் பதிந்து கிடக்கும் எண்ணங்களின் வெளிப்பாடு என்றும் இயலாமையின் எதிரொலி என்றும்கூடக் கூறுவர். கந்தையா என்பவன் முரடன். நேரில் நின்று சமாளிக்க முடியாது. ஒரு நாளைக்கு கனவிலாவது, “டேய் கந்தையா, வாடா வெளியே” என்று கூப்பிட்டு உதைக்க வேண்டும் என்பது சின்னையாவின் நீண்ட நாள் விருப்பம். ஆனால் ஒவ்வொருவரும் அவரவர் நினைத்தபடி கனவு காண முடியாது. கனவுகளின் கதை வசனம் டைரக்‌ஷன் கனவு காண்பவரின் கையில் இல்லை. இந்த எண்ணம் சின்னையாவின் மனதில் நெடுநாட்களாகச் சுழன்று கொண்டிருப்பதால், நிலைமை தலைகீழாக மாறி, ஒருவேளை, கந்தையா சின்னையாவின் கனவில் வந்து, “சின்னையா, வெளியே வாடா” என்று கூப்பிட்டுச் சின்னையாவை மொத்து மொத்தென்று மொத்தினாலும் மொத்தலாம்.

ஒவ்வொரு கனவுக்கும் ஒவ்வொரு பலன் இருக்கிறது என்றும் அந்தக் கனவு எந்த நேரத்தில் என்ன விதமாக வந்தது என்பதைக் கருத்தில் கொண்டும் சிலர் கனவுகளுக்கு பலன் சொல்வார்கள். கல்யாணம் போன்ற மங்களகரமான கனவுகளும் மரணம் போன்ற துயரமான கனவுகளும் வரலாம். கனவுகளுக்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? அவை எதையாவது உருவகப்படுத்திக் குறிப்பிட்டுச் சொல்கின்றனவா? கனவுகள் வந்தால் அல்லது வராவிட்டால் உடல்நிலை பாதிக்கப்படுமா?

**- உதயணன் -**

இவற்றுக்கு யாரும் இன்றுவரை உறுதியான விடையைத் தந்ததாகத் தெரியவில்லை. நள்ளிரவுக் கனவு ஓராண்டிலும் விடியலில் காணும் கனவுகள் உடனேயும் பலிக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு. சில கனவுகள் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்லும் அறிகுறியா என்று கேட்டால் “இல்லை” என்று அடித்துச் சொல்வாரும் உளர். “இருக்கலா... ம்” என்று இழுத்துப் பறிப்பாரும் உளர். யானையைக் கனவில் கண்டால் வாழ்வில் செல்வம் கொட்டும் என்றும் பூனையைக் கண்டால் குடும்பத்தில் சிக்கல் ஏற்படும் என்றும் சொல்பவர்கள், யானையைக் கண்டால் கனவின் பலன்கள் உண்மை என்றும் பூனையைக் கண்டால் எல்லாம் சுத்தப் பொய் என்றும் தம்மைத் தாமே ஏமாற்றிச் சந்தோஷப்பட்டுக் கொள்வார்கள்.

தமிழில் மிக மிகப் பழைய நூல்களில் சகுனம், சபதம், சாமுத்திரிகம், அசரீரி, கனா என்னும் ஐந்து விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளனவாம். கனவின் பலன்களைக் கூறும் ‘ஸ்வப்ன சாஸ்திரம்’ அல்லது ‘கனா நூல்’ என்ற ஒரு நூல் இருந்திருக்கிறது. இது பல நூறு ஆண்டுகளாக ரிஷிகள் சித்தர்களின் வாய்மொழி வாய்மொழியாக வந்தது என்றும் பின்னர் பொன்னவன் என்பவரால் நூலுருவாக்கப்பட்டது என்றும் நூல்கள் கூறுகின்றன. ஆனால் மேலே கூறப்பட்ட ஐந்தும் இந்தக் கலியுகத்தில் பலிக்க வாய்ப்பில்லை என்று பிடரியைச் சொறியும் படிப்பாளிகளும் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் நடைபாதையில் ஐம்பது காசுக்கு விற்பனையாகும் ‘கனவுப் பொஸ்தகங்க’ளுக்கு அடிப்படை இந்தக் கனாநூல்தான்.

இதிகாசம், இலக்கியம், வரலாறுகளிலும் கனவுகள் பற்றிய தகவல்கள் வருகின்றன. கிரேக்கர்கள் கனவுகளின் மூலம் நோய்களை அறிந்து குணப்படுத்தியதை அஸ்கிலாபியன் சாங்சுவரிஸ் (Asklepian Sanctuaries) என்றார்கள். பாபிலோனியர்கள் கனவுகளைத் தெய் வங்கள் காட்டிய நற்செய்தியாகவும் தீய சக்திகளின் தீய செய்தியாகவும் கருதினர். அசிரியர்கள் கனவுகள் எதிர்காலத்தின் அறிகுறிகளாக கருதிப் பரிகாரம் தேடினார்கள். எகிப்தியர்களும் கனவுகளைக் கடவுளின் எதிர்காலச் செய்தியாகக் கருதினர். ஜப்பானியர் தமது சுபீட்சமான வாழ்வுக்கு வழிகாட்டும் செய்தியாகக் கருதினர். கிருஷ்ணர் புத்தர் போன்றோர் பிறப்பதற்கு முன்னர் அவர்களுடைய அன்னையர் அதுபற்றிக் கனவு கண்டதாகக் கூறப்படுகின்றது. யேசு பிறந்த காலத்தில் யேசுவின் தந்தைக்கும் அவரைத் தரிசிக்க வந்த ஞானிகளுக்கும் கனவில் வழிகாட்டல் வந்ததாகவும் கூறப்படுகிறது.

ராமாயணத்தில் அசோகவனத்தில் இருக்கும் சீதைக்கு திரிசடை தான் கண்ட கனவை இவ்வாறு சொல்கிறாள்:

*எண்ணை பொன்முடி தொறும் இழுகி ஈறு இலாத*
*திண் நெடுங் கழுதை பேய் பூண்ட தேரின் மேல்*
*அண்ணல் அவ் இராவணன், அரத்த ஆடையன்*
*நண்ணினான் தென்புலம்.*

திருக்குறளில் 122ஆம் அதிகாரம் ‘கனவு நிலை உரைத்தல்’. அதிலிருந்து ஒரு குறள்:

*நனவினால் நல்கா தவரைக் கனவினால்*
*காண்டலின் உண்டென் உயிர்.*

**இதன் பொருள்:** “நனவில் வந்து அன்பு செய்யாத காதலரைக் கனவில் காண்பதால் தான் எனது உயிர் இன்னமும் இருக்கின்றது.”

சிலப்பதிகாரத்தில் கோவலன்மீது சாட்டப்பட்ட குற்றத்தை நன்கு ஆராயாமல் தண்டனை வழங்கிய பாண்டிய மன்னனின் பட்டத்து அரசி கோப்பெருந்தேவியின் சோகக் கனவை இளங்கோவடிகள் வருமாறு உரைக்கிறார்:

**தொடர்தல் 63ம் பக்கம்**

# கனவுகள் மெய்ப்...

62ம் பக்கத் தொடர்ச்சி...

*குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்*
*கடைமணி இன்குரல் காண்பென் எல்லா!*
*திசையிரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்*
*கதிரை இருள் விழுங்கக் காண்பென் எல்லா!*

பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களில் ஒருவாரான ஆண்டாளின் ஆன்மிகக் கனவு இது:

*மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத*
*முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தல் கீழ்*
*மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்*
*கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ நான்*

சில கதைகளின் சம்பவங்கள், கவிதை அடிகள், விஞ்ஞான ஆய்வு முடிவுகள் கனவுகளில் கிடைத்ததாகக் குறிப்புகள் உண்டு. 'பீரியாடிக் டேபிளை' கண்டுபிடித்த விஞ்ஞானி மெண்டெல்ப் அதன் முக்கிய கூறுகளைக் கனவில் கண்டுபிடித்ததாகச் சொல்கிறார். ஸல்டேவர் லெவி என்னும் ஓவியர் தனது ஒரு பிரபலமான ஓவியம் தான் கனவிலே கண்ட காட்சி என்கிறார்.

கனவுகளைப்பற்றிப் பல வருடங்களாக ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அவர்கள் அறிந்தவற்றையும் ஊகித்தவற்றையும் சொல்லி வைத்திருக்கிறார்கள். ஆனால் இது இப்படித்தான் என்று வரையறுத்துக் கூறமுடியாதவற்றுள் கனவுகளும் ஒன்று. இதுபற்றிய தேடல்கள் தொடரும். தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும் விஞ்ஞானியுமான அப்துல் கலாம் அவர்கள், தான் படித்த ராமநாதபுரம் சுவார்ட்ஸ் மேல் நிலைப் பள்ளியில் பேசும்போது, "மாணவர்களே, இன்று நம்நாடு அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு நமது எண்ணங்களே காரணம். எண்ணத்தில் உறுதியும் செயலில் திறனும் இருந்தால் வெற்றி நிச்சயம். நெஞ்சிலே துணிவிருந்தால் நிலவிலும் கால் வைக்கலாம். கனவு காணுங்கள். அந்த எண்ணங்கள் செயல்களாக மாறி வெற்றிபெறச் செய்யும்" என்று சொல்லி நம்பிக்கை விதைகளை மாணவர்களின் நெஞ்சங்களில் விதைத்தார்.

"மனதில் உறுதி வேண்டும், நினைவு நல்லது வேண்டும், கனவு மெய்ப்பட வேண்டும்" என்றார் பாரதியார். எண்ணமே வாழ்வு. ஊக்கமே எதிர்காலம். மன உறுதி, மனோசக்தி, மனோவசியம், மனோதிடம், மந்திரம், என்பவற்றின் ஆணிவேர் ஒன்றுதான். சித்தன் ஆவதற்குச் சடை வளர்க்க வேண்டாம். சித்தம் தெளிந்தால் சித்தி வரும் என்றனர் ஆன்றோர்.

நல்ல கனவுகள்
மெய்ப்பட வேண்டும்!



uthayanan@thaiveedu.com

# செவிப்புலனற்ற...

61ம் பக்கத் தொடர்ச்சி...

## செவி:

காதில் தொற்று ஏற்படலும், செவியில் திரவத்தன்மை காணப்படலும். காதின் வெளிப்புறத்தில் இருந்து உட்செவியை நோக்கி ஒலி உட்செல்வதை தடை செய்யலாம். ஒலி தடை செய்யப்படுவதால் ஓரளவு அல்லது நடுத்தர மான செவிப்புலன் இழப்பு ஏற்படுகின்றது. வைத்தியர்கள் இதனை கடத்தும் செவிப்புலன் இழப்பு (Conductive hearing) என அழைக்கிறார்கள். பொதுவாக இந்த வகையான செவிப்புலன் இழப்பு தொற்று நோய்கள் நீங்கிய பின் குணமாகி விடும்.

## நீங்கள் என்ன செய்யலாம்?

உங்கள் வைத்தியர் கூறுவதன்படி, தொற்று நோயை நீக்குவதற்கான மருந்துகளைக் கொடுங்கள். இந்த சிகிச்சை முடிந்த பின் மற்றொரு பரிசோதனைக்கு அழைத்துச் செல்லுங்கள். வைத்தியர் உங்கள் பிள்ளையின் செவியினை/ அல்லது காது கேட்கும் தன்மையினை பரிசோதிக்க விரும்புவார். உங்கள் பிள்ளையின் காது தொற்று மீண்டும் ஏற்படுமாக இருந்தால் உங்கள் வைத்தியருடன் அது குறித்து பேசுங்கள். உங்கள் பிள்ளையின் செவிப்பறைகளினூடே மிக நுண்ணிய குழாய்களை வைத்தியர் வைப்பார். இவ்வாறு குழாய்களை வைத்தால், எதிர்காலத்தில் காதில் தொற்று ஏற்படுதல் மற்றும் செவிப்புலன் இழந்து போகும் அபாயத்தில் இருந்து இது உங்கள் பிள்ளையை பாதுகாக்கும்.

## கர்ப்பகாலத்தில் ஏற்படும் தொற்று:

கர்ப்பமான தாயில் ஏற்படும் தொற்று பிள்ளையின் செவிப்புலன் இழப்பிற்கு காரணமாகிறது. இது பிள்ளையின் உட்செவியில் சேதத்தை ஏற்படுத்தலாம். வைத்தியர்கள் இதனை செவிப் புலன் நரம்பு பாதிப்படைதல் என அழைப்பர். சிலர் இதனை "நரம்பு கேளாத் தன்மை" (Nerve deafness) என அழைப்பர்.

கர்ப்பகாலத்தின் போது ஏற்படும் சில நோய்கள் மட்டுமே செவிப்புலன் இழப்புடன் தொடர்புபட்டது. இதற்கான உதாரணங்கள்: ஜேர்மன் அம்மை (ருபெல்லா), Vytomegalovirus (CMV), Toxoplasmosis, Syphilis போன்றன. பொதுவாக தாயில் இருக்கும் தொற்று கரு உருவாகி முதல் 3 மாதத்தின்போதே பிள்ளையின் செவிப்புலனைப் பாதிக்கின்றது. இந்த முதல் 3 மாதத்தின்போதே பிள்ளையின் கேட்கும் தொகுதி வளர்ச்சியடையும் காலமாகும்.

## பிள்ளை பிறக்கும் போது தாயில் தொற்று காணப்படல்:

பிள்ளை பிறக்கும் போது பிள்ளைக்கு ஏற்படக் கூடிய 3 சம்பவங்களால் செவிப்புலன் இழப்பு ஏற்படலாம்.

- போதுமான ஒட்சிசன் கிடையாமை (Oxygen deprivation).
- மஞ்சட்காமாலை ஏற்படல். இச் சம்பவத்தில் பிள்ளையின் தோல் மஞ்சள் நிறமாக இருக்கும்.
- பிள்ளை பிறக்கும்போது காயங்கள் ஏற்படல். இந்தப் பிரச்சனைகள் சில வகையான செவிப்புலன் இழப்பிற்கு காரணமாக இருக்கும். மஞ்சட் காமாலையும் ஒட்சிசன் குறைபாடும் சேர்ந்து செவிப்புலன் நரம்பு பாதிப்படைவதற்கு காரணமாகிறது.

பிறப்பின்போது ஏற்படும் காயங்களானவை (Trauma) உட்செவிக்கும் மூளைக்கும் இடையேயான செவிப்புலன் பாதையில் ஓர் பிரச்சினையாகின்றது. இதனால் பாதிக்கப்பட்டவர் வெவ்வேறு ஒலியின் அர்த்தத்தை விளங்கிக் கொள்வதில் கஷ்டத்தை எதிர்நோக்குவார்.


***குழந்தைப் பருவத்திலும் பிள்ளைப் பருவத்திலும் தொற்று, காது கேட்கும் பரிசோதனைகள், செவிப்புலனற்ற மற்றும் செவிப்புலன் குறைபாடுடைய பிள்ளைகளின் பேச்சுமொழி பிரச்சனைக்கு எவ்வாறு உதவலாம் என்பன பற்றி அடுத்துவரும் இதழில் பார்ப்போம்.***

**உசாத்துணை:**

www.raisingdeafkids.org/hearingloss/testing/nhs.php
www.ericdigests.org/1998-2/inclusion.htm
www.infanthearing.org
www.children.gov.on.ca/htdocs/English/topics/earlychildhood/hearing/brochure_services.aspx

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

# CTR தகவல் பலகை

**DONMILLS/SHEPPARD**
3 bdrm basement
Parking/ cable/ bus
School/ Hwy
Pathy: (416) 502 8053

**STEELES/ STAINES**
1 bdrm basement (தனிவழி)
Raji : (416) 567 6266, (416) 299 4848

**MIDDLEFIELD**
1 bdrm basement
(416) 908 1250

**NEILSON/ MCLEVIN**
3 bdrm house for rent
(647) 500 1343

**WESTON/ FINCH**
1 bdrm for rent
Raji: (416) 741 8170, (647) 456 9332

**MARKHAM/ ELLIS**
2 bdrm for rent
Sri: (416) 430 0455

**BRAMPTON**
New house for rent
Walk/out basement
Luganth: (647) 500 1343

**MARKHAM/ELLESMERE**
1 bdrm basement
Kanes: (416) 822 5654, (647) 896 4575

**NEILSON/ MCLEVIN**
2 bdrm/1 bdrm basement
Rangarajah: (416) 292 1953

**MAPLE**
Walkout Basement
2 bdrm
Ragawi: (416) 888 4970

**ELLESMERE/ MARKHAM**
2 bdrm basement
96 Accord Honda Ex/ $9000
Sri: (416) 430 0455

**NEILSON/ MCLEVIN**
1 rm basement for Rent / only ladies
Devi: (647) 427 7747

**DUFFERIN/ STEELES**
1 bdrm basement
Kaasi: (905) 761 7318

**MARKHAM/ PASSMORE**
1 bdrm basement
Rumak: (416) 430 0999

**9TH LINE/14TH**
2 bdrm
Chithira: (416) 818 2616

வீட்டின் மேல்தளத்தில் 1 rm for rent
Raji: (647) 456 9332

**BRIMLEY / ELLIS**
1 bdrm basement/2 car prkng
Raja: (416) 430 0035, (647) 456 3144

**MARKHAM 9TH/14TH**
New 2 bdrm basement
Santhiran: (416) 430 0035, (647) 456 2730

**BUROK / 16TH**
மிருதங்கம் வயலின் morsing
Ramesh: (905) 554 3971

வவுனியாவில்
2 கடை விற்பனைக்கு
Yogarajah: (416) 451 6895

சாவகச்சேரியில்
10 பரப்பு காணி விற்பனைக்கு
Jejarash: (416) 335 6901

யாழ்ப்பாணத்தில்
5 பரப்பு காணி விற்பனைக்கு
Rajaratnam: (416) 546 9020

வவுனியாவில்
7 பரப்பு காணியுடன் வீடு
4 bedroom townhouse
Sivam: (905) 497 3435

**NEW YORK**
2 bdrm townhouse உண்டு
Nathan: (416) 630 2097

**BRAMPTON**
4 bdrm
வீடு விற்பனைக்கு
Kumar: (416) 816 5555

**COXWELL/GERRARD**
Laundrymat for sale
Thavam: (416) 526 3434

**VIDEO CAMERA**
Kowthami: (416) 735 4250

**95 HONDA CIVIC**
RajMohan: (416) 286 4780

**1998 ACURA**
நல்ல நிலையில் உள்ளது
Ananthan: (647) 547 7278, (905) 644 2376

**1999 TOYOTA COROLLA**
Ranjsini: (647) 338 7316

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**2003 HONDA CIVIC**
Theva : (647) 206 6842

**1993 TOYOTA TERCEL**
New Engine
Kumar: (416) 627 5735

**1994 HONDA ACCORD**
Siva: (647) 830 0861

**1997 HONDA CRV**
Kumar: (416) 832 3919

Toyota Sienna 2000
Selvan : (647) 998 2870

**2000 MAZDA**
180km/fully Loaded/auto
Raja: (416) 451 6895

**2005 CR-V**
விலை பேசி தீர்மானிக்கப்படும்
Venthan: (416) 297 6138, (647) 505 4520

## மணமகன் தேவை

20 வயதுடைய
மனமக்களுக்கு
மணமகன் தேவை

தொடர்புகளுக்கு

416 605 4536

## வீடு வீற்பனக்கு

Ajax நகரில் 4 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ராம்: 416-458-8742

## மணமகன் தேவை

42 வயதுடைய மனமக்களுக்கு
மணமகன் தேவை

தொடர்புகளுக்கு
416 605 4536

## வியாபார நிலையம் விற்பனைக்கு

Finch/Pharmacy சந்திப்புக்கு அருகாமையில் ரீயூசன் நிலையம் (Tuition Centre) ஒன்று விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ராம்: 416-458-8742




## AZ வாகன சாரதிகள் தேவை

கனடா மற்றும் அமெரிக்காவில் (USA, Canada)
கனரக வாகனங்கள் செலுத்துவதற்கு அனுபவமுள்ள
(Dry Van and Reefer experience ) AZ வாகன சாரதிகள் தேவை.

**Tel: 416 749 5392,**
**Fax: 416 749 5087**

## HELP WANTED

கதவு மற்றும் ஜன்னல்கள் தயாரிப்பதில்
முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**கருணா**

**416 892 7070**

**Viewtech Windows & Home Improvements.**

## Tution Classes

**(Morningside & Sheppard)**
கணிதம் (Math),
தரம் 8 முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.

**Puran**

**416 819 7923**

## Driving School

ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை, நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள், வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

**நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி**
**General Driving School (Ministry of Transportation Approved Instructor)**

**பேரின்பநாதன் வேந்தன்**

**416-731-2829**

## Tution Classes

**(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)**
தமிழ், ஆங்கிலம் (English), கணிதம் (Math), ஓவியம் (Art), விஞ்ஞானம் (Science), வீட்டுவேலை உதவி (Homework Help).
இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.
1 to 1 or Group classes

**905-554-2496, 416-522-3314**

## HELP WANTED

**Scarborough, Ajax, Pickering, Whitby, Markham ...**
பகுதிகளில் Delivery வேலைக்கு
(பகுதி நேர மற்றும் முழு நேரம்)
ஆட்கள் தேவை.

**647 892 5454**

## SP Electronics

**TV, VCR, DVD, Players-Telephone-Computers**
உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ்
வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்

**416 264 6400**

**2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)**

## AZ வாகன சாரதிகள் தேவை

கனடா மற்றும் அமெரிக்காவில் (USA, Canada)
கனரக வாகனங்கள் செலுத்துவதற்கு அனுபவமுள்ள
(Dry Van and Reefer experience ) AZ வாகன சாரதிகள் தேவை.

**Tel: 416 749 5392, Fax: 416 749 5087**

உங்கள் விழாக்களின்
நிழல்ப் படங்களைப் பார்ப்பதற்கு

**www.ninaivukal.com**


# துயர் பகிர்வோம்



## திருமதி வாசுகி ஜெயப்பிரகாசன்

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வாசுகி ஜெயப்பிரகாசன் (B.Sc) அவர்கள் 2010-11-01 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு.குமாரசுவாமி ஜெயப்பிரகாசன் அவர்களின் அன்பு மனைவியும், திரு திருமதி கோபாலபிள்ளை - நாகம்மா இணையரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற திரு-திருமதி குமாரசுவாமி - தையல்முத்து இணையரின் அன்பு மருமகளும், செல்வன் அஷ்வின், செல்வன் பிரவின் ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், தாசன் (சுவிஸ்), கனடாவில் வதியும் கருணா கோபாலபிள்ளை, சந்திரதாசன், ஜானகி ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும், இந்திராதேவி (சுவிஸ்), கனடாவில் வதியும் மதிவதனி, பிரபாநந்தினி, ரகுகுலன், ஜெயகௌரி, ஜெயகுமார், ஜெகதீஸ்வரி, மற்றும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஜெயபாரதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வுகள் 2010-11-06ம், 07ஆந் திகதிகளில் மாலை 5.00மணி தொடக்கம் மாலை 9.00 மணிவரையும் 3280 Sheppard Ave. Torontoஇல் அமைந்துள்ள Highland Funeral Home இல் நடைபெற்று, 2010-11-08ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் 12 மணிவரை இல.375 Mount Pleasant Rd. Torontoஇல் உள்ள Mount Pleasant Cemeteryஇல் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

கருணா கோபாலபிள்ளை 416 830 8520


**எலி பூச்சித் தொல்லையா...?**

**RUBAN PEST CONTROL**



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி. பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!

**KANTHAN**
**416 • 291 • 3997**

## Tutoring & Homework Help

**French**
For grade 4 to grade 12 or IB program By a native French speaking teacher from France

**Math**
For grade 5 to grade 12 or IB program In English or French medium Intersection

**Mr. Shanthakumar**

**(Victoria Park & Ellesmere) 647 262 94 30**

## Tutoring

**Grade 1-7: English, Math, Science & Social studies**
**Grade 8- 11: English & Math**

அஞ்ஜலீன் ஜீவா திசைராஜா
B.A (Hons), M.Sc, Ph.D

**(Kennedy & Ellesmere அருகாமையில்)**
**(647) 291 1357**

# சிங்கள இனமும் சிங்கள மொழியும் அதன் வரிவடிவத் தோற்றமும்


முருகேசு பாக்கியநாதன்

சிங்களமொழியின் பேச்சு வழக்கானது அதன் வழக்கில் மிகவும் மிடுக்கான ஒன்றாகும். இது ஒரு வளர்ந்துவரும் மொழியாகும். காலத்திற்கேற்ப எழுத்துச் சீர்திருத்தங்களை தன்னகத்தே ஏற்றுக் கொண்டு நவீன இலக்கியம், கவிதை, நாடகம் போன்ற இன்னோரன்ன பன்முகத்தன்மையுடன் வளரும் மொழியென்றே கூறவேண்டும். இதன் எழுத்து வரிவடிவம் எப்படித் தோற்றம் பெற்றது. அதற்குத் தேவையான மொழிவரிவடிவத்தினை எம்மொழியினைச் சார்ந்து பெற்றக்கொண்டது என்பதனை ஆராய்வததே இக்கட்டுரையாகும்.

சிங்களத்தில் வழங்கும் சொற்கள் பல வேற்று மொழிகளிலிருந்து இரவல் பெறப்பட்ட சொற்களாகும் குறிப்பாக தமிழ், சமஸ்கிருதம், பாளி, போத்துகீஸ், டச்சு, மலே மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றின் சொற்களையும் சிங்களத்திற்கேயுரிய சொற்களைகயும் பாவித்தே இம்மொழி பாவனையில் இருந்துவருகின்றது.

சிங்கள மொழியின் வரிவடிவம், அதன் இலக்கண அமைப்பு, சொற்கள் ஆகியனவற்றில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கிரந்தம் (வடமொழி) ஆகியவற்றின் செல்வாக்கே அதிகம் காணப்படுகின்றது. சிங்கள இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தினைச் சார்ந்ததென்று சிங்கள ஆய்வாளர்களும், மொழியியலாளர்களும், சில சிங்களம் சாராத ஆய்வாளர்களும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

சிங்கள மொழியின் வரிவடிவத்தின் தோற்றம் கி.பி 9ஆம் நூற்றாண்டாண்டென்பது மொழியியலறிஞர்களால் ஏற்கப்பட்டதொன்றாகும். இக்காலத்தேதான் திராவிடக் குடும்ப மொழியாகிய மலையாளமும் பிறந்தது. அதற்கு முன்பாகவே திராவிட மொழிக்குடும்பத்தினைச் சேர்ந்த கன்னடமும் தெலுங்கும் முறையே 8ஆம் 7ஆம் நூற்றாண்டுகளில் தோற்றம் பேற்றது. சிங்கள பேச்சு மொழியானது வேறொரு மொழியின் பேச்சுவழக்கிலிருந்தே தோற்றம் பெற்றிருக்க வேண்டும். இதில் வழங்கப்படும் சொற்களை நோக்கும்போது அதில் ஏராளமன தமிழ்ச் சொற்களும் அதிலிருந்து மருவிய சொற்களும் இருப்பதனைக் காணமுடியும். சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் ஆய்வின் பிரகாரம் 1940ஆம் ஆண்டளவில் 4,000ற்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் சிங்கள மொழியில் காணப்பட்டதாக வெளியிட்டார்.

கி.மு 5ம் நூற்றாண்டளவில் விஜயனும் அவனது 600 நண்பர்களும் இந்தியாவின் கலிங்கத்திலிருந்து துரதத்தப்பட்டு இலங்கையில் தஞ்சமடைந்து அங்கு அவர்கள் வாழத்தொடங்கிய பின்பே வேற்று மொழி ஒன்றினை இலங்கை முதன்முதலாக அறிந்து கொண்டது. இவர்களது குடியேற்றத்தின் பின்னர் அங்கிருந்த சுதேசிகளின் மொழிகளை அவர்கள் பேசப்பழகிக் கொண்டார்களா? அல்லது தங்களது மொழியினை சுதேசிகளுக்குப் பேசப்பழக்கினர்களா என்பது சார்பு நிலையெடுக்காது ஆராயப்பட வேண்டும். காரணம் சூழவம்சமாயினும் சரி அதன் பின்பு வந்த மகாவம்சமாயினும் சரி நம்ப முடியாத பல புனைகதைகளின் அடிப்படையிலும் ஏதோவொரு அரசியல் நோக்கிலும் வரலாற்றைப் பதிவு செய்யும் நோக்கிலும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினைப் பேணும் பொருட்டு திட்டமிட்டு காலாகாலமாக எழுதப் பட்டு வருவதாகவே கருத இடமுண்டு. விஜயன் இலங்கைக்கு வரும்போது கிட்டத்தட்ட 5 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையினர் அங்கு வாழ்ந்திருக்க வேண்டும். விஜயனது வருகையினையே சில வரலாற்றாசிரியர்கள் புனையப்பட்ட ஒரு கதையென்று தெரிவித்துள்ளார்கள். தொடர்ந்து வந்த சிங்கள வரலாறாசிரியர்களும் தொல்லியலாளர்களும் அரசும் சிங்களபௌத்த மேலாத்திக்கவாதிகளின் கருத்துக்களுக்கிசைவாகவே தங்கள் முடிவுகளைத் தெரிவித்துவருவது இலங்கையின் வரலாற்றிகுக் கிடைத்த ஒரு சாபக்கேடாகும். ஆகவே இவைகளைக்கடந்து நேர்வழி நின்று ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு மொழி உருவாகும் போது அதன் உருவாக்கத்தில் செலவாக்குச் செலுத்துவது அந்த மொழிபேசுவோர் வாழும் நாட்டிலோ அன்றி அப்பிரதேசத்திலோ பேசப்படும் வளர்ச்சியடைந்த செழிப்புற்ற மொழியும். அந்த மொழிபேசுவோரின் சொற்பாவனைகள், அவர் களது கலை கலாசாரங்கள், அந்த நாடுகளின் அரசியல் தொடர்புகள், வணிகம் மற்றும் மதம் ஆகியனவுமே மிகுந்த செல்வாக்கினைச் செலுத்துகின்றன. சிங்கள மொழியின் தோற்றத்திற்கு அதன் அருகே வாழ்ந்த, வாழும் தமிழ்தான் அதன் பிறப்பிற்குக் காரணமாகவிருந்திருக்க முடியுமேயல்லாமல் வேறு எந்த மொழியும் அதன் பிறப்பிற்கு உதவியிருக்க முடியாது.

சிங்கள அறிஞர்கள் சிலரது கருத்துப்படி சிங்களத்தின் தோற்றம் பாளி மற்றும் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்ததாகச் சொல்லுகின்றார்கள். இந்த மொழிகள் பாவனையில் சில ஆயிரம் மைல்களுக்கு அப்பாலேயே இருந்தது. அத்தோடு வடஇந்தியாவின் அரசியல் ஆதிக்கமோ, வணிகத் தொடர்போ, அந்த மொழி பேசுவோரோ அருகில் வாழ்ந்து அதனால் அம்மொழியின் செல்வாக்குச் செலுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லையென்றே கூறவேண்டும். வடமொழியாகிய பாளி மொழியின் தாக்கம் எழுத்துருவில் தாக்கம் செலுத்தத் தொடங்கியது மகாவம்வம் எழுதப் பெற்ற கிபி.6ஆம் நூற்றாண்டின் பின்புதான் என்றே கூறமுடியும். ஆகவே வடமொழியின் செல்வாக்கினால்தான் சிங்களம் தோன்றியதென்பதனை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும். பாளி மற்றும் சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளிலிருந்து சிங்களத்திற்கு பெறப்பட்ட அந்நிய மொழிச் சொற்கள் மிகச்சிலவே ஆனால் தமிழிலிருந்தே கூடுதலாகச் சொற்கள் சிங்களத்திற்குப் பெறப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தபடியாக போத்துக்கீசம் மற்றும் டச்சு மொழிகளிலிருந்தும் பெறப்பட்டுள்ளது. பாளிச் சொற்பாவனையென்பது கூடுதலாக புத்த சமயம் சார்ந்ததாகவேயுள்ளது. சமஸ்கிருத சொற்கள் சுத்த சிங்கள என்றழைக்கப்படும் இலக்கணப் பாவனைகளில் மட்டுமே பாவிக் கப்படுகின்றன. ஆனால் சாதாரண மக்கள் பாவிக்கும் பேச்சு வழக்கில் தமிழ் சொற்களும் தமிழிலிருந்து மருவிய சொற்களுமே கூடுதலான பாவனையில் உள்ளன. சிங்கள மொழியியல் ஆய்வாளர்கள் சிங்களத்தின் மூலம் ஆரியம் என்று அதனால் இதனை இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தினைச் சார்ந்ததென்றே கூறுகின்றனர். ஆனால் அருகே வாழ்ந்த தமிழின் செல்வாக்கினையும் அவர்கள் முற்றாக மறுக்க முடியவில்லை. தொடர்ச்சியாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இறுதியான இலங்கை மன்னர்கள் வரை தமிழ் மன்னர்களே பலர் இலங்கையினை ஆட்சி செய்தனர் என்பது மகாவம்சத்தினால் மறைக்கப்பட்ட அப்பட்டமான உண்மையாகும். (இது பற்றிய விபரம் அடுத்த கட்டுரையில் ஆய்வுக்குட்படுத்தப்படும்). இதனால் ஆட்சியாளர்களதும் அப்போது பெரும்பான்மையாகப் பேசப்பெற்ற மொழியாகிய தமிழ்தான் சிங்கள மொழியின் தோற்றத்திற்கு அடிப்படையாகவிருக்க முடியுமேயல்லாமல் எதுவித அரசியல், வாணிப, நிலத் தொடர்புகளுமில்லாத வடமொழி எவ்வாறு சிங்களமொழியின் தோற்றத்திற்கு ஆதாரமாகவிருக்க முடியும். விஜயனுடன் 600 நண்பர்கள் குடியேறி விஜயன் இயக்கர் பெண்ணான குவேனியையும் அவனது ஏனைய 600 நண்பர்களும் தமிழ் பாண்டிய பரம்பரையினரை மணம்முடித்ததாகவே மகாவம்சம் சொல்லுகின்றது. அப்படியாயின் கி.மு 5ஆம் நூற்றாண்டளவிலும் பாண்டிய மன்னர்களின் செல்வாக்கே இலங்கையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதென்றே கூறவேண்டும்.

கன்னடம், தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகள் திராவிட மொழிகள் என்பது ஏற்கனவே நிறுவப்பட்டு சகல அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். அத்தோடு இம்மொழிகள் தமிழிலிருந்தே பிரிந்து தோற்றிய மொழிகளாகும். தமிழையே மூலமாகக் கொண்டு இம்மொழிகள் தங்களுக்கான அகர வரிசையினை அமைத்துக் கொண்டன. அத்தோடு வடவெழுத்தாகிய கிரந்தத்தினையும் தமது அகரவரிசையில் சேர்த்துக் கொண்டார்கள். இதே போலவே சிங்களமும் மேல் குறிப்பிட்ட மூன்று திராவிட மொழிகளும் செய்தது போல தமது அகரவரிசையினை தமிழிலிருந்தும் கிரந்தத்திலிருந்துமே அமைத்துக் கொண்டார்கள். இதுவும் புத்தமத போதனைக்காக பாளி மொழியின் உச்சரிப்பினை விரிவாக்கம் செய்ய வடவெழுத்தின் சில வரி வடிவங்களையும் சேர்த்துக் கொண்டார்கள். இதன் விளக்கத்தினைப் பின்பு நோக்குவோம். வரிவடிவங்கள் அமைக்கும் போது தமிழ் பிராமியின் வழிவந்த தமிழினை அடியொற்றியே அமைத்தார்கள் என்பதனை எனது "தமிழே பல மொழிகளுக்கு மூல வரிவடிவம்" என்ற கட்டுரையில் படித்திருப்பீர்கள்.

## கன்னடம், தெலுங்கு, மலையாளம், சிங்களம் ஒற்றுமை:

இதில் முதல் மூன்று மொழிகளும் திராவிட மொழிகள் என்பதனை முன்பு பார்த்தோம். சிங்கள மொழியானது ஆரிய மொழிக் குடும்பத்தினைச் சார்ந்ததென்றே சிங்கள அறிஞர் களும் அதன் ஆய்வாளர்களும் தெரிவித்து வருகின்றனர். இந்த முடிவினை மற்றைய ஆய்வாளர்களால், பௌத்தமதம் மற்றும் பாளி மொழிச் செல்வாக்கு ஆகியவற்றால் அதனை நிராகரிக்க முடியவில்லை. ஆனாலும் சில ஆய்வாளர்கள் சிங்கள மொழியானது ஆரிய மொழியின் சாயலைவிட திராவிட மொழியின், குறிப்பாகத் தமிழ் மொழியின் சாயலும் அதன் ஒற்றுமைகளும் உள்ளதாகவே கொள்ள முடியும் என்று கூறுகின்றார்கள்.

கீழே தரப்பட்டுள்ள வரிகளில் உள்ள நான்கு மொழிகளின் வரிவடிவங்களை நோக்கின் இவைகளுக்குள்ளே ஒரு ஒற்றுமையுள்ளதனை சாதாரண கண்கொண்டு பார்க்கும் எந்த ஒரு வாசகனும் இலகுவில் அறிந்து கொள்ள முடியும். இதில் எந்த எந்த மொழி என்ற வேறுபாட்டைக் காண ஒரு கணம் திணறவேண்டியிருக்கும். அந்தளவிற்கு வரிவடிவங்களின் ஒற்றுமையினையும் சிங்களத்தில் திராவிடத்தின் வரிவடிவச் செல்வாக்கினையும் அறிய முடியும்.

சிங்கள எழுத்தாலமைந்த ஒரு வரி



மலையாள எழுத்தாலமைந்த ஒரு வரி



தெலுங்கு எழுத்தாலமைந்த ஒரு வரி



கன்னட எழுத்தாலமைந்த ஒரு வரி



கீழே தரப்பட்டுள்ள கட்டுரையாசிரியரின் பெயர் முறையே தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சிங்களம், சமஸ்கிருதம், ஹிந்தி, குஜராத்தி மற்றும் ஒரியன் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டடுளது. அதில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்களுக்கு திராவிட எழுத்துக்களுக்கும் ஆரிய எழுத்துக்களுக்கும் உள்ள வித்தியாசங்களையும் ஒற்றுமைகளையும் நாமே நேரடியாகப் பார்த்துத் தீர்மானிக்க முடியும்.

*தொடர்தல் 76ம் பக்கம்*




BUYING-SELLING-INVESTING
Sheppard & Neilson
$ 99,900
2+1 Bedrooms + 2 Washrooms
Neilson & Mclevin
$ 169,900
2+1 Bedrooms + 2 Washrooms
Rossland & Harwood
$ 381,900
3 Bedrooms + 3 Washrooms
Mccowan & Eglinton
$188,900
2+1 Bedrooms + 2 Washrooms
Westney & Williamson
$ 289,900
3 Bedrooms + 2 Washrooms
Mccowan & Denison
$ 418,800
4 Bedrooms + 3 Washrooms
Markham & 16th Ave.
$ 398,888
4 Bedrooms + 4 Washrooms
Rouge river & Sheppard
$ 479,900
4+2 Bedrooms + 5 Washrooms
Markham & Highglen
$ 489,700
4+1 Bedrooms + 4 Washrooms
9thLine & 16th Ave.
$379,900
3 Bedrooms + 3 Washrooms
Mclaughlin & Bramtrail
$ 489,700
4+1 Bedrooms + 4 Washrooms
Mccowan & 16th Ave.
$ 520,000
4 Bedrooms + 3 Washrooms
9th Line & Hoover Park
$ 499,900
4 Bedrooms + 3 Washrooms
Salem & Taunton
$ 312,900
3 Bedrooms + 3 Washrooms
Brimley & Highglen
$ 399,999
3+1 Bedrooms + 4 Washrooms
Mccowan & Ellesmere
$299,800
2 Bedrooms + 2 Washrooms
Mccowan & Denison
$ 445,000
4+2 Bedrooms + 4 Washrooms
Middlefield & Denison
$ 517,900
4 Bedrooms + 3 Washrooms
Torbram & Bovaird
$ 579,900
5+3 Bedrooms + 5 Washrooms
Rossland & Audley
$ 412,900
4 Bedrooms + 3 Washrooms
Mccowan & Hwy 401
$ 239,900
2+1 Bedrooms + 2 Washrooms
Brimley & Hwy 401
$309,900
2+1 Bedrooms + 2 Washrooms
14th Ave. & 9th Line
$ 429,900
4 Bedrooms + 3 Washrooms
14th Ave. & 9th Line
$ 649,900
5 Bedrooms + 4 Washrooms
Staines & Steeles
$ 649,900
4 Bedrooms + 3 Washrooms
Markham & Steeles
$ 184,999
Commercial / Retail
Markham & 14th Ave.
$ 409,900
Commercial / Retail
Markham & Nashdene
$226,900
Professional Office
14th Ave. & 9th Line
$ 699,000
5 Bedrooms + 4 Washrooms
Mccowan & Major Mac.
$ 599,900
4+1 Bedrooms + 4 Washrooms
Mc Laughlin & Wanless
$ 524,990
4 Bedrooms + 3 Washrooms
Salem & Williamson
$ 455,000
4 Bedrooms + 3 Washrooms
Markham & Major Mac.
$ 619,000
4 Bedrooms + 4 Washrooms
Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.
Thamil Suberamaniam
Salesrepresentative
Direct: 416-358-6200
Mugunthan Nadarajah
Salesrepresentative
Direct: 416-276-8025
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr, Suit 205,Markham ON. L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
*Independently Owned and Operated
SOLD
புதிய முகவரி தேடும் உங்களுடன் முகவர்களாய் நாங்கள்

NOVEMBER
28
SUN DAY 5.30PM


# சுடர் ஏந்திய தொடர் ஓட்டம்

காலம் இலக்கிய நிகழ்வு

செழியனின்

## வானத்தைப் பிளந்த கதை

(ஈழப் போராட்ட நாட்குறிப்பு)
புத்தக வெளியீடு



பிரதம பேச்சாளர்

**A.R.வேங்கடாசலபதி**

Professor Madras Institute of Development Studies
Associate Fellow, South Asia Initiative
Coordinate Researcher, Harvard-Yenching Institute
Harvard University

MID SCARBOROUGH COMMUNITY CENTRE
2467 EGLINTON AVE EAST
KENNEDY SUB WAY

தொடர்புகளுக்கு: Kalam@tamilbook.com




# இப்பொழுது விற்பனையாகிறது

# $3. மட்டுமே!

அனைத்துத் தமிழ் வர்த்தக
நிலையங்களிலும்
கிடைக்கிறது

www.mediherbs.org

கடந்த மாதத்தில்...

# நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...



ஒக்டோபர் 30,31 2010 - **International Centre**ல் இடம்பெற்ற **CMR**இன் கொண்டாட்டத்தில்.



ஒக்டோபர் 02 2010 - ஐயப்பன் கோவில் மண்டபத்தில்த்தில் இடம்பெற்ற நாடுகடந்த தமிழீழ அரசின் கூட்டதில்.




ஒக்டோபர் 30, 2010 - **Church of St.Columba**ல் இடம்பெற்ற தமிழர் வகை துறைவள நிலையத்தினரின் கருத்து பகிர்வும் கலந்துரையாடலும்.



ஒக்டோபர் 23, 2010 - ஐயப்பன் கோவில் மண்டபத்தில் இடம்பெற்ற அதிபர் பொன் கனகசபாபதி அவர்களின் பவழவிழவில்.



ஒக்டோபர் 28, 2010 -**J & J Banquet Hall**இல் இடம்பெற்ற **TamilCanadian.com** இணையத்தள மீள் அறிமுக நிகழ்வில்




ஒக்டோபர் 16, 2010 - அன்று இடம்பெற்ற மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தின் ஒன்றுகூடலில்



ஒக்டோபர் 17, 2010 - வரசித்தி விநாயகர் கோவிலில் இடம்பெற்ற **Eelan Pictures**இன் ‘சஹாரா பூக்கள்’ திரைப்பட பூசையில்.



ஒக்டோபர் 02, 2010 - **Scarborough Village RC**இல் இடம்பெற்ற தோழர் சிவம் நினைவுக நிகழ்வில்.

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.


புதிய இசை வகுப்புகள் ஆரம்பம்
Scarborough.North york . Markham. Mississauga.Brampton
Vocal . Violin . Veena . Mridangam . Tabla
Piano . Keyboard . Guitar . Drums . Dance
Learn from international performers, and talented
graduate teachers in our studio.
Varnam School Of Music
Call-: Ram (VarnaRameswaran) 647-893-4010
www.varnamonline.com / www.viafa.net
416.265.8884

# திபெத் தேசத்தின் தலைவர்

ஒக்டோபர் மாதம் எனது வாழ்க்கையில் ஒரு மிக முக்கிய மாதமாக அமைந்துவிட்டது. ஆம், 2010 ஒக்டோபரில் எனக்கு ஒரு விருது கிடைத்தது. அது பற்றி கருத்துகளை உங்களுடன் பகிரலாம் என்று இருந்தேன். ஆனால் அதனிலும் முக்கியமான விடயம் டொராண்டோவிற்கு வண.தலைலாமா விஜயம் செய்தமையாகையால் அது பற்றி சில கருத்துகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

வண.தலைலாமா யார் என்பதை நீங்கள் அனைவருமே அறிவீர்கள். எல்லை வரம் பற்ற திபெத் தேசத்தின் தலைவராக 1959ம் ஆண்டில் இருந்து அதை நடத்திவருகிறார். அரை நூற்றண்டுகளுக்கு மேல் ஒரு எல்லை இல்லாத நாட்டிற்கு தலைவராக உலக மக்களால் போற்றப்பட்டு வருகிறார் என்றால் அது அவர் அரசியல் பலமோ அல்லது சானக்கியமோ அல்ல. அவரது ஆன்மீக பலம் தான் காரணம். இந்தியாவின் தந்தையாக போற்றப்படும் மகாத்மாக காந்தியும் பிரித்தானிய ஏகாதிபத்திய சக்திக்கு எதிராக போர்க்குரல் கொடுத்து வெற்றியும் கண்டார் எனில் அதற்கு காரணம் அவரது ஆண்மீக சக்தியே.

வண.தலைலாமா அவர்கள் எழுதிய பல நூல்களை வாசித்து அவர்பால் கவரப்பட்ட நான் அவர் வருகையின் போது அவரை நேரடியாக பார்த்து அவர் பேச்சை கேட்பதற்கு எனக்கு டிக்கட் கிடைத்தபோது அதுபற்றி எனது நண்பர் ஒருவருக்கு கூறினேன். அவர் ஏளனமாக “என்ன விடயத்தை புதிதாக சொல்லப்போகிறார்? தெரிந்த விடயத்தை தான் மீண்டும் சொல்லப்போகிறார். இதற்கு இவ்வளவு பணம் கொடுத்து செல்வதால் பயன் என்ன?” என்று கேட்டார். எனக்கு பதில் மனதில் வந்தாலும் சொல்ல விரும்பாத படியால் அமைதியாகிவிட்டேன். என்ன பதில் என்று கேட்கிறீர்களா? நீங்கள் கேட்ட பாட்டை திரும்பக் கேட்பதற்கு நூறு டொலர் கொடுத்து A.R. ரகுமான் கச்சேரிக்கு போகலாம் என்றால் அல்லது உண்ணி கிருஷ்னன் கச்சேரிக்கு போகலாம் என்றால் ஏன் தலைலாமாவின் பேச்சை கேட்க போகக்கூடாது?

இனி விடயத்திற்கு வருவோம். அந்த பிரசங்கம் Rogers Centerஇல் கிட்டத்தட்ட இருபத்தையாயிரம் பேர் முன்னிலையில் இடம்பெற்றது. திரண்டு வந்த சனத்தில் ஒருவர் முண்டியடித்து கொண்டு நகர்வதை கண்ட ஒரு வெள்ளைமாது அவரிடம் “நீர் பார்க்கப்போவது ஒரு புத்தரை, அதற்கு இப்படி இடித்துக்கொண்டு போகலாமா? கொஞ்சம் பொறுமையாக போகலாமே?” என்று சொன்னார். அந்த வெள்ளை நிறத்தவரும் ஒரு அசட்டுச் சிரிப்பை உதித்துவிட்டு பொறுமையாக நகர்ந்தார்.

அன்றைய தினம் வண:தலைலாமா அவர்கள் உலக அமைதிக்கான வழி பற்றி பேசுவதாக இருந்தது. எனக்கு தெரிந்த விடயம் தானே என்று எனது நண்பர் சொன்ன வாக்கை மனதில் நினைத்துக்கொண்டு என்னை அந்த மேடையில் பேசச் சொன்னால் என்ன சொல்வேன் என்று யோசித்தேன். ஐக்கிய நாடுகள் சபை பக்கச் சார்பற்றதாக மாற்றவேண்டும். அந்த அமைப்புக்கு கூடிய உரிமைகள் வழங்கவேண்டும் என்று எல்லாம் மனதில் நினைத்தேன். ஆனால் அங்கு தலைலாமா அவர்கள் முற்றிலும் ஒரு புதிய கருத்தை முன் வைத்தார்.

திரும்பி வரும்வேளையில் நான் கேட்ட வண: தலைலாமாவின் பேச்சை மனதில் அசை போட்டபடி நடந்தபோது அவர் கூறியது எனது நண்பர் கூறியது போல இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் திருவள்ளுவர் கூறியதே என்று உணர்ந்தேன்.

உலக அமைதிக்கு மனிதர்களுக்கு முதலில் Compassion வேண்டும் என்று சொன்னார். இதற்கு தமிழ் வார்த்தை அருள் நோக்கு இருக்கவேண்டும். மனித குலத்திற்கு அருள் நோக்கு இருந்தால் அவர்களுக்கு துன்பம் நெருங்காது. இதனையே வள்ளுவரும் தான் பாடிய திருக்குறளின் 244வது குறளாக

*“மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு*
*இல்லென்ப*
*தன்னுயிர் அஞ்சும் வினை”*

அதாவது தனக்கு என்ன தீமை வருமோ அஞ்சுவதில்லாதிருப்பதற்கு மற்ற உயிர்களை போற்றி அருளவேண்டும் அல்லது மற்ற உயிர்களிடம் கருணை காட்டவேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும் தலைலாமா அவர்கள் Compassion அல்லது கருனை மக்களிடம் வளர அவர்களிடம் Tolerance அல்லது சகிப்புத்தன்மை தோன்றும் என்று குறிப்பிட்டார். அதாவது கருனையான உலக மக்கள் சகிப்புத்தன்மையுள்ளவர்களாக மாறுவர். வள்ளுவர் கூட சகிப்புத் தன்மை பற்றி குறிப்பிடுகையில் தனது 151வது குறளில்.

*“அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத்*
*தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை”*

என்று கூறினார். அதாவது கருணை உள்ளம் வளர்ச்சியடைவதனால் மக்கள் தன்னை தோண்டும் மனிதனை தாங்கும் தரை போல் ஆவார்கள் என்று கூறினார்கள்.


அடுத்து தலைலாமா அவர்கள், “சகிப்புத்தன்மையின் பலனாக மக்களுக்கு மன்னிக்கும் மனப்பக்குவம் வரும். அதாவது, forgiveness வரும் என்று குறிப்பிட்டார். தலைலாமாவின் பேச்சின் சாரம் யாதெனில் மக்களுக்கு கருணை வளரவேண்டும் கருனையின் வளர்ச்சியால் சகிப்புத்தன்மை வளரும். சகிப்புத்தன்மையின் விளைவால் மன்னிக்கும் மனப்பக்குவம் ஏற்பட்டு உலக அமைதியேற்படும். ஒரு வசனத்தில் கூறுவதானால் “People must Cultivate Compassion which will make them tolerant, by which there will be forgiveness” மன்னிப்பது பற்றி வள்ளுவர் தனது 314வது குறளில்

“இன்னாசெய் தாரை ஒறுத்தல்
அவர்நாண
நன்னயம் செய்து விடல்”

எவ்வளவு உயர்வான நோக்கம் உலகத்தில் எல்லாரும் கண்ணுக்குக் கண், கையிற்கு கை என்று வாழ்ந்தால் அமைதி எங்கே? எனவே தான் வண:தலைலாமா உலக அமைதிக்கு முதல் காருன்னியம் வளரவேண்டும் காருன்யம் வளர்ந்தால் சகிப்புத் தன்மை ஏற்படும் சகிப்புத் தன்மை வளர்ந்தால் மன்னிக்கும் மனப்பக்குவம் ஏற்படும் மக்கள் மன்னிக்கும் தன்மையை பெறுகையில் உலக அமைதி ஏற்படும் என்று கூறி முடித்தார்.

எனது நண்பர் கூறியபடி இரண்டியிரம் வருடங்களுக்கு முன்கூறிய விடயம் தான். இதில் கவணிக்க வேண்டியது ஒருவர் புதியது புதியதாக பொய்கள் சொல்லலாம். ஆனால் உண்மை ஒன்றுதான் எனவே தலைலாமா முந்திச் சொன்னதையிட்டு சந்தோஷப்பட்டுக் கொண்டு பேருந்தில் ஏறி வீடு சேர்ந்தேன்.

அவருடைய பேச்சின் பின்னர், பலர் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்கையில் சிரித்துக்



கொண்டே பல கருத்துக்களை முன்வைத்தார். அவற்றையும் பகிர்ந்து கொள்வேம்.

நான் பதினாலவது தலைலாமா. அதாவது கடைசி. கடைசி என்பதற்காக கூடாத தலைலாமா அல்ல. ஆனால், விரும்பப்படும் தலைலாமா என்று குறிப்பிடலாம் என்றார்.

கனேடியர்கள் பணக்காரருக்கும் வறியவர்க்கும் இடைவெளியை குறைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று சொன்னார். கோப்பன்னேகனில் நடந்த ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் சில நாடுகள் தேசிய உணர்வு காரணமாக சுற்றாடல் மாற்றத்தை தவிர்ப்பதற்கு எடுக்கும் முயற்சிக்கு தடையாயிருப்பதை குறிப்பிட்டார். இது வருத்தத்திற்குரியது என்று தெரிவித்தார். இங்கு மறைமுகமாக கனடா எடுத்த முடிவுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தார் எனலாம்.

அன்று வருகை தந்திருந்தவர்கள் பெரும் பாலும் இளைஞர்களே. அவர்களை நோக்கி “நீங்கள் தான் 21ம் நூற்றாண்டின் உரிமையாளர்கள் அந்த நூற்றாண்டினை அமைதியான நூற்றான்டாக்குவது உங்கள் தோள் களில்தான் உள்ளது” என்று தெரிவித்தார். இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதி பல யுத்தங்களை எதிர்நோக்கியது. நாடுகள் ஒருவருக்கொருவர் யுத்தங்களால் தங்கள் மனஸ்தாபங்களை தீர்த்துக் கொண்டார்கள். இந்த தேசியங்களின் எல்லைக்கோடுகள் மனித வர்க்கத்தை பிரிக்கப் பயன்பட்டதே அண்றி இணைக்கப் பயன்படவில்லை. உண்மையில் ஒரு நாட்டில் வாழ்பவருக்கும் மற்ற நாட்டில் வாழ்பவருக்கும் இடையில் ஒற்றுமையே நிறைந்திருந்தது என்று குறிப்பிட்டார்.

அவரிடம் பெண் தலைலாமாக்கள் இருக்கலாமா? என்று கேட்டதற்கு “ஏன் இருக்கக் கூடாது?” என்று திருப்பிக் கேட்டார். மேலும் பெண்கள் இயல்பாகவே மற்றவர்கள் துன்பத்துக்காக இரக்கப்படும் சுபாவமுடையவர்கள்” என்று கூறிவிட்டு அப்படி தலைலாமாவாக வருபவர் கட்டாயம் கூடிய அழுகுடையவராயிருப்பார் என்று நகைச்சுவையாக கூறினார்.

அவர் தன் பொறுப்புகளில் இருந்து ஒய்வு பெற விரும்புவதாக தெரிவித்தார். தனது 16வது வயதில் சுதந்திரத்தை இழந்து பின் 24வது வயதில் நாட்டையும் இழந்து தனது 75வது வயதில் 75 புத்தகங்கள் எழுதியுள்ளார். அவர் பூத உடல் அழிந்துவிடும். புகழ் உடல் கட்டாயம் நீண்டு வாழும்.

குமார் புனிதவேல் பக்கம்

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com
Team Leadership • Expert Testimony • Municipal Planning • Project Management • Development Planning • Specifications Review • Contract Administration • Construction Technology • Industrial Reuse Strategies • Zoning Changes • Building Permits • Plan Review • Public Relations

# ஊரெழு மக்கள் ஒருங்கிணைப்புக் கழகத்தின்

# "தீப விழா 2010"

வருடாந்த ஒன்றுகூடலும் கலைநிகழ்ச்சியும்

**NOV**

**06**

**சனி**

**St. Columba Church மண்டபம்**


**2723 St Clair Avenue East,**
**Toronto, ON**
(St. Clair & O'Connor)

416 **875 6869**
416 **293 0656**

ஊரெழு மக்களையும் மற்றும் அனைவரையும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்

- ஊரெழு மக்கள் ஒருங்கிணைப்புக் கழகம் -





**Samy Appadurai**
Birth Place - Manthigai
Social Worker
**416-724-5935**
samya@rogers.com



**V.S. ThuraiRajah**
Birth Place - Kaithady Nunavil
Social Worker
**647 829 4044**
raja@cfsGING.com

இந்த இடத்தில் உங்கள் புகைப்படம்!

கனடிய பிரபலங்கள் பட்டியலில் நீங்களும் இடம்பெற வேண்டுமா?
**416-615-4646**
என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள்



**V. Kandavanam**
Birth Place - Chavakachcheri Nunavil
Poet / Writer
**416 286 0457**
vinagar28@yahoo.com



**P. Kanagasabapathy**
Birth Place - Kankesanthurai
Former Principal, Writer
**416-283-1544**
pkanex@hotmail.com



**Sakunthala Mohan**
Birth Place - Jaffna
Dance Teacher
**416 282 9172**
mohanthamothar@rogers.com

# Community Directory



தமிழன் **2011**

# வழிகாட்டி

**Tamil's Guide**
Canadian Tamil's Business Directory

அன்புடன் அனைவருக்கும்,

கனடாவில் தொலைபேசிதான் வாழ்க்கையை நடாத்துகின்றது. ஆனால் எல்லா தொலைபேசி இலக்கங்களையும் ஞாபகத்தில் வைத்திருக்க முடியாது. 365 நாட்களும், 24 மணி நேரமும், கைநூலாகவும், இணையத்தளத்திலும் உங்களிற்கு தேவையான அனைத்து தொலைபேசி இலக்கங்களையும் கடந்த 15 ஆண்டுகளாக வர்த்தகர்களின் பெரு ஆதரவோடு தந்துள்ளோம்.

2011 வெளியீட்டில் "ரொரன்றோவில் பிரபலங்கள்" எனும் பகுதியை சேர்க்க உள்ளோம். எனவே பிரபலங்கள், விளம்பரங்கள் அனைத்தையும் நவம்பர் 15ற்கு முன் **416-615-4646**ல் தொடர்பு கொண்டு பதிவு செய்யுங்கள்.

அன்புடன், உங்கள் சேவையில்... **செந்தி**

**www.tamilsguide.com**
இல்லாத விடயம் இல்லாத இணையம்

## இயற்கையின் விசித்திரம்

# விசா இன்றிப் புலம்பெயரும் பறவைகள்

- பொன் குலேந்திரன் -

### ஜீவராசிகளின் இடப்பெயர்வு

"அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும்" எனக் கவிஞர் கண்ணதாசன் இயற்றிய சினிமாப் பாடல் எமது காதுகளில் இன்றும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. சுதந்திரமாய், தமது விருப்பத்திற்கேற்ப கூட்டமாகவும், ஒற்றுமையாகவும் வானில் பறந்து, குடிவரவு, மொழி, பாதுகாப்பு போன்ற கட்டுப்பாடுகளின்றி, தேசம் விட்டுத் தேசம் செல்லும் பறவைகளைப் போல மனிதன் வாழ நினைப்பதில் தவறில்லை. அந்த நிலை மனிதனுக்கு வருமா என்பது சந்தேகம். பொருளாதார, அரசியல் காரணத்தால் நாடுகளுக்கிடையே பயணக் கட்டுப்பாடுகள் மனிதனால் உருவாக்கப்பட்டவையே. தன் சொந்த நாட்டுக்குள்ளும் ஒரு ஊரில் இருந்து இன்னொரு ஊருக்குப் போவதற்கும் பாதுகாப்பு வலையம் என்ற பெயரில் தடைகளுண்டு. இத்தகைய தடைகளுக்கு அப்பாற்பட்டவை மற்றைய ஜீவராசிகள். அதிலும் பறவைகள் தாம் நினைத்த மாதிரி எங்கு வேண்டுமென்றாலும் பறந்து செல்லக் கூடியவை. அதன் மேல் பொறாமைப்பட்டோ என்னவோ துப்பாக்கி ஏந்தி, தமது ஊருக்கு விருந்தாளிகளாக வரும் அப்பறவைகளை மனிதன் வேட்டையாடி மகிழ்கிறான். பறவைகள் போன்று மொனாக் (Monarch) என்ற இனத்தைச் சேர்ந்த வண்ணத்துப் பூச்சிகள், மற்றும் தத்துக்கிளிகள் கூட வட ஆபிரிக்காவில், வெகு தூரம் பாலைவனத்தினூடாகப் பயணம் செய்கின்றன. மொனாக் வண்ணத்துப் பூச்சிகள், பெரும் கூட்டமாக வட அமெரிக்கா, தென் கனடா பகுதியிலிருந்து சுமார் 3000 மைல்கள் வாரக்கணக்கில் பறந்து சென்று மெக்சிக்கோ, கலிபோர்னியா போன்ற இடங்களை அடைகின்றன. சில வேளைகளில் திசை மாறி அட்லான்டிக் சமுத்திரத்தையும் கடந்து ஐரோப்பாவை அடைகிறது என்றால் சிலர் நம்புவதற்கு தயங்குவார்கள். இவ்வாறே தண்ணீரும் உணவும் தேடி, ஆபிரிக்காவில் வன விலங்குகள் கூட்டமாக இடம் பெயர்கின்றன. அதனால் ஆறுகளைக் கடக்கும் போது சக்தி குறைந்த விலங்குகள் பல பலியாகின்றன. அதுவுமல்லாமல் சக்தியிழந்து பயணத்தைக் கூட்டத்துடன் மேலும் தொடரமுடியாமல் வேறு விலங்குகளுக்கு இரையாகின்றன.

### இடப்பெயர்வுக்கான பண்டையக் கால கருத்து:

உயிரினங்களில், விரைவாகவும் வேண்டியவாறும் திசை மாறி இயங்கக் கூடிய திறமை படைத்தவை பறவைகள். பருவகாலத்துக்கு ஏற்ப, மட்டான தட்ப வெப்ப நிலை (Temperate climate) உள்ள தேசங்களை நாடி தற்காலிகமாக புலம் பெயர்வதற்காக, வானத்தில் நீண்ட பயணத்தை ஆரம்பிக்கும் பறவையினங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் 3,000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து வந்தது. பைபிளிலும் பறவைகளின் புலம்பெயர்வைப் பற்றி கூறப்பட்டுள்ளது. கிரேக்க இயற்கை வாதியும் தத்துவஞானியுமான அரிஸ்டோட்டல் பறவைகள் புலம் பெயர்வதைப்பற்றி ஆராய்ச்சி செய்து எழுதினார்.

குளிர்காலங்களில் பல இனப் பறவைகள் உறைந்த சீதோஷ்ண நிலையில் வாழ்கின்றன. அரிஸ்டோடலின் மாணவர்கள் குளிர்காலங்களில் பறவைகளின் மறைவிற்கு இந்த உறைந்த நிலையே காரணமெனக் கருதினர். ஆனால் இக்கருத்து தற்போது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பறவைகளின் இன மாற்ற தத்துவத்தை அரிஸ்டோட்டல் முன்மொழிந்தார். இதன்படி வடக்கில் இருந்து பறவைகள் தெற்கு நோக்கிப் போகும்போது தெற்கிலிருந்து பறவைகள் வடக்கு நோக்கி இடம் மாறுகிறது என்பதே. ஆனால் உண்மையில் இப்பறவைகள் இனம் ஒன்று என்பதையும் குளிர்காலங்களிலும் அவை இடம் மாறுகின்றன என்ற உண்மை காலப்போக்கில் அறியவந்தது.

### இடப்பெயர்வை அவதானிக்கும் முறைகள்:

பறவைகளின் குடிபெயர்வைப் பற்றிய பல விடயங்களை தொடர்ந்து நேரடியாக அவதானிப்பதன் மூலம் அறிந்துகொள்ளலாம். பருமன், நிறம், பறவைகள் எழுப்பும் ஒலி, அவை பறந்து செல்லும் பாதை போன்றவை மூலம் அறியலாம். பல இனப் பறவைகள் இரவில் குடிபெயர்கின்றன. காரணம் குளிர்மையும், சக்தி விரயமடைவது குறைவுமாகும். பௌர்ணமி தினங்களில் அவை பறப்பதை ஆராய்ச்சியாளர்கள் அவதானிப்பது இலகு. பறவைகள் எழுப்பும் ஒலியினை பரவளைவுள்ள பிரதிபலிப்பொன்றினைப் (Parabolic Reflector) பாவித்து ஒலி நாடாவில் பதிவு செய்து ஆராய்ச்சி நடத்தினர். இரவில் எந்த நேரத்திலும் ஒலியைப் பதிவு செய்யக் கூடிய தன்மை இந்த முறையில் இருந்தாலும், பறவைகள் செல்லும் பாதையை இம்முறைப்படி அறிவது கடினம். சுமார் 11,000 அடி உயரத்தில் பறக்கும் பறவைகளின் ஒலிகளை இந்த முறைப்படி பதிவுசெய்யலாம். சில பறவைகள் பகலில்







எழுப்பும் ஒலியைவிட இரவு நேரங்களில் எழுப்பும் ஒலியானது வித்தியாசமானது. இதனால் சில சமயம் தகவல்களை பகுப்பதில் சந்தேகம் ஏற்படலாம்.

பறவைகளை பிடித்து அடையாளமிட்டு, பின் பறக்கவிட்டு, அவை போய் சேரும் இடத்தில் அவ்வடையாளம் உள்ள பறவைகளைக் கண்டுபிடித்து அவதானிப்பது இன்னொரு வழிமுறையாகும். வானொலி, ரேடார் போன்றவற்றை பாவித்தும் பறவைகளின் குடிபெயர்ச்சி பற்றிய விபரங்களைச் சேகரிக்கலாம்.

### பயணத்துக்கு வழிகாட்டிகள்:

விமானம் பறப்பதற்கு தொழில் நுட்பத்தையும் செய்மதியையும் பாவித்து அவை மூலம் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. ஆனதால் பறவைகள் தமது சுய அறிவையும் மரபு வழிவந்த பழக்கத்தையும் இயற்கையின் துணையுடனும் தம் பயணங்களை மேற்கொள்கின்றன. அதனைப் பார்த்து மனிதன் கற்றவை பல. ஆனால் பறவைகள் மனிதனிடம் கற்கவில்லை. தாம் செல்லும் பாதை சரியானதா என்பதை எவ்வாறு பறவைகள் அறிகின்றன என்பது சுவாரஸ்யமானது. பல வழிகளின் மூலம் அவை தாம் செல்லும் பாதையை அறிகின்றன அவை.

இரவில் பறக்கும் போது வானில் ஜொலிக்கும் நட்சத்திரங்களின் உதவியுடன் திசையை கண்டுபிடிக்கின்றன. வானசாஸ்திரத்தை பறவைகள் அவ்வளவுக்கு அறிந்து வைத்திருக்கின்றனவா என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது.

மணத்தை வைத்துப் பறவைகள் செல்லும் பாதையை கண்டுபிடிக்கின்றன. காடு, மலை, போன்ற பகுதிகளுக்கு மேல் பறக்கும் போது அவை நுகரும் மணம் வழிகாட்டியாக அமைகிறது.

நதிகள், மலைகள், கடற்கரை ஓரங்கள், பாலைவனங்கள் போன்றவைகளை குறியாக வைத்து பறக்கின்றன.

கூட்டமாக முக்கோண வடிவில், வானத்தில் பறக்கும் போது தம் கூட்டம் போகும் வழியையே பின்பற்றுகின்றன.

பூமியின் காந்தப் புலத்தை அடிப்படையாக வைத்து அதன் உதவியுடன் பறவைகள் பறக்கின்றன.

### பறக்கும் யுக்திகள்:

பறவைகள் வெகுதூரம் பறப்பதற்கு பல யுக்திகளைக் கையாளுகின்றன. கனடாவின் வாத்து (Canadian Geese) இனம் பயணத்தின் போது "நாங்கள் வருகிறோம் எங்களுக்கு வழி விடு" என்று குவா குவா சத்தம் போட்டவாறு வானில் பறப்பதைக் காண்கிறோம். அவை பறக்கும்போது சிறகைத் தொடர்ந்து அடித்துக்கொண்டே இருக்கும். அவ்வளவுக்கு சக்தியை அவை உள்ளடக்கி உள்ளன. களைத்தவுடன் கீழே உள்ள மலை அல்லது குளம் குட்டையில் ஓய்வெடுத்து, தமது சக்தியை மேலும் அதிகரிக்க உணவருந்த இறங்கிவிடும். அந்த சமயம் பார்த்து மனிதன் ஒளிந்திருந்து அவைகளை வேட்டையாடுகிறான். வான்கோழியினத்தை சேர்ந்த பறவையினம், சூரிய வெப்பத்தால் சூடாகிய காற்றினால் ஏற்படும் உந்தலைப் பாவித்து பகல் நேரங்களில் பறக்கும். இவை அனேகமாக நிலப் பரப்பின் மேல் தமது பயணத்தை செய்யும். சிறிது நேரம் சிறகை அடித்துவிட்டு பின்னர் வானில் சறுக்கிச் செல்வது இன்னொரு பறவை இனம் கையாளும் யுக்தி. இந்த முறையைப் பாவித்துத்தான் மனிதன் Glider என்பதை கண்டுபிடித்தானோ என்னவோ. உயரம் குறைந்தவுடன் மேலும் சிறகை அடித்து மேலே எழும்பும். இதனால் அவை செல்லும் பாதை சீராக இல்லாமல் மேலும் கீழுமாக அமைகிறது. பறவைகள் பறக்கும்போது காற்றினால் ஏற்படும் உராய்வினை எதிர்ப்பதற்கு முக்கோணவடிவில் பறந்து செல்கின்றன். அக்கூட்டத்தில் தலைவனாக இயங்கும் பறவைக்கு பலதடவை பறந்த அனுபவத்தால் பறக்கும் வழி தெரியும். கூட்டமாக பறந்து செல்வது மனித இனத்திற்கு ஒற்றுமையை எடுத்துக்காட்டுகிறது.

### நீண்ட பயணம்:

பறவைகள் குளிர்காலங்களில் உணவுக்காகவும், தம்மை கடும் குளிரிலிருந்து பாதுகாப்பதற்காகவும் புலம்பெயர்கின்றன. சில பறவை இனங்கள் குளிரிலும் உண்ண போதிய உணவிருந்தால் புலம் பெயராமல் தமது நாட்டிலேயே வாழும். ஆயிரக்கணக்கான மைல்கள் அவை பறந்து சென்று உணவைத் தேடுகின்றன. ஸ்வலோஸ் (Swallows) என்ற பிரித்தானிய நாட்டு பறவைகள் குளிர் காலங்களில் வெகு தூரத்தில் உள்ள மத்திய ஆபிரிக்க நாடுகளுக்கு பறந்து செல்கின்றன. தென் ஆபிரிக்காவின் பருவ நிலையை அவை பெரிதும் விரும்பினாலும் மேலும் சில ஆயிரம் மைல்கள் பறந்து தமது உயிருக்கு ஆபத்தை தேடிக் கொள்வதை அவை தவிர்க்கின்றன. வட துருவங்களில் வாழும் Artic terns கடற்பறவை வகை ஒரு வருடத்தில் புலம்பெயர்ந்து தென் துருவம் சென்று திரும்பும். அவை பயணத்தின் போது சுமார் 25,000 மைல்கள் பறக்கின்றன. குடி பெயர்ந்து செல்லும் பறவைகளின் பாதைகள் பெரும்பாலும் பருவமாற்றத்தால் மாற்றமடையும். தூரப் பயணத்துக்குத் தேவையான உணவை உண்டு, சக்தியை சேகரித்த பின்னரே தம் நீண்ட பயணத்தை ஆரம்பிக்கின்றன. சில பறவை இனங்கள் போகும் வழிகளில் உணவை அருந்தி, இழந்த சக்தியினைப் பெற்று, மேலும் பயணத்தைத் தொடர்கின்றன. பறவைகள் 20,000 அடி உயரத்தில் பறக்கக் கூடியவை. காற்று வீசும் திசை, வெப்பநிலை ஆகியவற்றை அடிப்படையாக வைத்து தங்களின் பயணத்தை தொடர்கின்றன.

### விசாவின்றி இலங்கை வரும் பறவைகள்:

கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் சைபீரிய வாத்துக்களை தனது கவிதையொன்றில் குறிப்பிட்டுள்ளார். நெடுந்தீவைப் பற்றிக் குறிப்பிடும் போது அங்கு, பிறதேசத்தில் இருந்து வரும் பறவைகள் ஊர்ப் பறவைகளுடன் உறவாடு

76ம் பக்கம் பார்க்க...



# Thinking of Buying, Selling or Leasing !!

New or Re-Sale of Homes or Condos !!
Find out the Market Value of your Property !!

**Please Call**



Tammy Surendran (Broker)
tammy.surendran@gmail.com

**416 - 410 - 9301**

**416 - 321 - 6969**

HOMELIFE
HIGHER STANDARDS

Home Life GTA Realty Inc., Brokerage
1711 McCowan Road, Suite 206
Toronto, ON. M1S 3Y3

## பேச்சுப் பல்லக்கு - 3

# மெத்தப் படித்த மிதப்பு



**சி.சண்முகநாதன்**

பிடிப்பது எலி தான் என்றாலும் பொத்துவதும் பூறுவதுமாய் போய்க்கொண்டிருக்கிறதே யன்றிப் பிடிபட்ட பாடாயில்லை. காட்டுக்கு வேட்டைக்குப் போகிறராசா கரடி, புலி, சிங்கம், கொண்டு வருவார் என்று எதிர்பார்த்தால் கரட்டி ஓணான் தான் கொண்டு வருகிறார் வழக்கமாக.

நாங்கள் பொதுவாக இலங்கையின் வடபுலத் தமிழர்கள் (முன்னர் 'யாழ்ப்பாணத்தார்' என்று குறிப்பாகச் சுட்டி வழங்கப்பட்டது) கல்வியில் பெரிதும் அக்கறை கொண்டவர்களாக இருந்தோம், இருக்கிறோம். பெருமளவில் கல்வியை மூலதனமாகக் கொண்ட வாழ்வாய் இருந்தமையினால் மற்றவர்களைவிட கல்வியில் முன்னேற்றமுள்ளவர்களாகவும் இருந்தோம். இதனால் கிடைத்த பதவி, வருவாய் மற்றும் சமூக மதிப்புயர்வு என்பன படித்தவர்களை ஒரு தனித்த உயர் சமூகமாகவும், தங்களைத் தாங்களே தூக்கிப்பிடிக்கவும் வாய்ப்பாயிற்று. சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களையவும் வரலாற்றின் வளர்ச்சிப் போக்கிற்குத் துணை நிற்கவும், கூடியதான கல்வி எதிர்மறையாக தமக்குத்தாமே பெருமிதம் கொள்ளவும் படிப்பின் பெயரால் எத்திப் பிழைக்கவும், மற்றவர்களைத் தாழ்த்துவதற்கும் கூட பயன்பட்டது, பயன்படுத்தப்படுகிறது. இந்த எதிர்மறையை நிராகரிக்காமல் மென்று விழுங்குபவர்கள் இன்றும் நிறைய.

எவ்வளவுதான் பாரம்பரியம், தேசியம், சுயசார்பு பேசினாலும், உதாரணமாக சித்த மருத்துவம் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டு ஆங்கில மருத்துவருக்கு இணையான பட்டத்தை பல்கலைக்கழகம் வழங்கினாலும், மறைவிலாவது "அவர் டாக்குத்தரில்லை பரியாரி" என்று சிலேடை பேசுவதும் அதனைச் சமமாக ஏற்க மனமொப்பாமையும் நம்மிடம் இருக்கவே செய்கிறது. மற்றவர்களைவிட படித்தவர்கள்தான் ஒருவரையொருவர் மட்டம் தட்டுவதிலும் விற்பன்னர்களாயிருப்பர்.

எங்களோடு பள்ளிக்கூடம் வந்த ஒருவர் நன்றாக கூட்டம் பேசுவார். எப்போது எங்கே பேசக் கிடைத்தாலும் ஏதோ ஒருவருடைய பெயரையும் அவர் எழுதியதாக ஒரு புத்தகத்தின் பெயரையும் சொல்லி இத்தனையாம் பக்கத்தில் இவ்வாறு எழுதியிருக்கிறார் என்று எதையாவது சொல்லுவார். அர்த்தம் இல்லாவிட்டாலும் அடுக்கிப் பேசுவார். அவர் என்னோடு நல்ல விசுவாசமாக இருந்தார். ஒரு நாள் அவர் சொன்ன ஒரு புத்தகத்தின் பெயரால் ஈர்க்கப்பட்டு அதனைப் படித்து விட்டுத் தருகிறேன் என்று இரவல் கேட்டேன். அவர் இரகசியமாகக் சொன்னார் "இப்படி ஏதும் சொன்னாத்தான் எனக்கும் நாலுவிசயம் தெரியுமென்று மற்றவை நினைப்பினம். அதுக்காக அப்படிச் சொல்றனான் அந்தப் பெயரில் எனக்குத் தெரிய புத்தகமொன்றுமில்லை".

"மற்றவர்கள் அப்படியொரு புத்தகமில்லை என்று எந்தக் கூட்டத்திலாவது வைத்து மாட்டிவிடமாட்டார்களா?" என்று கேட்டேன்.

"அப்படி ஒருவரும் கேட்கமாட்டார்கள். ஏனென்றால், படிக்காதவர்கள் நமக்கென்ன என்றோ நமக்கொன்றும் தெரியாது என்றோ இருந்து விடுவார்கள். படித்தவர்களோ தாங்கள் அந்தப் புத்தகத்தைப் படிக்கவில்லை என்பதை வெளிப்படுத்தி விடக்கூடாதென்பதற்காக தாங்களும் அதைப் படித்தது மாதிரிப் பாவனை பண்ணித் தலையை ஆட்டிக்கொண்டிருப்பார்கள்".

*"என்னவோ ராகம், என்னென்னவோ தாளம்*
*தலையை ஆட்டும் புரியாத கூட்டம்"*

சிந்துபைரவி படப் பாட்டில் வாறசங்கதி தான். எங்க எப்பிடிப் பேசினா கைதட்டு விழும் அல்லது மொத்தல்விழும் என்று தெரிந்துதான் நான் பேசுவேன்" என்றார் பிற்காலத்தில் தேர்தல் திருவிழா வரும்போதெல்லாம் அவர் விலாசமான பேச்சாளர். காலத்துக்காலம் கட்சி மாறினாலும் பொன்னாடைக்கும் பொற்கிழிக்கும் குறையிருக்காது.

யூதர்களோடு எங்களை ஒப்பிட்டுப் பேசுவதில் எங்களுக்கு ஒரு பெருமை எப்போதும் உண்டு. நாங்கள் இரு பகுதியினரும் தான் கெட்டித்தனத்திற்குப் பெயர்போனவர்களாம். யூதர்களின் கெட்டித்தனத்திற்கு நம்மவர் ஒரு கதை சொல்வார்கள்.

> **"யூதர்களோடு எங்களை ஒப்பிட்டுப் பேசுவதில் எங்களுக்கு ஒரு பெருமை எப்போதும் உண்டு. நாங்கள் இரு பகுதியினரும் தான் கெட்டித்தனத்திற்குப் பெயர்போனவர்களாம்."**



"ஒரு முறை ஓரிடத்தில் ஒரு யூதக்குருவும், ஒரு கத்தோலிக்கக்குருவும் ஒரு இந்துக்குருவும் சந்தித்துக் கொண்டார்கள். கடவுளுக்கு காணிக்கையைச் சேர்ப்பிப்பது பற்றி உரையாடல் இடம்பெற்றது.

**இந்துக்குரு சொன்னார்:**
"நான் ஒரு பெரிய சதுரம் கீறி எட்டு சிறிய சதுரங்களாகப் பிரிப்பேன். அவற்றிற்கு ஒன்றிலிருந்து எட்டுவரை இலக்கமிடுவேன். எட்டஇருந்து காணிக்கையை வீசுவேன். ஒற்றை இலக்கத்தில் விழுந்தால் கடவுளுக்கு இரட்டை இலக்கத்தில் விழுந்தால் எனக்கு".

**கத்தோலிக்கக்குரு சொன்னார்:**
"நான் ஒரு கோடு கீறி எட்டஇருந்து காணிக்கையை வீசுவேன். வெளியே விழுந்தால் கடவுளுக்கு உள்ளே விழுந்தால் எனக்கு".

**யூதக்குரு சொன்னார்:**
"நான் நின்ற இடத்திலிருந்து கொண்டு மேலே காணிக்கையை வீசுவேன் மேலே நின்றால் கடவுளுக்கு கீழே விழுந்தால் எனக்கு"

இந்தக் கதையில் தொனிப்பது கெட்டித்தனமா? மற்றவரை முட்டாளாக்குவதா. என்பது யோசிக்கப்படுவதில்லை. மாறாக "அதுதான் அவங்கடகெட்டித்தனம்" என்று வியந்து மற்ற வருக்கும் சொல்லவேண்டியதுதான். இதில் யாரையோ உயர்த்திச் சொல்லப்போய் நம்மை ஒப்பிட்டுச் சிறுமைப்படுத்தியிருக்கிறோம் என்பது கூடவா புரிவதில்லை?

படித்தவர்களுக்கு இடையேயான வித்துவக் காய்ச்சல் அலுவலகங்கள், சங்கங்கள், சந்திப்புகள் எல்லாவற்றிலும் வெளிப்படும். தங்களுடைய எல்லைக்கப்பாலும் அடுத்தவர் காலை வாரும் ஆவல் இருக்கும்.

ஈ.வெ.ரா. பெரியார் அவர்களிடமிருந்து சிலவற்றை மேற்கோள் காட்டுகிறேன். பெரியார் என்பதற்காக ஏற்றுக் கொள்ளாமல் விமர்சனத்துடன் அணுகுங்கள்.

"மற்றும் புலவர் வித்துவான் என்ற பெயரால் யார் வாழ்ந்தவராக, வாழ்பவராக இருந்தாலும் அவர்கள் பெரிய மதப்பற்றுள்ளவர்களாகவும் மதவாதிகளாகவுமே இருந்து வருவது ஒரு சம்பிரதாயமாகவே ஆகிவிட்டதால், புலவர் வித்துவான் என்றால் மேலும் மூட நம்பிக்கைக்காரர்களாகவும் பிடிவாதக்காரர்களாகவும் இருக்க வேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள்".

"அதிலும் கொஞ்ச காலத்திற்கு முன்வரையில் புலவர்கள் வித்துவான்கள் என்றால் 100க்கு 90 பேர் பிச்சை எடுத்தே அதாவது இச்சகம் பேசி பிச்சை வாங்கும் தொழிலுடையவர் என்று ஆகிவிட்டதால் பொய்யோ புளுகோ கற்பனையோ ஏதேதோ பேசி பணம் பெறுவதிலேயே கவலையுள்ளவர்களாகவே வாழ்ந்ததால் தத்துவ விசாரணை என்பது அவர்களுக்கு வெகுதூரமாகவே இருக்க வேண்டியதாகி விட்டது."

"இத்தனை காலமும், தமிழ் தோன்றிய 3,000 4,000 ஆண்டு காலமாக இந்த நாட்டில் வாழ்ந்த தமிழனாலும் தமிழ் படித்த புலவனாலும் தமிழ் நாட்டிற்கு, தமிழர் சமுதாயத்திற்கு என்ன நன்மை, என்ன முற்போக்கு உண்டாக்கப்பட்டிருக்கிறது? இலக்கியங்களிலே சரித்திரங்களிலே காணப்படும் எந்தப் புலவனால், எந்த வித்துவானால், எவர் உண்டாக்கிய இலக்கியங்களினால் இதுவரை தமிழனுக்கு ஏற்படுத்தப்பட்ட, ஏற்படுத்திய நன்மை என்ன என்று கேட்கிறேன்."

"இந்தத் தமிழ் மொழியானது காட்டுமிராண்டி மொழி என்று நான் ஏன் சொல்கிறேன்? எதனால் சொல்லுகிறேன்? என்று இன்று கோபித்துக் கொள்ளும் யோக்கியர்கள் ஒருவர்கூட சிந்தித்துப் பேசுவதில்லை 'வாய் இருக்கிறது எதையாவது பேசி வம்பு வளர்ப்போம்' என்பதைத் தவிர அறிவையோ, மானத்தையோ, ஒழுக்கத்தையோ பற்றி சிறிதுகூட சிந்திக்காமலே பேசி வருகிறார்கள்."

*(நன்றி: தமிழும் தமிழரும். பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடு, நான்காம் பதிப்பு 2008).*

ஒரு நண்பர் வட்டத்தில் ஒருவர் எப்போதும் சிக்கனம் பற்றிய பேசுவதிலும் சிக்கனமாக இருப்பதிலும் கவனமாயிருப்பார். நண்பர்கள் அவரில்லாத இடத்தில் அவரைக் கஞ்சன் என்று குறிப்பிட்டாலும் அவரிருக்குமிடத்தில் அவரைப் பற்றிப் பெருமையாகப் பேசுவார்கள். எல்லோரும் சிக்கனம் பற்றி அவரிடம் கற்றுக் கொள்ளவேண்டும் என்றும், மற்றவர்களுக்கு வழிகாட்ட சிக்கனம் பற்றி அவரை ஒரு நூல் வெளியிடுமாறும் வற்புறுத்துவார்கள். அந்த நண்பரும் இவர்களின் புகழுரைகளில் மயங்கி சிக்கனமில்லாமல் சிக்கனம் பற்றி அறுக்க ஆரம்பித்துவிட்டார். அவரின் தொல்லை தாங்காத நண்பர்கள் ஒரு 'மகா கஞ்சனை'த் தேடிப்பிடித்து அவரின் பெருமைகளை இவரிடம் சொல்லி அவரிடம் கற்றுக் கொண்டால் இன்னும் பிரபலமாக வரலாம் என்று சொன்னார்கள். இவருக்கோ தன்னைவிட இன்னொருவர் என்பது பொறுக்கமுடியாதிருந்தது. இருந்தும் அவரிடம் பாடம் கற்கப் போகவேண்டியதாயிற்று. எப்படியும் அவரை மேவிவிட வேண்டும் என்று உள்ளம் அவாவியது.

ஒரு நாள் உபதேசம் ஆரம்பமாகிப் போய்க் கொண்டிருக்கையில் இரவாகியது. குரு விளக்கையும் தீப்பெட்டியையும் எடுத்து அருகில் வைத்துக் கொண்டு "இருவரும் தானே இருக்கிறோம் இப்போது ஏன் விளக்கு உபதேசம் முடிந்து எழும்பும்போது கொழுத்து வோம்" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தார். ஒருவாறு உபதேசம் முடிந்து குரு விளக்கைக் கொழுத்த முற்பட்டபோது "சற்றுப் பொறுங்கள் குருவே" என்ற எமது நண்பர் "இருட்டில் தானே இருக்கிறோம் என்று உடுப்பைக் கழற்றி வைத்துவிட்டேன் போட்டதும் சொல் கிறேன் கொழுத்துங்கள்" என்றாராம்.

பல்லக்குப் போகும்...

sanmuganathan.s@thaiveedu.com

■ ■ ■


வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# சிங்கள இனமும்...


66ம் பக்கத் தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| பாக்கியநாதன் | தமிழ் | Dravidian |
| [illegible] | Telugu | Dravidian |
| [illegible] | Malayalam | Dravidian |
| [illegible] | Kannada | Dravidian |
| [illegible] | Sinhala | ??????? |
| पकियनतहन | Sanskrit | Ariyan |
| पकियानाथान | Hindi | Ariyan |
| [illegible] | Gujarati | Ariyan |
| [illegible] | Oriya | Ariyan |

தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் சிங்களம் தோன்றுவதற்கு முன்பு தோன்றிய மொழிகளாகும் ஆனால் மலையாளமும் சிங்களமும் ஒரே காலத்தே தோன்றிய மொழிகளாகும். இக்காலத்தே தென் இந்தியாவில் சோழ அரசாட்சி ஓரியா உட்பட தென்கிழக்காசியாவரை பரவியிருந்தது. சோழராட்சியின் போதே ஆரியம் தென் இந்தியாவில் பெரிதாக நிலைபெறத் தொடங்கிய காலமாகும். சோழர்கள் பல கோயில்களையும் மடாலயங்களையும் தாம் அரசாட்சி செய்த பகுதிகளில் கட்டி அங்கு ஆரிய பிராமணர்களை குடியமர்த்தினார்கள். ஆதன்போது ஒரு பாரிய ஆரியக் குடியேற்றமே நடந்ததென்றே கூறவேண்டும். அதன் போதே ஆரியச் செலவாக்கு தென் நாட்டில் புகுந்தது இதன் காரணமாகவே திராவிட மொழிகளில் ஆரியக் கலப்பு ஏற்பட்டு அது ஒரு மோகமாகவே மாறிவிடுகின்றது இதன் காரணமாக ஆரியச் சொற்பாவனைகள் அத்தோடு அச்சொற்களை உச்சரிக்கும் பொருட்டு சில ஆரிய வரிவடிவங்குளம் தேவைப்பட்டன இதன் விளைவாகவே ஸ,ஷ,ஜ,ஸ்ரீ,ஹ, Bha, fa, fha, ha, ga, gha, போன்ற எழுத்துக்கள் இந்த மொழிகளிலே பாவிக்கப்பட்டன. தெலுங்கு, கன்னடம், மலையாளம், சிங்களம் ஆகியன உயிர் எழுத்துக்களில் தமிழை விட 'ற' என்ற எழுத்தினை உயிர் எழுத்துக்களாகச் சேர்த்துக் கொண்டன. பௌத்த மதத்தின் ஆதிக்கத்தினால் பாளி மொழியின் செல்வாக்கினையோ அன்றி சமஸ்கிருதத்தின் செல்வாக்கினையோ சிங்களத்தினால் தவிர்க்க முடியவில்லை. இதுபற்றிய விபரங்களை அடுத்த கட்டுரையில் தொடர்வோம்.

## பிராமியின் தொடர்பு:

அனுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பெற்ற சில குகைக் கல்வெட்டுக்கள் பிராமியின் வடிவத்தில் உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதே வகையான பிராமி எழுத்துக்களே தமிழ் நாட்டின் ஆதிச்சநல்லூர், கொடுமணல் ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துக்களோடு ஒத்திருப்பதாக பேராசிரியர் தெ.பி.மீனாட்சிசுந்தரனார் குறிப்பிடுகின்றார். அனுராபுரக் கலவெட்டுக்கள் ஆசோகன் பிராமியென இலங்கை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அசோகன் பிராமியின் மூலமே தமிழ் பிராமியின் வழிவந்தது என்றாகிவிட்ட நிலையில் அங்கு அசோகன் பிராமியில் எழுதப்பட்டுள்ளது என்பதனை எவ்வாறு ஏற்கமுடியும். அசோகன் பிராமியின் அடிப்படையே வடதிராவிடமாகிய பிரகிருதம் என்று பல ஆராச்சியாளர்கள் இன்று கருத்து வெளியிட்டுள்ள நிலையில் இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் யாவும் தமிழி என்றழைக்கப்படும் தமிழ் பிராமியாகும். கீழே காணப்படும் மட்பாண்ட தமிழ் எழுத்து அதற்கு தகுந்த சான்றாகும்.



இது 2007ஆம் ஆண்டு திசமாரகமவில் புதைபொருளாராச்சியில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டத்தில் எழுதப்பெற்ற அசல் தமிழ் பிராமியாகும். இந்த வடிவத்திற்கும் அசோகன் பிராமி வடிவத்திற்கும் எந்தவிட தொடர்புகளும் இல்லை. கிமு 200ஆம் ஆண்டின் தமிழ் பிராமி வடிவம் கண்டுபிடிப்பு ஜேர்மன் புதைபொருள் ஆராச்சிக்குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஐராவதம் மகாதேவன் அவர்கள் அதனை வாசித்து அதில் திரா ளி முறி என்று எழுதியிருப்பதாக வாசித்துள்ளார். கூடியிருப்பதற்கான ஒப்பந்தம் என்பது அதன் விளக்கம் என்று வாசித்துள்ளார். இறுதி எழுத்தில் தமிழ் வட்டெழுத்தின் றி புரிவதாக உள்ளதாகக் குறிப்பிடுகின்றார். முறி என்பது இன்றும் ஒப்பந்தத்திற்கு வழங்கப்படும் தமிழ் சொல்லாகும். இதன் சித்திர எழுத்து வடிவங்கள் சிந்துவெளி சித்திர எழுத்துக்களை ஒத்ததாகவேயுள்ளது. வடதிராவிடம் என்ற பிரகிருதமும் தமிழுமே வரலாற்றின் ஆரம்பகாலத்தே மண்ஓடுகளிலேயோ அன்றி குகைகளிலேயே பதிவுகளை மேற்கொள்ள தென் ஆசியாவில் பயன்படுத்தப் பட்டது. இப்படியாக முதலாவது பதிவு கி.மு. 3ஆம் நூற்றாண்டிலேயே பதியப்பட்டுள்ளது.

## சிங்கள மொழி இலக்கணம்:

சிங்கள மொழிக்கு 13ஆம் நூற்றாண்டிலே இலக்கணம் வகுக்கப்பட்டது. இந்த இலக்கணம் 11ஆம் நூற்றாண்டில் சோழ மன்னனான வீர.இராசேந்தின் காலத்தில் புத்தசமயத்தினைப் பின்பற்றிய புத்தமித்திரனார் என்ற தமிழர் ஒருவர் எழுதிய வீரசோழியத்தினைப் பின்பற்றியே வகுக்கப்பட்டது. 9ஆம் நூற்றாண்டிலிருந்து 11ஆம் நூற்றண்டுவரை சோழர்களே இலங்கையினைக் கைப்பற்றி ஆட்சிசெலுத்தி வந்தந்தார்கள். இறுதியாக விஜயபாகு 1070ல் சோழர்களிடமிருந்து மீண்டும் கைபற்றும் வரை சோழர்களின் ஆட்சியே 100 வருடங்களுக்கு இருந்தது. பின்பு விஜயபாகுவிற்கும் அப்போதைய சோழ அரசனான குலோத்துங்க சோழனுக்கும் திருமணத்தின் மூலம் தொடர்பு ஏற்பட்டு ஒரு சுமூகநிலையிருந்தது. 100 வருட தமிழரசர்களின் ஆட்சியில் சிங்கள மொழியினைச் செழிப்புற வைக்கும் நோக்கோடு புத்தமித்திரனாரால் எழுதப்பெற்ற வீருசோழியத்தினைப் பின்பற்றி முதன் முதலாக சிங்கள மொழிக்கு இலக்கணம் வகுக்கப்பட்டது. சோழர் காலத்தே தமிழ்நாட்டில் ஆரியமொழியினை அவர்கள் போற்றிப் பூசித்து வந்ததினாலும் அந்த இலக்கணத்தில் வடமொழியின் இலக் கணச் சாயல் இருந்ததனாலும் அத்தோடு அதனை ஒரு புத்த சமயத்தினர் இயற்றியதாலும் தமது மொழிக்கு ஒரு இலக்கண வடிவம் தேவையென்பதாலும் அதனை சிங்களம் இலகுவாக ஏற்றுக் கொண்டது.

சோழர் காலத்திலும் தொடர்ந்து பல்லவர் காலத்திலும் தமிழ் நாட்டில் வடமொழிக் கலப்பும் அதன் பாவனையும் அபரிமிதமாகக் கலக்கத் தொடங்கியது. வடமொழியினைப் பாவிப்பது தாங்கள் ஒரு உயர்ந்த தோற்றப் பாடு உடையவர்கள் என்ற ஒரு பொய்த் தோற்றம் அக்காலத்தே தென்நாட்டில் தலைவிரித்தாடியது. உதாரணத்திற்கு தற்போது தமிழ்நாடடில் ஆங்கிலப் பாவனை மோகத்தினால் பேசும்போது பெரும்பகுதியான ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவது போல என்று கூறலாம். இப்படி தமிழும் சமஸ்கிருதமும் கலந்துபேசும் ஒரு புதுப் பேச்சுவழக்கே உருவானது அதனை 'மணிப் பிரவாள நடை' என்றழைத்தனர். இதனால் வடமொழிக் கலப்பினை வகைப்படுத்த ஒரு இலக்கண விதி வகுக்கப்பட்டது. அதாவது வடமொழி மூலத்திலிருந்து தோன்றி அதனை தமிழில் அப்படியே பாவிக்கப்படும் சொற்களை 'தற்பவம்' என்றும், வடமொழியிலிருந்து இரவல் பெறப்பட்டு பாவிக்கப்படும் சொற்களை 'தற்சமம்' என்றும் வகைப்படுத்தினர். இந்த பாவிப்பு முறையினை பல மொழிகளின் கலப்பினால் உருவான சிங்களம் அப்படியே பெற்று அவர்களும் அப்படியே தற்பவம், தற்சமம் என்றும் பாவிக்கத் தலைப்பட்டனர். அத்தோடு சிங்களத்தின் மூலத்திலிருந்து தோன்றிய சொற்கள் நிஸ்பான என்றும் வகைப்படுத்திக் கொண்டார்கள்.

தொடரும்...

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

# இயற்கையின்...

73ம் பக்கத் தொடர்ச்சி...

வதைப் பற்றி ஒரு கட்டுரையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்த உறவில் இன, மொழி, நிற வேறுபாடு கிடையாது. வன்னியில் உள்ள இரணமடு, ஆனையிறவு வாவி, முருங்கன் அருகே உள்ள பெரிய குளம் (Giant's Tank) மற்றும் யாழ் குடா நாட்டில் உள்ள தொண்டமானாறு, பண்ணை வாவி போன்ற நீர்த் தேக்கங்கள் தூரப் பயணத்தின் பின் அவை வந்திறங்கும் இடங்களாகும். அக்காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாகும். "வெளிநாட்டாரை வரவேற்று உணவளிக்கும் ஈழத்திரு நாடே" என்று ஒரு கவிஞர் இனி கவிதை புனைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தியாவினூடாக இலங்கைத் தீவுக்கு விசாவின்றி வருகைதரும் பறவைகள், மேலும் தமது பயணத்தைத் தொடராது அங்கு தங்கிப் பின்னர் பருவகாலம் மாறும் போது தமது நாடு நோக்கி பயணம் செய்கின்றன. இலங்கையின் தென் பகுதியைத் தாண்டி வெகு தூரம் கடல் மேல் பறந்து சென்றால் தென் துருவத்தை அடையலாம். வேறு நிலப்பரப்புகள் இல்லாததே அவை தமது பயணத்தை இலங்கைத் தீவுடன் நிறுத்திக் கொள்கின்றன. அதுவுமன்றி தீவின் அழகிய சுற்றாடல் பறவைகளை கவர்ந்ததும் ஒரு காரணமாகும். இது, தென் மேற்கு பருவக்காற்று காலமான மே மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை நடைபெறும் பறவைகளின் சுற் றுலாப் பயணமாகும். இக்காலத்தில் குளங்கள் வாவிகள் மழை நீரினால் நிரம்பி இருக்கும். அவைகளைக் கண்டு இரசிக்க பல சுற்றுலாப் பயணிகள் கிழக்கு, தெற்கு, வட மத்திய மகாணங்களில் உள்ள நீர் தேக்கங்களுக்குச் செல்வார்கள். பறவைகளைப் பார்த்து இரசிப்பது பலரின் பொழுது போக்காகும். அதற்கென ஒரு சங்கம் உண்டு. இலங்கைத் தீவுக்கு சுமார் 190 பறவை இனங்கள் கோடைகாலத்தில் வந்து செல்கின்றன. இப்பறவைகளில் பிலெமிங்கோ (Flemingo) என்ற பறவை தனது மாட்சிமையான உருவத்தால் பலரைக் கவரக்கூடியது. தீவின் கிழக்கு, வடக்கு, தெற்கு பகுதிகளில் உள்ள வாவிகள், உப்புத்தளங்கள் இவை விரும்பும் இடங்கள். சுமார் 8000 முதல் 10,000 எண்ணிக்கையுள்ள பிலெமிங்கோ பறவைகள் இலங்கைகக்கு வருகை தந்து யால, வில்பத்து தேசிய வனங்களில் உள்ள குளங்களை நிரப்பும். சுமார் 50 விதமான கடற்பறவைகள் மேற்கு பகுதியில் அடையாளம் காணப்பட்டன. இலங்கையைப் போன்று தமிழ்நாட்டில் உள்ள வேடந்தாங்கல் வன பாதுகாப்பு பகுதியில் சைபீரியா பிரதேசத்தில் இருந்து குளிர்காலத்தில் புலம் பெயர்ந்து வரும் ஒரு இலட்சத்துக்கு அதிகமான பறவைகளைக் காணலாம். இவ்விடம், சென்னையில் இருந்து 90 கி.மீ தூரத்தில் உள்ளது. அங்குள்ள 74 ஏக்கர் பரப்பளவுள்ள வாவியில் "நீர் மருது" என்ற தாவரத்தை பறவைகளின் வசதிக்காக பயிரிட்டுள்ளனர்.

## முடிவுரை:

மனிதன் பறவைகளின் பயணத்திலிருந்து கற்கவேண்டிய பாடங்கள் பல. தற்போது ஆயிரக் கணக்கான லீட்டர் எண்ணையை வானில் எரித்து, சூழலை அசுத்தப்படுத்தி, விமானத்தில் பயணம் செய்கிறான் மனிதன். செல்லும் திசை அறிய தொழில் நுட்ப உதவியை நாடுகிறான். பறவைகள் கையாளும் யுக்திகளை ஏன் மனிதன் கையாள ஆராய்ச்சிகள் நடத்தக் கூடாது? பறவைகள் நம் நாட்டுக்கு வருகை தருவதினால் சுற்றுலாப் பயணிகள் மூலம் அன்னிய செலாவணி நாட்டுக்கு வருகிறது. அதனால் விருந்தாளிகளை வேட்டையாடாது வசதிகள் செய்து கொடுப்பதன் மூலம் அவர்கள் எடுத்துச் செல்லும் செய்திகள் மூலம் மேலும் கூடிய எண்ணிக்கையில் பல தேசங்களில் இருந்து பறவை இனங்களை நம்நாட்டுக்கு வரச் செய்யலாம். இதற்கு முக்கியமாக இயற்கையையும் சூழலையும் மதித்து வாழ நாம் கற்க வேண்டும்.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■



# இடுக்கண் வருங்கால்



குரு அரவிந்தன்

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பதற்கு சமீபத்தில் சிலி நாட்டில் நடந்த ஒரு சம்பவம் நல்லதொரு உதாரணமாக இருக்கின்றது. நம்பிக்கை, துணிச்சல், ஆர்வம், விடாமுயற்சி, உண்மையான பங்களிப்பு, மனித உயிர்களுக்கு மதிப்பளித்தல் போன்ற பல முன்னுதாரணங்களை நிலைநிறுத்த அந்தச் சம்பவம் மிகவும் உதவியாக இருந்தது.

*'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு'*

என்ற திருவள்ளுவரின் கூற்றுக்கு இணங்க, ஆட்சி அதிகாரத்தில் இருந்தாலும் இக்கட்டான நேரத்தில் அதிகார ஆணவத்தைக் கைவிட்டு மனிதநேயத்தோடு உடனடியாகச் செயற்பட்ட சிலி நாட்டு ஜனாதிபதி செபஸ்தியன் பினேரா, கட்டாயம் பாராட்டப்பட வேண்டியவர். இவர் எடுத்துக் கொண்ட மனிதநேய நடவடிக்கையால் இன்று இவர் ஏனைய உலக நாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும், முன் உதாரணமாகவும் இருக்கின்றார். இவர் எடுத்த முயற்சியைப் பாராட்டி பிரித்தானிய மகாராணியார் அவரை வரவேற்று வாழ்த்தியிருக்கின்றார். பிரித்தானிய பிரதமர் டேவிட் கமறூனையும் இவர் சந்தித்தார். சான்ஜோஸ் என்ற அந்தச் சுரங்கத்தில் இருந்து இரண்டு சிறிய கற்துண்டுகளையும் கொண்டுவந்து அந்த சம்பவத்தின் ஞாபகார்த்தமாக அவர்களுக்குக் கொடுத்தார்.

சென்ற ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி தென் அமெரிக்காவில் உள்ள சிலி நாட்டின் வடபகுதியில் உள்ள சான்ஜோஸ் என்ற நிலச் சுரங்கத்தில் விபத்து ஒன்று ஏற்பட்டது. இந்த இடம் சான்ரியாக்கோ (Santiago) என்ற நகரத்தில் இருந்து வடக்கே 500 மைல் தூரத்தில் இருக்கிறது. சிலி நாடு செம்பு தங்கம் போன்ற உலோகப் பொருட்களுக்குப் பெயர் பெற்றது. உலக உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதி செம்பு இங்கேதான் தோண்டி எடுக்கப்படுகின்றது. திடீரென பாதாளச் சுரங்கத்தில் ஏற்பட்டவிபத்தால் 700 மீற்றர் ஆழத்தில் வேலை செய்து கொண்டிருந்த பணியாளர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. மண்சரிவு ஏற்பட்டதால் நடுவழியில் சுரங்கப் பாதை மூடிக்கொள்ளவே, அச்சமயத்தில் சுரங்கத்தில் வேலை செய்த 33 பணியாளர்களுடனும் வெளி உலகத்திற்கு எந்தவித தொடர்பும் இல்லாமல் போய்விட்டது. அவர்கள் அனைவரும் மண்சரிவில் அகப்பட்டு இறந்துவிட்டதாகவே அனேகமானவர்கள் நம்பினார்கள்.

பணியாளர்களின் உறவினர்களின் வேண்டுகோளை ஏற்று உடனடியாகவே அந்த நாட்டு ஜனாதிபதி செபஸ்தியன் பினேரா, கீழே சுரங்கத்தில் அகப்பட்ட பணியாளர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதில் முனைப்போடு செயற்பட்டார். அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்த சுரங்கப் பாதையை நோக்கிப் பல திசைகளில் இருந்தும் சிறிய குழாய்களைச் செலுத்திப் பார்த்தனர். நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. தினமும் ஏமாற்றமே மிஞ்சியது. அவர்களைப்பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இரண்டு நாட்களுக்குப் போதுமான உணவு மட்டுமே அவர்களிடம் இருந்தது. ஒருவாரம், இரண்டுவாரம் என்று நாட்கள் செல்லச் செல்ல கீழே அகப்பட்டவர்கள் உயிரோடு இருப்பார்களா என்ற நம்பிக்கையும் குறைந்து கொண்டே வந்தது. ஆனாலும் எடுத்த முயற்சியைக் கைவிடாமல் அவசரபணியாளர்கள் தங்கள் தேடுதல் நடவடிக்கையைத் தொடர்ந்தார்கள்.

நம்பிக்கையிழந்த நிலையில் இருந்த அவர்களுக்கு, திடீரென 17ம் நாள் (August 22) சற்றும் எதிர்பாராத ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. ஆம், அவர்கள் கீழே அனுப்பிய ஒரு குழாய் வழியாக இறந்துவிட்டார்கள் என்று நம்பிக்கொண்டிருந்த 33 பணியாளர்களும் கீழே சுரங்கப்பாதையில் உயிரோடு இருப்பதாகச் செய்தி ஒன்று அவர்கள் அனுப்பிய துண்டுப் பேப்பரில் மேலே வந்தது.

அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்ற செய்தியே நாட்டு மக்களுக்கு உத்வேகத்தைக் கொடுத்தது. ஜனாதிபதியும் அவரது மனைவியும் நேரடியாகவே தலையிட்டு உடனடியாகவே மீட்பு நடவடிக்கையைத் துரிதப்படுத்தினர். கீழே அகப்பட்டவர்களுக்கு குடிநீர், உணவு, மருந்துவகைகள் எல்லாம் உடனடியாகவே 700 மீற்றர் ஆழத்திற்கு அந்தச் சிறிய குழாய் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. தொலைபேசித் தொடர்பும் ஏற்படுத்தப்பட்டன. அவர்களை மீட்டு எடுக்கும்வரை அவர்களது உடல், உள நலன்களும் பேணிக் காக்கப் பட்டன. சிறிய வீடியோ கருவி மூலம் படங்கள் எடுக்கப்பட்டு உறவினர்களுடனான தொடர்புகள் ஆரோக்கியமாகப் பேணப்பட்டன. உயிரோடு மீளமுடியும் என்ற நம்பிக்கையை பணியாளர்களின் மனதில் ஏற்படுத்துவதற்கான எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

முதற்கட்ட நடவடிக்கையாக ஏ, பீ, சீ என்று பெயரிடப்பட்டு மூன்று வெவ்வேறு இடங்களில் இருந்து அந்த சுரங்கப்பாதை நோக்கி 700 மீற்றர் ஆழத்திற்கு இரண்டடி விட்டமுள்ள பெரிய குளாய்கள் மூலம் துவாரங்கள் ஏற்படுத்தப்பட்டன. துவாரம் ஏற்படுத்த நாட்கள் எடுக்கும் என்பதால், கீழே இருப்பவர்களின் மனநிலை பாதிக்கப்படாமல் இருக்கப் பலவித முயற்சிகளும் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டன. கீழே சுரங்கத்தில் இருந்தவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொருவருக்கும் முக்கியமான பொறுப்புக்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. தினமும் உடற்பயிற்சி எடுப்பது, அளவான ஆரோக்கியமான உணவு உண்பது போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. தொடக்கத்தில் அவர்களிடம் இருந்த இரண்டு நாட்களுக்குப் போதுமான உணவை மிகவும் கவனமாகப் பங்கிட்டுப் 17 நாட்கள் வரை உயிரைத் தக்க வைத்திருக்கிறார்கள்.

கீழே அகப்பட்ட 57 வயதான ஒருவரின் பிறந்த நாளைப் பாதாளச் சுரங்கத்தில் கொண்டாடியதன் மூலம் கீழே அகப்பட்ட பணியாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்த முடிந்தது. எல்விஸ்ஸின் ரசிகர் ஒருவருக்கு எல்விஸின் பாடல் அடங்கிய சிறிய கேட்கும் கருவி ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது. உதைபந்தாட்ட வீரர் ஒருவருக்கு அவருக்குப் பிடித்தமான உதைபந்தாட்டக் குழுவினரின் கையொப்பமிடப்பட்ட ரீ சேட் அனுப்பி வைக்கப்பட்டது. இப்படியாக நெருங்கிய உறவினரின் கடிதங்கள்கூடப் பரிமாறப்பட்டன. கீழே சுரங்கப் பாதையில் அகப்பட்டவர்களில் ஆகக்கூடியவயவர் மரியோ கோமஸ் (Mario Gomez) 63 வயதுடையவராகவும், ஆகக் குறைந்தவர் ஜிம்மி சான்ஸி (Jimmy Sanchez) 19 வயதுடையவராகவும் இருந்தனர். ஒருவர் மட்டும் பொலீவியா நாட்டைச் சேர்ந்தவராக இருந்தார். வேறு ஒருவர், சுரங்கத் தொழிலாளி அல்லாதவர், கீழே பழுதடைந்திருந்த வண்டி ஒன்றைத் திருத்துவதற்காக அன்று மட்டுமே சென்றிருந்த போது அகப்பட்டுக் கொண்டார். அவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளும் அவ்வப்போது வழங்கப்பட்டன. ரிக்கோனா (Ticona) என்ற பணியாளர் ஒருவர் பெண் குழந்தை ஒன்றுக்குத் தந்தையாகியிருந்தார். அந்தக் குழந்தைக்கு நம்பிக்கை (Hope) என்று பெயர் சூட்டியிருந்தார்கள். அதிஸ்டவசமாக தந்தையின் உயிர் தப்பியபடியால் அந்தப் பெண்குழந்தை சகுணம் பார்க்கும் ஊராரிடம் 'பிறந்த உடனேயே தந்தையைப் பலி எடுத்தவள்' என்று திட்டு வாங்குவதில் இருந்து தப்பித்துக் கொண்டது.

'பீ' பிரிவைச் சேர்ந்தவர்களின் அதிஸ்டமோ அல்லது கடின உழைப்போ காரணமாக அவர்கள் அனுப்பிய அந்தக் குழாய்தான் முதன்முதலாக பணியாளர்கள் அகப்பட்டிருந்த இடத்தைத் தொட்டது. அந்த இடத்தை அடைய 33 நாட்கள் எடுத்தது. மண் சரிவு மேலும் ஏற்படலாம் என்ற காரணத்தால் ஏனைய இரண்டு திட்டங்களும் உடனடியாக இடை நிறுத்தப்பட்டன. நாசா நிறுவனத்தினர் விண்வெளித் திட்டத்திற்குப் பாவிக்கும் 13 அடி உயரமான கவசக்கூடுகள் (Capsules) மூலமே பணியாளர்களை இந்தக் குழாய் மூலம் வெளியே கொண்டுவரத் திட்டமிட்டிருந்தனர். ஹாட் என்பவரே இந்த பீ பிரிவுக்குப் பொறுப்பாக இருந்து இரவு பகல் பாராது கடினமாக உழைத்தவர்.

பணியாளர்களை மீட்டெடுத்த தினத்திலன்று உண்மையிலேயே ஒரு குழந்தையின் பிறப்பிற்காக உறவினர் வாசலில் காத்திருப்பது போல வெளியே இருந்தவர்கள் காத்திருந்தார்கள். இந்த மீட்பு நடவடிக்கையை நிமிடத்திற்கு சராசரி 4 கோடி பார்வையாளர்கள் இணையத்தளத்தில் பார்த்த வண்ணமிருந்தனர்.





அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் பதவி ஏற்பு நிகழ்ச்சிபோல இதுவும் பிரபலமாக இருந்ததாக ஒரு இணையத்தள முகாமையாளர் குறிப்பிட்டிருந்தார். இந்த மீட்பு நடவடிக்கைக்காக 22 மில்லியன் செலவிட்டதாகத் தெரிய வருகிறது. 69 நாட்கள் மண்ணுக்கடியில் பாதாளச் சுரங்கத்தில் உயிரோடு இருந்ததற்கான உலகசாதனையை இந்த 33 பணியாளர்களும் நிலைநாட்டியிருக்கிறார்கள். இருட்டுக்குள் இருந்து வெளியே வந்ததால் அவர்களின் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்கக் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தனர்.

எல்லோரையும் பாதுகாப்பாக மேலே அனுப்பி விட்டு மேற்பார்வையாளரான லூயிஸ் அல்பேட்டோ (Luis Alberto) என்பவரே கடைசியாக வெளியே வந்தவர். அவருடைய திறமையால்தான் முதல் 17 நாட்களும் பணியாளர்கள் உணவைப் பங்கிட்டு உயிரோடு இருக்க முடிந்தது. சிலர் வெளியே வந்தபோது பாய்ந்து விழுந்து மனைவியும் காதலியும் அவர்களைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு அவர்களைச் சங்கடத்தில் ஆழ்த்தினர்.

திட்டமிட்டதைவிட விரைவாகச் செயற்பட்டதால் 22 மணி நேரத்தில் அனைவரும் உயிரோடு மீட்டெடுக்கப்பட்டு மீட்பு நடவடிக்கை இனிதே முற்றுப்பெற்றது.

ஒகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் உலகத்தின் கவனத்தை எல்லாம் தன் பக்கம் திரும்பியிருந்த சிலி நாட்டின் ஜானாதிபதி, வெற்றிக் களிப்புடன் ஐரோப்பிய நாடுகளுக்கான, ஏற்கனவே திட்டமிட்ட தன் பயணத்தை எந்தவித தடையுமின்றி மேற்கொண்டுள்ளார். தனது பயணத்தின்போது லண்டனில் மகாராணியாரையும், பிரதமரையும் சந்தித்திருந்தார். 33 பணியாளர்கள்தானே என்று அந்த மனித உயிர்களை அலட்சியப்படுத்தாமல் மனிதநேயத்தோடு செயலாற்றிய சிலி நாட்டு ஜனாதிபதியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■


Public MOBILE
Mobi Tel Mobility
$24 Unlimited talk
. Unlimited talk
. Call waiting
. Call forwarding
. 3-Way calling
$40 Unlimited talk & text
. Unlimited talk
. Unlimited Canadian and US. Text messaging
. Voicemail and Call display
. Call waiting
. Call forwarding
. 3 Way calling
FREE !
EXCLUSIVE OFFER
Car charger
or
Phone case
or
Headset
With new
Activation
$15 Unlimited
overseas calling
45 Countries
3031 Kingston Road.
Kingston Rd. / McCowan Rd
416.269.7300
5514 Lawrance Ave East.
Port Union Rd. / Lawrance Ave.
416.282.6999

# ஒரு நண்பரின் கூரிய பார்வையில்

- கதிர் துரைசிங்கம் -

1957 May மாதம் 10ம் திகதி தாவரவியல் ஆசிரியை தவமணி (அமரர் ஆன திருமதி சுந்தரராசன்) எங்கள் Zoology வகுப்புக்கு வாட்டசாட்டமான வெள்ளை உடை அணிந்த வாலிபன் ஒருவரைக் கூட்டிவருகிறார். இவர் தான் உங்கள் மிருக (Zoo) ஆசிரியர், பட்ட-தாரி Madrass Presidencyயில் முதல் மாண-வனுக்கான தங்கப்பதக்கத்தை தனதாக்கிய திரு.கனகசபாபதி என்றார். நானும் முதல் மாணவன் தான் அவரின் ஆசிரியத்தொழிலுக்கு. தொன்றுதொட்டு மாணவர்களுக்கும் ஆசிரி-யர்களுக்கும் இடையே நிலவிவந்த பெரிய இடைவெளியை சிறிதாக்கி எங்களுடன் நண்பனாகப் பழகுகிறார் கனக்ஸ்.

பண்பட்ட நல்ல simple ஆசிரியர் கனக்ஸ் என்று சில மாணவர்கள் எண்ணுகிறார்கள். தோற்றத்திலும் அழகிலும் தனக்கு நிகராக காட்சியளிக்கும் எங்களை அடக்கவோ அடிக்கவோ, அதட்டவோ முடியாது என்று எண்ணி இந்த யுக்தியைக் கையாளுகிறார் கனக்ஸ் என்பது இன்னும் சிலரின் கருத்து. எது எப்படி என்றாலும் இடைவெளி குறைந்தது எனக்கும் இங்கு இருக்கும் என் நண்பன் மகேந்திரனுக்கும் மகிழ்ச்சி. ஆனால் மூக்கும் முழியுமாய் அம்சமாக இருந்த எம்சக மாணவி-களுடன் இவர் இடைவெளியில்லாமல் பழகுவது எங்களுக்கு இடஞ்சலாக இருந்தது. ஆள் குணமான ஆழாகத்தான் தெரியுது. என்றாலும், அப்போது இவற்றை 22 வயசு இழமை, அழகு தோற்றம், நடை, உடை, தலைக்கு வெளியே இருக்கும் மயிர் Style, தலைக்கு உள்ளே இருக்கும் விஷயம் எல்லாமே எங்கள் சிலருக்கு தலையிடியாய் இருந்தது. எதிர்ப்பைத்தெரிவித்த எங்கள் சிலரைப் பழி-வாங்க Zoologyயில் 35 Markக்கு மேல் போடுவதை இவர் நிறுத்தினார். Zoology தெரிந்த அளவு இவருக்கு கணக்கு ஓடாது, 59 மேல் Mark போடவும் தெரியாது. இந்த பிரச்சினையால் H.SCவகுப்பில் 3 வருடங்கள் தங்கி இருந்து கசடறக்கற்று குமர் மாணவிகள் வெளியேறியபின் நாங்கள் சிலர் கல்லூரியில் இருந்து வெளியேறினோம்.

முழங்காலுக்கு கீழே இருப்பது Femur Tibia என்ற முக்கிய எலும்புகள் இரண்டு என்று எங்களுக்குப் படிப்பித்த கனக்ஸ், தனது Femur Tibiaவைக் கோட்டைவிட்டுவிட்டார். இவருடைய காலுக்குக் 'கால்' இவர்தான். இதை நான் கூறவில்லை. தானகவே தமிழர் தகவலிலும், உதயனிலும் தனது தவறை எழுதி இருக்கிறார். அடிபடுகிறது விழுகிறது கனக்ஸ்ற்கு கைவந்தகலை. ஆனால் விரை வில் எழுந்து நடமாடுவதில் கைதேர்ந்தவர். சாப்பாட்டில் எந்தவித கட்டுப்பாடும் இன்றி Diabetes வந்து 34 வருடங்களாக இரத்தத்தில் தனது சீனியின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்றால் பாருங்களேன்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஒன்று கனடாவில் உருவாக மூலகாரணமாக இருந்து ஆரம்-பித்து ஆறுவருடம் தலைவராகத் திறம்பட செயற்பட்டு தற்போது எங்கள் சர்வதேச சங்கங்களின் இணைப்பாளராகவும் போஷக-ராகவும் கனக்ஸ் கடமை ஆற்றுகிறார். இவர் மகாஜனக் கல்லூரியின் கீர்த்திக்கும் வழர்ச் சிக்கும் அங்கும் இங்கும், அன்றும் இன்றும் உழைத்து வருகிறார்.

கனடாவுக்கு நாங்கள் இருவரும் குடும்பத்துடன் ஒரே நாளில், ஒரே வாகனத்தில் Montreal வந்தோம். Quebec மாகாணத்தில் SIN வர 6 மாதம் செல்லும். அதுவரை வேலை செய்ய முடியாது. Welfare தந்தார்கள். பதில் உப-காரமாக படிக்கவேண்டும் என்றார்கள். மீண்டும் படிப்பா? கசப்பான விடயம். இருந்தாலும் கனக்ஸ்ம் நானும் ஒரே வகுப்பு என்பது இனிப்-பாக இருந்தது. முதல் மாணவர் இருவரும் ஒழுங்காக Book keeping, Computer French வகுப்புகளுக்குப் போய் வந்தோம். Basic Programming உடன் computer வகுப்பு முடிந்து பரீட்சை வந்தது. Temperature & Centegradeல் இருந்து Frenheatக்கு மாற்ற ஒரு Programme



எழுத வேண்டும். இதுதான் பரீட்சை. பார்த்து எழுதுவது கேட்டு எழுதுவது Montrealலில் கொலைக் குற்றமல்ல. நான் எழுதிய Programmeமை குருபக்தி நிமிர்த்தம் விளங்-கப்படுத்தி ஆசிரியர் கனக்ஸ்க்கும் கொடுத்து உதவினேன். சோதனை முடிந்தது புள்ளிக-ளுடன் விடைத்தாள் கொடுக்கப்பட்டது அந்தக் கிழமை கனக்ஸின் மைத்துனர் அமரர் சிவ-கணநாதன் மனைவியுடன் Londonஇல் இருந்து வந்திருந்தார்கள். இராப்போசனத்திற்கு என்-னையும் அழைத்து இருந்தார் மாஸ்ரரின் மனைவி அமரர் அமிர்தகௌரி. என்னைக் கண்டதும் உம்முடைய மாஸ்டருக்கு Computerரில் 80 Marks தெரியுமோ என்று பெருமிதத்துடன் கேட்டார் கௌரி. எனக்கும் 80தான். ஆனால், எங்களுக்குக் கிடைச்ச 80 இவர் அங்கை எனக்குப் போட்ட 35க்குத்தான் சரி. கனடாவில் வகுப்பிற்கு ஒளுங்காகப் போய்வந்தாலே 50Marks போடுவார்கள். அவ்-வளவு தாராள மனப்பாண்மை கனடாவிற்கு.

அழைத்தால் உடன் அல்லது விரைவில் பதில் தரும் ஒரே ஒரு தொலைபேசி எண் 416 283 1544. கல்வியில் விஞ்ஞானத்தில் விளையாட்டில் இலக்கியத்தில் கலையில் சினிமாவில் ஏன் சில சமயம் சமயத்தில் ஏற்படும் சந்தேகங்களுக்கு 24 மணி நேரமும் பதில் தரும் இந்த தொலைபேசி எண்ணின் அதிபர் 'அதிபர்' என்றால் அது புகழ்ச்சி அல்ல. எந்தத் தலைப்பிலும் பாராட்டைப் பெறுமள-விற்கு உரையாற்றும் திறமை பெற்றவர் அதிபர்.

பரிச்சயம் இல்லாத தொலைபேசி எண்ணில் இருந்து ஒரு நாள் அழைப்பு ஒன்று எனக்கு வந்தது எடுத்தேன். 'Kanex wants to speak to you' என்றார் ஒருவர். என்ன Sir என்றேன். திறப்பை எடுக்காமல் தேட்டத்திற்குள் வந்து விட்டேன் கதவு சாத்துப்பட்டுப் போச்சு என்றார். 5 நிமிடத்தில் என்னிடம் இருந்த சில திறப்புகளுடன் அங்கு சென்றேன் முதலில் கதவைத் தள்ளிப் பார்த்தேன். முழுதாகப் பூட்டுப்படாத காரணத்தால் கதவு திறபட்டது. உம்மைப் கூப்பிட்டது நல்லதாய்ப்போச்சு என்றார் மாஸ்டர். மூன்று கிழமையில் அதே இலக்கத்தில் இருந்து அழைப்பு. என்ன நடந்-தது Sir? எனக் கேட்டேன். Recycle சாமான் போட சாரத்தோட வெழிய வந்தன். அநியாயம் பிடிச்ச காத்து கதவை அடிச்சுச் சாத்திவிட்டது என்றார் கனக்ஸ். அன்று சரியான குளிர் உடனே தொலைபேசியில் 'Anton Lock'கைக் கூப்பிட்டுவிட்டு அங்கு சென்றேன். படிச்ச பாவத்திற்கு புவனச்சந்திரன் வந்து பூட்டைத் திறந்து உதவினார். இம்முறை நான் ஏதாவது அறிவுரை கூற முற்படுவேன் என்று உணர்ந்த அதிபர் திறப்பைக் கையிலை கொண்டுபோ-காமல் நான் மொக்கு வேலை பாத்திட்டன் என்றார். அதற்கு நான் "மாஸ்டர் படிக்கேக்கை என்னை மொக்கு என்று சொன்னதும் நீங்கள் தான், இப்ப உங்களை மொக்கு என்ற சொல்லுறதும் நீங்கள் தான். நான் அப்பவும் இப்பவும் ஒன்றும் சொல்லவில்லை" என்றேன். விழுந்துவிழுந்து சிரித்தார். இப்படி இரண்டு முறைதான் கதவடைப்பு நடந்தது என்ற முடிவுக்கு வந்துவிடாதீர்கள். பிள்ளைகள் பலகதைகள் சொல்வார்கள். என்னை அழைத்-தால் உடன் வருவேன் பரிகாரம் கிடைக்கும் என்று என்னில் நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பது நட்புக்கு பெருமையாக இருக்கிறது.

மகனின் திருமணவைபவம், மாஸ்டரின் நூல்கள் மூன்றின் வெளியீட்டு விழா ஆகிய இரண்டும் என்னிடம் ஒப்படைத்த முக்கிய நிகழ்வுகள். தனது பதிலுரையில் பகிரங்கமாக என்னைப் பாராட்டுகிறார். இந்த மனமும், துணிவும், நன்றி உணர்வும் சிலருக்குத்தான் வருகிறது. அதில் முதலிடம் அதிபருக்கு.

கெடுதகல் செய்தவர்களையோ கெடுதல் நினைத்தவர்களையோ பழிவாங்காமல் விடுவது இவரின் நற்பண்பு. ஆனால் இவர் பழிவாங்க மாட்டார் என்று உணர்ந்தவர்கள் மறைமுக-மாக மேலும் மேலும் இவரைப் பழிவாங்கி வருகிறார்கள்.

அதிபருக்கும் எனக்கும் அழைப்பு வரும் விழாக்குளுக்கு நாங்கள் ஒன்றாகச் செல்-வோம். போகும்போது அதிபருடன் செல்வது எனக்கு சந்தோசம் தான். வரும்போது தான் பிரச்சினை. விழா முடியுமுன் வரமாட்டார் அதிபர். பரவாயில்லையென்றால், விழா முடிந்த பின்னும் வரமாட்டார். நின்று பங்குபற்றிய-வர்களைப் பாராட்டுவார். பார்வையாளர்களில் பலர் செவ்வாய்க் கிரகத்திற்கு சென்று வந்த-வரைச் சந்திப்பது போல் Sir... Sir... என்று சுற்றி வளைப்பார்கள். இதைப்பார்த்துப் பொறா-மைப்பட்டிருக்கின்றேன்... என்ன பிரயோசனம்?

இவருடைய Garden budget வருடத்திற்கு 4,000 dollarஐத் தாண்டும். பூந்தோட்டம் அழகாக அமைப்பார், பூக்களை பறித்தால் கோபிப்பார். காய்கறி தோட்டம் செய்வார். காய்த்ததும், நண்பர்கள் வந்து காய்கறி-களைப் பிடுங்கிக் கொண்டு போகாவிட்டால் கோபிப்பார்.

மாணவனாக இவரிடம் நான் வாங்கிய பேச்சின் அளவு, என்னிடம் நண்பனாக இவர் வாங்கி இருப்பார். ஆனாலும் என்னை விட்ட பாடியில்லை. எத்தனையோ சோதனைகளைத் தாண்டிவிட்டர். இப்பொழுதும் பல சோத-னைகளைத் தாண்டித் 'தாண்டி' வருகிறார். எதையும் தாங்கும் இதயமும் எதையும் வெல்லும் வைராக்கியமும் இவரிடம் உண்டு. ஆறில் இருந்து நூறு வரை நண்பர் குழாம் சர்வதேச ரீதியில் வைத்திருக்கும், எனக்குத் தெரிந்த ஒரேயொரு நண்பர் கனக்ஸ்தான்.

இன்னும் பல விழாக்கள் காண இருக்கும் என் ஆசான் எனது நண்பன் கனகஸ் ஆரோக்கிய-மாக நீடு வாழ இறைஅருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■



# தேவகாந்தன் பக்கம்

## ஒன்று

- தேவகாந்தன் -

‘கலாபன் கதை’ கடந்த ஆவணி இதழோடு நிறைவுற்ற பின்னால் ‘தாய்வீடு’ வாசகர்களைச் சந்திக்க நான் தயாராவதற்கு இரண்டு மாதங்கள் எடுத்திருக்கின்றன.

சென்ற மூன்று ஆண்டுகளுக்குச் சற்று அதிகமாகவே தாய்வீட்டில் நான் தொடர்ந்து எழுதி வந்திருப்பினும், ‘கலாபன் கதை’ எழுதிய பதின்னான்கு மாதங்களும் வித்தியாசமானவை. நேரிலும், தொலைபேசியிலுமாய் வாசகர்கள் தெரிவித்த பாராட்டுக்கள் என்னை சிலிர்க்க வைத்தன.

தமிழ் வாசகப் பரப்பில் இவ்வாறான படைப்பின் திறம் குறித்த வெளிப்பாடுகள் அரிதானவை என்பதை நானறிவேன். நிர்விகற்பனாய் படைப்பெழுச்சி மிகும் தருணங்களில் எழுதிய பின்னர், படைப்பு எனக்கே திருப்தி தருகிற அளவில் பத்திரிகைக்கு அனுப்பிவிட்டு, அடுத்த படைப்பை எண்ணியிருப்பதே என் இயல்பு.

ஆனால் ‘கலாபன் கதை’ வெளிவரத் தொடங்கிய மாதத்திலிருந்து வாசகர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் என்னை ஒரு சலன நிலைக்கு ஆளாக்கியிருந்தன.

இன்னுமின்னும் சிறப்பான தொடராக அது வரவேண்டுமென்று மனதாரவே நான் அக்கறைப்பட்டேன்.

விலைமாதர் குறித்து நான் எழுதநேர்ந்த சந்தர்ப்பத்தில், தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஒரு பெண், அவர்கள் குறித்து நான் கௌரவமாக எழுதவில்லையென்று குறைப்பட்டார். விலைமாதர், குற்றவாளிகள், மனநிலை பிறழ்ந்தோர் ஆகியோர் மீதெல்லாம் எனக்கு மிகுந்த கரிசனம் உண்டு என்றும், அவர்களை அவ்வாறு ஆக்கிய சமூகத்தின் மீதுதான் என் கோபமென்றும் அவருக்கு விளக்க நான் அதிகமாகவே பிரயாசையெடுக்க நேர்ந்தது. அது ஒரு மகிழ்ச்சியான தருணம். இதேபோல் பல்வேறு நேரடி, தொலைபேசிப் பாராட்டுதல்களுக்கும் காரணமாயமைந்த ‘தாய்வீடு’ பத்திரிகைக்கு என் நன்றிகளை இவ்வேளை நான் தெரிவித்தே ஆகவேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், வெகுஜனப் பரப்பை நோக்கி என் எழுத்துக்கள் நகர்கின்றனவா என்றொரு கேள்வியும் என்னுள் எழவே செய்தது. சுவாரஸ்யத்துக்காக எழுத்தை மலினப்படுத்தும் வகையில் என்றும் என் பேனா (இப்பொழுது கணினி) எழுதியதில்லை. அதற்கெதிரான சிறுபத்திரிகை இயக்கத்துள்ளிருந்து வளர்ந்தவன் நான். இன்றும் கூடுதலான தொடர்புகளோடு இருப்பவன். ஆயினும் வெகுவான ஜனப் பரப்பை ஈர்க்கின்ற படைப்பு மலினமானதாக இருக்கவேண்டியதில்லை, அது படைப்பின் வலிமையால் நேர்ந்ததாகக்கூட இருக்கலாம் என பின்னர் நான் தெளிவுகொண்டேன்.

ஆரம்பத்தில் ‘கலாபன் கதை’போன்ற ஒரு முழுக் கதையளவாகும் படைப்பைத் தருவதே என் எண்ணமாகவிருந்தது. ஆனால் மனத்தில் முட்டிமோதும் கருத்துக்கள் உங்களை வந்தடைந்தாகவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாறான பக்க எழுத்தை ஆரம்பித்திருக்கிறேன். எவ்வளவு மாதங்கள் செல்லக்கூடுமோ? ஆனாலும் தகுந்த ஒரு சமயத்தில் தொடர் நாவலோடு உங்களைச் சந்திப்பேன்.

இதில் எடுத்துரைக்கப்பட இருப்பவை காரசாரமானவையாக இல்லாவிட்டாலும், சாரமான விஷயங்களாக இருக்குமென்று உறுதியாக என்னால் சொல்ல முடியும். நம் உயிர் பிடித்து உலுப்பும் எத்தனையோ பிரச்சினைகள் கண்ணெதிரில் உலவிக்கொண்டிருக்கின்றன. அவற்றின் உண்மை முகம் தெரிந்தாகவேண்டும் எமக்கு.

•

அடுத்த ஆண்டு தை மாதத்தில் இலங்கைத் தலைநகர் கொழும்பில் நடைபெறவிருக்கிறது உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு. ஒரு அலையாக எழுந்த அதுபற்றிய வாதப்பிரதிவாதங்கள் ஓரளவு இப்பொழுது அடங்கியிருப்பதாகச் சொல்லலாம். இதுபற்றிய எனது கருத்தினை வேறுநாடுகளில் இருக்கும் தமிழ் எழுத்தாள நண்பர் சிலர் என்னிடம் கேட்டிருந்தனர். நானும் மறைக்காமல் எனது கருத்தைக் கூறியிருந்தேன். அதை அவர்கள் விரும்பவில்லையெனத் தெரிகிறது. அதற்கு நானென்ன செய்யட்டும்?

ஓரளவு அடங்கியுள்ள இப் பிரச்சினை மார்கழி அல்லது தை மாதமளவில், அதாவது மாநாடு தொடங்குகிற காலமளவில், இன்னும் கூடுதலான உக்கிரம் பெறவே வாய்ப்பிருக்கிறது. லும்பினி இணைய தளத்தில் ஷோபா சக்தியினால் செய்யப்பட்ட லெ.முருகபூபதியின் நேர்காணல், மாநாடு கொழும்பில் நடத்தப்படுவதை எதிர்ப்போரின் மனநிலையை ஒட்டுமொத்தமாக மாற்றியிருக்க வேண்டும். அவ்வளவு தெளிவுபூர்வமான நேர்காணல் அது. ஆனால் அதில் சம்பந்தப்பட்டவர்களின் குணவியல்புகளை வைத்துப் பார்க்கையில், அவ்வாறு நம்ப ஏது எதுவுமில்லை.

ராஜபக்ஷ அரசாங்கத்தை எதிர்த்து ஒரு கேள்வி கேட்க முடியுமா, போரினால் பாதிக்கப்பட்ட ஜனங்களின் பகுதிக்குச் சென்று பார்வையிட முடியுமா என்று உப்புச் சப்பற்ற கேள்விகள் மாநாட்டை எதிர்ப்போரினால் கேட்கப்பட்டிருந்தன. இனவெறி பிடித்த ராஜபக்ஷ அரசாங்கம், அதைத் தன் கடந்த கால போர்க் குற்றச் செயல்களினை மறக்கடித்து, விடுதலைப் புலிகள் தவிர்ந்த மற்றைய தமிழ் வெகுஜனங்களின்மீது தனக்கு எந்தவிதமான மாறுபாடுமில்லையென்பதை சர்வதேச சமூகத்தின் முன்னால் காட்டிக்கொள்ள இதை ஒரு சந்தர்ப்பமாகப் பாவித்துக்கொள்ளும் என்பது உண்மைதான்.

முள்ளிவாய்க்காலில் அத்தனை கொடுமைகள் தமிழ் மக்கள்மீது புரியப்பட்ட பின்னரும் அதைத் தடுக்க ஒரு புல்லைக்கூடக் கிள்ளிப்போடாத தமிழக முதல்வர் கருணாநிதியை உலகத் தலைவர், செம்மொழியாம் தமிழை வளர்க்க அவதாரமெடுத்தவர் என்றெல்லாம் புகழாரங்கள் சூட்டியதுபோன்று துதிபாட யாரும் அழைக்கப்பட்டிருக்கவில்லை. செம்மொழி மாநாட்டில் புகழ்பாட முந்தி நின்றவர்களே உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் ஒதுங்கிக்கொண்டது துர்ப்பாக்கியமானது.

உலகத் தமிழர் மாநாடு முள்ளிவாய்க்கால் பிரச்சினைகளுக்கான கண்டன மாநாடாகக் கூட்டப்படவில்லை என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ளவேண்டும். இந்தப் பின்னணியில் வைத்துப் பார்த்தால் பல விஷயங்கள் தாமாகப் புரிந்து போய்விடக் கூடியவை.

செல்பவர்கள் எழுத்தாளர்கள். தமது படைப்பையோ, கருத்துச் சார்ந்த படைப்பையோ, அது குறித்த வளர்ச்சி மாற்றம் பற்றிய கருத்துக்களையோ மட்டுமே முன்னிலைப்படுத்த வேண்டியவர்கள். அவர்கள் ராஜபக்ஷ அரசுக்கெதிராக இதுவரை முன்மொழியாத எந்தக் கருத்தை மாநாட்டில் முன்வைத்துவிடப் போகிறார்கள்?

முள்ளிவாய்க்கால் சம்பவங்கள் என் சரீரமும், மனமும் சேர்ந்து பதறிய கொடுமையானது. எனினும் சரியாக முன்னெடுக்கப்பட்டு தவறாக நடத்தப்பட்ட போர் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. நாம் ஒரு யுத்தத்தை இழந்திருக்கிறோம். அவ்வளவுதான். ஆனாலும் இலங்கைத் தேசம் இன்னமும் எனது மண் என்ற மனோவுணர்வே இன்றும் என்னுள்ளிருந்து ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது. சுவரிருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்ற ஆரம்ப வகுப்புகளின் பாடம் என் மனத்தில் இன்னுமிருந்து அசைவு கொடுத்துக்கொண்டே இருக்கிறது.

கடந்த ஆண்டு நிகழ்ந்த யுத்த முடிவுக்குப் பின் இன்றுவரை இரண்டு லட்சம் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இலங்கை சென்று வந்திருக்கிறார்கள் என ஒரு கணிப்பீடு தெரிவிக்கிறது. அந்த இரண்டு லட்சம் பேரும், யுத்தம் நடந்த பூமி எவ்வாறு இருக்கிறது என்று விடுப்புப் பார்க்கப் போனார்களென யாராவது சொல்ல முடியுமா?

சொந்த மண்ணின் ஈர்ப்பு அது. மண்ணோடு மனிதர்களுக்கு உண்டாகும் பந்தத்தின் விசை. இதை விளங்கிக் கொண்டால் கொழும்பில் மாநாடு நடைபெறுவதையும் இந்தத் தளத்தில் வைத்தே புரிந்துகொள்ள முடியும். ஒரு சர்வதேச மாநாட்டினை கொழும்பில் நடத்துவதென்பது அந்த மண்ணில் எதை நடாத்துவதுக்கும் எமக்குள்ள உரிமையின் வெளிப்பாடு. இந்த உரிமையை எந்தச் சிங்கள பேரினவாத அரசுக்காகவும் எம்மால் விட்டுக் கொடுத்துவிட முடியாது.

எவ்வளவு கொடுமையான, சர்வாதிகாரமான ஆட்சி அங்கே நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், அது எனது மண். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த மண். நான் பிறந்து வளர்ந்து ஓடியாடி விளையாடித் திரிந்த பூமி. எண்ணும் எழுத்தும் கற்றுணர்ந்த நிலம்.

‘எங்கும் ஒலிக்கிறது காற்று… எனது நிலம்… எனது நிலம்!’ இவை கவிஞர் சேரனின் கவிதை வரிகள். இந்த ஒலிப்பின் ஆவேசத்திலிருந்து பெரும்பாலும் எவரும்தான் தப்பி விட முடியாது. என்னால் தப்ப முடியவில்லை. அப்படிப் பார்க்கையில், எனது கருத்துக்களும் அதற்கு இயையவே இருக்கமுடியும். மாநாடு குறித்தாயினும் சரி, எமது இருத்தல் சார்ந்த வேறு எந்த விஷயமானாலும் சரி.

> “ முள்ளிவாய்க்கால் சம்பவங்கள்
> என் சரீரமும், மனமும் சேர்ந்து பதறிய
> கொடுமையானது.
> எனினும், சரியாக முன்னெடுக்கப்பட்டு
> தவறாக நடத்தப்பட்ட போர்
> ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது என்பது
> மறுக்கமுடியாத உண்மை. ”



devakanthan@thaiveedu.com





CREDIT **RECOVERY** CANADA

- வங்கிக்கடனில் 25% மட்டும் செலுத்தி உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடல்!
- COLLECTION AGENCY களின் தொலைபேசித் தொல்லைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துதல்!
- சம்பளப்பணத்தை பறிமுதல் செய்வதை தவிர்த்தல்!
- உங்கள் RRSP, RESP மற்றும் வீடு வாகனங்களை பாதுகாத்தல்!
- சிறிய மாதாந்த கட்டுப்பணத்தின் மூலம் BANKRUPTCY செல்வதை தடுத்தல்!

**கடன் சுமையிலிருந்து உடனடியாக மீளுங்கள்..!**



**Suren Sornalingam**

*Certified Credit Counsellor*

**இலவச ஆலோசனைகள்**

**CALL: (416) 264 1272**

55 TOWN CENTRE COURT SUITE 700 - SCARBOROUGH, ONTARIO

INFO@CREDITRECOVERYCANADA.COM - WWW.CREDITRECOVERYCANADA.COM

STSADS 416 985 7379

# The Canadian Tamils' Chamber of Commerce holds Annual General Meeting and Elects new President and Board of Directors

**TORONTO** (October 27, 2010) —The Annual General Meeting was held at the Karaikudi Chettinad Restaurant and brought in the new President with his team of board directors. The evening began with traditional South Indian Cuisine and moved on to the focus of the evening with the election of new Board. The agenda consisted of the Secretary's Welcome speech and the President's Report. The Financial Report was acknowledged and the new Board of Directors were introduced and welcomed. Past President Ken Kirupa thanked his past board for their consistent hard work and commitment to the Chamber and recognized all of the past presidents and members who played a vital effort in the success of the events that took place during his term.

The nomination committee then explained the rules and regulations that the CTCC has in place and pronounced the newly selected Board of Directors and Auditors. Newly elected President Mike Ahilan addressed the members and conveyed his priorities as President and welcomed all the new and existing members to help to continue to excel in the business community with the CTCC's support.

Many members came and congratulated the new Board members and thanked the on going Board. The Past President Ken Kirupa welcomed of the new President Mike Ahilan and his newly elected team of Directors.

**The newly elected board consists of:**

Mike Ahilan - President
Santha Panchalingam - Secretary
Ravi Kanagasabey - Director
Navajeevan Anantharaj - Director
Ghajemukan Mahakanapathypillai - Director
Albert Sabanathan - Internal Auditor
Sritharan Thurairajah - Vice President
Kalyani Nathan - Treasurer
Suresh Kumar - Director
Jude Francis - Director
Jeyakumar Sinnadurai - Internal Auditor
Kanish & Partners - External Auditor

**For more information, please contact:**

Mike Ahilan
President
Canadian Tamils' Chamber of Commerce
416-220-1184
mike.ahilan@rbc.com




















## நாடகத்தின் வேரும் வளர்ச்சியும்:

# நான்கு பெரும் கிரேக்க நாடகாசிரியர்கள்

## - சோபக்கிளிஸ் (Sophocles) -

### தொடர் - 8

### - ஞானம் லேம்பட் -

கி.மு. 497இல், சோபிலஸ் எனும் செல்வந்த வியாபாரிக்கு மகனாக, ஏதென்ஸ் என்ற பட்டினத்திற்கு வடகிழக்கிலுள்ள கொலொனஸ் என்ற இடத்தில் பிறந்தார்.

கிரேக்க நாட்டு வழமைப்படி, சங்கீதம், நடனம், உடற்பயிற்சி என்பவற்றை முறையாகப் பயின்று தேர்ச்சிபெற்றார். சங்கீதம், நடனம் என்பவற்றில் சிறப்புற்று விளங்கியமையால், கிரேக்க நாடு பாரசீகரின் படையெடுப்பை முறியடித்து வெற்றிகொண்டபின் கொண்டாடிய வெற்றி விழாவிலே, நன்றிப்பாடல் பாடும் பாடகர் குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டதோடு, அவ்விழாவிலே யாழ் வாசிப்போராகவும் நியமிக்கப்பட்டார்.

கி.மு. 468இல், தனது 28ஆவது வயதில் நாடகவிழாவில் பெற்ற முதல் வெற்றியைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் தொடர்ந்து 120இற்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். கி.மு. 468இல் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து நடைபெற்ற டையோனிசிஸ், லினேயா விழாக்களில் ஒன்றுவிட்டொரு வருடம் முறிவு இன்றி 18 நாடகப் போட்டிகளில் முதலிடம் பெற்றுள்ளார். முதலிடம் பெறத் தவறியபோது இரண்டாம் இடம் தவிர வேறெதுவும் பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. கிட்டத்தட்ட 120 நாடகங்கள் இவர் எழுதிய போதும் தற்போது 7 நாடகங்கள் மட்டுமே கிடைக்கக் கூடியதாயுள்ளது.

இவருடைய வாழ்க்கையில் நடந்த நாட்டுச் சம்பவங்கள் இவருக்குப் பெரும் அனுபவங்களைக் கொடுத்தது. இளம்பராயத்தில் இவரது நாடு பாரசீகரின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் பெற்ற வெற்றி, பருவம் அடைந்தபின் அற்றிக் பிரதேசத்தின் பொற்காலம், முதுமைக் காலத்தில் ஏதென்சின் வீழ்ச்சி ஆகிய முக்கிய நிகழ்வுகளைக் கண்டவர்.

தம் நாட்டுப்படைகளை வளிநடத்த இரு தடவைகள் தளபதியாக நியமனம் பெற்றிருந்தார். ஏதென்ஸ் நாட்டின் உள்நாட்டு நிர்வாக, படைத்துறை நிர்வாகக் குழு உறுப்பினர்களில் ஒருவாராகவும், பொதுவருவாய்துறை, இயக்குனராகவும் பணிபுரிந்துள்ளார்.

நீண்ட நாட்களாக அல்கொன் (Alcon) கடவுளுக்கும், ஆரோக்கிய கடவுளான அஸ்கிளபியஸ் (Asclepius) கடவுளுக்கும் வழிபாடு நடத்தும் சமயக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அஸ்கிளாபியஸ் வழிபாடு காரணமாக குருத்துவத்தின் சில நிகழ்வுகளிலிருந்து தள்ளி வைக்கப்பட்டார். இவர் இயற்றிய தெய்வீக தன்மைகள் நிறைந்த பாடல்கள் கி.மு.3ஆம் நூற்றாண்டுவரை பாடப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. இவர் கடவுளையும், சமயத்தையும் நினைத்து சமயக்கடமைகள் செய்தது மட்டு மல்ல நாடகங்கள் மூலமாயும் கடவுளையும், சமயத்தையும் போற்றிப் புகழ்ந்து வந்துள்ளார்.

நிக்கோஸ்ற்றுற்றோ என்பவரைத் திருமணஞ் செய்து இயோபொன் என்ற மகனைப் பெற்றார். பின்னர் வயது முதிர்ந்த காலத்தில் சைசியோன் என்ற பெண் மூலம் ஒரு மகனைப் பெற்றார். இவருக்கு ஆறியோன் என்ற பெயரிட்டார்.

சட்ட பூர்வமற்ற இவரது மகன் ஒருவனில் இவர் காட்டிய அன்பு காரணமாக, சட்ட பூர்வமற்ற மகனில் பொறாமை கொண்ட இவரது மகன் இயோபொன் இவர் மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளதாயும், இவருடைய சொத்துக்களையெல்லாம் பராமரிக்கும் பொறுப்பு தனக்கே தரப்படவேண்டுமென வழக்குத் தொடுத்தான். சோபோக்கிளிஸ் தன் செயல்களை நியாயப்படுத்தித் தான் குற்றமற்றவர் என்பதனைக் காட்ட ஓடிப்பஸ் கொலோனியஸ் என்ற நாடகத்தை எழுதித் தயாரித்தார். இந்நாடகத்தைப் பார்வையிட்ட யூறிமார், இவரை வியந்து பாராட்டி வழக்கைத் தள்ளுபடி செய்தனர்.

சிறந்த கவிஞராக மட்டுமல்ல, அமைதியும் மனநிறைவும் கொண்டவராகவும் திகழ்ந்த இவர் தனது வசீகரத்தோற்றம், குணம் என்பவற்றால் நாட்டு மக்களைத் தன்பால் ஈர்ந்தெடுந்தார். புத்தி சாதுரியம், நகைச்சுவை, சினேக மனப்பான்மை என்பவை இவரிடம் நிறைந்து காணப்பட்டன.


இவர் கி.மு. 406இல் காலமானார். இவருடைய மரணத்தின் சரியான காரணம் சொல்லப்படா விட்டாலும், சிலர் இவர் திராட்சைப் பழம் சாப்பிட்டபோது ஏற்பட்ட மூச்சுத் திணறலினாலும், சிலர் அன்ரிகோன் என்ற நாடகத்தில் உள்ள நீண்ட வசனம் ஒன்றை வாசித்த போது மூச்சுத் திணறி இறந்ததாகவும் சொல்கின்றார்கள்.

இவர் இறந்தபின், இவரது மூதாதையோர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் இவரையும் அடக்கம் செய்ய முயற்சித்த போது இவரை அங்கே அடக்கம் செய்ய விடாமல் ஸ்பாட்டன் போர் வீரர்கள் தடுத்த போது டையோனிசஸ் கடவுள் லைசண்டர் என்பவருக்குத் தோன்றி அவரைத் அவரது மூதாதையோர் அடக்கம் செய்த இடத்திலேயே அடக்கம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதாயும் இதற்கு ஸ்பாட்டன் போர் வீரர்கள் அனுமதி அளித்ததாயும் சொல்லப்படுகிறது.

இவரது மரணத்தின் பின், வருடா வருடம் பலியிட்டு வணங்கும் ஒரு இடத்தில் இவருக்கு ஒரு சிலை எழுப்பி, இவரை ஒரு போர் வீரனாகப் போற்றி வணங்கினர்.

தனது முன்னோடிகளால் வளர்த்தெடுக்கப்பட்ட நாடகமுறையை மேம்படுத்தியும், இலக்கிய வளம் நிரம்பியதாக்கியும், சிதறியிருந்த கலைச் செல்வங்களை மனதுக்குகந்த கலைச்செல்வங்களாகவும் ஒன்றிணைத்தார்.

கிரேக்க துன்பியல் நாடகங்களில் இவரால் செய்யப்பட்ட முக்கியமான மாற்றம் மூன்றாவது நடிகரைச் சேர்த்தமையாகும். இதுவரையில் நடிகர்கட்கும் கோரஸ் குழுவினருக்கும் இடையே இருந்து வந்த போட்டி மூன்றாவது நடிகரின் வருகையுடன் முடிவுக்கு வந்தது. இரண்டு நடிகர்கள் நடித்தபோது அவர்களுக்கிருந்த அழுத்தம், மூன்றாவது நடிகர் சேர்க்கப்பட்ட போது மிகக் குறைவடைந்து வசனநடைக்கு முக்கியத்துவம் கிடைக்கவும், கலையுணர்வு அதிகரிக்கவும் வழியாயிற்று. மூன்றாவது நடிகரின் வருகை, கோரஸ் பாடுவோருக்கும் இரண்டு நடிகர்கள் நடித்தபோது நடைபெற்ற சம்பாஷணையைவிட அதிகரிக்கவே கோறஸ்பாடுவோரின் முக்கியத்தும் குறையலாயிற்று. இதன் பயனாய் நாடகங்களில் வசனங்கள் நிறையப் பேசப்படவே வசனங்களில் கலையுணர்வு மிளிர்ந்து,



நாடகத்தின் கலைத்திறனும் மேம்படலாயிற்று. இதனால் நாடகங்களில் மாறுபட்ட செயற்பாடுகள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படவே பார்வையாளர்களின் கவனம் கூடுதலாக ஈர்க்கப்படலாயிற்று.

மூன்று நடிகர்களை அறிமுகம் செய்தபோது நாடகம் வசனநடைகளைக் கூடுதலாகக் கொண்டதாய் மாறவே இவரது காலத்தில் நிலவிய “மூன்றன் தொகுதி” (Trilogy) முறை கைவிடப்பட்டு திரும்பவும் தனித்தன்மை கொண்ட நான்கு நாடகங்கள் மேடையேற்றப்படலாயிற்று. சோபக்கிளின் நாடகப் பார்வை ஈக்கிளிசின் பார்வையைவிட மாறுபட்டிருந்தமையும் இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

ஒரு நாடகத்தின் புரிதற்தன்மை பின்னே வரும் ஒரு சம்பவத்திலிருந்து பிறக்கக் கூடாதென்பது சோபோக்கிளிசின் நம்பிக்கை. இவரது நாடகங்கள் உள்ளார்ந்த மெய்ப்பொருளும், தனி முறைச் சிறப்புள்ள உட்கருத்துக் கொண்டவையாகவும், இயன்முறைக் காரண காரியத்திலிருந்து விலகி அதாவது தெய்வீகத் தன்மை அல்லது ஆவியுலகிலிருந்து விலகி மனிதத்துவம் உள்ள தாயிருந்தது. நாடகக் கருக்கள் சமயமும் அது சார்ந்த ஒழுக்கவியலிலிருந்தும் விலகி மனித விருப்புகளை நாடி நின்றது. அத்தோடு இவருடைய துன்பியல் நாடகங்கள் மரபு வழித் தொடர்பாகித் தொடரும் முறையை எடுத்துக் காட்டுவதாக அமைந்து இருந்தது. மனிதர்களுடைய இயல்பு வாழ்க்கை, அவர்களுடைய உணர்வுகள், வாழ்வுக்கான போராட்டங்கள் என்பன முதன் முதலாக இவரது நாடகங்களில் எடுத்தாளப் பட்டன. முன்னர் வீரபுருஷர்களாகப் புகழப் பட்டு, வணங்கப்பட்ட வீரர்கள். அவர்களுடைய மனித உணர்வுகளுடனும், பலவீனங்களுடனும் இவருடைய நாடகங்களில் கொண்டுவரப்பட் டார்கள்.

நாடகக் கருக்களைப் பழமையான தீபஸ் குடிமக்கள் சார்ந்தும், ரொறை (Troy) நகர வீரகாவியங்களிலிருந்தும் தெரிந்துள்ளார். ஆனால் டையோனிசஸ் கடவுள் சார்ந்த புராணக் கதைகளை. இவர் தவிர்த்துள்ளார் கிரேக்கர் சார்ந்த இதிகாசங்களிலிருந்தும், அக்றோ (Agro) என்ற கலத்தில் சென்ற

தொடர்தல் 84ம் பக்கம்



உங்களின் வியாபாரத்திற்கான
WEB DESIGNER
416-840-9510 www.excelgra.com

# நான்கு பெரும்...

83ம் பக்கத் தொடர்ச்சி...

பண்டைய கிரேக்க வீரர்கள் பற்றிய இதிகாசங்களிலிருந்தும் கருக்களை எடுத்துள்ளார். தம் நாட்டு வீர புருஷர்களான தீசியஸ் (Theseus), பீட்சரு (Phacdra), இயன் (Ian), ரெறெயஸ் (Tereus), புறோகிறிஸ் (Procris), ஆகியோர் பற்றிய வீரகாவியங்களையும் எடுத்தாண்டுள்ளார். பேர்சியஸ்சு (Perseus) டைய வீரசாகசங்கள், ரைறோ (Tyro)வுடைய வேதனைகள், பீனியஸ் (Phineus) உடைய கொடுமைகள், அற்றிய (Atreus)இற்கும் தீஸ்ரஸ் (Thestes)இற்கும் இடையிலான கொலைகளுக்கான பிணக்குகள் என்பனவும் இவரது நாடகக் கருக்களாயின.

படிப்படியாக, நேர்த்தியாக அமைக்கப்பட்ட இவரது நாடகங்களின் கருக்கள் கட்டுக்குலையாத இறுக்கமானவையாகும். இவரது நாடகங்கள் பார்வையாளர்கட்கு உணர்ச்சியூட்டாது உணர்வு பூர்வமானதாயிருக்கும். நாடகங்களின் முடிவுகள் எப்படி இருக்குமென அனுமானிக்க முடியாதன. பார்வையாளர்களில் மிகுந்த நம்பிக்கை கொண்ட இவரின் வியப் பளிக்கும் நாடக நிகழ்வுகள் பார்வையாளர் களை வியப்பில் ஆழ்த்தாது, அவர்களை நாடகத்தின்பால் மனங்கொள்ளச் செய்து, பாத்திரங்களிலிருந்து வெளிப்படும் பலவகை பட்ட மாறுபட்ட மனக்கிளர்வுகளையும் உய்த்தறியச் செய்யும்.

சோபக்கிளிசுடைய நாடகங்களில் கோரஸ் பாடல்கள் நாடகத்தின் கருவுடனும், காட்சிகளுடனும் ஒன்றடக் கலந்து நாடகங்களுக்கு மெருகூட்டிக் கலைத்துவத்தை மேலும் அதிகமாக்கியது. கோரஸ்பாடல்கள், வசனம் பேசி நடிக்கும்போது அப்பாத்திரங்களுக்குரிய கவன ஈர்ப்பை திசை திருப்பாது, வலுக்குறைந்தும் வசனங்கள் பேசப்படாத போது மேடையில் தோன்றும் பாத்திரங்களுக்கு உயிரையும், உசாரையும் கொடுப்பதோடு, காட்சிகளுக்கிடையே ஓர் இணைப்புப்பாலமாகவும் இருந்துள்ளது. ஆனால் இவருடைய நாடகங்களில் கோரஸ் இவரின் முன்னோரின் துன்பியல் நாடகங்களில் வகித்த பாத்திரத்தைவிட வலுவிழந்ததாகவே படைக்கப்பட்டுள்ளன. நாளடைவில் கோரஸ் இணைப்புக் கருவியாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக இவருடைய நாடகங்களில் கோரஸ் மீள்நினைவூட்டலாகவும், இடையீட்டிணைப் பாகவுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிரேக்க துன்பியல் நாடகங்கள் இவரது காலத்திலேயே ‘கடவுள்’ பற்றிய தலைப்பிலிருந்து ‘மனிதன்’ பற்றிய தலைப்பிற்கு மாற்றுரு எடுக்கத் தொடங்கியது. நாடகக்கருவின் உருவும், காட்சிப்படுத்தலும் பாத்திரத்தை மையப்படுத்துவதிலேயே நாட்டங்கொண்டிருந்தன. நாடக நுணுக்கங்கள், விளக்க வருணனைகள், செயலூக்க விவரணைகள், மனித மனத்தின் நுண்ணுணர்வுகள் என்பன இவருடைய நாடகங்களில் செறிந்துள்ளது போல இவருடைய முன்னையோருடைய நாடகங்களில் செறிந்திருக்கவில்லை. மாறுபட்ட பாத்திரங்களை, தான் அறிந்திருந்த பல்வேறுபட்ட மனிதர்களின் உணர்வுகளிலிருந்து படைத்திருந்தார். ஒரு பாத்திரத்தை வெவ்வேறு நாடகங்களில் வெவ்வேறு குணம்சம் கொண்டதாக உருவாக்குவதில் இவர் வல்லவர். கிறியோன் என்ற பாத்திரத்தை ஓடிப்பஸ் கொலோனஸ் (Odipus Coloneus) என்ற நாடகத்தில் கொடியவராகவும், பழிவாங்குபவரகவும், அன்ரிகோன் (Antigone) இல் குறுகிய மனப்பான்மையும், பிடிவாதமும் கொண்டவராகவும், ஓடிப்பஸ் றெக்ஸ் (Odipus Rex)இல் அமைதியும், சாந்தமும், அனுதாபமும் கொண்டவராகவும் படைத்துள்ளது இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இவருடைய நாடகங்களில் ஆன்மீகக் கருத்துகள் குறைந்தும் மனிதநேயம் கூடியும் காணப்பட்டன. மனிதனுடைய அகஉளநிலைச் சார்பைவிட மனிதப்பண்பே இவருக்கு முக்கியமாகக் காணப்பட்டது. மனிதத்துவத்தின் துன்ப உணர்வுகளை நாடகமெங்கும் விதைத்திருந்தார். புராணக் கதைகளை தன் நாடகங்களில் மெல்லிய இழையால் பூசியிருந்த போதும் மனிதப்பண்பும் அவலமுமே மேலோங்கியிருந்தது. எது எப்படி இருந்தபோதிலும் உலகம் இறையியற் சட்டங்களாலேயே ஆளப்படுகிறது என்ற இவரது மூதாதையோரின் கருத்திலிருந்து இவரும் விலகவில்லை. ஒழுக்கக்கேடு என்றுமே சிறந்த வாழ்விற்கு வழிகோலாது, நேர்மையான வாழ்வு என்றுமே நிலையான நீதியைத் தரும் என்று நாடகங்களில் போதித்தார்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படுகையில், நிரபராதிகள் என்றும் காப்பாற்படுவதில்லை, குற்றமற்றவர்கள் துன்பப்படுவதும், அதிர்ஷ்டமற்றிருப்பதையும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மரணத்தின்பின் மனிதன் வேறொரு பிறப்பெய்துவதும், மனிதனுடைய வாழ்வு மரணத்துடன் மடிவதில்லையென்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

ganam.lambert@thaiveedu.com

■ ■ ■

J & S ACCOUNTING SERVICE
INCOME TAX SPECIALIST
FOR ALL YOUR PROFESSIONAL ACCOUNTING SERVICE
* CORPORATE TAX
* PERSONAL TAX
* BOOKKEEPING
* HST FILING
* PAYROLL SERVICE
* FINANCIAL STATEMENT PREPARATION
* BUSINESS START UP ASSISTANCE
* BUSINESS REGISTRATION
* INCORPORATING A BUSINESS
* PREPARING BUSINESS PROPOSAL
* BUSINESS VALUATION
* CRA AUDIT REPRESENTATION
* GST / PST / WSIB RETURNS
* CORPORATE TAX PLANING AND PREPARATION
INCOME TAX & RRSP
FREE CONSULTATION WITH APPOINTMENT
J&S ACCOUNTING SERVICE
15 YEARS OF EXPERIENCE
PLEASE CALL:
JEYA PILLAI, CGA
OR SUE SRI, CMA
Excellence! SERVICE
Tel: 416-826-5306
Email: jsaccountingservice@hotmail.com

குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
உங்களதும் உங்கள் குடும்பத்தினதும் பாதுகாப்பான
எதிர்காலத்திற்கு காப்புறுதி அவசியமானது
உங்களுக்கு உகந்த காப்புறுதி
சகல காப்புறுதி நிறுவனங்களுடனும்
ஒப்பீடு செய்து தரப்படும்



Thana
Manickavasagar
*Broker*



| Age | $200 000 | | $300 000 | | $500 000 | |
|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F |
| 30 | $20 | $17 | $28 | $23 | $42 | $31 |
| 40 | $31 | $23 | $43 | $32 | $65 | $49 |
| 50 | $75 | $53 | $110 | $76 | $171 | $116 |

20 ஆண்டுகளுக்குக் கட்டுப்பணம் மாறாது

Life Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
RRSP - Start form $25
RESP - Start form $25

Cell: 416-728-5772
Business: 416-519-3896
thana7@gmail.com
www.thana.ca

(மோர்ள் அல்மேய்டா மும்பாயிலுள்ள கொடாக் ஸ்தாபனத்தினைச் சேர்ந்தவள். அவர் Equities Research என்ற சஞ்சிகையின் ஆசிரியர். ஒஷிவாரா என்பதே இக்கதைக்கு அவர் கொடுத்த தலைப்பு. ஒஷிவாரா பம்பாயிலுள்ள - மும்பாய் - ஒரு புறநகர்ப் பகுதி. கொழும்பிலுள்ள மருதானை போன்ற இடம். அங்கு பழைய தளவாடங்கள், களவெடுத்த பொருட்கள் விற்கப்படும் இடங்களும் உள்ளன. ஒஷிவாராவிலுள்ள ஷோர் பஷார் இன்னும் விசேஷமானது. ஷோர் என்றால் களவு என்று பொருள்படும்.)



# நினைவின் தடங்கள்

**மோர்ள் அல்மெயிடா**

**ஆங்கிலம் ஊடாகத் தமிழில் - என்.கே. மகாலிங்கம்**

அந்த விளம்பரம் உங்களுக்குத் தெரியும். அதில் சாதாரணமாக இயல்பாக உள்ள உருவம் ஒன்றை, அந்தப் போத்தலூடாகப் பார்த்தால் தீய உருவங்களாக மாறி விடும். ஸ்மர்ணோ.்.வ் போத்தல் போன்ற ஒன்றின் ஊடாக. அப்படியான ஒன்றுதான் அதுவென்று சூ நினைத்துக் கொண்டாள். சோகத்தைப் போல அது அத்தனை தீயதல்ல. அத்துடன் அது விநோதமானதுங்கூட. என் சவக்குழிக்கு மேலாக ஏதோ நடந்து போவது போன்ற சோகம். விசித்திரமான விநோதம். பளிங்கு போன்று மின்னும் தருணம் அது.

சூவும் அனிஷும் ஒஷிவாராவின் ஷோர் பஸாரைத் துருவித் துருவித் தேடிக் கொண்டிருந்தார்கள். அது பம்பாயின் புறநகர்ப் பகுதியிலுள்ள பழைய தளவாடக் கடை. அங்கே, சூவின் கண்களுக்கு ஆடும் நாற்காலி ஒன்று தட்டுப்பட்டது. அவள் குழந்தைப் பருவத்தில், கோவாவிலுள்ள வீட்டிலிருந்த நாற்காலியின் சோடி போன்று அப்படியேயிருந்தது அது. அந்த ஆடும் நாற்காலி, ஒவ்வொரு கோடை கால விடுமுறையிலும் அவளை ஆட்டியது. அவள் தன் கால்களை கல் இருக்கையின் மேல் வைத்திருப்பாள். கையில் எல்லாவகையான புத்தகங்களும் இருக்கும். பரணிலிருந்து கத்தோலிக்க டைஜஸ்ற்றையும் ஜரிஷ் டைஜஸ்ற்றையும் கிழிந்த தோல் சூட்கேஸிலிருந்து எடுத்திருப்பாள். அவற்றில், 'வென்ற போரில் மெரிலெக்ஸின் பங்களிப்பு' என்பன போன்ற கதைகள் இருக்கும். அப்படிப்பட்ட கதைகளை இன்றைய பத்திரிகை ஆசிரியர்கள் பிரசுரிக்கவே மாட்டார்கள். எப்படியோ அது என் ஆடும் நாற்காலி. சூவின் சகோதரி அவளுக்கு எதிரேயுள்ள தன் நாற்காலியில் அமர்ந்திருப்பாள். அவளும் தன் கால்களை இடது பக்கமாக உள்ள கல் இருக்கையில் வைத்திருப்பாள். சூவின் வலது பக்கத்திலிருக்க அந்த இருக்கை, பிறகு முன்னுள்ள படிக்கட்டுகளுக்கு கைப்பிடியாக மாறியது. சூ ஆடும் நாற்காலியில் இருந்து, ஆடி ஆடி வாசிப்பாள். பகல் இருட்டாகி வாசிக்க முடியாதவரை நாள் முழுவதும் வாசித்துக் கொண்டேயிருப்பாள். அவளுடைய சகோதரி அப்பொழுது விளையாடுவாள். பிறகு நாற்காலியில் ஆடுவாள். இடைக்கிடை வாசிப்பாள். சூரியன் கடுமையாக எரிக்கும்போது, மற்ற தாய்மார் தம் பிள்ளைகளை வீட்டுக்குள் வரும்படி அழைக்கும்வரை, அவள் அப்படிச் செய்வாள். அப்பொழுதும் சூ அங்கிருந்து ஆடிக்கொண்டே வாசித்துக் கொண்டிருப்பாள். அதைவிட, இன்னொரு சோடி ஆடும் நாற்காலிகள் வீட்டுக்குள் இருக்கும் அறைக்குள்ளும் இருந்தன. அவை இப்பொழுது அவர்கள் இருக்கப் போதாதவை. சிறு வயதில் அவர்கள் இருந்தவை. இப்பொழுது சூவும் ஷீலாவும் வளர்ந்து விட்டார்கள். லியோன் யூரிஸ் சோமசெற் மொகாமாக மாறிப் பின்னர் ்.பீல்டிங்குக்கும் றஷ்டிக்குமாக வாசிப்பும் மாறியது. ஆனால் நாற்காலிகள் இன்னும் அவர்களுக்குச் சரியாகவே அமைந்திருந்தன.

இங்கே இப்பொழுது இருந்தார்கள். அல்லது நாற்காலிகள் அவற்றைப் போலவே இருந்தன. உண்மையில், கடைசியாகப் பல வருடங்களுக்குப்பின், சூ தாங்கள் இருந்த பழைய வீட்டுக்குப் போய் அதைத் தரிசிக்கும்போது அந்தப் பழைய நாற்காலிகள் பிரம்புக்குப் பதிலாக பிளாஸ்ரிக்கால் பின்னப்பட்டிருந்ததைப் பார்த்திருக்கிறாள். ஆனால் ஷோர் பஸாரில் காணப்படும் இந்த நாற்காலி, இந்த அழகான அற்புதமான நாற்காலி, பிரம்பால் பின்னப்பட்டிருந்தது. அதைச் சிறிது கூடுதலான பளபளப்பான, இருட்டு நிறமான வர்ணத்தைப் பூசி அதைக் கெடுத்திருந்தார்கள். மற்றப்படி பரவாயில்லை. அதனால் சூ அந்த நாற்காலியை எப்படி இருக்கிறது என்று மேலும் பார்க்க விரும்பினாள். அதில் குந்தியிருந்து பார்த்தாள். அது நன்றாக அவளுக்குப் பொருந்தியது. அதில் அவள் இரவு முழுவதும் இருக்கலாம் போலத் தெரிந்தது. சோமசெற் மோகாமை கோடையில் வாசித்த, மொன்சூன் காலத்தில் மழை இரண்டடி தூரத்திற்கப்பால் விழுந்து அவளில் தெறித்த, சூடான றாகிக் கஞ்சியைக் குடித்த அந்த வாழ்க்கையை மீண்டும் வாழ்ந்தாள். அது அப்படியிருக்க முடியாது. தவிர்க்க முடியாமல், அவள் முன்பு கழித்த, போர்த்திருந்த பாரமான போர்வை மீண்டும் அவள் மேல் விழுந்தது. மீண்டும் அவள் தோள்களின் மேல் பாரமாக விழுந்து அவளைப் போர்த்தியது.

இது மீண்டும் மீண்டும் நிகழ்ந்தது. மீண்டும் திரும்பி வந்துள்ளது. கோவாவில் தளவாடத்தின் உண்மையான சொந்தக்காரனின் நினைவு வராமல், அவளால் எக்காலமுமே பழைய தளவாடங்களை வாங்க முடியாது.

இப்பொழுது, இந்தப் பழைய ஆடும் நாற்காலியில் இருந்து கொண்டு அதைத் தன்னுடையதாகவே உணர்ந்தாள். அவள் அதில் வளர்வதை உணர்ந்தாள். அகலிப்பதை, தன் உடைகள் மென்மையாக மடிப்புகளாவதை, பழுப்புப் பச்சை நிறமும் இளஞ்சிவப்பு நிறமும் கலந்த பூப்போட்ட மடிப்புக்களாகப் பெருகுவதை உணர்ந்தாள். அவளுடைய கைகள், வெள்ளி சிலுவையுள்ள, கறுத்த உருள்மணிச் செபமாலையை இறுக்கிப் பிடித்திருந்தன. செபமாலையில் ஒரு பத்தான தொகுதி மட்டும்தான் மீதமாய் இருந்தது. ஆனால் இன்று வெள்ளிக்கிழமை. வியாகூலமான புதிர்கள் நிறைந்த தினம். அத்துடன் மரணித்தவர்களுக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டிய தினம். அவளுக்கு ஏதோ கேட்டது... அவள் பிரார்த்திக்கும்போது ஏன் அவர்கள் அவளை இடைமறிக்கிறார்கள். அது அந்த மோசமான வேலைக்கார சிறுமியாகத்தான் இருக்க வேண்டும். 'டொன்னா லுசின்டா, டொன்னா லுசின்டா,' அவள் மெதுவாக, வாட்டத்துடன் திரும்பினாள். பருத்த மனிதனின் பக்கவாட்டு நிழல் உருவாக மங்கிய வெளிச்சத்தில் தெரிந்தது.


அகமெட்பாய், இழுப்பறையுள்ள மேசையொன்றை நேசத்துடன் தடவ, அவன் உள்ளங்கை மேசை வளைவின் விளிம்புகளில் தட்டையாக கிடந்தன. அதுவொரு அழகான பெட்டி. முழுக்க முழுக்கத் தேக்கு. அதன் கைப்பிடிகளைப் பார்த்தாயா?

அது மீண்டும் நிகழ்ந்தது. சூ விரும்பி எடுத்த தளவாடம் மற்றவர்களால் மிகவும் விரும்பப் படுகிறது. நாய்கள் தங்கள் எசமானுக்காக ஊளையிடுவது போல என்று அவள் எப்பொழுதும் நினைப்பாள். அவள் விரும்பிய அந்தப் பொருள் இப்பொழுது போய் விட்டது. ஆனால், அவளுக்குச் சொந்தமில்லாதவை இப்பொழுது அவளிடம் எஞ்சியுள்ளன. தனியாக இருப்பதன் பயம், வந்து சேராத கடிதங்கள் பற்றிய சோகம், வர வேண்டிய பணம் வருவதற்கு தாமதமாவதால் ஏற்படும் சோகம், பணம் வந்து சேர்ந்தபோது அதன் போதாமையால் ஏற்பட்ட சோகம் போன்றவை. வேலையாட்களின் மரணங்கள், முதுமையால் ஏற்பட்ட துயரம், தனிமை. தேவையும் விருப்பும் போன்றவை சூவின் சோகங்கள். அவை பூப்போட்ட பாவாடை அணிந்த, வெள்ளி முடிப் பெண்ணிற்கு உரியவை. அந்த நாற்காலிக்கு உரியது. அவளும் அந்த நாற்காலிக்கு உரியவளா? சூவிற்கு அதில் சந்தேகம். அவள் பெருமூச்செறிந்தாள். மற்றப் பெண் போய் விட்டாள். ஆனால் சோகத்தின் ஆடை இன்னும் பின் தங்கியிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலான பாரம் என்னவென்றால்... தளவாடத்தையும், அத்துடன் சேர்த்து வீட்டின் பழைய பகுதியிலிருந்த பலிபீடத்திலிருந்த புனித அந்தோனியாரின் அந்தச் சின்னஞ்சிறு தந்தத்திலான சிலையையும் விற்றதும். அதுவே மிகப் பெரும் சோகம். ஆனால், அவை அதிக பணத்தைக் கொண்டு வந்தன. அப்பணமும் கொஞ்சக் காலம், சாண்டிலியர் விளக்கை விற்கும்வரைதான் அந்த முதிய பெண்ணுக்கு போதுமானதாக இருந்தது.

தன் நினைவுகளிலிருந்து விடுவதற்காகத் தன் தலையை ஆட்டினாள். ஆடும் நாற்காலியிலிருந்து எழுந்து நடந்தாள். மடத்தனமான, பழைய நினைவுகள் தரும் துயரம். மிகை உணர்ச்சியான மதிமயக்கம். தனது தற்புனைவுகளை குப்பையில் எறிந்தாள். அனிஷ் அவளை சோர்வுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். 'மீண்டுமா?' என்று அவன் பார்வை சொன்னது. அப்படியானால் அது இன்னமும் அவள் முகத்தில் இருந்தது. தன் உடுப்பு தன்னில் இன்னும் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்வதற்காக அவள் தன்னை உதறிக் கொண்டாள். அதன் நிறம் மங்கி, மங்கலான பாதி மறந்த பாரமாகி விட்டிருந்தது. இந்த முறை அதைப்பற்றிப் பேசுவதில்லை என்று சூ தீர்மானித்துக் கொண்டாள். சிலவேளை அடுத்த முறை அது நடவாமல் இருக்கலாம். அடுத்த முறை அவள் சும்மா உள்ளே வந்து நல்ல ஒரு தளவாடத்தைப் பார்த்து எடுத்து, வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போவாள். கால் நூற்றாண்டுக்கு முன்பு இருந்த மனிதர்கள், படங்கள் ஆகிய தேவையற்றன வற்றை நினைத்துக் கொண்டிருப்பதை மனதிலிருந்து அகற்றி விட முடியுமா? பலர் அப்படிச் செய்கிறார்களே. சூ கடையை விட்டு இறங்கியபோது அகமெட்பாய் அவளைப் பிடித்துக் கொண்டான். வெளியே வெளிச்சம் மங்கி விட்டது. நெரிசலாகக் கிடந்த உட்பகுதியில் மங்கிய வெளிச்சத்தில் தாறுமாறாகக் கிடந்த இருண்மையான உருவங்கள் ஒரே யொரு மின்விளக்கின் கீழ் தெரிந்தன. 'இந்தப் பளிங்குக் கல்லைப் பாருங்கள். இது தூய பெல்ஜியப் பளிங்கு.' அவன் அன்புடன் சொன்னான்.

அவளுடைய கண்கள் அந்தப் பழைய அலுமாரியின் இரண்டு கதவுப் பிடிகளையும் பார்த்தன. அலுமாரியைப் பார்க்கவில்லை. அவளால் அந்த பளிங்குக் கைப்பிடிகளை மட்டுந்தான் பார்க்க முடிந்தது. அந்தக் கைப்பிடிகள் நேர்த்தியாக செதுக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்தவேளையில் அவளுக்கு ஏதோ நடந்தது. வெளிச்சத்தைப் பளிங்கு போலாக்கி அவளை ஊடறுத்துச் சென்றது. கோவாவிலிருந்த அயலவரைப் பற்றிய கூர்மையான துன்பத்தைத் தரும் விழிப்புணர்வை அவளுக்கு அது மீண்டும் கொண்டு வந்தது. திருமணம் முடிக்காத அவள். அவளிடம் எதுவும் இருக்கவில்லை. சில தளவாடங்கள் மட்டும் அவளைச் சுற்றிக் கிடந்தன. நற்பெயர் இருந்தது. அடிக்கடி பட்டினியாகக் கிடந்தாள். ஆனால் எப்பொழுதும் தன்மானத்துடன் வாழ்ந்தாள். சூ நிம்மதியாக மூச்சு விடுவதற்காக முதுகு விறைப்பை நீக்க அதை நீட்டி முறிவெடுக்க வேண்டியிருந்தது. நேர்த்தியான பளிங்கு ஒளி இருளை இணைத்தது. அவ்வொளி அவள் போட்டிருந்த உடுப்பு அவளை ஒடுக்குவதிலும் பார்க்க மேலும் ஒடுக்கியது.

அவள் வைத்திருந்த, இருக்கையும் படுக்கையும் சேர்ந்த அந்த திவானுடன் காலத்தைக் கழிக்க வேண்டியதுதான். தன்னை உலுக்கிக் கொண்டாள். அது எப்படியோ எத்தனையோ வருடங்கள் அவளுக்குப் போது-மானதாக இருந்திருக்கிறது.



mahalingam.k@thaiveedu.com


# வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 15

K.S. பாலச்சந்திரன்

ஆங்கில நாடகாசிரியரான வில்லியம் ஷேக்ஸ்பியர் (ஜெகசிற்பியன் என்று தமிழில் சொல்வதுதான் எனக்கு விருப்பம்) தனது நாடகம் ஒன்றில் இவ்வாறு சொல்வார். "உலகமே ஒரு நாடகமேடை. அதில் வாழும் யாவரும் வெறும் நடிகர்களே" என்று.

என்னைப் பொறுத்தவரையில், என் வாலிப காலத்தில், கொழும்புக்கு வேலை கிடைத்து, வந்ததின்பின்னர், 'நாடகமே உலகம்' என்று சொல்வதுதான் தாரக மந்திரமாகியது.

எனக்கு லீவு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் (சம்பளமற்ற லீவு எடுத்துக்கொண்டு) நான் சார்ந்திருந்த நாடகக் குழுவோடு நாடகங்களில் நடித்துக்கொண்டு திரிந்தேன். இங்கென்றால் என்னை வேலையில் இருந்தே 'தூக்கி' இருப்பார்கள். இலங்கையில் அரசாங்க வேலை. 'யார் தூக்குவது' என்று தெரியாமல் நான் வேலை செய்த பிரிவுத்தலைவர்,




# மட்டுநகரும் மலைப்பிஞ்சுகளும்

திணைக்களத் தலைவருக்கு 'நோட்' அனுப்பி, அவர் தனக்கு மேலே இருப்பவருக்கு (கடவுள் அல்ல) கடிதம் அனுப்பி, பதில் வரப்பிந்தி, இந்தச்சிக்கல்களினால் நான் 27 வருடங்கள் வேலையில் தப்பிப் பிழைத்தது அதிசயந்தான்.

நான் எங்கே விட்டேன்..? ஆமாம். 'அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடித்துக் கொண்டு' திரிந்தேன்.

ஒரு முறை கிழக்கில், மட்டக்களப்பு நகரத்தில் நாடகம். திறந்தவெளி அரங்கில் நடந்தது. திறந்தவெளி என்றால் - ஒரு வட்ட வடிவான மேடையில் குறுக்கே அரைச்சுவர் எழுப்பியிருந்தார்கள். அந்தச் சுவரின் பின்னால் நின்று ஒப்பனை வகையறா சங்கதிகளை முடித்துக்கொண்டு, ஒரு மாதிரி சுவருக்கு முன்னால் சென்றால் மேடைதான். சீன், திரை, மறைப்பு, மேலே கூரை என்று எதுவும் இல்லை. 'வானமே எல்லை' என்ற மாதிரித்தான்.

எங்களுடைய நாடகத்திற்கு முதல் ஒரு வில்லுப்பாட்டு. வில்லடித்துப் பாடிய கலைஞர் எங்களைப்போல கொழும்பிலிருந்து வந்தவர். முதன்முறையாக மட்டக்களப்புக்கு வந்த சந்தோசத்தில் 'வில் பவர்' இல்லாமல் முறையாக 'உள்ளூர்ப் பானம்' அருந்தியிருக்கிறார் என்று நினைக்கிறேன். கீறல் விழுந்த 'கிராமப்போன் இசைத்தட்டு' போல, ஆரம்பப் பாட்டையே திரும்ப, திரும்பப் பாடிக்கொண்டிருந்தார். அதிலும் முதல் சில வரிகளை மீண்டும்.. மீண்டும்.. பாடிக்கொண்டேயிருந்தார்.

நாங்கள் மேடையின் சுவருக்குப் பின்னால் நின்று கேட்டுக்கொணடிருந்தோம். 'சகுனம்' சரியாகப்படவில்லை.

கிழக்குமாகாண மக்கள் விருந்தோம்பலுக்கு உதாரணமானவர்கள். உங்களை தங்கள் வீட்டுக்கு வரும்படி அழைக்கும்போதே தங்கள் அன்பான வார்த்தைகளால் கட்டிப்போடுவார்கள். வளம் கொழித்த பூமியல்லவா அது. தங்கள் வயல்களில் விளைந்த நெல்லின், அரிசியில் சோறு சமைத்து, தயிருடன் தந்து உபசரிக்கும் பாங்கே தனி. கடற்கனிகள் (மீன்களைச் சொன்னேன்) சுவைக்கவிரும்பினால் அதற்கும் குறைவில்லை.

மன்னியுங்கள்... நினைவு மீட்டலில் கதையை விட்டு விட்டேன்.

'வில்லு'க்காரர் அடுத்த பாட்டுக்கு இன்னும் போகவேயில்லை. கர்நாடக சங்கீதக்காரர் ராகம் பாடுவதுபோல ஒரே வரியை பலதடவை 'சங்கதி'களுடன் பாடி, 'சித்து' விளையாடிக் கொண்டிருந்தார். பார்த்துக் கொண்டிருந்தவர்களும் எவ்வளவு தூரந்தான் பொறுப்பார்கள். திறந்தவெளி அரங்கில் நிரம்பி வழிந்த கூட்டத்தில் இருந்து 'கசமுசா' சத்தம் கேட்டது. கேட்பது உற்சாகக்குரல் என்று வில்லுப் பாட்டுக்காரர் நினைத்து விட்டார் போலிருக்கிறது. 'மூசி, மூசி' வில்லை அடித்து, துவம்சம் செய்து கொண்டிருந்தார். பாட்டு.. அதேதான்.. ஒரு துளியும் அசையவில்லை.

பொறுமை இழந்த மக்கள் கடைசி ஆயுதத்தை கையில் எடுத்துக்கொண்டார்கள். சிறிய 'மலைப்பிஞ்சுகள்' (சிறுகற்கள்) மேடையில் வந்து வீழ்ந்தன. சுவரைத்தாண்டி எங்கள் மேலும் சில வந்து பட்டுத் தெறித்தன.

'சரிதான்' என்பதாக எங்கள் நாடக இயக்குனர் தலையாட்டிக்கொண்டு நிற்க, அவசரம். அவசரமாக, வில்லுப்பாட்டுக்காரரும், பக்கவாத்தியக்காரரும் மேடையை விட்டு இறங்கி. எங்களைத் தாண்டி, பின்பக்கமாக இருளுக்குள் மறைந்து ஓடிப்போனார்கள்.

அடுத்தது எங்கள் நாடகம் என்று அறிவித்தாகிவிட்டது. சிரிப்பு நாடகம். நாங்கள் சிரிக்கிற நிலையில் இருக்கவில்லை. வழக்கமாக முதல்காட்சியில் எனது அப்பாவும் (இயக்குனர்தான் அப்பாவாக நடித்தவர்), எனது அம்மாவும் தோன்றி நடிக்கவேண்டும். சுவரால் மெதுவாக எட்டிப்பார்த்துவிட்டு இயக்குனர் பரிதாபமாகச் சொன்னார்.

"தம்பி பாலா... என்னுடைய கண்ணாடி புதிசாக வாங்கினது. கல்லுப்பட்டால் பொரிப் பொரியாகப் போய்விடும். நீ இந்தக்காட்சியில் முதலில் போகிறாயா... நாங்கள் பின்னால் வருகிறோம்?" என்று 'நாடகக்கதை'யையே மாற்றத் துணிந்தார்.

அம்மாவாக நடித்த நடிகை – கொஞ்சம் பொலிவான உடம்பு. எறிகிறவர் கண்ணை மூடிக்கொண்டு எறிந்தாலும், அவவின் உடம்பில் எங்காவது பட்டே தீரும். கையெடுத்து என்னைக் கும்பிடாத குறையாக மன்றாடினார்.

நான் துணிந்து விட்டேன். துணிவதைத்தவிர வேறு வழியுமில்லை. எனக்கு அப்போது மெல்லிய உடம்பு. முடிந்தளவு வீசப்படும் கற்களைத் தவிர்த்து, லாவகமாக வளைந்து, நெளியிற மாதிரித் தோற்றம் இருக்கிற துணிவுதான்.

கதையின்படி என் காதலி என்னை கைவிட்டு விடுகிறாள். நான் "அவளா சொன்னாள்... இருக்காது... அப்படி எதுவும் இருக்காது... நம்பமுடியவில்லை" என்று உச்சஸ்தாயியில் பாடி முடிக்கவேண்டும். ஏற்கெனவே வில்லுப் பாட்டுக்காரர் பாடி நடந்ததை நினைக்க, என் தொண்டையிலிருந்து குரல் வெளிவராமல் 'மக்கர்' செய்வது போலிருந்தது.

இனி என்ன செய்வது? சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுத்தாகிவிட்டது. மெதுவாக சுவரைச் சுற்றிக்கடந்து, முன் மேடைக்குச் சென்றேன். கூட்டம் என்றால் அப்படி ஒரு கூட்டம். என்னை "வா ராசா.. வா" என்று பார்த்துக்கொண்டு காத்திருப்பது போல இருந்தது.

திறந்தவெளிக்கு குறுக்கே வீசிய இரவுக் காற்றின் குளிர், என் மெல்லிய உடம்பை நடுங்க வைத்தது. சாடையாக அழுகை வருவது போல பாடினேன். என் குரலிலும் அது தெரிந்திருக்கவேண்டும். 'ஓ'வென்று குரல் எடுத்துப் பாடினேன். "அவளா சொன்னாள்.. இருக்காது"

என் தோற்றமும், வெடவெடக்கும் உடம்பும், ஈனஸ்வரமான சோகக்குரலும் அவர்கள் மனதை மாற்றியிருக்க வேண்டும். கையில் இருந்த கற்களைப் போட்டு விட்டு கை தட்டினார்கள். அதற்குப்பிறகு அப்பாவாகிய இயக்குனரும், 'போந்தப்பொலிவான' அம்மா நடிகையும் துணிவாக மேடைக்கு வந்தார்கள். நாடகம் தொடர்ந்தது. முடியும் வரை கை தட்டலும், சிரிப்பொலியும் கேட்டன.

அடுத்த நாள் அங்கே நின்றபொழுதுதான், முன்குறிப்பிட்ட விருந்தோம்பலை அனுபவித்தேன்.

நாடகத்தின் பெயர் - 'திருவிளையாடல்'

ksbala@thaiveedu.com



சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A

Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER







†$2,500.00 price reduction available on new 2010 Civic Sedan and Coupe models (excluding Civic DX Sedans, model FA1E2AEX, FA1F2AEX, FA1E2AE4X); $3,000.00 price reduction available on new 2010 Civic LX Coupe and Sport Sedan models; $1,500.00 price reduction available on new 2010 Civic Si Sedan and Coupe; $3,000.00 price reduction available on new 2010 Accord Sedan and Coupe 4-cylinder models (excluding Accord LX Sedan, model CP2E3AE); $2,500.00 price reduction available on new 2010 Accord Sedan and Coupe V6 models; $2,500.00 price reduction available on new 2010 Accord Crosstour models (excluding Accord Crosstour EX-L 4WD Navi, model TF2H5AKN); $3,000.00 price reduction available on new 2010 CR-V models (excluding CR-V LX 2WD, model RE3H3AEY); $4,000.00 price reduction available on new 2010 Insight models; $5,000.00 price reduction available on new 2010 Ridgeline and Pilot models; $6,000.00 price reduction available on new 2010 Odyssey models (excluding Odyssey DX, model RL3H1AE which is available with a $2,000.00 price reduction). Price reduction amounts valid only on cash purchase transactions, and may not be combined with any other offer. Retailer may sell for less. Retailer order / trade may be necessary. Lease example based on new 2010 Civic DX-A MT Sedan, model FA1E2AE4X available through Honda Financial Services on approved credit. 2.4% lease APR for 48 months. Monthly payment (includes freight and PDI, environmental fees and OMVIC fee) is $148.44. Down payment or equivalent trade of $4,950.00, first monthly payment and $0 security deposit due at lease inception. Total lease obligation is $13,779.89. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. 96,000 kilometre allowance; charge of $0.12/km for excess kilometres. Retailer may lease for less. Retailer order / trade may be necessary. †Offers valid from August 4th, 2010 through August 31st, 2010, at participating Honda retailers. Offers valid only for Ontario residents at Ontario Honda Dealers locations. Offers subject to change or cancellation without notice. Visit www.hondaontario.com or see your Honda retailer for full details.

from the firm foundations of creative photos

l a p h o t o g r a p h i e e s t u n a r t



Karuna Photography

# digimedia Creations Photography

- Wedding Photography
- Complete Online Workflow
- Online Slideshows
- DVD Slideshows
- Custom Designed Digital Albums
- Parent Albums/ iPhone Galleries
- Online Digital Proofs and Online albums Proofs
- E-Com Site
- Canvas and Metal Printing


facebook

www.facebook.com/digimediaphoto

elegant memorable real

**www.digimediaphoto.com**

416.467.4952



Atticare
CARE AS IF IT'S OUR OWN
atticare.com
சக்திவலு கட்டணங்களில்
40% வரை மிச்சப்படுத்துங்கள்
உங்கள் அட்டிக் ஏன் மிக முக்கியமானது
ஒழுங்காக இன்சுலேசன் செய்யப்பட்ட அட்டிக் மூலம் வெப்ப மற்றும் குளிராக்கல் கருவியின் செயல்பாட்டு செலவினைக் குறைக்கலாம். இத்துடன் அக்கருவியின் ஆயுளையும் உங்கள் வீட்டின் பெறுமதியையும் அதிகரிக்கின்றது
அட்டிக் உங்கள் வீட்டில் மிகச்சரியாக இன்சுலேஷன் செய்யப்பட்டிருக்க வேண்டிய ஒரு பகுதியாகும். ஒழுங்காக இன்சுலேஷன் செய்யபட்ட அட்டிக் குளிர்காலத்தில் வெப்பத்தையும் வெப்பகாலத்தில் குளிரையும் வெளிவிடாது பாதுகாக்கும்
Atticare
atticare.com
Attic Insulation
416.556.6115
உங்கள் வீட்டின் சக்தி சிக்கனத்தை தரம் உயர்த்துவதன்மூலம் உங்கள் வீட்டின் சக்திவலு கட்டணங்களை குறைப்பதுடன் வீட்டின் பெறுமதியும் அதிகரிக்கும்
உடனே அழையுங்கள்
Attic Insulation
416.556.6115
உங்கள் சக்திவலு செலவை கட்டுபடுத்துவதற்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்
உங்கள் வீடு சக்தி சிக்கனம் மிக்கதாக இருப்பதற்கு அட்டிக் இன்சுலேஷனே சிறந்தது
அட்டிக்கூடாக வெப்பம் வெளியேறுவதை குறையுங்கள் | வெப்பமாக்கும் அல்லது குளிராக்கும் செலவை குறையுங்கள் | கூரை உக்குவதையும் பூஞ்சணம் பிடிப்பதையும் தவிருங்கள்
சிறந்த அட்டிக் - சொகுசான வாழ்க்கை
Hot in winter. Cool in summer

Flexible Affordable Tutoring Plans to Choose From...

Math, Science, English
Grades 1 to 12




Tutors follow school curriculum and use supplementary materials as well.

Offering at the Following Locations:
Brampton, Mississauga, Markham, North York, & Scarborough

Call: (647) 868-6475/(416) 471-9136

Students improve and excel at school through tutoring. These students will be the aces of tomorrow!

தமிழ் வகுப்புகள் சகல தரத்தினருக்கும் நடாத்தப்படுகின்றது. விபரங்களுக்கு 647-8686475

S.P.IMPORTERS
Furniture



அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்

NO PAYMENT INTEREST for 1 YEAR 416-266-3077

கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை




Sealy Posturepedic

Special Sealy
Mattress on SALE

ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)

# முத்துப்போல இலுப்பைப்பூ எங்கள் முற்றத்தை அழகு படுத்தியது

**- பொ. கனகசபாபதி -**

**கா**லையில் கண்விழித்து முற்றத்தைப் பார்த்தால் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். பெரிய வெள்ளை நிற முத்துக்கள் பால்போல, நிலம் முழுவதையும் நிரப்பியபடி காணப்படும். அந்த முத்துக் கம்பளம் மேலே படுத்து உருண்டால் என்ன என்று மனத்தில் ஒரு ஆசை ஏற்படும். கைகளால் அள்ளிப் பார்த்தால் அத்தனை மென்மை. ஆசை மேலீட்டால் பனம் மட்டைத் தும்பினில் கோர்த்து மாலை கூடப் போட்டுக் கொள்வோம். ஆனால் சொற்ப நேரத்தில் அது வதங்கி விடும் அத்தனை மென்மை. பூக்கள் இனிப்பென்றால் அத்தனை இனிப்பு ஒன்றிரண்டைத் தின்று பார்த்தால் வாய் குமட்டி விடும். எல்லோர் வாயிலும் அடிபட்ட பழமொழியினை நினைவூட்ட வேண்டியதில்லை. "ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சக்கரை." கொஞ்சம் நக்கலாகத்தான் பேச்சு வழக்கில் உபயோகிப்பது வழக்கம்.


ஆனால் உண்மையை உணர்வதாயிருந்தால் இலுப்பைப் பூவினிலே 73% வெல்லம் உள்ளது என்பது அதன் சிறப்பியல்பு என்பதை நாம் பெரிதாக உணராமல் இருப்பது வருத்தத்துக்குரியதே. அற்கஹோல் அல்லது மதுசாரம் வடிக்க நொதிக்க வைப்பதற்குத் (fermentation) தேவையான முக்கிய மூலப் பொருள் பாணி எனப்படும் Molasses. இதற்கு அடுத்தாக மிகவும் உகந்ததாக இலுப்பைப் பூவினைச் சொல்லலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். இலுப்பை மரங்கள் மாசி, ஏப்பரில் மாதங்களிலே தான் பூக்கின்றன. ஆனால் மரங்களில் உள்ளபோது பூக்கள் கண்களுக்குப் புலப்படுவதில்லை. காலையில் நிலத்தினைப் பார்த்த பொழுதுதான் இது என்ன மாயவித்தை என எண்ணத் தோன்றும்

மரத்தின் கீழே பாய்விரித்து பூக்களைச் சேகரித்துக் காய வைப்பார்கள் உலர்ந்து காய்ந்த பூக்களைத் தென்னம்மட்டையால் அடித்து அவற்றின் உலர்ந்த மகரந்தப் பைகளை அகற்றித் துப்பரவாக்கிய பின்னர் உரலில் போட்டு துவைத்து உருண்டையாக்கி மாலை வேளைகளில் சிற்றுண்டியாகச் சிலர் உண்ணுவதுண்டு கிராமப் புறங்களிலே.

இலுப்பை மரத்தினை Indian Butter tree அல்லது Mahua என அழைக்கிறார்கள். நமது நாட்டிலே இதனைப் பிழையாக Olive tree எனவும் அழைப்பதுண்டு. இரண்டுக்கும் இடையே பாரதூரமான வேறுபாடு உண்டு. ஒலிவ் மரம் அத்தனை உயரமாக வளர மாட்டாது, ஒரு சில அடி உயரமே அதன் வளர்ச்சி இருக்கும் ஆனால் நமது இலுப்பையோ 50 முதல் 70 அடி வரை கூட வளருவதைக் காணமுடியும். இதன் தாவரவியல் பெயர் Madhuca bassia longiflora என்பது. இந்தியாவே இதற்கு உரித்தான நாடு போல உள்ளது. தென் இந்தியாவிலே காணப்படும் இனத்தினை Madhuca longiflora எனவும் மத்திய பகுதிகளிலே காண்பவற்றினை Madhuca indica latiflora எனவும் அழைக்கிறார்கள். ஆனால் சப்போடெல்லா ( Sapodella) என்ற பழம் சாப்பிட்டிருப்பீர்கள். அந்தப் பழவகைக்கும் இலுப்பைக்கும் மிக மிக நெருங்கிய உறவு உண்டு. அந்த மரத்தினைச் சீமை இலுப்பை எனவும் அழைப்பார்கள். தமிழ் நாட்டினலே சில ஆலயங்களிலே தலமரமாக இலுப்பை மரத்தினைக் கூட வைத்திருக்கிறார்கள். மதுகம், மாதவம் எனும் பெயர்கள் கூட இலப்பைக்குச் சொந்தமான பெயர்கள் என்கிறார்கள். இனிக்கும் பூவினைத் தரும் மரம் மாதவம். இலுப்பைப் பூவில் இருந்து மதுசாரம் பெற முடியுமானதால் தான் இலுப்பையை மதுகம் என்கிறார்கள் என எண்ணலாம். இலுப்பையின் தாவரவியல்பெயரான Madhuca கூட இதன் காரணமாகவே ஏற்பட்டிருக்கலாம். மாதவி எனும் பெயர்கூட அவள் தாசி குலத்தினைச் சேர்ந்தவள் மற்றவர்களுக்க இனிமையானவள் என்ற பொருளில் வந்தது எனவும் கூறுவார்கள்.

காயந்த இலுப்பைப் பூவினை நீரில் ஊற விட்டு பின் நொதிக்க விட்டுக் கிடைக்கும் மதுவினை இன்றும் மத்திய இந்தியாவில் உள்ள பழங்குடியினர் குடிக்கிறார்கள். மதுவுக்கு உள்ள எல்லாக் குணமும், நொதித்த இலுப்பைப் பூ நீருக்கு உண்டு.

வெறியம் அல்லது மதுசாரத்தின் (alcohol) வேண்டுமானால் மாறியிருக்கலாம். இலுப்பைப்பூவினைக் கரடி, முள்ளம் பன்றி, மான் போன்றவை விரும்பிச் சாப்பிடுமாம். கரடி சாப்பிட்டு அதன் வயிற்றுக்குள் சேரும் இலுப்பைப்பூ அதன் இரைப்பையில் நொதித்து கரடியைக் கள்ளு உண்டது போல நடந்து கொள்ள வைக்குமாம்.



இலுப்பை வறட்சியைத் தாங்கக் கூடிய மரம். இலைகள் பச்சசை நிறமானவை. நீர் இழப்பினை இலைகள் மூலம் இழக்காமல் இருக்கும் பொருட்டு இலைகளின் பரப்பு மெழுகினால் பூசப் பட்டது போலத் தோற்றன்மையுடையதாகக் காணப்படும்.

மரம் நல்ல பலமுடைய மரம். தறித்து நீளமாக அரிந்து சுவர்களின் மேல் தீராந்தியாகப் பாவிப்பார்கள். நம்மவர்கள் எப்பொழுமே மரத்துக்குப் பஞ்சம் வராதவாறு ஒவ்வொரு தேவைக்கும் ஒவ்வொரு மரத்தினைப் பாவிப்பார்கள். கதவு என்றால் முதிரை அல்லது வேம்பு. வளை அல்லது தீராந்தி என்றால் பாலை அல்லது இலுப்பை. வண்டிலுக்கு அச்சுக் குத்தி அல்லது பலகை என்றால் மா. நுகம் என்றால் மஞ்சள்ஊணா. பாற்சட்டம் என்றால் பலா. இடியப்ப உரல் என்றால் பூவரசு. கோவில் தேர்சிலைகள், வாகனம் என்றால் மாவிலங்கு. செக்கு என்றால் புளி என வகைகளை வகுத்தமையால் அங்கு எங்குமே எப்போதும் மரத்துக்கப் பஞ்சம் ஏற்பட்டதில்லை எனலாம்.


இலுப்பைக் கொட்டைகள் பழங்களில் இரண்டாகக் காணப்படும் அல்லது ஒற்றையாக இருக்கும். கடினமான ஒரு ஓடு, இரண்டு வித்திலைகளைச் சூழக் காணப்படும். இலுப்பைக் கொட்டைக் காலம் என்றால் நமக்கு இரண்டு பிரதான விளையாட்டு. பகல் நேரங்களில் வெளி வாரி விளையாட்டு இரண்டு கன்னைகளாகப் பிரித்து இலுப்பைக் கொட்டை அடித்து விளையாடுவோம். அடிப்பதற்கான கொட்டை கொஞ்சம் வாட்டசாட்டமானதாக இருக்க வேண்டும். பழங்களில் பொதுவாக ஒரு கொட்டை அல்லது இரண்டு கொட்டைகள் காணப்படும். இரண்டு கொட்டைகள் இருந்தால் அவற்றின் ஒரு பக்கம் தடடையாகவே இருக்கும் எனவே ஒரு கொட்டை உள்ள பழங்கள் தான் உகந்தவை. திறமையாக அடித்தால் ஒரே அடியிலேயே இரண்டு மூன்று கொட்டைகளை வெளியே கொண்டு வந்து விடலாம். ஆகவே இதற்காகவே நாம் சில இலுப்பைமர விதைகளை தேடிப் போவதும் உண்டு.

இரவு வேளைகள் என்றால் உள்ளக விளையாட்டாக இலுப்பைக் கொட்டையில் சுண்டி விளையாடுவதுண்டு. இங்கே கன்னை பிரிப்பதில்லை இரண்டு போர்களுக்குக் கூடுதலாக விளையாடுவோம். அநேகமாக இந்த விளையாட்டுப் பெண்கள்தான் விளையாடுவார்கள்.

இலுப்பை இருவித்திலைத் தாவரம் என்பதால் விதையுள் இரண்டு பருக்கைகள் காணப்படும். விதையைச் சூழ்ந்துள்ள ஓடு கடினமானது. மினுங்கும் தன்மையானது. ஓடு வித்திலைகளுடன் ஒட்டியபடி காணப்படும். ஆகவே விதைகளை வெய்யிலில் முதலில் உலர

தொடர்தல் 92ம் பக்கம்

கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
Raphael Maharaja
Barrister & Solicitor

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

விடுவார்கள். அப்படி இரண்டொரு நாட்கள் உலர்ந்த பின்னர் தான் வித்திலைகள் ஓட்டில் இருந்து பிரிந்து காணப்படும். அப்போது தான் ஓட்டினை உடைப்பார்கள். பொதுவாகவே உடைக்கும் பொழுது விதையின் நீளப் பக்கதின் முனையை நிலத்தில் போட்டு அமுக்க அப்பக்கம் உடையும். பினனர் மிகுதி ஓட்டினைப் பிரித்தெடுத்தல் இலகுவாகும். ஓடுகள் ஒன்றுக்கும் உதவாதவை. விரைவில் உக்கவும் மாட்டா ஆனால் குப்பையில் போடுவோம். கூட்டெருவுடன் வயலுக்கப் போகும்.

பொதுவாக விதைகளின் ஓட்டினை உடைப்பது வீட்டில் உள்ள பாட்டிமாருக்கு ஒரு பொழுது போக்கு மாதிரியே. சுவரில் சாய்ந்தபடி இரு கால்களையும் நீட்டிக் கொண்டு யாரோடாவது



***அதன் மார்பினைப் பற்றியபடி ஏதோ ஒன்று அசைந்ததைக் காணமுடிந்தது. துலக்கமாகப் பார்த்தேன் அது அந்த வெளவாலின் குட்டி. இறந்த தாயின் மார்பினைப் பற்றியபடி... எனக்கு என்னவோ செய்தது. அண்ணன் மெல்ல அதனைப் பிடுங்கி எறிந்தார்.***

கதைத்தபடி உடைப்பார்கள் ஆலயங்களிலே மாலை வேளைகளில் பிள்ளயைார் கதை கேட்கப் போகின்ற பாட்டிமார் ஒரு ஓலைப் பெட்டி இலுப்பை விதைகளுடன் தான் செல்வார்கள். பிள்ளயைார் கதை கேட்ட புண்ணியமும் ஆச்சு இலுப்பைக் கொட்டை உடைத்த வேலையும் ஒப்பேறிப் போச்சு

பருக்கைகள் அல்லது வித்திலைகளைச் செக்கினில் போட்டு அரைத்து எண்ணை ஊற்றுவார்கள். சக்கையை அரப்பு என்பார்கள். சனிக்கிழமைகளில் அரப்பும் எலுமிச்சம் பழமும் அவித்துத் தான் ஒரு முழுக்குப் போடுவோம். அரப்பு மிகவும் சிறந்த பசளை என விவசாயவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். தேங்காயில் இருந்து வருவது தேங்காய் புண்ணாக்கு, எள்ளில் இருந்து வருவது எள்ளுப் பண்ணாக்கு என அழைக்கப் பட இலுப்பை விதையில் இருந்து வருவது மாத்திரம் இலுப்பைப் புண்ணாக்க என அழைக்கப் படாமல் அரப்பு என ஆழைக்கப் படுகிறதோ நான் அறியேன்.

இலுப்பம் எண்ணை தோலுக்கு பூசுவார்கள். ஏதெனும் நோவிருந்தால் அதனைப் போக்கி விடும். எரிப்பதற்கும் எண்ணையாகப் பாவிப்பார்கள். பிரதானமாக இலுப்பம் எண்ணை சவர்க்காரம் தயாரிப்பதற்கே உபயோகிக்கப் படுகிறது. எண்ணையில் நிறையவே கொழுப்பு உள்ள காரணத்தினால் சவர்க்காரம் செய்வதற்கு அனுகூலமாக உள்ளது. வித்திலைகளில் 50%த்திற்கு மேலாக கொழுப்பு இருக்கும் 16% வரைதான் புரதம் இருக்கும். இங்கே பூவினுக்கு மாறாக வெல்லம் மிகக் குறைந்த அளவேதான் காணப்படும். கொழுப்பில் பிரதானமாக; Palmitic acid 15-28%, Stearic Acid 20-28%, Arachidic acid- 3%, Oleic acid- 41-51-%, Lenolic acid- 8-13 %. இப்படியாக பெரும் அளவிலே நிறைவான கரைசலாக கொழுப்பு அமிலங்கள் இலுப்பெண்ணையில் உள்ளமையாலேயே அதனைப் பெரும்பாலும் உணவுப் பொருட்களை பொரிப்பதற்கு உபயோகப் படுத்துவதில்லை. ஆனால் எரிபொருளாக உபயோகித்தால் நீண்ட நேரம் உபயோகிக்க முடியும்.

இலுப்பையில் காய் காய்த்துப் பழம் சொரியத் தொடங்குவது ஆவணி புரட்டாதி மாதங்களில். இந்த மாதங்களின் நிலாக் காலங்களிலே எமக்கு நல்ல பொழுது போக்கு. இலுப்பைப் பழத்துக்காக எமது கிராமத்தை நோக்கி இரவு வேளைகளில் விருந்தாளிகள் வருவதுண்டு. அவற்றினை வெளவால் என்போம். சாதரணமாக இரண்டு வகை வெளவால்களைக் காண முடியும். மாழ்பழ வெளவால்கள் என்பவை ஒரு வகை. அவற்றிற்கும் பெயருக்கும் தொடர்பு இல்லை. அவை ஊனுன்ணிகள். வீடுகளிலே காணப்படும் பல்லிகள் பூச்சிகளை உண்பவை. வீடுகள் கொட்டில்களிலே பகல் நேரங்களில் காணப்படும். சிறியவை( vampire bats- Carnivorous). இந்த வெளவால்களொடு சம்பந்தமான ஒரு துணுக்கு Readers Digest சஞ்சிகையில் வாசித்தேன். மூன்று போதகர்கள் ஒரு சமயம் சந்தித்தார்களாம். தமது பிரார்த்தனை கூடங்களில் இந்த வெளவால்களின் பிரச்சினை பற்றி பேச்சு எழுந்ததாம், எவ்வளவோ முயன்றும் என்னால் அவைகளை விரட்ட முடியவில்லை. ஒரு பெரிய பையினில் அவைகளைப் பிடித்து எடுத்துப் போய்த் தொலை தூரத்தில் விட்டு விட்டு வந்தேன். நான் வந்து பார்த்தால் அத்தனையும் பிரார்த்தனைக் கூடத்தின் கூரையில் தெங்க்கிக் கொண்டிருக்கின்றன என்றாராம் முதலாமவர். மற்றவரோ உன்பாடு பரவாயில்லை. எனக்கு வந்த கோபத்தில் எனது கைத் தப்பாக்கியை எடுத்து ஒவ்வொன்றையும் இலக்கு வைத்துச் சுட்டேன். சுட்டு விட்டுப் பார்த்தால் கூரையில் ஓட்டைகள் தெரிந்தன. வெளவால்கள் அத்தனையும் பழைய இடங்களிலே தொங்கிக் கொண்டிருந்தன, ஓடு மாற்றம் செலவு வேறு. என்றாராம். இருவருமாக மூன்றாமவரை நீ என்னப்பா செய்கிறாய் என்றனராம். அவர் புன்சிரிப்புடன். மிக்க சுலபம் என்றாராம் எப்படி என்றனர் இருவரும். நான் அவறினை நோக்கி உபதேசம் செய்யத் தொடங்குவேன். அத்தனை வெளவால்களும் கூடத்தை விட்டுப் பேன இடம் தெரியாமல் போய் விடுங்கள் என்றாராம்.

இலுப்பைப் பழம் தின்ன வருபவை பெரியவை இவைகள்தான் பழம் தின்னும் இனத்தவை (Frugivorous) சிறகுகளை விரித்தால் 4 அடிக்கு மேல் அளவிடலாம், Flying fox என்பார்கள். வெளவால்கள் பறப்பவை என்றாலும் பறவைகள் இல்லை என்பது நான் சொல்லித்தான் உங்களுக்கத் தெரியவேண்டும் என்பதில்லை. ஆனால் இவை பறப்பதற்குக் கையாளும் பொறிமுறை பறவைகளிலும் வேறு பட்டவை என்பதும் உங்களுக்குத் தெரிந்ததே. இவை பறப்பதற்கு உபயோகிக்கும் செட்டை தோலினால் ஆனது. பறக்கும் மென் சவ்வு (Patagium)என்போம். குடைச் சேலையைத் தாங்கி நிற்கும் கம்பிகள் போன்று நீட்டப் பட்ட விரல் துண்டங்கள் தாங்கி நிற்கின்றன. வாற்பகுதியும் இந்த மென் சவ்வினோடு சேர்க்கப் பட்டமையால் அப்பகுதி ஒரு கிண்ணம் போன்று உணவினை வைத்துச் சாப்பிடுவதற்கு உதவுகிறது.

செட்டை மென்சவ்வு வெய்யிலுக்கு உலர்ந்து விடும். ஆகவே, அதனை அடித்துப் பறப்பது கடினம் என்பதால் பகல் வேளைகளிலே வெளவால் கூடல்களிலே தங்கியிருந்து இரவு வேளைகளில் தான் பழம் உண்பதற்காக வெளியே பறந்து வரும். இலப்பைப் பழம் அதன் விருப்பததிற்குரிய பழம் ஆகவே ஆவணி புரட்டாதி மாதங்களில் அவை இலுப்பை மரங்களை நோக்கிப் படை எடுக்கும். எனவே எமது வீட்டு இலுப்பை மரமும் அவைகளை கூவி அழைக்கும்.

இலுப்பை மரம் வெளவாலை அழைத்தால் அழைக்காமலே பிரசன்னமாகி விடுவார் சுப்பையா. இரண்டு நீளமான தடிகள், பெரிய கயிறு, கப்பிகள், இயங்கமுள்ளு சகிதமாக வந்து விடுவார் வெளவால் கொடி கட்டுவதற்காக. வெளவால் இறைச்சி சுவையானதாம். கொஞ்சம் பழ மொச்சை அடிக்கும் என்பார்கள். எமது வீட்டில் ஒருவருமே அதனை உண்பதில்லை ஆனால் எனக்கு மாத்திரம் அதன் தோலில் றபானா கட்டிச் சுப்பையா அண்ணன் தருவார்.

நமது புளியமரத்தில் உயரமாக ஒரு தடி ஐம்பதடி தூரத்தில் உள்ள தென்னை மரத்தில் இன்னொரு தடி. இரண்டுக்கும் இடையே உள்ள கயிற்றினில் ஆறு அங்குல இடை வெளியில் 20 அடி நீளமுள்ள இயங்க முள்ளுக் கொடி. ஏறக்குயை 60 அடி உயரத்தில் இந்தக் கொடி இருக்கும். கொடியின் இரு முனைகளும் கப்பியூடாக நிலத்தை வந்தடையும்.

இரவு பத்துமணிக்குப் பின் சுப்பையா அண்ணனும் அவரது சகபாடியும் வந்து விடுவார்கள் மரத்தின் கீழே உட்கார்ந்திருப்பார்கள். இருட்டுக் காலங்களிலே அங்கு போக அம்மா விடமாட்டார் ஆனால் நிலா எறிக்கின்ற போது வானத்தில் வெளவால்கள் பறப்பதைக் காணும் போது மிகவும் அழகாக இருக்கும். அப்படியே வெட்ட வெளியான நீலவானிலே இவை செட்டை அடித்துப் பறப்பதைப் பார்க்க மிக அழகாக இருக்கும்

அகழ் எலிதான் அவசர அவசரமாகத் தனது உணவினைக் கபளீகரம் செய்யக் கூடியதாம். ஒரு செக்கண்டில் 16 வெவ்வேறான உணவு வகைளைச் சுவைக்கும் தன்மை அதற்குண்டு. இதற்கு அடுத்ததாகச் சொல்வதானால் வெளவாலினையே சொல்லலாம். அதற்கு இரவிலே கண்கள் தெரிவதில்லை. ஆனால் நாசியைச் சூர சிறிய நாசி இளைகள் உள்ளன. எதிரே உள்ள பொருட்களைல் மூச்சுக் காற்றுப் பட்டு மீளவருதை இந்த நாசி இளைகள் கிரகிப்பதால் தடையினை விலக்கி வெளவாலால் பறக்க முடிகிறது.

வெளவால்கள் இலுப்பை மரத்தில் வந்து தமது ஒரு காலால் தொங்கியபடி மறுகாலால் பழத்தினைப் பறித்து தமது வால் கிண்ணத்துள் வைத்து உண்ணுவன. அதனை எம்மால் காணமுடியாது. மெல்லப் பறக்கின்ற பொழுது வந்து சுப்பையா அண்ணனின் கொடியின் இஜங்க முள்ளில் மாட்டிக் கொள்ளும். காத்திருந்த சுப்பையா அண்ணன் கடகட எனக் கொடியினைக் கீழே இறக்கி விடுவார். வெளவலுக்குத் தலையில் கொட்டன் பொல்லால் ஒரு அடி. வெளவால் மறு உலக யாத்திரை தொடங்கி விடும். கொடி மேலே ஏறிவிடும்.

அன்று நிலாக் காலம். அம்மாவின் உத்தரவு பெற்று சுப்பையா அண்ணனின் வெளவால் வேட்டையைப் பார்க்கப் போயிருந்தேன். அன்று அண்ணனுக்கு நல்ல வேட்டை. தம்பி வந்தது நல்ல சகுனம் என்று அண்ணன் என்னைப் பாராட்டினார். கீக்கீ எனக் கொடியில் சத்தம் கேட்டது. அண்ணன் அவசர அவசரமாகக் கொடியை இறக்கினார் தலையில் ஒரு அடி. வேளவால் கதை முடிந்தது. அண்ணன் வெளவாலைக் கொடியில் இருந்து பிரித்துப் போட்டுவிட்டுக் கொடியினை மேலே உயர்த்தினார். நிலவு வெளிச்சத்தில் வெளவால் நன்கு தெரிந்தது. பார்த்தேன். அதன் மார்பினைப் பற்றியபடி ஏதோ ஒன்று அசைந்ததைக் காண முடிந்தது. துலக்கமாகப் பார்த்தேன் அது அந்த வெளவாலின் குட்டி. இறந்த தாயின் மார்பினைப் பற்றியபடி... எனக்கு என்னவோ செய்தது. அண்ணன் மெல்ல அதனைப் பிடுங்கி எறிந்தார். பக்கத்து வீட்டுப் பூனை கௌவிக் கொண்டு ஓடியது. என்னால் அங்கு நிற்கவே முடியவில்லை. வீட்டுக்குள் ஒடினேன். அம்மாவுக்கச் சொல்வதா விடுவதா? என்னால் தாங்க முடியவில்லை. அம்மாவிடம் கூறினேன். இதற்காகத் தான் அந்தப் பக்கம் பொகாதே என்று சொன்னேன் என்றார் அம்மா. அந்த வருடம் றபானா வேண்டாம் என்று சுப்பையா அண்ணனிடம் கூறி விட்டேன். எனது மனக் கண்முன் அந்தக் காட்சி நீண்ட நாட்கள் நிலைத்து நின்றது.

சுப்பையா அண்ணனுடைய மனைவியின் பேற்றுக் காலம். மகப்போற்று. வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர். கொஞ்சம் சிக்கலான பிரசவம் என்றனர். இரண்டு நாட்களின் பின்னர் மகப்பேற்றில் குழந்தை பிழைத்து விட்டது தாய் இயற்கை எய்தி விட்டார் என்ற செய்தி வந்தது. ஊரவர்கள் சுப்பையா அண்ணனுக்காக மிகவும் வருந்தினார்கள். எனக்கோ அன்றைய இரவு நிகழ்ச்சியுடன் தொடர்பு படுத்தியே பார்க்க முடிந்தது.



kanagasabapathy.p@thaiveedu.com

TORONTO BUSINESS COLLEGE



COMPUTERIZED ACCOUNTING
EARN YOUR DIPLOMA IN 6 MONTHS
- CURRENTLY RECEIVING EI ✓
- RECEIVED EI WITHIN LAST FIVE YEARS ✓
- RECEIVED MATERNITY BENEFITS WITHIN LAST 5 YEARS ✓

You May Be Eligible For Financial Assistance
Our Experienced Counselor Will Help You To Apply For Funding

- 100% INSTRUCTOR LED
- HIGH EMPLOYMENT RATE
- SMALL CLASS SIZE
- INDIVIDUAL ATTENTION
- TTC ACCESSIBLE/FREE PARKING

CERTIFICATE COURSES
QUICKBOOKS,SIMPLY ACCOUNTING,ACCPAC
WORD,EXCEL,POWER POINT,ACCESS
WINDOWS,KEYBOARDING,DATA ENTRY

416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
(SHEPPARD & BRIMLEY) SCARBOROUGH
www.t-businesscollege.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)



Buy & Sell Homes,Business,Farms..
416- 490-7653
Mortgage 2.3 % ..Refinance also.
SOLD
SOLD
SOLD
SOLD
NEED MORE HOMES FOR BUYERS
selling commission only 1.25%
Save 9900/-*
sell your home
with less commission
Scarborough
$285 000.00
3 bm/ home
Salem/taunton
Detached newer home 4bm/ 3 wsrm 349k
V.Park/ St.clair
$217 000.00
2 bm/ 2 wsrm
Bayview/ St.John
319 000.00
3 bm/ 3 wsrm by arista home
email: rpushpakanthan@trebnet.com
CENTURION AWARDS 6 yrs
Top producer 7 years
Masters Hall of Fame 07
Pat Pushpakanthan
Real Estate BROKER
Century 21
Brokerage*
AFFILIATE REALTY INC.
80 CORPORATE DR. TORONTO,
ONT. M1H 3G5
416-290-1200
Dir 416-894-1187
email: rpushpakanthan@trebnet.com
Top Producer
7 Years*
For lease auto Garage
markham/steeles
For Sale/ Investment
Fully Occupied,Industrial/Multi Unit/Automobile Repair Legal Zoning/Newer 6 Units
Free standing bldg for sale
9 th line
Detached home 3bm/ 3 wsrm
399 000.00
Scarborough
3 bm det home ttc, school, mall $290 000
Brimly/Denison
3 bm/ 3 wsrm
Detached HOME
Albion/Islington
3bm detached bungalow w/garage sep entrance
$399
RichMond hill
New Condo
Opening
Invest....
Now Selling....Toronto
Be the First.. Yorkville
EXPERIENCE!
COMMITMENT!
RESULTS!
Brimly /denison
Detached home 3 bm
Fin bsmnt, excellent home
Business for sale
2 Cafetaria fr sale from 39k
5 Restaurant for sale from 20k
2 Variety store from 41k
2 dollar store from 129K
4 Hair Salon from 23K
MOTEL, Farms, land, Cottag-
Business for sale
in Richmond hill excellent location
Coffee Time
241·0·241
V.Park/ St.clair
$217 000.00
2 bm/ 2 wsrm
Markham/ Steeles
Condo apt 2+1 Bdrm large unit could be 3 bm
Pay Like Rent


நீங்களும் அதிஸ்டசாலி ஆகலாம்
1st பரிசு
2nd பரிசு
3rd பரிசு
$ 109,900
Kennedy / 401
$ 129,900
Markham/ Eglinton
$142,600
Mccowan/Sheppard
நலம் நாடுவதும் அதுவே
Kathir
Call:416 856 6900
$ 151,900
Midland/Lawrence
$ 151,900
Meadowvale/401
$ 188,000
Midland/ Lawrence
$ 167.900
Midland/Eglinton
$ 199.990
Birchmount/Ellesmere
$ 250,000
Mccowan/Eglinton
$ 289,900
Finch/ Warden
$ 304,500
Kennedy/ Eglinton
$ 329,900
Mccowan/ Eglinton
$ 330,000
Meawvale/aSheppard
$ 309,000
Midland/Sheppard
$ 230,000
Sheppard/Meadow
$ 419,900
Markham/ Steeles
$ 299,900
Brimley/Finch
$ 249,900
Markham/Sheppard
$ 324,900
Middlefield/Finch
$ 346,800
Bur Oak/ 16th Ave
$ 334,900
Warden/St.Clair
$ 439,000
Bur Oak/9th line
$ 469,900
Bur Oak/Markham
HomeLife/GTA Realty Inc.
Independently owned and operated
Cell.: 416 856 6900
Bus.: 416 321 6969
Kathir S Kathirgamanathan P. Eng.
Sales Representative

# இலவசமாகக் கிடைத்த கையெழுத்து

**- அ. முத்துலிங்கம் -**



ஒரு விருந்திலே நண்பர் ஒருவர் என்னைக் கண்டு முறைப்பாடு செய்தார். நண்பர் என்றால் ஒன்றிரண்டு தடவை அவரை முன்னே பார்த்ததுண்டு. அவ்வளவுதான். “நீங்கள் புத்தகம் வெளியிட்டீர்களாமே. எனக்கு ஒரு புத்தகம்கூட தரவில்லை. உங்கள் கையெழுத்தை வைத்து ஒன்று தாருங்கள்” என்றார். இவர் என்ன சொல்கிறார் என்று எனக்கு புரியவில்லை. நான் ஒரு புத்தகம் வெளியிட்டால் அதை வீடு வீடாக எடுத்துச் சென்று கதவை தட்டி ஆட்களிடம் இலவசமாக கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

“புத்தகக் கடையில் கிடைக்கிறது. நீங்கள் வாங்கலாமே?” என்றேன். அவருடைய முகம் வேறு யாரோவுடைய முகம்போல மாறி விட்டது. நான் அவருக்கு புத்தகம் இலவசமாகத் தரவில்லையென்று கோபித்துக்கொண்டு போய்விட்டார். ஒரு குயவன் பானை செய்தால் அதனை இலவசமாகக் கொடுக்கவேண்டும் என்று யாராவது எதிர்பார்ப்பார்களா? ஓவியர் படம் வரைந்தால் அதை மற்றவர்களுக்கு இலவசமாகத் தருவாரா? ஓர் எழுத்தாளர் பலவருட காலம் பாடுபட்டு உழைத்து ஒரு புத்தகத்தை வெளியிட்டால் ஏன் அதை எல்லோரும் இலவசமாகத் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்?

நான் எப்படி இலவசமாக புத்தகம் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கமாட்டேனோ அப்படியே என்னுடைய புத்தகத்தையும் இலவசமாக கொடுக்க விரும்பமாட்டேன். யாராவது எனக்கு ஒரு புத்தகத்தை தரவந்தால் நான் அதற்குரிய விலையை கொடுக்கவே முயற்சி செய்வேன். அது ஒரு மரியாதை என்றே நம்புகிறேன். இலவசமாக ஒரு நண்பருக்கு புத்தகம் கொடுத்தால் அவர் அதை எப்படியும் வாசிக்கப்போவதில்லை. உங்களை சந்தோசப்படுத்தவே அவர் புத்தகத்தை ஏற்கிறார் என்பது என் கருத்து.

எனக்கு அகில் சர்மாவின் ஞாபகம் வந்தது. அவர் பிரபலமான ஆங்கில எழுத்தாளர். சிறுகதைகள் எழுதி பல பரிசுகள் பெற்றவர். அவருடைய An Obedient Father நாவலை வாசித்த பிறகு ஒரு பத்திரிகைக்காக நான் அவரிடம் சில கேள்விகள் கேட்டேன். அப்போது அவர் சொன்ன பதில் என்னை ஆச்சரியப்படுத்தியது. அவர் முழுநேர எழுத்தாளராக அப்போது இல்லை. நியூயோர்க்கில் ஒரு பிரபலமான சட்ட நிறுவனத்தில் பணியாற்றினார். அவர் ஓர் எழுத்தாளர் என்பது அவருடன் வேலை பார்த்தவர்களுக்கு தெரியாது. அவருடைய நாவல் வெளிவந்தபோது பல பத்திரிகைகள் அதைப்பற்றி எழுதின. தொலைக்காட்சி அவரைப் பேட்டிகண்டது. அப்பொழுது அவருடன் வேலை செய்தவர்கள் அவரிடம் குறைபட்டுக்கொண்டார்கள். “நீங்கள் பெரிய எழுத்தாளராமே. எங்களுக்கு ஏன் சொல்லவில்லை. எனக்கு ஒரு நாவல்கூடத் தரவில்லையே”. அகில் சர்மா சொன்னார். “இவர்கள் வருடத்துக்கு ஒரு மில்லியன் டொலர்களுக்கு குறையாமல் சம்பாதிப்பவர்கள். என்னிடம் வந்து இருபது டொலர் நாவலை இலவசமாகத் தரவேண்டும் என்று குறைபட்டார்கள். உண்மையில் அவர்கள் நண்பர்கள் என்றால் எனக்கு மரியாதை செய்வதற்காக ஒரு நாவலை காசுகொடுத்து வாங்கி அதைப் படித்துவிட்டு அபிப்பிராயம் சொல்லவேண்டும். அவர்களுடைய நட்பு 20 டொலர் இலவச நாவலை தாண்டவில்லை.”

மைக்கேல் சீடன்பேர்க் என்பவர் ஒரு பழைய புத்தகக்கடை நடத்தினார். ஒரு நாள் ஒரு காதலனும் காதலியும் அவருடைய கடைக்குள் நுழைந்தார்கள். அரை மணி நேரமாக புத்தகங்களை பார்வையிட்டபிறகு காதலன் கேட்டான், “உனக்கு ஒரு புத்தகம் வேண்டுமா?” அவள் சொன்னாள், “இல்லையே, என்னிடம் ஏற்கனவே ஒரு புத்தகம் இருக்கிறது.” இளையவர்கள் புத்தகம் படிப்பதில்லை என்பதை நிறுவுவதற்காக மேற்படி உதாரணத்தை சீடன்பேர்க் அடிக்கடி கூறுவார். ஆனால் உண்மை எதிர் திசையில்தான் இருக்கிறது. காசு கொடுத்து புத்தகம் வாங்குவோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்று புள்ளி விவரங்கள் சொல்கின்றன. வட அமெரிக்காவில் ஒரு வருடத்தில் விற்கும் புத்தகங்களின் மதிப்பு 26 பில்லியன் டொலர்கள். சென்னை புத்தகச் சந்தையில் விற்பனையாகும் புத்தகங்களின் தொகையும் கணிசமான அளவில் கூடிக்கொண்டே வருகிறது. முன்பு எப்பொழுதும் கண்டிராதபடி புத்தகங்கள் தரத்துடன் நல்ல தாளில் கண்ணுக்கு இதமான அச்சில் வெளிவருகின்றன.

ஒன்றிரண்டு பேர் இலவச புத்தகங்களை நம்பியிருக்கலாம். ஆனால் புலம் பெயர்ந்த தமிழர்கள் காசு கொடுத்து புத்தகம் வாங்குவதற்கு தயங்குவதே இல்லை. யாழ்நூலகம் அழிந்து கிட்டத்தட 30 வருடங்கள் கழிந்த நிலையில் அவர்களுக்கு புத்தகங்கள் சேர்ப்பது முக்கியமானது. உலகத்தின் முதல் நூலகம் அலெக்சாந்திரியாவில் இருந்தது. சீசரின் எகிப்திய படையெடுப்பின்போது இந்த நூலகம் எரிந்து சாம்பலானது. இதுவே முதன்முதல் எரிக்கப்பட்ட நூலகம். அமெரிக்காவின் Library of Congress பிரிட்டிஷ் படையெடுப்பின்போது எரியூட்டப்பட்டது. ஆனால் உலகத்திலேயே ஓர் அரசு தன் சொந்த நாட்டு நூலகத்தையும் அதிலிருந்த 97,000 நூல்களையும் எரியிட்டு அழித்தது என்றால் அது இலங்கையில்தான் முதன்முதல் நடந்தது. இன்று அதே இடத்தில் எவ்வளவு பெரிய நூலகத்தை கட்டினாலும், எத்தனையாயிரம் புத்தகங்களை வாங்கி அடுக்கினாலும் அழிந்துபோன ஓர் ஓலைச்சுவடிக்கு அது ஈடாகாது. இது புலம் பெயர்ந்தவர்களுக்கு தெரியும். அந்த அநீதியை அவர்களால் மறக்கவும் முடியாது. தாம் சென்று வாழும் இடங்களில் சொந்தமாக புத்தகங்களை சேகரித்து அந்த இழப்பை ஓரளவுக்கு ஆற்றிக்கொள்கிறார்கள்.

நான் பள்ளியில் படித்த காலத்திலிருந்து எனக்கு ஒரு நண்பர் இருந்தார். பத்திரிகைகளில் வரும் முக்கியமான செய்திகளை எல்லாம் வெட்டி நறுக்குகளாக பாதுகாப்பார். மாத இதழ்கள், வார இதழ்கள், புத்தகங்கள் என்று தனியான அடுக்குகள் வைத்திருப்பார். அநேகமாக பழைய புத்தகக் கடைகளுக்கு போய் பழைய புத்தகங்களை வாங்குவார். நவீன இலக்கியங்கள் மொழிபெயர்ப்புகள் பழைய இலக்கியங்கள் என ஒன்றையும் தவறவிடமாட்டார். அவரிடம் ஒரு கொள்கை உண்டு. இருபது வயதுவரை கையிலே அகப்பட்டதை எல்லாம் படிக்கவேண்டும். இருபதிலிருந்து நாற்பதுவரை தேர்ந்த இலக்கியங்களையும், அறிவு நூல்களையும் படிக்க வேண்டும். அதற்கு பிறகு என்று கேட்டால் தொடர்ந்து மற்றவர்கள் எழுதுவதையே படித்துக்கொண்டிருந்தால் உங்கள் மூளை சிந்திக்கும் திறனை இழந்துவிடும். நாற்பது வயதுக்கு பிறகு நீங்கள் சிந்திப்பது அதிகமாகவும் வாசிப்பது குறைவாகவும் இருக்க வேண்டும் என்பார்.

புத்தகம் வாங்குவதிலும் அவரிடம் ஒரு நுட்பம் இருந்தது. ஒருவருக்கு நோபல் பரிசு கிடைக்கிறது. உடனேயே அவருடைய புத்தகம் உலகளாவிய ரீதியில் விற்பனையாகி உச்சத்தை தொடுகிறது. நோபல் பரிசுத் தேர்வில் இரண்டாவதாக ஒருத்தர் வந்திருப்பார். அவரை ஒருவருமே கவனிப்பதில்லை. அவர் பெயர்கூட வெளியே வராது. அவர் எழுதிய நூல் எவ்வளவுதான் உயர்ந்ததாக இருந்தாலும் அது கவனிக்கப்படாமல் போய்விடும் வாய்ப்பு உண்டு. புறநானூறு தொகுப்பில் 401வது பாடல் என்று ஒன்றிருந்திருக்கும். அது தொகுக்கப்படவில்லை. யார் கண்டது? அது உயர்ந்த கவிதையாக இருந்திருக்கலாம். எப்படியோ விடுபட்டுப்போய்விட்டது. புத்தகங்களை தேடும்போது விடுபட்டதையும் சேர்த்து தேடவேண்டும். பழைய புத்தகக் கடைகளில்தான் அபூர்வமாக விடுபட்ட புத்தகங்கள் கிடைக்கும் என்பது அவர் அடிக்கடி சொல்வது.

ஓர் உண்மைக் கதை. பழைய புத்தகம் ஒன்றை வாங்கிய என் நண்பர் ஒருவருக்கு வித்தியாசமான அனுபவம் கிடைத்தது. அவர் சில வருடங்களுக்கு முன்னர் ஓர் ஆங்கிலப் புத்தகத் தொகுப்பை வெளியிட்டார். விற்றது போக மீதமிருந்த புத்தகங்களை எல்லாம் தன் நண்பர்களுக்கு இலவசமாக விநியோகித்தார். யாருக்கு அன்று அவர் புத்தகம் இலவசமாகக் கொடுக்கப்போகிறார் என்ற விசயம் முன்கூட்டியே தெரியாததால் பொதுவாக “அன்பு நண்பருக்கு” என்று எழுதி கையெழுத்திட்டு எடுத்துப் போவார். நண்பர்களை கண்டதும் அதைக் கொடுப்பார். இப்படியே அவர் இலவசமாகக் கொடுத்து வந்ததில் ஒருநாள் திடீரென்று அவரிடமிருந்த கடைசிப் புத்தகத்தையும் கொடுத்துவிட்டார். ஏற்கனவே கையெழுத்துப் போட்டு கொடுத்த புத்தகத்தை நண்பரிடமிருந்து எப்படி திரும்பப் பெறுவது? ஒரு பழைய புத்தகக் கடையில் தேடிக்கொண்டு போனதில் தற்செயலாக அவர் பதிப்பித்த புத்தகம் அகப்பட்டது. அதை திறந்து பார்த்தவருக்கு ஒரே அதிர்ச்சி. அந்தப் புத்தகத்தில் “அன்பு நண்பருக்கு” என்று எழுதி இவருடைய கையொப்பமும் இருந்தது. யாரோ அன்பளிப்பாகப் பெற்ற அவருடைய புத்தகத்தை பழைய புத்தகக் கடையில் விற்றுக் காசாக்கிவிட்டார்கள். நான் கடைசியாக விசாரித்த அளவில் நண்பர் அந்தப் புத்தகத்தை விற்றவரை இன்னமும் தேடிக்கொண்டிருக்கிறார்.

சமீபத்தில் எனக்கு நேர்ந்த அனுபவத்தையும் சொல்லவேண்டும். அதைச் சொல்வதற்காகவே இதை எழுதத் தொடங்கினேன். கடந்த 60

96ம் பக்கம் பார்க்க...

இணையத்தளத்திலும் ‘தாய்வீடு’

www.thaiveedu.com

காதல் வாழ்க்கை - 23

# வருகின்றான் தலைவன் மணஞ்செய்ய!

- வி. கந்தவனம் -

காதலர் எப்பொழுதும் ஒன்றாகவே இருக்க விரும்புவர். அதுவே காதலுக்குச் சிறப்புமாகும். ஒன்றாக இருத்தல் என்பது முறையாகத் திருமணத்தை முடித்துக்கொண்டு குடும்பம் நடத்துதல்.


அவள் அவனைக் காதலிக்கத் தொடங்கி நாட்கள் பலவாகிவிட்டன. அந்த ஊரிலேயே அவனைப் போன்ற ஆண் அழகன் எவரும் இல்லை. அதனால் அவன் அழகிலே அவள் மயங்கியது வியப்பு ஒன்றும் இல்லை. அவனும் அவள் அழகைப் பலவாறு புகழ்ந்து பேசினான்.

தொடக்கத்திலே பெற்றோருக்குத் தெரியாமல் அவளைச் சந்திப்பதும் பேசுவதும் எல்லாம் பெரும் கிளுகிளுப்பை அவளுக்கு ஊட்டின. ஒவ்வொரு சந்திப்பும் இன்பகரமான புதுப்புது அனுபவங்களை அளித்தன.

காதல் வளர வளர அந்த அனுபவங்கள் சொந்தமாக வேண்டும் என்னும் எண்ணமும் வளர்ந்தது.

எத்தனை நாட்கள் சந்தித்தாலும் எவ்விதமாகப் பேசி மகிழ்ந்தாலும் சந்திப்பின் முடிவு பிரி-வைத்தானே தருகின்றது! அந்தப் பிரிவு நீ அங்கே, நான் இங்கே என்னும் உணர்வையே அவளுக்கு அளித்தது!

இனி அடுத்த சந்திப்பு எப்பொழுது நிகழும் என்னும் ஏக்கத்தில் எத்தனை நாட்கள்தான் வாழ்வது?



அதுமட்டுமல்ல. இவர்களின் இரகசிய உறவு பற்றி ஊர் மக்கள் சிலரும் அறிந்துவிட்டார்கள். அவர்கள் அப்படி இப்படி என்று கதைகளைக் கட்டிக் காற்றில் விடுவார்களேயானால் இவர்-களது காதல் மாசுபட்டுவிடும். அது பெற்ற-வருக்கும் கவலையைக் கொடுக்கும்.

ஊரவர் அயலர் தூற்றமுன் தலைவன் தன்னை மணந்துகொள்ள வேண்டும் என்று அவள் நினைத்தாள்.

அதற்கு ஒரே வழி அவனைக் காணாமல் வீட்டிலே இருத்தல்.

அவள் திட்டம் பலித்துவிட்டது. அவளைக் காணாமல் அவனால் இருக்க முடியவில்லை. தான் விரைந்து வந்து தலைவியை மணந்து கொள்வதாகத் தோழியிடம் உறுதி கூறினான் அவன்.

அந்த நல்ல செய்தியை ஓடோடி வந்து தலைவிக்கு இவ்விதம் தெரிவிக்கின்றாள் தோழி:

'மாரிக் காலத்திலே மலரும் பித்திகப் பூ கொய்வதற்கு அரிதானது. அதன் அரும்பு எழுச்சி பெற்ற மணம் நிறைந்தது. அத்தகைய அரும்பினது சிவந்த பின்புறத்தைப் போன்ற வளவிய செவ்வரி பரந்த குளிர்ந்த கண்க-ளையும் தளிரை ஒத்த மேனியையும் அழகிய மா நிறத்தையும் உடைய என் தோழியே!

'நாடு மழையின்றி வறட்சி கொள்ள, கலப்-பைகள் உழவின்றித் தூங்க, பசுமை கெட்டுப் போன நீண்ட கோடை காலத்திலே குன்றுக ளைப் போன்ற கரைகளையுடைய அகன்ற குளங்கள் வெப்பம் மிகுதியால் வரண்டு கிடந்தன. நீர் இல்லாமையால் பறைவை-களும் சென்று அங்கு தங்குவதில்லை.

'அத்தகைய குளங்கள் எல்லாம் நிறையும் வண்ணம் மழை பொழிந்தது. அந்தப் பெரும் மழை பொழிந்த இன்பம் நிறைந்த விடியற் காலத்திலே, பலபேரும் மகிழ்ந்த மகிழ்ச்சி எல்லாம் ஒன்றாக எனக்குள்ளே பெய்துவைத்தாற் போல இருக்கின்றது.

'ஏன் தெரியுமா?

'நெடுந் தூரத்தே ஓங்கித் தோன்றும் உயர்ந்த பக்க மலைகளையுடைய வானளாவிய மலைக்கு உரியவனான உன் தலைவன் உன்னை மணஞ்செய்ய விரைந்து வந்தனன்.'

*மலிபெயல் கலித்த மாரிப் பித்திகத்துக்*
*கொயல் அரு நிலைஇய பெயலேர் மணமுகைச்*
*செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்*
*தளிர் ஏர் மேனி மாஅ யோயே!*

*நாடு வறம் கூர, நாஞ்சில துஞ்சக்*
*கோடை நீடிய பைது அறு காலைக்*
*குன்று கண்டன்ன கோட்ட யாவையும்*
*சென்று சேக்கல்லாப் புள்ள உள் இல்*
*என்றூழ் வியன் குளம் நிறைய வீசிப்*
*பெரும் பெயல் பொழிந்த ஏம வைகறை,*
*பல்லோர் உவந்த உவகை எல்லாம்*
*என்னுள் பெய்தந் தற்றே – சேணிடை*
*ஓங்கித் தோன்றும் உயர்வரை*
*வான்தோய் வெற்பன் வந்த மாறே!*

*- அகநானூறு 42.*

மலிபெயல் - மிகுதியான மழை, கலித்த - தழைத்த, பித்திகம் - பிச்சி மலர், கொயல் அரு - கொய்தற்கு அரிதான, ஏர் மணம் - எழுச்சி மிக்க வாசனை, முகை - அரும்பு, செவ்வெரிந் துறழுங் கொழுங் கடை - சிவந்த கொழுந்து போன்ற பின் புறம், மா அ யோயே - மாமை நிறத்தை உடையவளே, நாஞ்சில் - கலப்பை, சேக்கல் - தங்கல், வந்த மாறு - மணம்புரிய வந்தபடி.

உனது குளிர்ந்த கண்ணும் தளிர் மேனியும் வேறுபட்டு விடாதவாறு தலைவர் விரைவாக உன்னை மணக்க வருகின்றார் என்பது இப்பாடலின் சுருக்கம்.

தலைவன் விரைவாக வருவேன் என்று சொன்னதை, தோழி வந்தனன் என்று இறந்த காலமாக்கிச் சொன்னது மகிழ்ச்சியாலும் உறு-திப்பாட்டாலுமெனக் கொள்ளுதல் வேண்டும்.



kandavanam.v@thaiveedu.com

# இலவசமாகக்கிடை...

95ம் பக்கத் தொடர்ச்சி...

வருடங்களாக எழுதிவரும் மிகப் பிரபலமான தமிழ் எழுத்தாளர் ஒருவருடைய புத்தகத்தை கடந்த வாரம் வாங்கினேன். அதில் ஓர் இடத்தில் எழுதியிருந்ததை படித்ததும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. "ஐந்தாறு ஆண்டு-களாகவே என்னால் பல விஷயங்களை நினைவுபடுத்திக் கொள்ளமுடியாமல் போவதை உணர்ந்திருக்கிறேன். என் குடும்பம்வரை இதை அவர்களும் உணர்ந்திருந்தாலும் என் நண்பர்கள் ஒத்துக் கொள்வதில்லை. ஒரு நாள் மாலை சுமார் அரைமணி நேரத்திற்கு என் வீட்டுக்கு செல்லும் வழி மறந்துவிட்டது. அதைவிட இன்னும் தீவிரமானது என் பெயர், முகவரி மறந்துவிட்டது. ஆனால் மொழி மறக்கவில்லை."

ஓர் எழுத்தாளர் அவர் பெயரை மறந்தால் நிலைமை என்னவாகும். அவர் வேறு பெயரில்-தான் எழுதவேண்டி வரும். அவருக்கு எழுத்து மூலம் கிடைக்க வேண்டிய பணம் எல்லாம் வேறு யாருக்கோ போகும். நல்ல காலமாக அந்த ஞாபகமறதி நீடிக்கவில்லை. அரை மணி நேரத்தில் எல்லாம் சரியாகிவிட்டது. அவர் பெயர் அசோகமித்திரன்.

நான் மதிக்கும் எழுத்தாளர்களில் இவரை மிகவும் உயர்ந்த இடத்தில் வைத்திருக்கிறேன். இவர் எழுதிய புத்தகங்களில் அநேகமானவற்-றை படித்திருக்கிறேன். நானும் ஜெயமோகனும் கடைசியாகச் சந்தித்தபோது அரைவாசி நேரம் இவரைப் பற்றியே பேசினோம். நான் எழுத்-தாளர்களின் கையெழுத்துகளைச் சேகரிப்ப-தில்லை. பல ஆங்கில தமிழ் எழுத்தாளர்க-ளைச் சந்தித்திருந்தாலும் அந்த எண்ணம் தோன்றியதில்லை. சிலநேரங்களில் சுந்தர ராமசாமி, வெங்கட் சாமிநாதன், ஜெயமோகன் போன்றவர்களைச் சந்தித்தபோது புத்தகங்-களில் அவர்களுடைய கையெழுத்துகளை பெற்றிருக்கலாமே என்று நினைத்ததுண்டு. அதிலும் அசோகமித்திரனின் கையெழுத்திட்ட புத்தகம் என்னிடம் ஒன்றுகூட இல்லையே என்று நினைத்து சமயத்தில் வருந்தியிருக்-கிறேன்.

நான் சமீபத்தில் வாங்கிய அசோகமித்திரனின் புத்தகத்தின் தலைப்பு "நினைவோடை." முதல் பக்கத்தை தற்செயலாகத் தட்டியபோது எனக் கொரு ஆச்சரியம் காத்திருந்தது. அதிலே இப்படி அழகான கையெழுத்தில் எழுதியி-ருந்தது.

*நண்பர் ராஜகோபாலுக்கு*
*மிக்க அன்புடன்*
*அசோகமித்திரன்*
*வேளச்சேரி, 27.2.2010.*

இந்தப் புத்தகம் எப்படியோ என் கைக்கு வந்து சேர்ந்துவிட்டது. கையெழுத்து வைத்தவரோ, அதைப் பெற்றவரோ, புத்தகத்தை எனக்கு விற்றவரோ செய்த தவறு என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. இந்தப் புத்தகத்தை என்ன வந்தாலும் நான் திருப்பிக் கொடுப்ப-தாயில்லை. புத்தகத்தில் குறிப்பிட்ட விலை-யிலும் பார்க்க எட்டு மடங்கு காசு கொடுத்து அதை நான் வாங்கியிருந்தேன். இன்னும் எட்டுமடங்கு யாராவது தருவதாய் இருந்தாலும் அது நடக்காது. இது எங்கே வரவேண்டு-மோ அங்கே வந்திருக்கிறது. புத்தகமும் கையெழுத்தும் என்னுடனேயே இருக்கும்.



muththulingam.a@thaiveedu.com

# Thinking of Buying or Selling!!

**KINGSTON & EGLINTON**




3+1 Bed Rooms, 3 Wash Rooms 6 Bedrooms Back Split House. Separate Entrance To Finished Basement Apartment Nice Layout. Potential Investment Income Property. Great Location. Quiet Neighbourhood. Mins. To 401,Scarborough Town Centre, Step To Park, Ttc, School & Amenities.

**WARDEN/FINCH**




3 Bed Rooms, 2 Wash Rooms Very Demand Area,Close To Schools, Hospital, Parks, Shopping, Ensuite Laundry, All Utilities Included In Rent. Just Walk To Finch/Warden.Very Clean Unit. Fridge, Stove, Washer & Dryer

**BIRCHMOUNT & ST.CLAIR**




3+1 Bed Rooms, 2 Wash Rooms Separate Entrance To Finished Basement Apartment Nice Layout. Potential Investment Income Property. Great Location. Quiet Neighbourhood. Mins. To 401,Scarborough Town Centre, Step To Park, Ttc, School & Amenities.

**SHEPPARD & BRIMLEY**





2+1 Bed Rooms, 2 Wash Rooms Spacious 2 Bedroom + Den Unit. Close To All Amenities, Ttc, Go Train, School, Shopping And Many More. Property Sold 'As Is' Buyer To Confirm All Measurements, Taxes And Maintenance Fees.

**KENNEDY/EGLINTON**




Spacious 2 Bedroom + Den Unit. Close To All Amenities, Ttc, Go Train, School,Shopping And Many More. Property Sold 'As Is' Buyer To Confirm All Measurements, Taxes And Maintenance Fees.

**BIRCHMOUNT/HUNTINGWD**




3+1 BR, 3WR, Large End Unit Well Maintain Townhouse In Desirable Location, Wood Floors, Throughout Upper Level, Walk To Schools Plaza, Golf Course And Ttc, Private Fenced Backyard With Beautiful View, Newly Painted.

**HUNTINGWOOD/MIDLAND**




3+1 BR, 3 WR Great Floor Plan, Hardwood Floor Throughout. Extra Sq. Ft. With Enclosed Front Porch. Kitchen Upgraded. Newer Roof & Garage Door. Close To Ttc, Walk To Elementary & Secondary Schools, Kitchen & Full Bath In The Basement

**WESTNEY/HWY #2**




4+1 Bed Rooms, 4 Wash Rooms. Gorgeous Hardwood Floors & Solid Oak Staircase.Great Location.Close To Shopping,Rec. Center,401 & Go Station Within Walking Distance To Schools And Parks.Nicely Finished Basement With Wet Bar,An Extra Bedroom And A4 Pc Bathroom.

**MCCOWAN/SHEPPARD**




3+3 Bed Rooms, 2 Wash Rooms 6 Bedrooms Back Split House. Separate Entrance To Finished Basement Apartment Nice Layout. Potential Investment Income Property. Great Location. Quiet Neighbourhood. Mins. To 401,Scarborough Town Centre, Step To Park, Ttc, School & Amenities.

**HURONTARIO/BARONDALE**




3+1 Bed Rooms, 4 Wash Rooms Bright Family Size Eat-In Kitchen W/ Breakfast Area! W/O From Living Room To Entertainer's Deck & Fenced Yard! Spacious Bedrooms & Closet, Incl Master W/2Pc Ensuite & Walk-In Closet! Close To Schools, Shopping, Transit, Highways & Conservation Area!

**KINGSTON/EGLINTON**




3+1 Bed Rooms, 3 Wash Rooms 6 Bedrooms Back Split House. Separate Entrance To Finished Basement Apartment Nice Layout. Potential Investment Income Property.Great Location. Quiet Neighbourhood. Mins. To 401,Scarborough Town Centre, Step To Park, Ttc, School & Amenities.

**BRIMLEY/STEELES**




4+1 Bed Rooms, 4 Wash Rooms Located In A Highly Demanded Area. Well Maintained, Clean House & Nice Curb Appeal To It. Renovated Kitchen Windows. Replaced All 2nd Floor Windows (2009). Roof Reshingled (2006). Upgraded 200 Amps Breaker Panel. Bsmt Will Provide Additional Income Potential.

* Sell your House for Top $$$$$ within shorter period
* Consistently Award Winners
* Top Negotiators
* Call us for Free Home Evaluation
* Buyers OR Sellers get Incentives
* We approach with correct marketing tools
* Friendly Service provided.



**HomeLife/Future Realty Inc.,**
Brokerage*
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
B: 905.201.9977 F: 905.201.9229

**Raja V.S. Rajagopal**
Sales Representative
**416.727.8647**

சகலவிதமான வீட்டுக்கடன் தேவைகளுக்கும்,
ஆலோசனைகளுக்கும்

Re-Financing / Debt Consolidation
Self Employed, New Immigrant, Pre Approval




printed in apex:416-297-0707

**Also Contact in Regards to Investing in Newly Built**
**HOMES - CONDOS - COMMERICAL**


மனம் விரும்பியது போல்
வீடு வாங்க, விற்க அழையுங்கள்
Wanless/Hurontario
For Sale
$449,900
Detached 2- Storey,
4+1 Bedrooms,
4 Washrooms
Warden/407
SOLD
$299,900
Condo Apt., 1+1 Bedrooms, 2 Washrooms
Veterans/Touchette (Barrie)
Sold
$279,000
Detached 2-Storey, 3 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$699,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$535,000
Detached Bangalow
The Gore/Ebenezer
Sold
$399,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/Ebenezer
Sold
$397,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/ Hwy 7
Sold
$1,100,000
Detached 2- Storey, 4+2 Bedrooms, 5 Washrooms
Brisdale/Sandalwood
Sold
$370,000
Detached 2-Storey
Bovaird/Worthington
Sold
$428,000
Detached 2-Storey
Cottrelle /Gore
Sold
$469,000
Detached 2-Storey
The Gore/Ebenezer
Sold
$680,000
Detached 2-Storey
Bellamy / Lawrence
Sold
$358,000
Detached Bungalow, 3+2 Bedrooms, 3 Washrooms
Markham Rd/14th Ave
Sold
$393,000
Link 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Markham/14th Ave
Sold
$421,000
Link 2 Storey, 3+2 Bedrooms, 4 Washrooms
Hwy 10/Bovaird
Sold
$272,750
Semi-Detached 2 Storey
Vankirk / Mayfield
Sold
$363,500
Detached 2-Storey
-digi Media-
நல்ல நிலையில் இயங்கிவரும்
Banquet Hall விற்பனைக்குண்டு.
Please call for more details.
Call before you list,
See the Difference!!!
TOP PRODUCER - 2009
Top 5% Sales Person in Canada 2009
HOMELIFE
HIGHER STANDARDS
Ruby Thambiah
Sales Representative
Dir: 416-999-5337
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S. பாலச்சந்திரன்*

## ஆழத்து முத்துக்கள் 36

# 'உங்களில் ஒருவன்' லோகேஸ்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

வானொலி அறிவிப்பாளர், மேடை நிகழ்ச்சித் தொகுப்பாளர், நடிகர், கர்நாடக பாடகர், நடன, மிருதங்கக் கலைஞர், மேடையலங்காரம், கையெழுத்துக்கலை, வர்ணம் தீட்டுதல் என்று சரஸ்வதியின் சகல கடாட்சமும் பெற்ற கலைஞன் தான் 'உங்களில் ஒருவன்' லோகேஷ் அவர்கள்.

அரியாலையில் 1940இல் சுப்பையா - சரஸ்வதி தம்பதிகளுக்குப் பிறந்த இவர், தன் தாய் சரஸ்வதியின் அருள் தனக்குப் பக்கபலமாக இருந்ததாகச் சொல்கிறார்.

இவர் பரமேஸ்வராக் கல்லூரியில் பயிலும் நாட்களில் இசை ஆசிரியர் இசைப்புலவர் என். சாண்முகரத்தினம் அவர்களிடம் இசை பயின்றார். இவரது பாடும் திறமையைக் கண்ட இவரது ஒன்றுவிட்ட சகோதரர் சங்கீதபூஷணம் பாலசிங்கம் அவர்கள் இவரை அச்சுவேலியூர் சங்கீத வித்துவான் எஸ்.எஸ். இரத்தினப்பிள்ளை அவர்களிடம் மேலதிக பயிற்சிக்காக அனுப்பினார். மேலும் இவரை ஒரு வித்துவான் ஆக்க சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்று, போவதற்கான ஒழுங்குகள் செய்த நிலையில் எதிர்பாராத ஒரு விபத்தில் - காசிப்பிள்ளை அரங்கில் இடம்பெறவிருந்த நாடகமொன்றுக்காக கச்சேரியடியிலுள்ள விதானை சண்முகராஜா வீட்டிலிருந்து ஹார்மோனியத்தைச் சைக்கிளில் கொண்டு வரும்போது ஏற்பட்ட விபத்தில் ஹார்மோனியம் இவரது தொண்டை நரம்புகளைப் தாக்கியதால் இவர் பாடும் திறனை இழந்துவிட்டார்.

ஒன்பது வயதாக இருக்கும் போது அப்போதைய பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலையின் வருகையையொட்டி சனசமூக நிலையங்களின் சமாஜம் நடாத்திய நிகழ்வில் கர்நாடக இசையிலான வரவேற்புப் பா பாடி பிரதமரால் வெள்ளிப் பதக்கம் சூட்டப்பட்ட இவரது சங்கீதக் கனவு துரதிஸ்டவசமாகச் சாத்தியமற்றுப் போனது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் இவரது இசைஞானத்தினை இன்னுமொரு பாதையில் வெளிக்கொணர சங்கீதபூஷணம் பாலசிங்கம் அவர்கள் அப்பொது யாழ்.திருநெல்வேலியில் தங்கியிருந்து நல்லூர் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் ஆசிரியராகக் கடமையாற்றிய, அகில இந்திய வானொலிக் கலைஞர் மிருதங்க வித்துவான் எஸ்.இராமநாதன் அவர்களிடம் இவரைச் சேர்ப்பித்தார். அவரிடம் சில வருடங்கள் முறையாக மிருதங்கத்தைப் பயின்றார்.

இதே காலகட்டத்தில் அப்போது நல்லூரில் இருந்த நடன ஆசிரியர் V. கைலாசம் அவர்களிடம் நடனக் கலையையும் கற்றார். அழகும், நடனத்துக்குரிய உடல்வாகும் கொண்ட லோகேஷ் அவர்களின் சிவத்தாண்டவம் அரங்கேற்றம், அரியாலை சுதேசிய விழாவில் ஸ்ரீபார்வதி வித்தியாசாலை அரங்கில் இடம் பெற்றது. இத்தாண்டவம் பின்னர் அரியாலையூர் சதானந்தன் போஸ் நடாத்திய களியாட்டு விழாக்களில் எல்லாம் நிகழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவரது கலைத்திறமைக்கு இன்னுமொரு வடிகாலாக அமைந்தது எமது மண்ணுக்குரிய நாடகக்கலை. சிறுவனாக இருக்கும் போதே நாடகங்களில் நடித்து தனது ஆற்றலை வெளிப்படுத்தினார். அரியாலை சனசமூக நிலையத்தின் 2வது ஆண்டு விழாவில் மேடையேறிய 'நளன் தமயந்தி' நாடகத்தில் மகனாக நடித்ததன் மூலம் நாடக உலகில் கால்பதித்துக் கொண்டார். இந்நாடகத்தில் சு. பாலசுந்தரம் நளனாகவும், சங்கீதபூஷணம் பாலசிங்கம் தமயந்தியாகவும் நடிந்திருந்தனர். அடுத்து அ.ச.ச இன் 3வது ஆண்டுவிழாவில் மேடையேறிய 'யயாதி' யில் யயாதி E.K. குமரைய்யாவின் மகனாகத் தோன்றினார்.

சிறுவனாக இவர் நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்த நாட்களில் அரியாலை நாடக



மன்றத்தின் 'உண்மையின் வெற்றி' என்ற நாடகம் ஸ்ரான்லிக் கல்லூரியில் மேடையேறிய போது மறக்கமுடியாத சம்பவம் இடம்பெற்றது. சிறுவர்களோடு சிறுவனாக இவர் ஆடிப்பாடும் காட்சியில் இவரது தனித்திறமையைக் கண்ட, நாடகத்துக்குத் தலைமை தாங்கிய பாக்குநீரிணையை நீந்திக் கடந்த சாதனைவீரர் மு. நவரத்தினசாமி அவர்கள் மேடைக்கு வந்து தான் அணிந்திருந்த மாலையைக் கழற்றி இவருக்குச் சூடினார். பெரும் கௌரவ நிகழ்வாக அன்று அது அமைந்துவிட்டது.

பின்னர் பரமேஸ்வராக் கல்லூரியில் பயிலும் நாட்களில் ஆசிரியர்கள் நடித்த வன்தொண்டன், களிங்கத்துப்பரணி ஆகிய நாடகங்களில் பெண்வேடங்கள் ஏற்றிருந்தார். இதுவே பின்னாளில் இவர் கதாநாயகி வேடங்களில் நடிக்க வழிகோலியது. அரியாலை நாடக மன்றம் மேடையேற்றிய மனோன்மணி, சத்தியவான் சாவித்திரி, ஸ்ரீவள்ளி, இளங்கோவன் துறவு, மனோகரா, ராஜா தேசிங்கு ஆகிய நாடகங்களில் பிரதான பெண் பாத்திரங்களில் தோன்றினார்.

தனது பெரியப்பா முறையான அண்ணாவியார் சபாபதிப்பிள்ளை அவர்களை இசை நாடகக் குருவாகக் குறிப்பிடும் லோகேஷ் அவர்கள் E.K. குமரைய்யா, சாண்டோ மாஸ்ரர், ஐயாத்துரை மாஸ்ரர், தோழர் ஸ்ரீ உதயணன், T. செல்வரத்தினம், விதானை சண்முகராஜா, பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ சுப்பிரமணியம் ஐயா, S.T அரசு ஆகியோரைத் தனது நாடக ஆசான்களாக நினைவு கூறுகிறார்.

அ.ச.ச நிலையத்தின் கலைக்காரியதரிசியாக இருந்த நாட்களில் தான் நிலையத்தில் காசிப்பிள்ளை அரங்கு கட்டப்பட்டதும், இதற்காக இவரும் எஸ்.எஸ். சண்முகநாதனும் சேர்ந்து வீடு வீடாகச் சென்று நிதி சேகரித்ததாகக் குறிப்பிடும் இவர் அ.ச.ச நிலையமே தனது சிந்தைக்கு விருந்தளித்த விசால பூமியெனக் கூறுகிறார்.

நாடக வாழ்வின் பின் நாட்களில் இவர் 'லோகேஷ் ஆர்ட்ஸ்' வழங்கும் நகைச்சுவை நாடகங்கள் என்று அதிலை வேலையில்லை, அட தாலியைக்கட்டு, அவள் பறந்து போனாளே, சீமைத்தம்பி, சோக்கான சோடி, மெஷின் என்று பல நாடகங்களை மேடையெற்றினார். அவை நகைச்சுவை நாடகங்களாக இருந்தாலும் அந்தந்த காலகட்டத்தில் நிகழ்ந்த சமுதாயச் சீர்கேடுகளையே மேடையில் கொண்டு வந்தார். 1995இல் லண்டன் பிரென்ற் நகர மண்டபத்தில் மேடையேற்றிய 'பிழைச்சல்லோ போச்சு' நகைச்சுவை நாடகமே இவரது இறுதி நாடகமாகும்.

நடிப்புத் துறையில் மட்டுமல்ல நாடக காட்சி அமைப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். சிலோன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் அதனது கலை நெறியாளர் வின்சென்றிடம் பணிபுரிந்ததும் இதற்குப் பின்னணியாக அமைந்தது. காசிப்பிள்ளை அரங்கில் மேடையேறிய சகுந்தலை நாடகத்தில் துஷியந்தனும் சகுந்தலையும் கடலில் வள்ளத்தில் செல்லும் அந்தத் தத்ரூபமான காட்சியும், கண்ணகி நாடகத்தின் இறுதிக் காட்சியில் மண்டபம் இடிந்து தீப்பற்றி எரியும் காட்சியும் இவரின் கைவண்ணத்தில் உருவான மறக்கமுடியாத காட்சிகளாகும்.

இன்றும் முத்துமுத்தாக எழுத்துக்களை எழுதும் இவர் யாழ். நகரின் பல கடைகளுக்கும், விழாக்களுக்கும் பெயர்கள், விளம்பர அட்டைகள் வரைந்துள்ளார். இவற்றுள் பூபாலசிங்கம் புத்தகசாலையின் மேலுள்ள நியூஸ் சென்டர் என்ற விளம்பரப் பலகை பிரசித்தமானது. பத்திரிகைச் செய்திகளை வெட்டி ஒட்டியது போல அச்சொட்டாக அதனை வரைந்திருந்தார்.

இதே போல் தனது வருமானத்துக்காக 'லோகேஷ் ஆர்ட்ஸ்' என்ற பெயரில் விழாக்களுக்கு ஒலிபெருக்கி அமைத்து வந்தார். இவரது அண்ணன் சாந்தம் அவர்கள் வீட்டில் கிராமபோன் மூலம் இசைத்தட்டுகள் கேட்பது வழக்கம். இதுவே இத்தொழிலுக்கு மூலமாக அமைந்தது.

இவ்வாறு கலையின் பல பரிமாணங்களையும் தொட்ட இவருக்குப் பேரும் புகழும் சேர்த்தது அறிவிப்புக் கலைதான். அறுபதுகளில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற கொழும்பு ஜெட் லைனர்ஸ் குழுவின் இசை நிகழ்ச்சியின் அறிவிப்பாளரின் திறமையைக் கண்டு தானும் அதேபோல் வரவேண்டும் என்ற ஆவல் தான் இவரை இக்கலைக்கு இட்டுச்சென்றது.

இதன் முதல் கட்டமாக நல்லூர் மண்டலேஸ்வரன் இசைக்குழுவில் அறிவிப்பாளராக அறிமுகமானார். பின்னர் யாழ்.நவீன சந்தையில் மக்கள் குரல் புனிதலிங்கத்தின் விளம்பர சேவை, சம்பத்தரிசியார் கல்லூரிக் களியாட்டு விழா, புகையிலைக் கூட்டுத்தாபன அறிவிப்புகள், இலங்கை லொத்தர் சபைக்காக "சியாக்" இசைக் குழுவினருடன் இணைந்து அறிவுப்புகள் என்று பல திசைகளில் பயணிக்கத் தொடங்கினார்.

யாழ்.கண்ணன் இசைக்குழுவினரின் நிகழ்ச்சித் தொகுப்பாளராக இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் வலம்வந்த லோகேஷ் அவர்களின் "அமுதும் தேனும்" நிகழ்ச்சித் தொகுப்பும், கலசம் பாலாவின் 'ஹரே ராமா ஹரே கிருஷ்னா' நிகழ்ச்சித் தொகுப்பும் பிரபல்யமானது.

அந்நாளில் இலங்கை வந்து தனது நாடகங்களைப் போட்டு வந்த தென்னிந்திய நகைச்சுவை நடிகர் தங்கவேலு குழுவினரின் விளம்பரங்களையும் இவரே செய்துவந்தார். இக்குழுவின் நாடகங்கள் நடைபெற்ற ஒரு நாளில்தான் லோகேஷின் தாயார் காலமானார்.

நடிகர் தங்கவேலு உட்பட அனைத்துக் கலைஞர்களும் அரியாலையிலுள்ள அவரது இல்லத்துக்கு வந்து தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து அஞ்சலி உரைகளையும் ஆற்றியது குறிப்பிடத்தக்கது.


1979இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை II இன் அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அங்கு இவர் முதன் முதல் ஒலிபரப்பிய "வரவேண்டும் வாழ்க்கையில் வசந்தம்" என்ற பாடல் போல் "உங்களில் ஒருவன்" லோகேஷின் கலைவாழ்வும் பிரகாசமானது. அதே காலத்தில் அப்போது பணிப்பாளராக இருந்த திருமதி பொன்மணி குலசிங்கம் அவர்களின் உதவியால் ரூபவாகினித் தொலைக்காட்சியின் கலைப்பிரிவிலும் சிலகாலம் கடமையாற்றினார்.

இவரின் கலைச் சேவையைப் பாராட்டி லண்டன் ஐ.பி.சி யின் 10வது ஆண்டு விழாவில் பழ.நெடுமாறன் அவர்களால் இவர் கௌரவிக்கப்பட்டார். மேலும் 2005இல் கனடா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினராலும், கோனேசின் வானொலி நிலையத்தினராலும், கனடாவாழ் அரியாலை மக்களாலும் கௌரவம் செய்யப்பட்டார்.

சந்தியபாமா என்பவரைக் காதல் திருமணம் செய்து கொண்ட இவர் தன் காதல் அனுபவங்களையும், கஷ்ட காலங்களில் எல்லாம் அவர் எவ்வாறு பக்கலமாக இருந்தார் என்பதை பெருமையுடன் இன்றும் சுவைபடக் கூறுகிறார்.

உபயோகிக்கும் சொல் வழக்கு, இனிமையாகப் பேசும் பாணி, குரல் வளம், உச்சரிப்பு என்று இவருடனான ஒரு தொலைபேசி உரையாடலே இவ்வளவு சுகந்தத்தைத் தரும் போது ஒலிவாங்கியூடாக வானலைகளில் மக்களை இவர் எப்படி வசீகரித்திருப்பார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் மேடையில் கட்டி அணைக்கப்பட்டு பாராட்டுப் பெற்ற சகலகலாவல்லவன் லோகேஷ் அவர்கள், கலையுலகில் தான் நினைத்த அனைத்தையும் சாதித்துவிட்ட ஆத்மதிருப்தியில் அவர் கலை வாழ்வு தொடர்கின்றது.



sriskandan@thaiveedu.com

## ஆழத்து முத்துக்கள் 37

# கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன்

**- சேகர் தம்பிராஜா -**

இன்றைய கல்வியியலாளர்களும், உளவியலாளர்களும் மாணவரது கல்வி வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும், சூழலும் பரம்பரை அலகுகளும் சமத்துவமான பங்களிப்பை செய்கின்றன என ஒப்புக் கொள்கின்றனர். சாதாரண மூளைத் திறன் பெற்ற ஒருவர் சூழலின் பங்களிப்பு காரணமாக பெரும் பயிற்சி அடிப்படையில் சாதனையாளனாக மிளிர்வது கண்கூடாக அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும்.

இன்று நாடக உலகில் பேசப்படும் விடயம் "கருவிலே திருவுடைய கலைஞர்கள் மூலமே படைப்புகள் உருவாக்கப்படலாம். பயிற்சியினால் விளைவது எல்லாம் இரண்டாம் பட்சமே. அவை இரண்டாந்தரப் படைப்புகளே" என்றெல்லாம் கூறப்படுகின்றது. உண்மை நிலை அதுவல்ல.

எந்த ஒரு கலைஞனும், படைப்பாளியும், நாடகவியலாலனும் தன் மன அரங்கிலேயே தமது காட்சியை, பாத்திரத்தினை சிருஷ்டிப்பார். அதற்கு வடிவம் கொடுப்பார். இது ஒரு இயல்பான நடவடிக்கையாக படைப்பாளியின் உணர்வோட்டத்துடன் இணைந்த ஒன்றாகிவிடும்.

சமூகம் சார்ந்த பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு விடை காணும் மன உலாவாக மாறுகிற போதே அது படைப்பாளிக்கும் மக்களுக்கும் பயன்படும் ஒன்றாக மாறும்.

இவ்வாறு கூறியவரும், தான் கூறியவாறு தனது கலை இலக்கிய பணிகளில் ஈடுபட்டு வருபவருமாகிய ஒரு நாடக கலைஞன் கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களின் பதிவாக இன்றைய ஆழத்து முத்துக்கள் பகுதி அமைகிறது.

ஒரு நாடகவியலானனைப் பொறுத்தவரையில் தன் மன உலாவில் கிடைக்கும் காட்சிப் படிமங்களைக் கண்டுகொள்வதுடன் காரியம் முடிந்து விடுவதில்லை. அவற்றை அரங்கிலே மனித உருக்களைக் கொண்டு உயிருள்ள காட்சிகளாக காட்சிப்படுத்துதலும், அக்காட்சிகளுக்கான விமர்சனங்களை அவ்வப்போது செய்தும் வந்திருக்கும் இவர், 'யாழ்ப்பான தமிழ் நாடக அரங்கு'(1997) எனும் விமர்சனக் கட்டுரை நூலையும் வெளியிட்டுள்ளார்.

தனது நாடகக் குருவின் மேல் இருந்த அபிமானம் காரணமாக 'நாடக வழக்கு' எனும் தலைப்பில் குழந்தை. ம. சண்முகலிங்கம் எழுதிய கட்டுரைகளை 2003ல் தொகுத்து வெளியிட்டுள்ள இவர், 'நாற்று மேடை' பத்தி எழுத்துகள் எனும் நூலையும் (2008) இலக்கிய உலகுக்கு தந்துள்ளார்.

இவரது 'நிதர்சனத்தின் புத்திரர்கள்' நாடக எழுத்துருக்கள் தொகுப்பு 2002இற்கான இலங்கை அரசின் சாகித்திய விருது மற்றும் வடக்கு கிழக்கு மாகாண இலக்கியபரிசில்களைப் பெற்றுக் கொண்டது.

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் பெற்ற ஆங்கில இலக்கிய அறிவும், பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்கள் அறிமுகப்படுத்திய சேக்ஸ்பியர், பேனாட்சோ, இப்சன், செக்கோவ், பிரெக்ட் ஆகிய மேலை நாட்டு நாடக இலக்கியங்களும் இவரது நாடக அரங்கு பற்றிய அறிவையும் அகலித்து ஆவலையும் தூண்டியது.

1985இல் ஈழத்து நாடக உலகிலும் அரசியலிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'மண் சுமந்த மேனியர்' நாடகம் மக்கள் மத்தியில் எவ்வளவு செல்வாக்கையும் செயல் தாக்கத்தையும் செலுத்தும் என்பதனை அறிந்து கொண்ட இவர். அந்நாடகத்தின் எழுத்துருவாளர் குழந்தை ம.சண்முகலிங்கம் மற்றும் நெறியாளர் க.சிதம்பரநாதன் மற்றும் நாடக அரங்க கல்லூரி நடிகர்களான ஜெனம் பிரான்சிஸ், இ.சிவானந்தன், ஏ.ரி.பொன்னுத்துரை, உருத்திரேஸ்வரன், ஜெயக்குமார், வி.எம்.குகராஜா, எஸ்.ரி.அரசு மற்றும் இசை அமைப்பாளர் கண்ணன் ஆகியோரது அணைப்பில் வளர்ந்தார். அத்துடன் யாழ்ப்பான நாடக உலகின் வரலாறு பற்றி அறிய இந்த உறவுகள் உதவியதாக கூறுகின்றார்.

இதன் தொடர்ச்சியாக இவர் பல்வேறு மட்டங்களில் பங்கெடுத்த நாடக பட்டறைகளும், வட இலங்கை சங்கீத சபை நாடகப் பரீட்சைகளும், யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர். கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி.மௌனகுரு, திரு.க.சிதம்பரநாதன், திரு.என்.சுந்தரலிங்கம், கலாநிதி சுரேஷ் கனகராஜா போன்றோரது நாடகம் சம்பந்தமான விரிவுரைகளும் தனது



அரங்கம் தொடர்பான பார்வையினை விசாலிக்க செய்ததாக கூறுகின்றார்.

90களின் ஆரம்ப பகுதியில் வவுனியா வளாக விரிவுரையாளராக நியமனம் பெற்று முதற்கொண்டு இன்று வரையும் வளாக கலை கலாசார மன்றத்தின் வழிகாட்டியாக இருந்து வரும் இவர். வளாகத்திலே குழந்தை ம.சன்முகலிங்கத்தின் எந்தையும் தாயும், தாயுமாகி நாயுமானார், உறவுகள் போன்ற நாடகங்களுடன் மேலும் பல நாடகங்களை நெறியாள்கை செய்துள்ளார்.

நல்ல நடிகர்களை உருவாக்குவதாயின் நாடகப் பயிற்சி ஒன்றின் மூலம்தான் முடியும் என்பதை முழுமையாக நம்பும் இவர் சர்வதேச அடிமைகள்' என்னும் நாடகத்தை நாடக பயிற்சி பட்டறை மூலம் தயாரித்து நெறியாள்கை செய்திருந்தார். அது போலவே 'நிதர்சனத்தின் புத்திரர்கள்' (தேசிய சாகித்திய மண்டல பரிசு பெற்றது) எனும் மேடை நாடகத்தினையும் வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்காக தயாரித்து நெறியாள்கை செய்திருந்தார்.

எண்பதுகளின் ஆரம்பம் முதல் இணுவில் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தில் உறுப்பினராக இருந்து கொண்டு நல்ல பயனுள்ள பல கருத்து பரிமாற்றங்களை செய்து வந்த ஸ்ரீகணேசன் அவர்கள் 1997ஆம் ஆண்டு மாசி மாதம் தொடக்கம் வவுனியாவிலும் பல இலக்கிய நண்பர்களை இணைத்து 'வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்' எனும் அமைப்பை உருவாக்கி இற்றை வரைக்கும் மாதமொரு முறை கலை இலக்கியக் கருத்தாடல்களை செய்து வருபவர்களில் ஒருவராக விளங்குகிறார்.

ஆரம்ப கல்வியினை இணுவிலிலும், சுதுமலையிலும் மற்றும் இடைநிலை உயர்தரக் கல்வியினை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றுக்கொண்ட இவர் அங்கு அப்பொழுது அதிபராக இருந்த திரு.பேராயிரவர் அவர்களின் சிந்தனை கிளறல்களால் ஈர்க்கப்பட்டார்.

மக்கள் மனங்களை ஆற்றுப்படுத்தி அவர்தம் பிற்போக்குத்தன்மைகளை மாற்ற வேண்டிய கடப்பாடு உண்டு. அதற்கு பல்வேறுபட்ட அம்சங்களோடு போதியளவு பயிற்சி என்பது நாடகவியலாளனுக்கு தேவை. அவ்வாறு பயிற்சிகள் அமைந்தால் தான் ஒரு உன்னதமான படைப்பை நாடக நுகர்வோருக்கு வழங்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு அதன்படி பல நாடக பயிற்சிக் களங்களை உருவாக்கி அதன் மூலம் நாடக அளிக்கை செய்து வருபவர். வவுனியா வளாகத்தில் ஆங்கில விரிவுரையாளராக இருக்கும் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள்.

எண்பதுகளில் யாழ்ப்பான தமிழ் நாடக அரங்கை 'நாடக அரங்கக் கல்லூரி' புதிய பாணியில் ஆற்றுப்படுத்திக் கட்டமைத்து வளர்ந்த போது அதன் ஒரு உறுப்பினராக 1986முதல் செயலாற்றியவர்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினவிழா நாடக விழாக்களும், திறந்த வெளியில் பங்கு கொண்ட சாரணர் பாசறை தீ ஆற்றுகை நிகழ்வுகளும் ஆரம்ப கலை உலக பின்னணியாக அமைந்திருந்த இவருக்கு, இணுவில் சிவகாமி அம்மன் கோவில் வீதியில் ஊரவர் நிகழ்த்திய 'வள்ளி திருமணம்' வைரமுத்துவின் 'மயான காண்டம்' என்பன இவர்பால் இருந்த நாடக ஈர்ப்பை மேலும் கூட்டியது. பண்டார வன்னியன் நாடகத்தில் யுவெல் துரையாக வேடமேற்ற ஆரம்ப பள்ளிப் பராயத்து நாடக முயற்சிகளும் இவரது நாடகத் தாகத்தை அதிகரிக்கச் செய்ததாக தனது குறிப்பொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேடை நாடகத்திற்கு குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களையும், கூத்துக்கலைக்கு பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களையும் தனது குருவாக இன்றும் மதித்து வருகின்றார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தனது கல்வியுலகிலும் சரி இலக்கிய கலை முயற்சிகளிலும் சரி இவற்றுக்கெல்லாம் அத்திவாரமிட்டு ஆற்றுப்படுத்தியது தனது தந்தையாரான புராணபடன வித்தகர் திரு.செல்லையா கந்தையா தான் என்று பெருமிதம் கொள்ளும் இவர் தனது நாடக முயற்சிகளுக்கெல்லாம் ஆக்கபூர்வமான விமர்சனங்களைத் தந்து தன்னை ஊக்கப்படுத்தும் தனது சகோதரனும் நாடகருமாகிய திரு.கந்தையா ஸ்ரீகந்தவேள் அவர்களையும் நினைவுபடுத்துகிறார்.

ஆங்கில நாடகங்களை இயக்கி பழக்கும் முயற்சிகளில் பாடசாலை ஆசிரியராக எண்பதுகளின் நடுப்பகுதியில் பூநகரி வேரவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் ஈடுபடத் தொடங்கிய ஸ்ரீகணேசன் அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் 1990களில் ஆங்கில போதனாசிரியராக இருந்த வேளையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவர்களுக்காக தயாரித்த இரு நாடகங்கள் அவரது நாடக ஆற்றலை பறை சாற்றி நின்றன என்றால் மிகையாகாது.

'தலையில்லாத சிறுவன்' (The Boy Without a Head) எனும் சிறுவர் நாடகத்தையும், ஷேக்ஸ்பியரின் 'ஜூலியஸ் சீசர்' நாடகத்தையும் 'சுதேச மயப்படுத்தல்' எனும் சிந்தனை நாட்டத்தில் இயக்கியிருந்தார்.

பின்னாளில் வவுனியாவில் வவுனியா வளாகத்தில், பட்டதாரி மாணவர்களுக்கு ஆங்கில நாடகங்களைப் பழக்கி மேடையேற்றினார். அத்துடன் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா தமிழ் மத்தியமகாவித்தியாலயம், பண்டாரிகுளம் விபுலாநந்த வித்தியாலயம், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, புதுக்குளம் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளின் பிள்ளைகளுக்கு சேக்ஸ்பியர் உட்பட பல்வேறு நாடக ஆசிரியர்களின் நாடகங்களைப் பழக்கி வந்துள்ளார்.

இப்படியான தமிழ் ஆங்கில நாடகங்கள் பழக்கும் ஆற்றலும் நாடகக்கலை பயிற்சி நடாத்தும் ஆற்றலும் கைவரப்பெற்ற நிலையில் தனது கலாநிதிப்பட்டப்படிப்பின் ஆய்வுக்காக 'ஆங்கில வகுப்பறையில் மொழித்திறன் விருத்திக்கு அரங்கின் பயன்பாடு - ஒரு இலங்கை பரிசோதனை' எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ளார்.

இலங்கையில் ஆங்கில இலக்கிய முயற்சிகளில் ஈடுபடும் ஐயாத்துரை சாந்தனின் மூன்று சிறுகதைதொகுப்புகள், ஒரு கவிதைத் தொகுப்பு என்பன பற்றி வெளிவந்த பல்வேறு விமர்சனங்களை தொகுத்து Santhan's World in a Flash (2008) எனும் நூலையும் மாணவர்களின் அரங்கப்பட்டறையின் உருவாக சிறிய ஆங்கில நாடகப் பிரதிகளைத் தொகுத்து 'Classroom Theatre Scripts' (2006) எனும் நூலையும், தான் பழக்கிய மூன்று நாடகங்களைத் தொகுத்து 'Try a little kindness - a collection of Plays' (2010) எனும் நாடக நூலையும் தொகுத்து வெளியிட்டுள்ளார். தொடரும் அவரது முயற்சியில் நாடகப் பட்டறைகள் ஊடாக ஆங்கில பேச்சு மொழிப் பயிற்சியிலும் மாணவர்களை ஆற்றுப்படுத்துகிறார்.

1989 முதல் 2009வரையான 20 ஆண்டு காலத்தில் கவிதைகள் நாடகங்கள், கல்வி, இலக்கிய நூல்கள் நிகழ்வுகள், இசை, கூத்து, குறும்படம், மொழிபெயர்ப்பு, ஈழத்து ஆங்கில இலக்கியம், என பல்வேறு கலை இலக்கிய வகைகளையும் தன் விமர்சனக் கண்கொண்டு பார்த்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு ஒன்றையும், 'ஈழத்து கலை இலக்கிய உலகு' எனும் தலைப்பில் ஒரு நூலாக அண்மையில் (2010 ஜுலை) வெளியிட்டுள்ளார். இதன் மூலம் ஒரு காத்திரமான கலை இலக்கிய விமர்சகராக தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

இவற்றோடு கூட தொகுப்பு முயற்சியிலும் இறங்கிய ஸ்ரீகணேசன் பேராசிரியர். சு.சுசீந்திரராசா அவர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 'ஈழத்துப் பண்டிதமணி'(2002) எனும் நூலையும் குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய நாடகக்கட்டுரைகளைத் தொகுத்து 'நாடகவழக்கு' (2003) எனும் நூலையும், தமிழ்மணி அகளங்களுடன் இணைந்து வன்னியூர்க் கவிராயரின் கவிதைகள், சிறுகதைகளைத் தொகுத்து 'அமுதகங்கை' (2004) எனும் நூலையும் வெளியிட்டுள்ளார். அத்துடன் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் வெளியீடான 'மாருதம்' சஞ்சிகை மற்றும் வவுனியா ஆங்கில மன்ற வெளியீடான 'Oasis'சஞ்சிகைகளின் இணையாசிரியராகவும் இயங்கி வருகின்றமை அவரது செயற்பாட்டு தளத்தின் பரப்பை சுட்டி நிற்கின்றது.

சமீபகாலமாக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் நூல்வெளியீடுகளிலும், தேசிய கல்வியியல் கல்லூரி விழாக்களிலும், வலயக்கல்வித் திணைக்கள பட்டறைகளிலும் கலை இலக்கிய உள்ளங்களை ஈர்த்து வரும் கந்தையா ஸ்ரீகணேசன் தனது ஆங்கிலப் புலமையுடன் கூடிய தமிழ் அறிவை தமிழ் மக்களின் கலை இலக்கிய செழுமைக்கு மேலும் வீறுடன் பயன்படுத்தவேண்டும் என்று கலை இலக்கிய உள்ளங்கள் ஆவல் கொண்டுள்ளனர்.



sekar.thambyrajah@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■



ஒரே நேரத்தில் இரண்டு கலைவிழாக்கள் ஒழுங்கு செய்யப்படுவதைத் தவிர்க்க உங்கள் கலை விழாக்களை முன்கூட்டியே ‘இணையம்’ இணையத் தளத்தில் பதிவு செய்து விடுங்கள். உங்கள் விழாவின் திகதியைத் தீர்மானிப்பதற்கு முன்பு இணையத்தைப் பார்த்து அந்தத் திகதியில் வேறு நிகழ்ச்சிகள் ஏதும் உள்ளதா என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் செல்லவிருக்கும் விழா, நிகழ்வுகள் சம்பந்தமான தகவல்களை இணையத்தைப் பார்த்து அறிவதுடன், நிகழ்வு நடைபெறும் இடத்தின் வரைபடத்தையும் இணையத்தில் பார்க்கமுடியும். இது முற்றிலும் இலவசமான சேவை.

# www.inayam.net

T. 416 400 6 406 • F. 416 849 0594

www.inayam.net, info@inayam.net

PO Box: 63581, Woodside Square, 1571 Sandhurst Circle, Toronto, ON, M1V 1V0

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**

GTA Realty Inc., brokerage

206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS

Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

**Baskaran Sinnadurai**

Commercial & Residential Sales Representative

**416-880-8585**





**Asking 2.5million**

Well Maintained Corner Location In Downtown Lindsay, All Brick With 20 Apartments And 5 Main Floor Comm/Retail Tenants





**1.3 million**

Space Banquet hall ,coin laundry and 7 office units, Scarborough



**Asking 370,000**

Restaurant space with zoning New Delhi Dr ,markham




**Asking 229,000**

Restaurant in rockwood 50,000 monthly sales

# உங்களுக்கு உகந்த ஆயுட்காப்புறுதி



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -


உங்களிடம் உள்ள ஆயுட்காப்புறுதி உங்களுக்கு உகந்ததா என்பதை நீங்கள் அறிந்து கொள்வது எப்படி?

ஆயுட்காப்புறுதித் திட்டத்தினை வைத்திருக்கும் அனைவருமே தங்களிடம் இருக்கும் ஆயுட் காப்புறுதி திட்டம் சிறந்தது என்று எண்ணுவது வழமை. ஆனால் அந்தக் காப்புறுதித்திட்டமானது அவரின் தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய திட்டமா? என்பதையும் அவரின் நீண்டகாலத் தேவைகளையும் பாதுகாக்குமா என்பதையும் காலத்துக்குக் காலம் பரிசீலனை செய்வது அவசியம். ஆயுட் காப்புறுதித் திட்டம் என்பது ஒரு ஆயுட் காப்புறுதி நிறுவனத்திற்கும் காப்புறுதி பெற்றவருக்கு இடையிலான ஒரு ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆயுட் காப்புறுதி பெற்றுக் கொண்டவர் மாதந்தம் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தவனையில் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை காப்புறுதி நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு சம்மதிக்கின்றார். இந்தப்பணத்தை மாதாந்த அல்லது வருடாந்தக் கட்டணம் (Insurance Premium) என அழைப்பார்கள். அதே வேளை காப்புறுதி நிறுவனம், காப்புறுதி பெற்றுக் கொண்டவர் மரணம் அடைந்ததும் காப்புறுதித் தொகையை அவரின் பலன் பெறுபவராகக் குறிப்பிட்ட நபருக்கு வழங்கும்(Beneficiary). காப்புறுதியின் பலன் பெறுபவரை Beneficiary என அழைப்பார்கள்.

ஒரு காப்புறுதித் திட்டத்தில் 4 முக்கியமானவர்கள் இடம் பெறுவார்கள்.

- காப்புறுதி நிறுவனம் (Insurer).
- காப்புறுதித் திட்டத்தின் உரிமையாளர் (Policy Owner).
- ஆயுட் காப்புறுதி செய்யப்பட்டவர் (Life Insured).
- பலன் பெறுபவர் (Beneficiary).

காப்புறுதித் திட்டத்தின் உரிமையாளரும் ஆயுட் காப்புறுதி செய்யப்படுபவரும் ஒரே நபராகவும் இருக்கலாம் அல்லது வேறு வேறு நபர்களாகவும் இருக்கலாம். ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி காப்புறுதி செய்யும் போது ஒருவர் காப்புறுதி உரிமையாளராகவும் அடுத்தவர் ஆயுட் காப்புறுதி மட்டும் பெற்றவராகவும் இருக்கமுடியும். எந்தச் சந்தர்ப்பத்திலும் காப்புறுதி உரிமையாளர் மட்டுமே காப்புறுதித் திட்டத்தில் மாற்றங்களைச் செய்ய முடியும். அதாவது காப்புறுதியின் பலன் பெறுபவரைத் தீர்மானித்தல், ஆயுட் காப்புறுதி செய்யப்படும் தொகையினைத் தீர்மானித்தல், மாதக் கட்டணம் செலுத்தும் முறை தொடர் பான சகல விடயங்களையும் தீர்மானித்தல் என்பதனைக் கூறலாம்.

கணவன், மனைவி இருவரும் காப்புறுதித் திட்டம் பெறும்போது கணவன் மட்டும் காப்புறுதி உரிமையாளராக இருந்தால் (Policy Owner) அவர் இறந்த பின்பு மனைவி உரிமையாளராக வரமுடியும். அதற்கு அந்த காப்புறுதித் திட்டத்தில் மனைவியின் பெயர் (Contingent Policy Owner)ஆக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். Contingent Policy Owner என்பது முதலாவது காப்புறுதி உரிமையாளர் இல்லாத இடத்தில் இரண்டாவது நபர் காப்புறுதி உரி மையாளராக வருவதனைக் குறிக்கும்.

கணவன் மனைவி இருவரும் ஒரே திட்டத்தில் காப்புறுதி செய்யும் போது இரண்டாவது காப்புறுதி உரிமையாளராக ஒருவரின் பெயரை நியமிப்பது அவசியம். பயன் பெறுபவர்களாக ஒன்றுக்கு மேற்பட்டவர்களும் இருக்கலாம். விரும்பியபடி எல்லோருக்கும் சமமாகப் பிரித்தும் கொடுக்கலாம். கணவன் மனைவி இருவரும் ஒரு காப்புறுதித் திட்டத்தில் மூன்று விதமான காப்புறுதி திட்டங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

- தனித்தனியான திட்டங்கள் (Individual Policy).
- Joint First To Die - இருவருக்கும் சேர்த்து ஒரு காப்புறுதி. ஆனால் முதலில் இறப்பவருக்கு மட்டும் பணம் கிடைக்கும் திட்டம்.
- Joint Last To Die - இருவருக்கும் சேர்த்து ஒரு காப்புறுதி ஆனால் இரண்டாவதாக இறப்பவருக்கு மட்டும் பணம் கிடைக்கும் திட்டம்.

> “ ஆயுட்காப்புறுதித் திட்டத்தினை வைத்திருப்போர், உங்களின் தற்போதைய தேவையினை இத்திட்டம் பூர்த்திசெய்யுமா என்பதை காலத்துக்குக் காலம் பரிசீலனை செய்வது அவசியம். ”

### Individual Policy:

இந்த மூன்று திட்டங்களும் எல்லா காப்புறுதி நிறுவனங்களிலும் வழங்கப்படுகின்றது. இவற்றில் (Individual Policy) என அழைக்கப்படும் தனித்துவமான திட்டம் அதிகமாக வழங்கப் படுவது காணப்படுகின்றது. அதாவது கணவன் மனைவி இருவரும் தனித்தனியே ஒரு தொகைப் பணத்திற்கு காப்புறுதி செய்தல். இதில் இரு வரில் எவர் இறந்தாலும் அவர்களின் காப்புறுதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பலன் பெறும் நபருக்கு காப்புறுதிப் பணம் கிடைக்கும்.

அதாவது முதலாவது காப்புறுதி செய்யப்பட்ட நபர் இறந்தவுடன் அவரின் காப்புறுதித் திட்டத்தில் குறிப்பிடப்படுள்ள பலன் பெறும் நபருக்குக் காப்புறுதிப் பணம் கிடைக்கும் பின்பு இரண்டாவதாக காப்புறுதி செய்யப்பட்ட நபர் தொடர்ந்து அவரின் காப்புறுதிக்கான மாதந்தக் கட்டணத்தை மட்டும் செலுத்த வேண்டும். இரண்டாவது காப்புறுதி செய்யப் பட்ட நபர் இறந்தவுடன் அவரின் காப்புறுதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பலன் பெறுபவருக்கு அக் காப்புறுதிப்பணம் கிடைக்கும். எனவே காப்புறுதித் திட்டத்தின் பலன் பெறுபவரின் பெயரினைத் தீர்மானிக்கும் போது எவர் முதலாவது பலன் பெறுபவர் (First Beneficiary) என்பதனையும் பின்பு எவர் இரண்டாவது பலன் பெறுபவர் (Contingent (Beneficiary) என்பதையும் தீர்மானிக்க வேண்டும்.

### Joint First To Die:

இந்தக் காப்புறுதித் திட்டம் கணவன் மனைவி இருவருக்கும் சேர்ந்து ஒரு திட்டம். இதில் முதலாவது நபர் இறந்தவுடன் காப்புறுதித் தொகை முழுவதும் மற்றய நபருக்கு வழங்கப்படும் பின்பு இரண்டாவது நபருக்கு காப்புறுதி இல்லை. பின்பு இரண்டாவது நபர் காப்புறுதி செய்ய விரும்பினால் புதிதாக ஒரு திட்டம் பெற வேண்டும் அல்லது அதே திட்டத்தை ஒருவருக்கு தொடரலாம். மாதாந்தக் கட்டணம் மாறுபடும். இருவரும் விபத்தில் ஒரே நேரத்தில் அல்லது ஒருவர் இறந்து 30 நாட்களுக்குள் அடுத்தவரும் இறக்க நேரிட்டால் காப்புறுதிப் பணம் இரட்டிப்பாக வழங்கப்படும்.

இப்படியான Joint First To Die காப்புறுதித் திட்டம் அடமானக் கடன் காப்புறுதிக்கு (Mortgage Insurance) வழங்கப்படுவது வழக்கம். அதாவது கணவன் மனைவி யாராவது ஒருவர் இறந்தால் அத்துடன் (Mortgage) அடமானக் கடன் கட்டவேண்டியதில்லை அல்லது பிள்ளைகள் இல்லாத கணவன் மனைவி இப்படியான திட்டங்களே பெற்றுக் கொள்ளுவது சிறந்தது. ஒரே காப்புறுதித் திட்டத்தில் கணவன், மனைவி பிள்ளைகள் எல்லோரும் தனித்தனியான காப்புறுதித் திட்டங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். இப்படிச் செய்வதனால் காப்புறுதிக் கான மாதாந்தக் கட்டணத்தை சேமிக்க முடியும் (Policy Fees).

### Joint Last To Die:

இந்தத்திட்டம் இருவருக்கும் சேர்ந்து ஒரு காப்புறுதி இதில் முதலாவது நபர் இறந்தவுடன் பணம் கிடைக்காது. இரண்டாவது நபரும் இறந்த பின்பு பலன் பெறுபவருக்கு பணம் கிடைக்கும். இப்படியான காப்புறுதி வயதான பெற்றோர்களுக்கு உகந்தது. காரணம் இந்தத் திட்டத்திற்கான மாதாந்தக் கட்டணம் குறைவாக இருக்கும் அதே வேளையில் ஒருவர் மிகவும் ஆரோக்கியமானவராகவும் அடுத்தவர் காப்புறுதி பெறமுடியாத நிலையில் இருந்தாலும் இந்தத் திட்டம் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே வயதான பெற்றோர்கள் இருவரும் இறந்த பின்பு பிள்ளைகளுக்கு பணம் கிடைப்பதற்காக இந்தத் திட்டத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

காப்புறுதித்திட்டம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கும் அல்லது இருக்கும் திட்டத்தை சரியானதா என்று அறிந்து கொள்ளவதற்கும் மற்றும் இந்தத் திட்டங்கள் ஒவ்வொருவருக்கும் உகந்ததா? என்பதை அறிந்து கொள்ளவதற்கும் முக்கியமாகக் கவனிக்கபட வேண்டிய விடயங்கள்:-

- மாதாந்தக் கட்டணம்.
- காப்புறுதித் திட்டத்தின் அமைப்பு.
- காப்புறுதியின் தொகை.

### மாதாந்தக் கட்டணம்:

ஒரு காப்புறுதித் திட்டத்திற்கான மாதாந்தக் கட்டணம் உங்களால் நீண்ட காலத்துக்கு செலுத்தக் கூடியதாகவும் தற்பேதைய பொருளாதார அல்லது உங்கள் மாத வருமானத்திற்குள் கட்டுப்பட்டதாகவும் இருக்க வேண்டும். எனவே ஒருவர் எவ்வளவு பணம் காப்புறுதிக்காக மாதாந்தம் செலவு செய்ய முடியும் என்பதை கருத்தில் கொண்டு அதற்கு ஏற்ற வாறு காப்புறுதித் திட்டத்தை தெரிவு செய்ய வேண்டும். காரணம் சிலர் அதிகமான தொகைக்கு காப்புறுதி பெற்றுக் கொண்டு மாதாந்தம் பணம் கட்டமுடியாமால் மிகவும் கஷ்டப்பட்டு சிறிது காலங்கள் கட்டிய பின்பு பணம் செலுத்த முடியாமல் காப்புறுதியை இரத்து செய்தால் இவ்வளவு காலமும் கட்டிய பணம் விரயமாகும். பின்பு வயது கூடினால் காப்புறுதி பெறுவதற்கான மாதாந்தக் கட்டுப் பணம் அதிகரிக்கும் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டால் பின்பு காப்புறுதி பெற முடி யாத நிலை ஏற்படும். எனவே வயது குறை வாக இருக்கும் போது கூடிய தொகைகு குறைந்த மாதாந்தக் கட்டணத்தில் காப்புறுதி பெறுவது அவசியம்.

ஒரு காப்புறுதித் திட்டமானது ஒரு குடும்பத்தின் பொருளாதார அல்லது நிதி பாதுகாப்பிற்கு மிகவும் உகந்த பாதுகாப்புத் திட்டம் என்று கூறலாம். காரணம் ஒருவரின் சொத்துக்கள், பணம் எல்லாவற்றையும் ஒரு குடும்பம் இழக்க நேரிடலாம். ஆனால் ஒருவரின் காப்புறுதித் திட்டமானது ஒருவர் இறந்த பின்பு அந்தக் குடும்பத்தின் பொருளாதாரத்திற்கு பாதுகாப்பு வழங்கும் (Financial Security) அதே சமயத்தில் காப்புறுதித் திட்டம் ஒரு சேமிப்புத் திட்டமாகவும் செயல்படும். காரணம், ஒருவர் பணத்தை வங்கியில் அல்லது வேறு விதமாக சேமித்தால் அதை அவர் இறப்பிற்கு முன்பு செலவு செய்ய நேரிடலாம்.

ஆனால் காப்புறுதித் திட்டத்திற்கு செலுத்தும் பணம் அவரின் குடும்பத்திற்கு கிடைக்கும் பெரிய சேமிப்புத் திட்டமாகும். ஒவ்வொருவரும் சரியான காப்புறுதித் திட்டங்களை தெரிவு செய்வதன் மூலம் பல நன்மைகள் பெறமுடியும்.

### பொதுவாக வழங்கப்படும் அடிப் படையான ஆயுட் காப்புறுதித் திட்டங்கள்:

- ஆயுட் காலம் வரை நீடிக்கும் நிரத்தரமான ஆயுட்காப்புறுதி (Whole Life Insurance or Permanent Life Insurance).
- குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மட்டும் வழங் கப்படும் ஆயுட் காப்புறுதி (Term Life Insurance).
- சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி மாற்றக் கூடிய திட்டங்களாகும் (Universal Life Insurance).


sritharan.t@thaiveedu.com

■ ■ ■


இறுக்கமான சூழலில் இ ல கு வா ன தீர்வு

• நிரந்தர ஆயுட் காப்புறுதி
• கொடிய நோய்களுக்கான காப்புறுதி
• ஈட்டுக்கடன் காப்புறுதி
• வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறதி
• RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life™

# நீங்கள் அதிஷ்டசாலி

## கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி

## நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

- கொடிய நோய்களால் ஏற்படும் வருமான இழப்பை தவிர்ப்பதற்கான காப்புறுதி.
- புற்றுநோய் (Cancer), மாரடைப்பு (Heart attack), பாரிசவாதம் (Stroke) போன்ற 25 விதமான கொடிய நோய்களுக்கு காப்புறுதி.
- ஆரோக்கியமாணவர்களுக்கு அதிகுறைந்த கட்டணத்தில் அதிகூடிய பாதுகாப்பு.
- 1 மில்லியன் டொலருக்கு ஆயுட்காப்புறுதி :

10 year term life - age 30 non - smoker - male

**1 000,000.00 - $41.40**

**100,000.00 - $11.25**

- $ 200,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

### Critical Illness Insurance

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

### Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

### RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
20-40 வீதமான அரச மானியத்துடன்
15 வீத போனஸ்

### Mortgage Insurance

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

TOPGUN AWARD WINNER 2008, 2009, MDRT QUALIFIER 2007, 2008, 2009

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave.Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life · LILAND INSURANCE INC.

**Million dollar advice from #1 advisor**

- தீபு Media -

BUY / SELL HOME / LIFE INSURANCE
RESP (Education plan)
Pakeer
Pakeerathan Sahadevan
Sales Rep. & Insurance Broker
Century 21 Affiliate Realty Inc. Brokerage
RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
416.908.6003 / 416.290.1200

sunshine dental
sunshine DENTAL
Dr. Seshantri Viswasam
Family Dentist
45 Milner Avenue, Unit 6, Toronto, ON. M1S 3P6 Tel : 416-291-1011

Karuna Gopalapillai
Broker
Platinum Award Winner
RE/MAX Vision Realty Inc. Brokerage
Direct: 416.830.8520
Office: 416-321-2228

Just Listed
Scarborough
2+1 Bedrooms, 2 Full Washrooms
2 Years Old, 20th Floor, South East View, Hardwood, Stainless Steel Appliances. Steps to Scarb Town Center
$289,900

Just Listed
Eglinton/ Kingston
2+1 Bedrooms, 2 Full Washrooms
Laminated Floors
TTC at Door Steps
$194,900

Midland/Danforth
2+1 Bedrooms
2 Full Washroomss
Corner Large Unit
1150 Sq. Feet
Walk to Shops, Doctors, TTC

Midland/Danforth
2+1 Bedrooms
2 Full Washrooma
Large Unit, CN Tower View
1135 Sq. Feet
Walk to Shops, Doctors, TTC
$209,900

RAMANAN RAMACHANDRAN
Real Estate Broker
Cell: 416-670-6467 Office: 416-298-3200
HOMELIFE TODAY REALTY LTD., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
100% Proven Results...
Visit www.agentram.com
Each office is independently owned and operated


அல்கோன்குயினின் ஒபியோங்கோ ஏரி படகுக்காலை


ஒன்ராறியோ - மஸ்கோக்கா ஏரியின் மாலைப் பொழுதொன்றில்



இம்மாதப் புகைப்படக் கலைஞர்

## ஜெயகணேஷ் ருக்மணிகாந்தன்

ஒன்ராறியோவில் கணினி பொறியிலாளராகக் கடமையாற்றும் இவர் தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்.

உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Accident? Injured? NO Benefit Paid?
NO FEE until we settle your claims
Or Its FREE 416-857-1780
Call Now! No Obligation
Mohan Subramaniyam
Licensed Paralegal
Protect Your Legal Rights